# அம்சம்

## இன்டர்நெஷனல்

1
1997









# இவனிடமா இத்தனை அற்புதம்...?

Rs.50.00 MR6.00 Rs.50.00 SS 4.5 ஏனைய நாடுகள்



இலங்கை மாணிக்கங்களின் இல்லம்
பட்டை
தீட்டப்பட்டதும்
மருக்கணாக்கப்
பட்டதுமான
நீலம், சிகப்பு,
புஷ்பராகம்.
நீல வெள்ளை போன்ற
மாணிக்கங்களும்
பல நிறங்களிலான
வைரியங்களும்
எம்மிடம் கிடைக்கும்
Faceted and encabochoned
Sapphires of Blue, Pink, Yellow, and
many shades of Stars, Cats eyes
and varieties of Semi-
Precious Gem Stones, also 18 K Gem Set
Jewellery.
Source
for Sapphires of
Sri Lanka
நியாயமான விலை
தர உத்தரவாதம்
இவை எமது தாரக மந்திரம்
Colombo
Gemstones
& Jewellery (Private) Ltd.,
15, St. Lawrence Road, Colombo 6. Sri Lanka.
Phone & Fax : 94 1 582282

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

ரஹ்மத் அறக்கட்டளையின் வெளியீடான

# ஸஹீஹுல் புஹாரி
# தமிழாக்கம்
# இரண்டாம் பாகம்

## வெளிவந்துவிட்டது.




**உங்கள் பிரதிக்கு முந்துங்கள்**




**விலை (இந்திய) ரூபா. 190.00**

தொடர்புகளுக்கு:

## ரஹ்மத் அறக்கட்டளை

29, இரண்டாவது மெயின் ரோடு,
சி. ஐ. டி. காலனி, மயிலாப்பூர்,
சென்னை 600 004.
இந்தியா.
தொலைபேசி : 4997373

# அம்சம்
இன்டர்நெஷனல்

①
1997

எடிட்டர் இன் சீஃப்
ஹாஜி ஹஸன் அஸ்ஹரி

எக்ஸிகியூட்டிவ் எடிட்டர்
மதனி

அசோஷியேட் எடிட்டர்
அபூ நஜாத்

சர்குலேஷன்
கலீல் ரஹ்மான்

கிராபிக்ஸ் & டைப்செட்டிங்
அம்சம் கிராபிக்ஸ்

வெளியீடு
அம்சம் இன்டர்நெஷனல் (பிரை) லிட்.

அலுவலகம்
முதலாவது மாடி,
159, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு 11. ஸ்ரீ லங்கா.
தொ. பே. 331326
ஃபேக்ஸ்
332867, 541414, Attn. AMSAM
E mail : amudesh @ slt. lk.

பிராந்திய அலுவலகங்கள்

சென்னை:
47, அண்ணா சாலை,
சென்னை 600 002, இந்தியா.

கோலாலம்பூர்:
138, ஜலான் சுல்தான் அப்துல் ஸமத்,
50470 கோலாலம்பூர்

துபாய்:
த. பெ. 9645, டேரா, துபாய்.

அபு தாபி:
த. பெ. 3207, அபு தாபி.

சிங்கப்பூர்
ஜலான் சுல்தான்,
# 16 – 05,
டெக்ஸ்டய்ல் சென்டர்,
சிங்கப்பூர்

பினாங்கு:
1 – D, பக்கிங்ஹாம் வீதி,
10200 பினாங்கு,
மலேசியா



## துருக்கி

துருக்கியில் இஸ்லாம் புத்துயிர் பெறுகிறது. பேராசிரியர் நஜிமுதீன் அர்பகானின் ரெபாஹ் கட்சியின் வெற்றி, இஸ்ரேல் உறவின மீதான அடி. திருமதி சில்லரின் நிலை என்ன..?

பக் ..9







## கவர் ஸ்டோரி

இவனிடமா இத்தனை அற்புதம்..?

முஹம்மது இஸ்லாம் எனும் அற்புதம். மூன்றரை வயதுச் சிறுவன் தனது தாயையும் – தந்தையையும் இஸ்லாமாக்கிய விந்தை..

பக். 34


## ரிப்போர்ட்





அனைத்திந்திய முஸ்லிம் பெண்கள் கல்வி மாநாடு..

பக்:..30



## ஆய்வு

அரபுத் தமிழின்
பண்பாட்டுப் பாரம்பரியம்
அர்வி மொழியின் மாற்று
வடிவமா..?
டாக்டர் சுக்ரி ஆய்கிறார்

பக் 24


## பேட்டி



ஸ்ரீலங்காவில் கார்மென்ட் தொழிலின்
முன்னோடி
தோல்வியை-வெற்றியை. சோகத்தை-
இன்பத்தை சமமாக மதித்து ஏற்ற
இறக்கங்களுக்கு முகங்கொடுத்து
மீண்டும் அவதாரம் எடுத்த ஒரு
பீனிக்ஸ் மனிதனின் கதையிது.

பக் 44.

## முதுசம்



சூரிய சக்தியின்
உபயோகமும் அதனை
முதன்முதலில் கண்டு
பிடித்த முஸ்லிம்
விஞ்ஞானியும்.

பக்.....17

## கரஸ்பான்டன்ட்ஸ்


**சென்னை**
ஹாஜி ஏ. வை. நாஸர்,
உ. ஏ. கபீர்

**கோலாலம்பூர்**
எம். அப்துல் ரஜ்ஜாக்,
கம்பம் பீர்முஹம்மத்

**பினாங்கு**
ஸிராஜுத்தீன்

**சிங்கப்பூர்**
ஷேக் அபூபக்கர்

**துபாய்**
ஹாஜி எம். அப்துல் றஹ்மான்

**அபு தாபி**
ஐ. சம்சுத்தீன்

**குவைத்**
மு. பிர்தவ்ஸி

**ஜித்தா**
முஹம்மத் கஸ்ஸாலி,
முஹம்மது ஜலீல்

**பாங்கொக்**
அ. ஸ. பஷீர் அஹ்மத்


## - உள்ளடக்கம் -


5 நுழைவாயிலில்..

6 ஆன்மீகம்.
"ஆத்மாவின் வசந்தம் அல் குர்ஆன்"

7 மலேசியா

8 துருக்கி
"துருக்கியில் இஸ்லாத்துக்குப் புத்துயிர்"
"இஸ்ரேல் துருக்கி உறவுகள்"
"நஜ்முதீன் அர்பகான்"

16 பாபரி மசூதி ஞாபகார்த்தம்.

17 விஞ்ஞானம்.
"சூரிய சக்தியின் முன்னோடி – இப்னு ஹைதம்".

20 கதை
"சொந்தம்"

24 முதுசொம்
"அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்"

30 ரிப்போர்ட்
"அனைத்து இந்திய முஸ்லிம் மகளிர் கல்வி மாநாடு"

34 கவர் ஸ்டோரி
"முஹம்மது இஸ்லாம் எனும் அற்புத சிறுவன்"

38 கவிதை
"நான் போக முடியாத ஊர்"

43 நாடும் நடப்பும்
"அந்த மாமனிதர்"

44 வர்த்தகம்
"தரகராய் வந்து தொழிலதிபராய் உயர்ந்தவர்"

50 கல்வி
"பெண்ணும் கல்வியும்"

54 சிறுகதை
"வட்டக் கண்ணாடி"

60 இழந்தோம்
"கலைமாமணி அப்துல்லாஹ் அடியார்"

65 கல்விச் சிந்தனைகள்.
"அறிவியலும் அறவியலும்"

72 கடைசிப் பக்கம்.
"நான் எனும் பன்மையும் ..."

அம்சம் இன்டர்நெஷனல்

# ஆசிரியர் அவர்கட்கு...

தமிழ் கூர் நல்லுலகின் இணைப்புப் பாலமாய்
அனைத்துலகிலும் பரந்து வாழும் தமிழ் முஸ்லிம்களின் இலட்சியக் குரலாய்
இது எமது சஞ்சிகை
இது எனது சஞ்சிகை
என நானும் நாமும்
போற்றிப் புகழவென வரும்
அம்சம் இன்டர்நெஷனல்
அழகுற வெளிவர — நீடிய
ஆயுளைத் தனதாக்க
வாழ்த்துகிறேன் — வாழி நீடூழி.

ஹாஜி சையது எம். சலாவுத்தீன்
**(M.D. - ETA Group)**
துபாய்

சர்வதேச சஞ்சிகை ஒன்று
சரந்தீபிலிருந்து
ஜனனம் பெறுகின்றது.
தமிழுக்கு அணிகலனாய்
தீனுக்கு சேவகனாய்
தரணியில் சேவையாற்ற —
புகழ் பரப்ப
அம்சம் இன்டர்நெஷனல்
சஞ்சிகைக்கு
எமது வாழ்த்துகள் — ஆதரவுகள்.

எம். ஐ. ரஹீம் - எம். எஸ். எம். நவாஸ்
(விரிவுரையாளர்கள்)
மற்றும் இலங்கை மாணவர்கள்
சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம்
கோலாலம்பூர்

உலகத் தமிழ் முஸ்லிம்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கவும் உண்மைத் தகவல்களை காய்தல் உவர்த்தல் இன்றி தெரிவிக்கவும் அறிவூட்டலை அடிப்படை யாகக் கொண்டு பக்கம் சாராமலும்

அம்சம் இன்டர்நெஷனல் வெளிவர வாழ்த்துகிறேன். அதன் வெற்றிக்காய் பிரார்த்திக்கிறேன்.

மௌலானா அஹ்மத் இஸ்மாயில்
இமாம். அப்துல் கபூர் மஸ்ஜித். சிங்கப்பூர்

*ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதங்களில் சரியான பெயர், முகவரி, கையொப்பம் மற்றும் திகதி என்பன அடங்கியிருத்தல் அவசியம். இவை குறிப்பிடப்படாத கடிதங்கள் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஆ-ர்*

தற்போது அம்சம் இன்டர்நெஷனல் மாசிகை மனித சமுதாய விழுமியங்களை ஆழமாகவும் அழகாகவும் சர்வதேச மட்டத்தில் பகிர்ந்துகொள்ள முன்வர்துள்ளது.

இவ்வாறான ஒரு சஞ்சிகை எமக்கு அவசரமாகவும் அவசியமாகவும் தேவை என்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தினோம்.

மௌலானா மௌலவி ஹஸன் அஸ்ஹரி அவர்கள் இந்த மகத்தான பணியை செய்யத் தீர்மானித்திருப்பது வரவேற்கத்தக்கது.

மலேசிய வாழ் தமிழ் பேசும் நெஞ்சங்கள் இதற்கு பூரண ஆதரவு வழங்குவர் என்று நம்புகின்றோம்.

ஹாஜி அன்வர் ஹுஸைன்
துணைத் தலைவர் PERMIM
&
ஜனாப் அப்துர் ரஸாக்
செயலாளர் நாயகம் PERMIM
கோலாலம்பூர் - மலேசியா

அனைத்துலகிலும் அங்கும் இங்குமாய் பிரிந்து வாழும் தமிழ் இதயங்கள் அம்சம் இன்டர்நெஷனல் சஞ்சிகை மூலம் தம்முள் ஓர் ஆரோக்கியமான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முன்வரல் வேண்டும்,

AIMAN பேரவை
அபு தாபி

அனைத்துலகிலும் பரந்து விரிந்து தமிழ் கூறும் நல்லிதயங்களை இணைக்கவும் ஒன்றுபட்ட சமுகமான நாம் மொழி எனும் ஊடகத்தால் இன்னும் நெருங்கி வரவும் அம்சம் இன்டர்நெஷனல் ஆவன செய்யட்டும்.

சிங்கப்பூரிலிருந்து -
ஹாஜி சதக் ஏ காதர்
ஹாஜி எம். ஏ. முஸ்தபா
ஹாஜி எம். ஏ. தமீம்
ஹாஜி எம். அப்துஸ் ஸலாம்
ஜனாப் ஹைதர் அலி
ஹாஜி உதுமான் மரிக்கார்
ஜனாப் கே. நூர்தீன்


We wish 'AMSAM INT'L' every success!

**Haji Razif Abdullah**
**&**
**Haja Azizah**
**(Founders of Azizah Foundation of Sri Lanka.)**
**Kuala Lumpur - Malaysia.**


உலகின் பல பாகங்களில் பரந்து வாழும் தமிழ் நெஞ்சங்களின் உணர்வுகளை ஒருங்கிணைக்கும் ஓர் உறவுப் பாலம். நமது நீண்ட நாள் தேவை.

அம்சம் இன்டர்செஷனல் இத் தேவையைப் பூர்த்தி செய்து சஞ்சிகை வானில் மங்கா ஒளி பரப்பும் அறிவு அம்சமாக உலா வர வாழ்த்துகிறோம்.

ஈமான் பேரவை
பினாங்கு

அறிவுத் தாகமுடைய வாசகர் கட்கு அம்சம் பல்சுவை விருந்து படைக்க முன்வந்துள்ளது.

அதன் மலர்ச்சிக்காகவும் வளர்ச்சிக்காகவும் அதனை வரவேற்று வாழ்த்துகிறோம்.

ஹாஜி அப்துர் ரஹ்மான் -
இஸ்லாமிய வங்கி. துபாய்.
ஹாஜி அக்பர்கான் -
G.M./ETA.
ஹாஜி தாவுத்பாஷா.
- SALAM (Manager)
மௌலானா மௌலவி முஹியித்தீன் மதனி
மௌலானா மௌலவி ஷெய்க் தாவுத் ஹஸ்ரத்
ஹாஜி F அன்வர் பாஷா
ஹாஜி மொஹிடீன் - மொலினா.

அம்சம் இன்டர்நெஷனல் சிரமேற் கொண்டிருப்பது ஓர் இமாலயப் பணி. உலகம் போற்றும் இஸ்லாமிய சஞ்சிகையாக தனித்துவமான பெயரை அது பெற்றுக்கொள்ளும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வாழ்க அம்சம்.! வளர்க நீ!!
டாக்டர் இலியாசு
(உலக தமிழ் பண்பாட்டுக் கழக முனைவர்)
ஹாஜி எம்.டீ. இக்பால்
ஏ. எஸ். பஷீர் அஹ்மத்
பாங்கொக்

## நுழைவாயிலில்.......

*அன்புள்ளங்களே!*

*அம்சம்* நமது தமிழ் சஞ்சிகை வரலாற்றில் ஒரு முக்கிய அம்சம்.

கடல் கடந்து வாழும் தமிழ் நெஞ்சங்களுக்கிடையே ஓர் உறவுப் பாலத்தை ஏற்படுத்துவதே இதன் சிறப்பம்சம்.

மலேசியா, சிங்கப்பூர். இந்தியா, இலங்கை, பேங்கொக். ஹாங்கொங், மொரிஷியஸ், துபாய். அபுதாபி, சவுதி அரேபியா, குவைத் முதலான நாடுகளில் பரந்து வாழும் என் அன்பிற்கினிய நண்பர்களே!

இஸ்லாமிய வானிலே, இலக்கிய நிழலிலே உங்களைப் பல முறை யான் சந்தித்துள்ளேன்.

எங்கு வாழ்ந்தாலும் "இஸ்லாம் எங்கள்வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி" என்ற சுலோகத்தைத் தாரக மந்திரமாக்கி தமிழ் மணம் பரப்பி வாழும் உங்கள் இஸ்லாமியப் பற்றையும். மொழிப் பற்றையும் யான் பாராட்டுகிறேன்.

புவியியல் தொடர்பற்றுச் சிதறி வாழும் நமது சமுதாயப் பிரச்சினைகளை அலசுவதற்கும், நமது உணர்வுகளைப் பரிமாறி சமூக ஒற்றுமையைக் கட்டி எழுப்புவதற்கும், உலகப் பொது வாழ்க்கை நெறியான இஸ்லாமின் தூதை அனைவரும் அறிந்து கொள்வதற்கும் ஒரு சஞ்சிகை வேண்டும் என்று பலர் நம்மிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

குறிப்பாக மலேசிய இந்தியர் பேரவை (பெர்மிம்), பினாங்கு ஈமான் பேரவை முதலியன இது விடயத்தில் கூடிய அக்கறை காட்டின.

மனித நேயம், அறிவியல், இலக்கியம், வரலாறு, தத்துவம், முதுசொம், கதை, கவிதை முதலான விடங்களை *அம்சம்* அம்சமாக உங்களுடன் பகிர்ந்துகொள்ள இதோ உங்களைத் தேடி உங்கள் வீட்டுக்கே வந்துவிட்டோம்.

இலக்கிய வானிலே ஒரு நிலா உலா வரத் தொடங்கிவிட்டது.

சஞ்சிகை உலகிலே *அம்சம்* சஞ்சாரம் செய்யத் தொடங்கிவிட்டது.

இது என் அபிமான அன்புள்ளங்களுக்கு ஒவ்வொரு மாதமும் யான் எழுதும் பல்சுவைக் கடிதம்.

இதனை வாசித்து நீங்கள் நலம்பெற வேண்டும். வாழ்வில் வளம் பெற வேண்டும் இதுவே எமது அம்சத்தின் அவா!

அடுத்த இதழில் முல்லாவைக் கேளுங்கள்!, வினா விடை, வாசகர் வட்டம் முதலிய அம்சங்களும் வெளிவருகின்றன. உங்கள் விமர்சனங்களை *அம்சம்* வரவேற்கின்றது.

*ஹாஜி ஹஸன் அஸ்ஹரி*

## ஹஜ் சீஸனில் தமிழகம் எங்கும் பேசப்படும் பெயர் சன்ஷைன் ஹஜ் சர்வீஸ் என்பதே.

☑ குறைந்த கட்டணம்

☑ நிறைவான சேவை

# SUNSHINE TRAVELS & HAJ SERVICE

**சன்ஷைன் ஹஜ் சர்வீஸ்**

பிளாஸா காம்பிளக்ஸ்
13சீ, வில்லியம்ஸ் ரோடு.
கண்டோன்மென்ட்,
திருச்சி-1.

| திருச்சி | சென்னை |
| --- | --- |
| 461486 | 510211 |
| 460378 | 514811 |

3. போஸ்ட் ஆபீஸ் ரோடு.
மன்னடி,
சென்னை-1.


இபாதத்துகள், பயான்கள்., தலைசிறந்த அனுபவம் வாய்ந்த மௌலானாக்களின் வழிகாட்டல்கள்.

ஹரம் சரீபுக்கு சமீபமாக குளிரூட்டப்பட்ட தங்குமிடம்.

# THE PYRAMID ORGANISATION

For All Requirements of Bulding Materials and Sanitatyware

340, OLD MOOR STREET, COLOMBO-12
TEL: 434783, 432076 & 337489




SOLE AGENTS FOR
**TWYRORDS BATHROOMS**
THE BEST OF BRITISH
MADE IN ENGLAND



VISIT

**OUR SHOW ROOM**
25, DUPLICATION ROAD, COLOMBO-4
TEL: 581275, 594598, 588861

**SALES**
123, ABDUL HAMEED STREET,
COLOMBO-12
TEL: 327374, 335594,-FAX: 422088



# ஆத்மாவின் வசந்தம் - அல் குர்ஆன்

அல் குர்ஆன் இறங்கிய மாதம் இதோ கழிந்து விட்டது.

ஒவ்வொரு முஸ்லிமும் குர்ஆனோடுள்ள தனது தொடர்புகளை தூசு தட்டி புதுப்பித்துக் கொள்ள வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் அது.

உலகம் குர்ஆனின் வழிகாட்டலுக்காக ஏங்கியிருக்கின்ற போது குர்ஆனின் காவலர்களாகிய நமக்கும், நமது வாழ்வுக்கும் குர்ஆனோடு உள்ள தொடர்பு அடிக்கடி மீளாய்வு செய்யப்பட வேண்டியது அவசியம்.

குர்ஆனைத் திறக்கின்ற ஒருவர் ஒரு வித்தியாசமான புது உலகில் புகுந்து சஞ்சரிக்கத் தொடங்குகிறார்.

அது அறிவின் ஆழிய சுனைகளைத் தன்னகத்தே கொண்டது. வாழ்வின் கரடுமுரடுகளில் சுமுகமாகப் பயணிக்க வழிகளைச் சொல்கிறது.

சிந்தனையையும் செயற்பாடுகளையும் நெறிப்படுத்துகிறது.

உள்ளங்களில் இது வரை கண்டுகொள்ளாத ஆழங்களையெல்லாம் தன் தேஜஸால் ஒளிமயமாக்கிறது.

உணர்வுகளைத் தொட்டிழுத்து, வாசிக்கும் போதே உருக வைத்து கண்ணீரை வரவழைக்கிறது.

வாழ்வின் குறுகிய - நீண்ட, இம்மை-மறுமை இரு கட்டங்களிலும் நம்மை ஒரு குழந்தையைப் போன்று கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறது.

இது குர்ஆனின் அற்புதம். இறை வேதத்தின் இணையிலாச் சிறப்பு.

திருக் குர்ஆன் மனிதனை மதிக்கின்ற பாங்கை, அவனுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை சிறப்பை மனிதனால் கூட முழுமையாக புரிந்துகொள்ள முடிவதில்லை.

புனித குர்ஆனிய வழிகாட்டலுக்கு நம்மை அர்ப்பணிப்பதா? அப்படியெனில் அது நம்மைப் பற்றி எப்படியெல்லாம் பேசுகிறது என்பது பற்றிய தெளிவு நமக்கு வேண்டாமா?

மனிதனுக்கு அல்லாஹ் வாக்களித்தான் *'நிச்சயமாக உங்களுக்கு என்னிடமிருந்து நேர்வழி வரும். எனது வழிகாட்டலைப் பற்றி நடப்பவர்களுக்கு அச்சமோ கவலையோ வேண்டாம்'* (2:38)

நம்மைச் சூழ பெரும் படை திரட்டி நம்மை அழிக்க வரும் ஆசைகளினதும் பாவங்களினதும் பெரும் சேனைகளை எதிர்கொண்டு வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற நமக்குள்ள ஒரேயொரு ஆயுதம் குர்ஆன் தான்.

வாழ்வின் இருண்ட பாதைகளில் தட்டுத் தடுமாறி நிற்கின்ற நமக்கு வெளிச்ச வீடு அது தான்.

சுழன்றடிக்கும் சூறாவளியில் நடுக்கடலில் சிக்கிய எம் வாழ்க்கைக் கப்பலை அது தான் கரைசேர்க்க முடியும்.

எல்லாவற்றையும் உருவாக்கிய சிருஷ்டி கர்த்தாவாகிய அன்பும் கருணையும் நிறைந்த அள்ளாஹ்விடம் செல்வதற்கு நாம் நடந்து செல்ல ஒரேயொரு பாதை அது தான். அந்த சிருஷ்டிகர்த்தாவை எமக்கு அறிமுகப்படுத்தியதும் இந்த குர்ஆனே.

திருக் குர்ஆனை அணுகி ஆராயவும் அதன் எல்லையிலா அருட் கடலில் முங்கி முத்தெடுக்க விழைகின்றவர்கள் அதற்கென தம்மை தயார் படுத்திக் கொள்வது அவசியம்.

முதலில் இது ஏக இறைவனின் வார்த்தைகள் என்ற அசையா நம்பிக்கை உள்ளத்திலிருக்க அவை தன்னையே விளிக்கின்றன என்ற உணர்வு மிக முக்கியம்.

குர்ஆனை நாம் ஓத வேண்டும். அது ஒரு இபாதத். வாழ்வுக்கு வழிகாட்டுதலையும் அள்ளாஹ்வின் ஆசீர்வாதத்தையும் இறை திருப்தியையும் பெற வேண்டும் என்ற தூய எண்ணத்தைத் தவிர வேறு எந்த நினைவில் குர்ஆனைத் தொடுவது.?

அல் குர்ஆன் வாழ்வின் எல்லா நிலைகளிலும் எமக்கு வழிகாட்டும் என்பதை நாம சந்தேகமற நம்புகிறோமா?

சிந்தித்து, ஆராய்ந்து, தர்க்கித்து, புடம் போட்டு, பிய்த்துக் குதறி சத்தியத்தைக் கடைந்தெடுத்து அதில் அள்ளாஹ்வைக் காண அழைப்பு விடுப்பது அல் குர்ஆன்.

நமக்குப் புரியவில்லை என்றால் அது அறிவுபூர்வமானதல்ல என்று கருதுவது மனிதனின் சின்னத்தனத்தில் உள்ளது.

*இது வேத நூல். இதில் சந்தேகமில்லை* (2:2) என அடித்துச் சொல்கிறது அல் குர்ஆன். நடைமுறையில் நாம் எவ்வளவு தூரம் இதனை நம்புகின்றோம்.

குர்ஆனை ஓதுகையில், கற்கையில் நாம் பெறுகின்ற போதங்களின் அடியொற்றி எமது பழக்கவழக்கங்கள், சிந்தனைகள், செயற்பாடுகள் அனைத்தையும் மறுசீரமைத்துக் கொள்ள நாம் தயார் நிலையில் திடசங்கற்பம் பூ ண்டிருப்போம். செயல்படுகின்ற எண்ணமே இல்லாத போது அல் குர்ஆனில் எதற்காக ஆய்வும் ஆராய்ச்சியும்?

குர்ஆனை நெருங்குவதற்கு, நமக்கு உள்ளேயும் வெளியேயும் குடிகொண்டிருக்கின்ற ஷைத்தானைத் துரத்தியடிக்க வேண்டும்.

*'திருக் குர்ஆனை ஓதும் போது நிராகரிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து அள்ளாஹ் விடம் அபயம் தேடிக்கொள்ளுங்கள்'* (16:98)

-என அள்ளாஹ்வே கட்டளையிடுவது ஒன்றும் சாதாரண விடயமல்ல.

நல்ல விசுவாசிகளின் சிறப்பு குணாதிசயங்களை குர்ஆன் இப்படி விளக்குகின்றது.

*'அவர்களுக்கு தம் இறைவனின் ஆயத்துக்கள் நினைவுகூரப்பட்டால் அவர்கள் குருடனைப் போன்றோ செவிடனைப் போன்றோ இருந்து விட மாட்டார்கள்.'* (25:73)

*'இறை தூதருக்கு இறக்கி வைக்கப்பட்டதை அவர்கள் செவியுற்றால் தாம் புரிந்து கொண்ட சத்தியத்தின் காரணமாக அவர்களது கண்களில் கண்ணீர் கரைபுரண்டு ஓடுவதை நீர் பார்ப்பீர். தவிரவும், 'எங்கள் இரட்சகனே! நாம் உன்னை விசுவாசித்தோம். (சத்தியத்தின்) சாட்சியாளர்களில் எம்மையும் எழுதிவிடுவாயாக' எனவும் கூறுவார்கள்.'* (5:86)


இவ்வாறு பல இடங்களில் குர்ஆன் விபரிக்கின்றது.

நாமும் குர்ஆனை ஓதுவதில் முடிந்தளவு தக்வாவோடு நடந்துகொள்ள வேண்டுமல்லவா? நமது உள்ளத்தை குர்ஆனின் ஆயத்துகள் நெகிழ வைக்க வேண்டுமல்லவா?

*''யாருக்கு நாம் வேதத்தை அருளினோமோ அவர்கள் உண்மையான முறையில் அதனை ஓதுவார்கள். அவர்கள் தான் அதனை விசுவாசிக்கின்ற மக்கள்.''* (குர்ஆன் 2:121)

அல்குர்ஆனுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் நான்கு. 1. அதனை பிழையற ஓதுவது 2. அதன் பொருளை உணர்வது 3. அதன்வழி நடப்பது 4. அதன் போதனைகளை பரப்புவது.

நாம் தயாரா?



மூலப் பொருட்களையும், மலிவான கூலியாட்களையும் உலகுக்கு வழங்கிக்கொண் டிருந்த மலேசியா இன்று உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஒன்றாக வெற்றிநடை போடுகின்றது. இந்த வெற்றி நடையின் பின்னணியில் இருப்பது சீரான அரசியல் தலைமை. டாக்டர் மஹதிர் முஹம்மத் என்ற மாமனிதர் 1981ல் மலேசியாவின் 2வது பிரதமராகத் தெரிவாகி இன்று வரை பிரதமராகவே இருக்கின்றார். அவரது தெளிவான - தீர்க்கதரிசனமான வழிகாட்டல் மலேசியாவை ஒரு வளர்ச்சியடைந்த நாடாக 2020ல் ஆக்கப்போவது திண்ணம்.

அதாவது 30 வருட காலத்தினுள் ஒரு நாட்டை உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகளின் பட்டியலில் சேர்க்கின்ற அவரின் இலக்கு சரியான பாதையில் செல்வதால் எட்டப்படப் போகிறது. ஆண்டிற்கு 7 வீதம் பொருளாதார வளர்ச்சியுடனும், 4 விழுக்காடுக்கும் குறைவான பணவீக்கத் துடனும் முன்னேறும் மலேசியா 2020 இல் இன்னுமொரு விடயத்தையும் காணக் காத்திருக்கின்றது. அது - டாக்டர் மஹாதிர் 2020ல் மக்களுக்கு என விடுத்த செய்தி ஒன்று கோலாலம்பூ ர் பப்ளிக் வங்கியில் புதைத்து வைக்கப்பட்டுள்ளது. அந்தச் செய்தியை பொருளாதார இலக்கு பூ ர்த்தியாகும் தினத்தில் மக்கள் அறிந்துகொள்ளக் காத்திருக்கின்றனர்.

அடிமட்டத்திலிருந்து, உயர் பீடங்கள் வரை மக்களின் ஒத்துழைப்பும், அரசாங்கத்தின் வழிகாட்டல்களும் ஒத்துப் போகின்றன. அனைத்து அடையாளங்களும் திருப்தியாக உள்ளன.

1980 களில் மலேசியாவுக்குச் சென்று வந்த யாராவது ஒருவர் இன்று மலேசியாக்குச் சென்றால் மூக்கில் விரல் வைப்பாரோ.... மூர்ச்சித்து விழுவாரோ தெரியாது. அவ்வளவு வளர்ச்சி. அவ்வளவு உழைப்பு. வானளாவ வளர்ந்து செல்லும் 70.80 மாடி கட்டிடங்கள். தொழில் பேட்டைகள் விரிவான நெடுஞ் சாலைகள். சுய தயாரிப்பான வாகனங்கள். துறைமுகங்கள்.விமான நிலையங்கள் அப்பப்பா..... உழைப்பு - உற்பத்தி - வளர்ச்சி...வளர்ச்சி.

மலேசியாவின் உள்நாட்டுப் பொருள் உற்பத்தி 19 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காட்டுக்கு உயர்ந்துவிட்டதென்றால் பாருங்களேன்.

வேதனம் அதிகரித்துவிட்டது. வாழ்க்கைத் தரம் கூடிவிட்டது. மக்களின் சுய நம்பிக்கை வளர்ந்துவிட்டது. இனி என்ன....? வளர்ச்சியடைந்த ஒரு - இல்லை... இல்லை ஒரேயொரு நாடு மலேசியாதான் என்று நாமும் பெருமைப்படலாம்.

# மலேசியா





"..பொருளாதார இலக்குகளை நோக்கிய எமது பயணத்தில் கடின உழைப்பும், மிகுந்த அவதானமும் எமக்குத் தேவை. இவற்றில் மெத்தனம் காட்டி பொருளாதார ஸ்திரத்தை அடைய முடியாது. இன்று அனைத்துலக பொருளாதாரத்தில் மந்தம் காணப்பட்ட போதிலும் இவற்றின் மூலம் மலேசியா அதன் பொருளாதார வளர்ச்சியில் தீவிரம் காட்ட முடியும்.."

டாக்டர் மஹதிர் பின் முஹம்மத்
மலேசியப் பிரதமர்.

## ரெபாஹ் கட்சியின் வெற்றி

# துருக்கியில் இஸ்லாத்துக்குப் புத்துயிர்



ரெபாஹ் கட்சியின் வெற்றி ஒன்றும் திடுதிப்பென்று நடந்த அற்புதமல்ல. உறுதியான அடிகளை எடுத்து வைத்து குறுகிய காலத்துள் நடந்த நீண்ட பயணத்தின் அதி முக்கிய சந்தி.

ரெபாஹ் 35சத வாக்குகளைப் பெறுமென்று பலமாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட்டரசாங்கமொன்றை அமைக்கும் சக்தியையே பெற்றது.

அல்ஜீரியாவில் போல மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிறகும் இஸ்லாமியக் கட்சி என்பதனால் அதன் வெற்றி பலவந்தமாக பறித்தெடுக்கும் ஆபத்து துருக்கியிலும் நிலவியது.

டிசம்பர் 95இல் நடந்த பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றது ரெபாஹ் கட்சி. கைப்பற்றிய மொத்த ஆசனங்கள் 158. மசூத் யெல்மாஸ் தலைமையிலான தாய்நாடு கட்சிக்கு 132 ஆசனங்கள். தான்சு சில்லர் அம்மையாரின் நேர்வழி கட்சிக்கு 135 ஆசனங்கள். இடதுசாரி ஜனநாயகக் கட்சி. மக்கள் குடியரசுக் கட்சி என்பன முறையே 58. 50 ஆசனங்கள்.

ரெபாஹ் ஆட்சிக்கு வராமலிருக்கவென எவ்விதத்திலும் பொருத்தப்பாடில்லாத ஏனைய கட்சிகள் இணைந்து கூட்டரசு அமைத்தன.

இது ஏகாதிபத்தியவாதிகள் ஏற்பாடு செய்த பலவந்த திருமணம். ஆறுமாதமாவது நீடிக்கவில்லை. தொழில்நுட்பக் காரணங்களால் திருமணம் கைகூடவில்லை.

ரெபாஹ் வெற்றியை சுவைக்கும் வாய்ப்பை இப்பலவந்த ஏற்பாட்டின் மூலம் 6 மாத காலத்துக்கு தள்ளிப் போட்டார்கள்.

ரெபாஹ் கட்சி தான்சு சில்லரின் நேர்வழிக் கட்சியோடு கூட்டரசாங்கம் அமைத்தது. அர்பகான் பிரதமர். சில்லர் பிரதிப் பிரதம மந்திரியும் வெளியுறவு மந்திரியும்.

36 அமைச்சர் பதவிகளும் சம அளவில் இரு கட்சிகளுக்குமிடையில் பகிரப்பட்டன.

கல்வி. உள்நாட்டலுவல்கள். பாதுகாப்பு. வெளியுறவு போன்ற முக்கிய அமைச்சுக்களும் மத்திய வங்கி. அரச திட்டமிடல் இலாகா. வெளிநாட்டு வர்த்தக வாரியம். சமய அலுவல்களுக்கான பணிப்பாளர் நாயகத்தின்

அலுவலகம் போன்ற 'கீ' நிறுவனங்களும் கூட்டுக் கட்சிக்குச் சென்றன.

நிதி, நீதி, தொழில், விவசாயம், பொது வேலை, கலாசாரம், சக்தி, சுற்றாடல் போன்ற அமைச்சுக்களையும் தொலைக்காட்சி, தென்கிழக்கின் பாரிய நீர்ப்பாசனத் திட்டம் போன்றவற்றை ரெபாஹ் வைத்துக்கொண்டது.

ஆரம்பத்தில் மகுத் யெல்மாஸ் உடன் ஏற்படத் தயாராகிய கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரமும் அமைச்சுப் பகிர்வு இது விதமாகவே இருந்தது. அக் கூட்டு உடைக்கப்பட்டது.

ரெபாஹ், சில்லர் அம்மையாருடன் கூட்டாட்சி அமைத்ததில் சில ரெபாஹ் ஆதரவாளர்களுக்கும் அதிருப்திதான். சில்லரின் கட்சி இஸ்லாமிய ரெபாஹ்வை பரம வைரியாகவே கருதி வந்தது.

ஆட்சிக்காக எப்படி மனம் மாறினார்? கொள்கையை விட்டுக் கொடுத்தாரா? தன்மீது சுமத்தப்படவுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்தும் நீதி விசாரணைகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ள சில்லருக்குக் கிடைத்த ஒரே வழி இதுதான் என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள் சிலர்.

தான்சு சில்லரின் ஊழல்களை மறைக்க உதவுவதன் மூலம் அடிப்படைக் கொள்கைக்கே களங்கம் ஏற்படுத்திக்கொள்கிறது ரெபாஹ் எனப் பலர் அதிருப்தியடைந்தாலும் 'எமது முன்னுரிமை துருக்கியின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதே' என்ற பரந்த நோக்கில் ரெபாஹ் செயல்படுவதாக ஒரு எம்.பி கூறினார்.

இந்தக் கூட்டு கலைக்கப்படுமா? ரெபாஹ் வேரூன்றுவதை அஞ்சும் சில்லர், ஆட்சியிலிருந்து பின்வாங்கினால் அரசு கவிழும். தனக்குச் சாதகமாக அதிகப்படியான செல்வாக்கை வளர்த்துக் கொண்ட பின்னர்- சில்லர் பிரதம மந்திரியாக இடம் கொடுக்காமலேயே- கூட்டிலிருந்து ரெபாஹ் விலகிக் கொண்டாலும் அரசு கவிழும்.

மீண்டும் தேர்தல் வருமிடத்து- எல்லாவகையிலும்- ஜெயிக்கப் போவதும் தனியாக ஆட்சி அமைக்கப் போவதும் ரெபாஹ்தான்.

ஆக- சில்லர் அம்மையார் கண்ணாடி கல்லில் விழுவோ கல் கண்ணாடியில் விழுவோ விடக் கூடாது.

இன்னோர் அல்ஜீரியாவை அரங்கேற்றவும் இனி யாரும் முனைய மாட்டார்கள்.

ரெபாஹ், கமாலிய சிந்தனைகளின் சுவடுகளை கவனமாகத் துடைத்தெடுத்து துருக்கியின் இஸ்லாமிய அடையாளத்தை உலகுக்குப் பறைசாற்றியது.

அர்பகான் முதன்முதலாக ஈரான், பாகிஸ்தான், மலேசியா, எகிப்து, லிபியா, நய்ஜீரியா என வலம் வந்ததும் இதையே உணர்த்தியது.

துருக்கியில் இஸ்லாம் புத்துயிர் பெற்று விட்டது.!

அன்காராவில்

## டி 8 அமைப்பின்

# வெளிநாட்டமைச்சர்கள் மாநாடு

## பிரதமர் அர்பகான் திறந்து வைத்தார்

டிவலபிங் 8 (D8) நாடுகளின் முதலாவது வெளிநாட்டு அமைச்சர்கள் மட்டத்திலான உச்சி மாநாடு அண்மையில் அன்காராவில் நடைபெற்றது. துருக்கி பிரதமரும் இத்திட்டத்தின் கர்த்தாவுமாகிய பேராசிரியர் நஜ்முதீன் அர்பகான் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

துருக்கியுடன் எகிப்து, ஈரான் நய்ஜீரியா, இந்தோனேசியா, மலேசியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய முஸ்லிம் நாடுகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள டி 8 நாட்டுத் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாகவே வெளிநாட்டு மந்திரிகள் மாநாடு நடைபெற்றது.

இந்த அமைப்பு முஸ்லிம் நாடுகள் மத்தியிலான பொருளாதார ஒத்துழைப்புக்கு வழிகோலும் எனவும் டி 8 என்ற பெயரில் கார் உற்பத்தி செய்வது போன்ற பல்வேறு கூட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இது உதவும் எனவும் பிரதமர் அர்பகான் தெரிவித்தார். இந்த எட்டு நாடுகளும் சர்வதேச மட்டத்திலும் ஒத்துறவையும் ஐக்கியத்தையும் வளர்க்க முயற்சி செய்யும் எனவும் அர்பகான் கூறினார்.

இறுதியில் அனைத்து முஸ்லிம் நாடுகளும் டி 8 இல் அங்கம் பெறும் என அர்பகான் நம்பிக்கை தெரிவித்தார்.

எனினும் மாநாட்டின் இஸ்லாமியத் தன்மையை சகித்துக் கொள்ளாதது போல, "இது ஐரோப்பிய யூனியன் கிறிஸ்தவ நாடுகளை மட்டும் ஒன்றிணைப்பது போன்றாகும்" என்றார் துருக்கி வெளியுறவு அமைச்சரும் பிரதிப் பிரதமருமான தான்சு சில்லர் அம்மையார்.

# இஸ்ரேல் – துருக்கி

அர்பகானின் வெற்றி கைக்கு வழங்கப்பட முன்னர் இஸ்ரவேலும் துருக்கியும் இராணுவ ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன. இது நடந்தது 1996 பெப்ரவரி 23ம் திகதி.

ஐந்தாண்டுகளுக்குச் செல்லுபடியாகும் இவ் ஒப்பந்தம் இப்படி ஆரம்பிக்கிறது.

*இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் நல்லுறவையும் நட்பையும் மேலும் விருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதத்திலும் இரு தரப்பினருக்கும் நலன் தருவதான இராணுவ பயிற்சித்துறையில் பரஸ்பர நல்லுறவில் நம்பிக்கை வைத்தும். இவை இரு தரப்பினரதும் ஒத்துழைப்பு விருத்தியில் பெரும் பங்காற்றும் என்ற அடிப்படையிலும் கீழ்க்குறிப்பிட்டுள்ள உடன் படிக்கைக்கு இரு சாராரும் இணங்குகின்றனர்.*

பரஸ்பரம் இரு நாடுகளும் இராணுவத்தினருக்குப் பயிற்சி வழங்குவதற்குப் புறம்பாக கீழ்வரும் விடயங்களிலும் பரஸ்பர ஒத்துழைப்பு நிலவும்.

1. பல்வேறு மட்டங்களில் தொழில்சார், ஆய்வு நுட்பங்கள் பரிமாறப்படல்.



2. இராணுவக் கல்லூரிகள், நிறுவனங்கள் மத்தியிலான பரஸ்பர நல்லுறவும் பரிமாற்றமும்.

3. இராணுவ நடவடிக்கைச் கண்காட்சி (மனுவர்)க்கு பார்வையாளர்களைப் பரிமாறல்.

4. அத்தகைய இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் அதற்கான பயிற்சியளித்தலும்.

5. இராணுவ வரலாறு, மியூசியம் போன்ற துறைகள் மற்றும் இராணுவத்தின் கலாசார, சமூக துறைகளில் அனுபவங்களையும் தகவல்களையும் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் தூதுக்குழுக்களைப்

# இஸ்ரேல் துருக்கி உறவுகள்

## அடுத்த தேர்தல் வரை அர்பகான் அடக்கி வாசிப்பாரா ?

அர்பகானின் கூட்டரசால் ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுடனான ஒப்பந்தத்திலிருந்து நீங்கிக்கொள்ளவோ, நேட்டோ அமைப்பிலிருந்து துருக்கியை கழற்றிவிடவோ முடியாதது போல, இஸ்ரேலுடனான இராணுவ ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதோ சாத்தியமான காரியமல்ல. இஸ்ரேலுடனான இராணுவ நல்லுறவை மட்டுப்படுத்திக்கொள்வதே அவரால் ஆக முடியும்.

துருக்கி இஸ்ரேல் உறவு இஸ்ரேல் துவங்க முன்னரே ஆரம்பித்தது.

யூ தர்களுக்கான ஒரு நாட்டை பலஸ்தீன மண்ணில் - பலஸ்தீனர்களைத் துரத்தியடித்துவிட்டு- உருவாக்கும் ஏகாதிபத்தியத் திட்டத்திற்குத் தடையாக அமைந்தது துருக்கியைத் தளமாகக் கொண்டிருந்த முஸ்லிம்களின் தலைமைத்துவம். உதுமானிய கிலாபத்தில் சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீத் பலஸ்தீனைப் பறிகொடுக்க மாட்டேன் என்பதில் கடுமையாக இருந்தார்.

இஸ்ரேல் உருவாவதெனில் துருக்கியிலிருந்து இஸ்லாம் களையப்பட வேண்டியிருந்தது. சர்வதேச சதிகளும் முஸ்லிம்களின் பலவீனமும் இணைந்து 1924இல் மதசார்பற்ற துருக்கியை முஸ்தபா கமாலின் தலைமையில் உருவாக்கியது.

அன்றிலிருந்து கமாலிய ஆட்சிக்கும் யூத சதிகளுக்குமிடையில் சுமுகமான நட்புறவே நிலவிவந்தது. சிறுபான்மை யூ தர்கள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பெரும் பங்கு வகித்தனர்.

இஸ்ரேல் உருவாகியதும் அதனை முதலாவதாக அங்கீகரித்து தூதர்கள் மட்டத்திலான ஏகாதிபத்தியத் தொடர்புகளைக் கொண்ட நாடுகளில் துருக்கியும் ஒன்று.

பலஸ்தீனை ஆக்கிரமித்த அரசுக்கு துருக்கி அரசு எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆதரவளித்தது. பொருளாதார அரசியல் கொடுக்கல் வாங்கல்கள் மும்முரமாக நடைபெற்றன. 1995ம் ஆண்டு இருபக்க வர்த்தகத்தின் பெறுமதி 450 மில்லியன் டாலர். இது முந்திய ஆண்டை விட இரட்டிப்பு மடங்கு.

அண்மைக் காலமாக இரு நாடுகளும் விசாவை ரத்து செய்துகொண்டன. இதனால் இஸ்ரேலியர்கள் துருக்கிக்கும் துருக்கியர் இஸ்ரேலுக்கும் தாராளமாய்ப் போய்வரலாம். இவ் விசா நீக்க உடன்பாட்டின் பின்னர் மூன்று லட்சத்துக்குமதிகமான இஸ்ரேலியர்கள் துருக்கியில் உல்லாசப் பயணம் மேற்கொண்டனர்.

ஜனாதிபதி சுலைமான் டெமிரல் அண்மையில் மேற்கொண்ட இஸ்ரேல் விஜயம் தொடர்புகளுக்கு கிரீடம் அமைத்தது. தெல் அவீவ் புறப் பிரதேசமான பாத்யாம்மில் குடியிருப்பாளர்களிடம் பேசிய டெமிரல் 'நானும் உங்களில் ஒருவன் தான் என்றார் அன்பொழுக.

இதற்கு முன்னர் இஸ்ரேல் சென்ற தான்சு சில்லர் பென் கூரியன் விமான நிலையத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது 'உங்களுக்கென்று வாக்களிக்கப் பட்ட பூ மியில் குடியிருப்பது உங்கள் உரிமையே' என்று தட்டிக்கொடுத்தார்.

அரபுலகைச் சுற்றியுள்ள நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்துவது இஸ்ரேலுக்கு மிகமிக அவசியமானது. எண்பதுகளின் ஆரம்பம் வரை ஷாவின் ஈரான், எதியோப்பியா, துருக்கி என்பன இஸ்ரேலின் நட்பு நாடுகளாய் விளங்கின.



தானசு சிலலா அமமையார்



இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாஹு

## இராணுவ ஒப்பந்தம்



பரிமாறிக்கொள்ளல்.

6. இரு நாடுகளும் கடற்படைக் கப்பல்கள் பரஸ்பரம் விஜயங்களை மேற்கொள்ளல்.

இவை அடுத்தடுத்த பந்திகளில் விளக்கமாக வரைவிலக்கணப் படுத்தப் பட்டுள்ளன.

பரிமாறப்படும் தூதுக்குழுக்கள் இரகசியங்களைப் பேணுவதும் செய்தியாளர்களைச் சந்திக்காதிருப்பதும் கவனிக்கப்பட வேண்டியவை.

வேறு உடன்பாடுகளில் கைச்சாத்திடுவதன் மூலம் இதன் ஏதாவது அம்சத்தையோ அல்லது உடன்பாட்டையோ பாதிக்கும் விதத்தில் எவரும் நடந்துகொள்ளக் கூடாது என்பதும் கட்டாய விதி.

இந்த இராணுவக் கூட்டு ஒப்பந்தத்தில் அடக்கி வாசிக்கப்பட்ட அநேக பந்திகள் இருப்பதாகவே அயல்நாடுகளின் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஏனெனில், சிரியா, ஈரான், ஈராக் ஆகிய நாடுகளை நேரடியாகக் கண்காணிக்கும் உளவுபார்க்கும் வேலையை துருக்கியின் எல்லையிலிருந்து மொஸாத் மிகக் கச்சிதமாகச் செய்ய முடியும். துருக்கியின் இராணுவத்தளங்கள், துறைமுகம், விமானநிலையம் என்பவற்றை நன்கு பயன்படுத்தும் வித்தை இஸ்ரேலியப் படைகள் பரிச்சயப்படுத்திக்கொள்ளும்.

எல்லை நாடுகள் மட்டுமன்றி ஏனைய அரபு நாடுகளும் அரபு லீக்கும் லெபனான், எகிப்து கூட அவற்றுக்கெதிரான செயலாகவே இவ்வுடன்பாட்டைக் கருதுகின்றன.

துருக்கி- இஸ்ரேல் இராணுவக் கூட்டானது, பிராந்தியத்தின் இராணுவ சமநிலையையும் அமைதியையும் துருக்கியின் இஸ்லாமிய எதிர்காலத்தையும் வெகுவாகப் பாதிக்கும் என்றே கருதப்படுகிறது.



ஈரானில் நடந்த இஸ்லாமியப் புரட்சியும் ஷாவின் வெளியேற்றமும் சம நிலையைத் தளம்ப வைத்தன. மாற்று வழியாக காம்ப் டேவிட் மூலம் எகிப்தை நெருக்கமான நண்பனாக மாற்றிக்கொண்டது.

அத்தோடு துருக்கியுடனான உறவில் அதிக அக்கறை கொண்டது. துருக்கி ஈரானோடு சிரியாவையும் ஈராக்கையும் எல்லைகளாகக் கொண்டது. யூ ப்பிரடீஸ் நதியின் தண்ணீர் துருக்கியிலிருந்தே சிரியா. ஈராக்கூடாக செல்கிறது.

இஸ்ரேலோடு நேரடியாக மோதிக்கொள்ளும் இம் மூன்று நாடுகளும் (சிரியா.ஈராக்.ஈரான்) இராணுவ ரீதியான பலமுள்ளவை. அவை இஸ்ரேலோடு சமாதானத்துக்கு முன்வரவுமில்லை.




அரபு நாடுகளுடன் துருக்கி கொண்டுள்ள உறவின் மூலம் இஸ்ரேலிய உற்பத்திகளை துருக்கியூ டாக அரபுச் சந்தைக்குப் மற்றும் சோவியத்திலிருந்து பிரிந்த புதிய இஸ்லாமியக் குடியரசுகளுக்கும் சேரவைக்கும் வாய்ப்பும் அதிகம்.

தெல் அவீவ். பார் ஏலான் பல்கலைக்கழகத்தில் துருக்கிய ஆய்வு நிபுணரான பேராசிரியர் நெக்மானீ அமேகாம் சொல்வது போல 'துருக்கி முஸ்லிம் நாடாக இருந்த போதிலும் இஸ்லாமிய வாதிகள் ஆட்சியமைத்த போதிலும் அதனை இஸ்ரேல் இயல்பான பெரும் நட்பு நாடாகவே கருதுகிறது'

அர்பகான் ஆட்சிக்கு வந்ததானது பிராந்திய ராஜதந்திர. யுத்ததந்திர நிலைமைகளைப் பெரிதும் பாதித்துள்ளது என்பது வெள்ளிடைமலை.

அர்பகான்- சில்லர் கூட்டாட்சி ஒப்பந்தத்தின்; பிரகாரம் துருக்கியின் நலன்களைப் பேணும் எத்தகைய உடன்படிக்கையையும் ரத்ததுச்செய்ய அர்பகான் முன்வர முடியாது. ஆகவே இஸ்ரேலுடனான உறவுகளை மட்டுப்படுத்த மட்டுமே புதிய அரசால் முடியும்.

அர்பகானின் அரசு தொடர்ந்து நிலைத்திருக்க ராஜதந்திர ரீதியான குளறுபடிகளில் -பலவீனமான நிலையில் - சிக்கிக்கொள்ளாமலிருப்பது பாதுகாப்பானது.

இருக்கவே இருக்கிறது அடுத்த தேர்தல். அதனை எதிர்பார்த்து சமூக நல நடவடிக்கைகளை மேற்கொள்ளல் துருக்கிய மக்களின் வாழ்க்கை நிலையை. வருமானத்தை உயர்த்தி பணவீக்கத்தைக் குறைத்து வசதிகளை மேம்படுத்தலாம். அடுத்த தேர்தலில் அமோக வெற்றிபெற வாய்ப்பாக அமையும். அதன் பின் தமது கட்சியின் கொள்கைகளை தைரியமாக நடைமுறைப்படுத்தலாம்.

அரசியல் ரீதியாக இஸ்ரேல் உறவு அடக்கி வாசிக்கப்பட்டாலும் இராணுவ ரீதியான உறவுகள் வேறுபடாது. துருக்கியில் இராணுவம் பலம் வாய்ந்த ஒரு சக்தி. அது அரசியலையும் மிகைக்கக் கூடியது.

துருக்கிக்கு இஸ்ரேல் உல்லாசப் பயணிகள் வருவதால் வருடாந்தம் சுமார் 300 மில்லியன் டாலர் கிடைக்கிறது. இது துருக்கிக்கு வேண்டும் தானே.

அரசியற் கட்சிகள் எத்தகைய நிலைப்பாடுகளைக் கொண்டிருப்பினும் இஸ்ரேல்-துருக்கி இராணுவ உறவில் எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்த அவை போதுமானவையல்ல என்பது இஸ்ரேலின் நம்பிக்கை என்பது புலனாகிறது. ■

## இலங்கை இளைஞரின் அனுபவம்



அண்மையில் துருக்கி சென்று வந்த இளைஞ் இர்ஷாட் ஏ. காதர் (படத்தில் வெள்ளைத் தொப்பியுடன்) அவரது பயண அனுபவங்களைச் சொன்னார்.

துருக்கியில் இஸ்லாமியப் பிரதமரின் கீழ் வேகமான மாற்றங்கள் நடந்து வருகின்றன. சமூக நல நடவடிக்கைகளிலும் பொருளாதார மற்றும் வெளியுறவுத் துறைகளிலும் பாரிய மாற்றங்கள்.

அரச இயந்திரத்தில் மலிந்து போயுள்ள லஞ்சத்தை ஒழிப்பதற்கான மக்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. லஞ்சம் கோரும் அதிகாரிகளை மக்கள் தாமாகவே காட்டிக் கொடுக்கும் அளவுக்கு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான வரிகள் தளர்த்தப்பட்டுள்ளதோடு அரச ஊழியர்களது சம்பளம் 300 மடங்கு வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இஸ்தான்புல் நகராட்சி ரெபாஹ் கட்சியிடம் தான். அங்கு ஆசியப் பகுதியிலுள்ள இஸ்லாமியம் ஐரோப்பிய பகுதியில் குறைவு.

இளம் சந்ததியினர் இஸ்லாமிய எழுச்சியின் பால் ஈர்க்கப்பட்டுள்ளதை காண முடிகிறது.

கமாலிய குடியரசு சிந்தனைகள் மூத்த தலைமுறையினரிடத்தில் இல்லாமலில்லை.

96 அக்டோபரில் மூன்று அனைத்துலக இஸ்லாமிய மாநாடுகள் நடந்தன. ஒன்று இஸ்லாமிய அறிஞர்கள் மாநாடு. அடுத்தது உலக முஸ்லிம் பெண்கள் மாநாடு. மூன்றாவது அனைத்துலக இளைஞர் மாநாடு. இர்ஷாத் இதில் கலந்து கொண்டார்.

இர்ஷாத் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மாணவ சம்மேளனத்தின் கல்விச் சேவைகள் மற்றும் சர்வதேச தொடர்புகளுக்கான கமிட்டியின் தலைவர். ஜோன் கீல்ஸ் நிறுவனத்தில் மார்க்கட்டிங் எக்ஸகடிவ்.

துருக்கியின் ஜனரஞ்சகமான நூர் இஸ்லாமிய இயக்கத்தின் அடியொற்றி வளர்ந்தது தான் ரெபாஹ்வும் அர்பகானும் என்கிறார் இர்ஷாத்.

## க.:.பத்துள்ளாஹ்வைக் கழுவும் வைபவம்



புனித க.:.பத்துள்ளாஹ்வைக் கழுவும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. புனித ஹரமைன்களின் காப்பாளராகிய சவுதி அரேபிய மன்னர் பஹ்தின் சார்பில் முடிக்குரிய இளவரசரும் பிரதிப் பிரதமரும் தேசிய பாதுகாவல் படையின் தலைவருமான அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் தலைமை வகித்தார்.

கடந்த வருடம் க.:.பத்துள்ளாஹ் புதுப்பிக்கப்பட்டதை நிறைவு செய்யுமுகமாக இடம் பெற்ற இவ்வைபவத்தில் பெருந்திரளான பிரமுகர்களும் உத்தியோகத்தர்களும் ஆலிம்களும் இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கடந்த 377 வருடங்களின் பின் இப்படியாக க.:.பத்துள்ளாஹ் புதுப்பிக்கப்பட்டது முதன்முறை. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் கரங்களால் கட்டப்பட் க.:. பத்துள்ளாஹ் ஆண்டுக்கு இரு தடவை வாசனைப் பொருட்கள் கலந்த நீரினால் கழுவப்படுவது வழக்கம். வைபவத்துக்கு வருகை தந்த முடிக்குரிய இளவரசர் க.:. பத்துள்ளாஹ்வை வலம் வந்து தவாப் செய்துவிட்டு இரண்டு ரக்அத்கள் தொழுதார். அதன் பின் கழுவும் நிகழ்ச்சி இடம் பெற்றது.

சில காலமாக மூடப்பட்டிருந்த க.:. பத்துள்ளாஹ்வை இப்போது யாத்திரிகர்கள் கண்டுகளிக்கக் கூடியதாயுள்ளது.

பட்டிமன்றம் புகழ்

## லியோனி குழு இலங்கை விஜயம்.



தமிழகத்தின் பிரபல பட்டி மன்றக் குழுவினரான லியோனி குழுவினர் எதிர்வரும் மே மாதம் இலங்கை வந்து நிகழ்ச்சிகள் நடாத்த ஒப்புக்கொண்டுள்ளனர். அம்சம் இன்டர்நெஷனல் சஞ்சிகையின் ஆதரவில் நிகழ்ச்சிகள் நடாத்தப்படவுள்ளன.

அண்மையில் தமிழகத்தில் இதற்கான பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையின் முடிவில் லியோன் குழுவினரும் அம்சம் இன்டர்நெஷனல் பிரதம ஆசிரியரும் எடுத்துக்கொண்ட படமிது.

றஹ்மத் அறக்கட்டளைத் தாபகர் ஹாஜி தமீம் முன்னிலை வகுத்தார்.

படத்தின் இடமிருந்து வலமாக கவிஞர் வெண்மணி, கவிஞர் முறா, கவிஞர் முல்லை நடவரசு, அம்சம் இன்டர்நெஷனல் பிரதம ஆசிரியர் ஹாஜி ஹஸன் அஸ்ஹரி, ஹாஜி தமீம், கவிஞர் சுப மாரிமுத்து ஆகியோர் காணப்படுகின்றனர்.

## குள்ள நரியும் வெள்ளாடும்

ஒரு நாள் துள்ளித் திரிந்து வந்த நரி கவில்லாத ஒரு கிணற்றுள் வீழ்ந்துவிட்டது. தத்தளித்த அந்த நரி எவ்வாறு வெளியேறுவது என யோசிக்கலாயிற்று.

அந்தக் கிணற்றடிக்கு ஒரு வெள்ளாடு வந்தது. தாகத்துடன் நின்ற அது கிணற்றைத் தயக்கத்துடன் எட்டிப்பார்த்தது.

நரியைக் கண்ட ஆடு 'இந்தத் தண்ணீர் குடிக்க நல்லதா' என்று கேட்டது.

தடுமாறி நம்பிக்கை இழந்திருந்த குள்ள நரிக்கு ஒரு சந்தர்ப்பம். 'ஆகா..... என்ன அருமை! என்ன குளுமை! என்ன சுவை! தண்ணீரைக் குடிக்கத்தான் வந்தேன். அப்படியே ஒரு ஜலக் கிரீடை. நண்பா! நீயும் வந்து பார். சுவையை ருசித்துப் பார்' என்றது தப்பும் வழியை திட்டமிட்டுக் கொண்ட அந்த நரி.

நரியின் நடிப்பு ஆட்டை நம்பவைத்தது. ஆகா என ஆடும் கிணற்றில் குதித்தது.

இதுதான் சந்தர்ப்பம்!

ஆட்டின் தலையில் ஏறிய நரி அதன் கொம்பில் கால் வைத்து ஒரேபாய்ச்சல். தரைக்கு வந்துவிட்டது.



இப்போது மிக ஆறுதலாக அந்த மட வெள்ளாட்டைப் பார்த்து நரி சொன்னது:

உன்னுடைய தாடியின் அளவாவது உனக்கு மூளை இருந்திருந்தால் பாய்வதற்கு முன் யோசித்திருப்பாய் அல்லவா?'



# பேராசிரியர் நஜிமுதீன் அர்பகான்

பேராசிரியர் நஜிமுதீன் அர்பகான் 1926இல் கருங் கடற்கரையோர நகரான சினொப்பில் பிறந்தார். கமாலிய துருக்கியில் பிறந்தாலும் துருக்கியின் குடியரசுச் சிந்தனைகள் அவரை ஆட்கொள்ளா மைக்கு குடும்பப் பின்னணி காரணமாயிருக்கலாம்.

உதுமானிய ஆட்சியில் கலீபாக்களின் கீழ் நீதிபதியாகக் கடமை பார்த்த நஜிமுத்தீனின் தந்தையார் மார்க்கப்பற்று மிகக் கொண்டவர். வுளுவில்லாமல் வீட்டைவிட்டு வெளியேறுவது கிடையாது எனுமளவுக்கு பேணுதலானவர். கமாலிய துருக்கியிலும் சிலகாலம் பதவிவகித்த போதிலும் அரச பார்ட்டி களிலோ களியாட்டங்களிலோ கலந்துகொள்ளவில்லை.

சிறுவன் அர்பகான் அபார திறமைசாலி. இஸ்தான்புலில் ஆரம்பக் கல்வி பெற்று தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் நுழைவு பெற்றார். 1948ல் மெக்கானிக்கல் என்ஜினியரிங் துறையில் பட்டம் பெற்று வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். எம்ஏ. வரை இதே யுனிவசிட்டியில் கல்வி கற்று பீஎச்டி பட்டத்துக்காக ஜெர்மனி சென்றார். அங்கு பல்வேறு பொறியியல் துறைத் திட்டங்களில் தனது திறமையை வெளிப்படுத்தினார். பிரபல லெபர்ட் மிலிடரி டாங்க் திட்டம் அத்தகைய ஒன்று.

தனது ஜெர்மனிய ஆசிரியர்கள் ஜெர்மனியில் தங்குமாறு வற்புறுத்தியும் தாயகம் திரும்பிய பேராசிரியர் அர்பகான் இஸ்தான்புல் டெக்னிகல் யுனிவர்சிட்டியில் இணைந்தார்.

கைத்தொழில் விற்பன்னரான அர்பகான் நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டிருந்தார். ஜெர்மனியில் யுத்த டாங்கிகளுக்கான புதிய இயந்திரமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டு செயற்பட்டார்கள். அது டீசல், பெட்றோல் இன்றியே இயங்க வேண்டும். இத்திட்டத்தில் நான் இணையுமாறு வற்புறுத்தப் பட்டேன். அனடோலியாவின் கிராமங்களில் நீர் இறைக்கும் மோட்டார் ஒன்றைக் கூட எனது நாடு தயார் செய்யாத நிலையில் நான் அங்கு தொழில் பார்ப்பதா?' என நினைத்த அர்பகான் GUMUS MOTORS நிறுவனத்தை உருவாக்கி உள்நாட்டில் நீரிறைக்கும் மோட்டார்கள் உட்பட பல எந்திரங்களைத் தயாரித்தார்.

1966-69 காலத்தில் சேம்பர் ஒப் இன்டஸ்ட்ரீ அன்ட் கொமர்ஸ் தலைவராக இருந்தபோது கூட வர்த்தகத்தில் வெளிநாட்டுக் கம்பனிகளின் ஆதிக்கத் தையோ துருக்கிய வளங்கள் வீணாகுவதையோ தடுத்து நிறுத்த முடியவில்லை அவரால்.

எனினும் அரசின் கொள்கைகளும் வெளிநாட்டுக் கம்பனிகளும் அவரை வளரவிடவில்லை. நாட்டின் தலைவிதியை மாற்ற அரசியலில் இறங்கித்தான் ஆகுவது என்று திட்டமிட்டார் அர்பகான்.

1969 தேர்தலில் போட்டியிட முன்வந்த அர்பகானுக்கு ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர் சுலைமான் டெமிரல் டிக்கட் கொடுக்க மறுத்தார். சுயேட்சையாகப் போட்டியிட்டு கொன்யா தொகுதியில் அமோக வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

1970ல் மில்லி நிஸாம் எனும் பெயரில் அரசியல் கட்சி ஒன்றைத் தாபித்தார். அவரதும் கட்சியினதும் இஸ்லாமியத் தன்மையை ஆட்சியாளர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. கட்சி தடைசெய்யப்பட்டது. மக்களின் சமய உணர்வை அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்துவதாக குற்றப் சாட்டப்பட்டார்.

1973இல் மில்லி ஸலாமத் கட்சியைத் தாபித்து அதன் தலைவரானார். கட்சி போட்டியிட்ட முதலாவது நாடாளுமன்றத் தேர்தலிலேயே 1974 இல் 50 ஆசனங்களைக் கைப்பற்றியது. (அப்போது மொத்த ஆசனங்கள் 450) மக்கள் குடியரசுக் கட்சியுடன் கூட்டிணைந்து ஆட்சியமைத்து பிரதிப் பிரதமரானார் அர்பகான். குடியரசுக் கட்சி தலைவர் ஈசவிக் பிரதமரானார். பிரதமர் வெளிநாடு சென்றிருந்த சமயம், சைபிரசில் துருக்கியர் மீதான கிரேக்கத்தின் அடாவடித்தனம் அதிகமானபோது, துருக்கிய ராணுவத்தை அங்கு அனுப்பி துருக்கியர்களைக் காக்க உதவினார் அர்பகான்.





சைபிரசின் நிலைமையை வைத்து மீண்டும் தேர்தல் நடத்த ஈசவிக் முற்பட்ட போது அர்பகான் கடுமையாக எதிர்த்தார். ஈசவிக் பதவி துறந்தார்.

பேராசிரியர் அர்பகான் ஜஸ்டிஸ் கட்சியுடனும் ரிலயன்ஸ் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்து மீண்டும் உதவிப் பிரதமரானார்.

1977இல் மீண்டும் தேர்தல் வர மில்லி ஸலாமத் போட்டியிட்டு ஒரு சில ஆசனங்களை நழுவ விட்டாலும் பாராளுமன்றத்தில் சமநிலையைப் பேணும் சக்தி பெற்றிருந்தது. மீண்டும் கூட்டாட்சி. சுலைமான் டெமிரலின் ஜஸ்டிஸ் கட்சியும் அல்பர்ஸலான் துர்கேஷ் இன் நஷனலிஸ்ட் மூவ்மன்ட் கட்சியும் மில்லி ஸலாமத் உடன் கூட்டுச் சேர அர்பகான் மீண்டும் உதவிப் பிரதமர். எனினும் ஆட்சி சில மாதங்களே நீடித்தது.

77ல் மீண்டும் தேர்தல் வந்தது. ஈஷவிச் பிரதமரானார். ஆட்சி கலைந்தது. டெமிரல் ஆட்சியமைக்க மில்லி ஸலாமத் பின்னணியில் ஆதரவு வழங்கியது.

1979 நாட்டில் குழப்ப நிலை தோன்றியிருந்த காலம். பாராளுமன்றம் கூட ஜனாதிபதியொருவரை தெரிவு செய்ய முடியாது திக்குமுக்காடியது. மாதக் கணக்கில் பிரச்சினை இழுபறிபட்டது.

இவ்வேளை கேணல் துர்கேஷ் அல்பர்ஸலானின் இளைஞர் அணியும் இடதுசாரிக் கட்சிகளும் நாட்டில் குழப்ப நிலையை உருவாக்கி உச்சகட்டத்தை அடைந்திருந்தன. அரசியற் கொலைகள் நாளாந்தம் இடம்பெற்றன. குடும்பங்கள் கூட துவம்சம் செய்யப்பட்டன. டெமிரலின் ஆட்சி பலவீனமடைந்து காணப்பட்டது.

1980 செப்டம்பர் 12ம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. முஸ்தபா கமாலின் மதச்சார்பற்ற துருக்கியைப் பாதுகாப்பதை அது தனது பணியாகக் கொண்டது. அரசியல் கட்சிகள் அனைத்தும் தடைசெய்யப்பட்டன.

இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய நிகழ்ச்சி ஏலவே திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட போதிலும், செப்டம்பர் 6ம் திகதி கொன்யாவில் பேராசிரியர் அர்பகான் நடத்திய மாபெரும் கூட்டமே காரணமென சொல்லப்பட்டு அர்பகானும் மில்லி ஸலாமத்தின் நிறைவேற்றுத் தலைவர்களும் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

இராணுவ நீதிமன்றம் நீண்ட விசாரணைக்குப் பின் விடுதலை செய்த போதும் அர்பகானுக்கு அரசியலில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டிருந்தது.

ரெபாஹ் உதயம்

அரசியற் கட்சிகள் செயற்பட அனுமதி வழங்கப்பட்டபோது ரெபாஹ் கட்சி உதயமாகியது. அர்பகான் பின்னணியிலிருந்து ஒத்தாசை புரிந்தார்.

தடை நீக்கப்பட்டதும் 1984ல் ரெபாஹ் கட்சியின் தலைவராக அர்பகான் தெரிவானார். அதன் பிறகு சக்தி மிக்க மக்கள் இயக்கமாக ரெபாஹ் கட்சியைக் கட்டியெழுப்புவதில் அதிக அக்கறை காட்டினார்.

அடுத்தடுத்து வந்த தேர்தல்களில் ரெபாஹ்வின் செல்வாக்கு களைகட்டியது.

1987 தேர்தலில் 8 சத வாக்குகளை மட்டுமே பெற்றதால் பாராளுமன்றம் செல்ல ரெபாஹ்வால் முடியவில்லை. வெட்டுப் புள்ளி 10சதமாக இருந்தது.

1990 பொதுத் தேர்தலில் கேணல் துர்கேஷ் இன் நசனலிஸ்ட் மூமன்ட் கட்சி முஹ்சின் யசிலியோக்லுவின் கிரேட்டர் யுனிட்டி கட்சியுடனும் இணைந்து போட்டியிட்டதில் 17 சத வாக்குகளைப் பெற முடிந்து. 40 ஆசனங்கள் கிடைத்தன.

1994 உள்ளூராட்சித் தேர்தலில், அமோக வெற்றி ரெபாஹ் கட்சிக்குக் கிடைத்தது. இஸ்தான்புல் மாநகராட்சி மன்றத் தேர்தலில் 24 சத வாக்குகளைப் பெற்றது. மேலும் அன்காரா, கொன்யா, உர்பா முதலான நகராட்சி ரெபாஹ்விடம் சென்றது.

1995 பொதுத் தேர்தலில் 21 சத வாக்குகளுடன் நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்களை ரெபாஹ் வென்றது.

ரெபாஹ்வும் அர்பகானும் வெறுமனே பாராளுமன்ற ஆசனங்களையே எண்ணிச் செயற்படும் சக்திகளன்று. அர்பகான் எவ்வளவுக்கு இஸ்லாத்தை விரும்பும் சுதந்திர தாகம் கொண்ட துருக்கிய முஸ்லிம்கள் உள்ளங்களில் இடம் பிடித்துள்ளாரோ, அதே அளவுக்கு அவரது இயக்கமும்- மில்லி ஸலாமத்தும் சரி, ரெபாஹ்வும் சரி- மக்களின் அடிமட்ட நலன்களில் அக்கறை கொண்டு அவர்களது நல்லாதரவை குறையின்றிப் பெற்றுள்ளது.

அர்பகானின் இயக்கம் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்ததானது கமாலிய துருக்கியின் மீதான மரணஅடி என்பது ஏற்கனவே நிரூபணமாகி வருகின்றது.



# பாபர் மசூதி இடிப்பு ஞாபகார்த்தம்




சென்னை:

அயோத்தியில் 92ம் ஆண்டு டிசம்பர் 6ம் திகதி இந்துவாதிகளால் பாபர் மஸ்ஜித் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டமை உலக முஸ்லிம்கள் மீது தொடுக்கப்பட்ட பாரிய யுத்தம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

கடந்த டிசம்பர் 6ம் திகதி பாபர் மசூதி இடிக்கப்பட்ட ஞாபகார்த்த நிகழ்வுகள் இந்தியா முழுவதும் நடந்தன.

பாபரி மஸ்ஜித் விடயத்தில் மத்திய அரசின் மெத்தனப் போக்கைக் கண்டித்தும்-

பாபரி மஸ்ஜித் நிலத்தை முஸ்லிம்களிடம் உடனே ஒப்படைக்கக் கோரியும்-

டிசம்பர் 6ம் திகதியன்று மத்திய அரசின் தமிழகப் பிரதிநிதியான கவர்னரின் மாளிகைக்குள் ஜும்ஆத் தொழுகை நடத்த முஸ்லிம்கள் அனைவரையும் அழைப்பதாக தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் அழைப்பு விடுத்தது. இதற்காக துண்டுப் பிரசுரங்கள் தமிழகமெங்கும் விநியோகிக்கப்பட்டன.

### கலைஞர் வேண்டுகோள்:

மேற்படி அறிவித்தலைத் தொடர்ந்து தமிழகத்தில் தொழுகைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் வெளியாகத் தொடங்கின. இதனையிட்டு தமிழக முதல்வர் கருணாநிதி ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

அதில் 'வெள்ளிக் கிழமை அறிவிக்கப்பட்ட தொழுகைப் போராட்டத்தைக் கைவிட வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார்.

'விநாயகர் ஊர்வலங்களால் ஏற்படும் வன்முறையைத் தடுத்திட ஒரு நிலை, தொழுகைப் போராட்டத்தை அனுமதித்திட ஒரு நிலை என்ற இரு விதமான நிலைகளை அரசு எடுக்காது. பொதுவான அமைதியை நிலைநாட்ட பாரபட்சமின்றி நடக்கும் என்பதைக் கண்டிப்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்........ மீறிச் செயல்படும்போது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் அரசுக்குக் கடமையுள்ளது' என்று அவர் அறிக்கையில் கனல் தெறிக்கக் கூறி இருந்தார்.

### தொழுகைப் போராட்டம்

திட்டமிட்டபடி தொழுகைப் போராட்டத்தை தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கவர்னர் மாளிகையை நோக்கி பேரணி சென்றனர்.

போராட்டத்திற்கு முதல் நாளே முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகச் செயலாளர் ஹைதர் அலி உட்பட அக்கழகத்தின் முக்கிய உறுப்பினர்கள் 100க் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். 41 பேர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் கமிஷன் வி.கே ராஜகோபாலன் செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

ஆளுநர் மாளிகை முன் ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். சைதாப் பேட்டை மறைமலை அடிகளார் பாலம் வரை பொலிஸ் காவல் பலப்படுத்தப்பட்டிருந்தது.

பேரணியில் வந்த முஸ்லிம்கள் மறைமலை அடிகளார் பாலத்தடியில் வைத்து பொலிஸாரால் தடுக்கப்பட்டனர். பலத்த இழுபறி நடந்தது. முஸ்லிம்கள் பாதையில் அப்படியே உட்கார்ந்துகொண்டனர். அதனையும் தடுத்த பொலிஸார் அங்கு கூடிய முஸ்லிம்களில் ஏறக்குறைய 2000 பேரைக் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியிலும் நந்தனம் கலைக் கல்லூரியிலும் அன்று மாலைவரை தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

(நமது நிருபர்)

## மக்களவை ஒத்திவைப்பு

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இத்தினத்தை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் 'சம்பவத்தைக் கண்டித்து அவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்' என்றும் கோரினர். இடதுசாரி, ஐக்கிய முன்னணி, காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் இக்கோரிக்கையை முன்வைத்து அவையில் உரையாற்றினார்கள்.

பாரதீய ஜனதா கட்சி, சிவசேனை போன்ற இந்துத்துவக் கட்சிகளின் உறுப்பினர்கள் 'இந்த நாளையிட்டு வெட்கப்பட ஒன்றுமில்லை. இந்த நாளை சுயமரியாதைத் திருநாளாகக் கொண்டாட வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தனர்.

இதனால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது. உறுப்பினர்கள் பலர் சபையின் முன்னால் பாய்ந்து சென்று கோஷம் போடத் தொடங்கினர். இதனால் கூட்டம் 2 மணித்தியாலத்திற்கு ஒத்திவைக்கப் பட்டது.

விஞ்ஞானம்

# சூரிய சக்தியின் முன்னோடி




இப்னு ஹைதம்.

பல நூற்றாண்டுகளாக விஞ்ஞானத்தின் அனைத்து துறைகளிலும் இந்தப் பெயர் பிரபலமாக இருக்கின்றது. சூரிய வெளிச்சத்தை சக்தியாக மாற்றலாம் என்ற கருத்தையும் இப்னு ஹைதமே முதன் முதலில் உலகுக்குச் சொன்னார்.

நவீன உலகின் சூரிய சக்தி கண்டுபிடிப்புகளுக்கெல்லாம் இவரே முன்னோடி ஆனவர்.

ஐரோப்பிய நாடுகளில் அல் ஹாசின் (Al Hacen) என விளங்கும் அபு அலீ அல் ஹசன் இப்னு அல் ஹஸன் இப்னு அல் ஹைதம் கி.பி. 945இல் பஸ்ராவில் பிறந்தார். அங்கே கற்று ஒரு விஞ்ஞானியாகப் பரிணமித்தார்.

இப்னு ஹைதமின் மகாத்மியத்தை அறிந்த எகிப்தின் பாத்திமீயக் கலீபாவான அல் ஹகீம் (996-1021) அவரை எகிப்துக்கு அழைத்தார். எகிப்து சென்ற அல் ஹைதம் அங்கேயே தன் வாழ்வின் எஞ்சிய காலத்தைக் கழித்து கி.பி. 1039ல் கெய்ரோவில் காலமானார்.

விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளிலும் விற்பன்னராய்த் திகழ்ந்த இப்னு ஹைதம் இயற்கை தத்துவம், ஒளியியல், வானவியல் அனைத்திலும் நிறைய எழுதியுள்ளார். இருநூற்றுக்கும் அதிகமான விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகளை இவர் எழுதியுள்ள தாக பிரபல விஞ்ஞானி அபூ உஸைபியா குறிப்பிடு கின்றார். 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அரேபியாவிலும் ஐரோப்பாவிலும் இவரது செல்வாக்கு நிரம்பி இருந்தது. இப்னு ஹைதமின் கண்டுபிடிப்புகளும் கருதுகோள்களும் பல புதிய கண்டுபிடிப்புகளுக்கு அடிகோலின. இஸ்லாமிய உலகின் பிரபல விஞ்ஞானிகளான நஸ்ருத்தீன் அல்-தூசி, குத்புத்தீன் அல் ஷிராஸி, கமாலுத்தீன் அல் பாரிஸி போன்றோர் இப்னு ஹைதமின் கருதுகோள்களைப் பின்பற்றினர்.

இப்னு ஹைதமின் De Aspectibus அல்லது Perspectiva கிதாப் அல் மனாஸிர் (ஒளியியல் நூல்). De Speculis Comburentibus போன்ற ஆக்கங்கள் லத்தீன் மொழியில் வெளிவந்து ஐரோப்பாவில் பிரபல்யமாயின. 1572இல் பிரட்ரிக் றிஸ்னர் என்பவர் லத்தீன் மொழிபெயர்ப்புகளைச் செய்தார். இதற்கு முன் 14ம் நூற்றாண்டில் Guerruccio di Cione Fedeighi இத்தாலிய மொழியில் இப்னு ஹைதமின் ஆக்கங்களை வெளியிட்டிருந்தார்.

கிதாப் அல் மனாஸிர் -ஒளியியல் நூல்- என்ற இப்னு ஹைதமின் நூலை பிரபல ஐரோப்பிய விஞ்ஞானிகளான ரொஜர் பேகன், விடலோ, பேச்சம் ஆகியோர் பின்பற்றினர். அவர்கள் தமது ஆராய்ச்சிகளுக்கு இந் நூலையே பெரிதும் நம்பியிருந்தனர். Perspectiva Communis என்ற பெயரில் பேச்சம் (Pecham) இந்த நூலுக்கு பொழிப்புரை வழங்கியிருந்தார்.


இன்னும் லொரன்ஸோ ஜிபேட்டி, கெப்டர், ஸ்நெல், பீக்மேன், ஃபெர்மட், ஹரியட், டேகாட் போன்ற விஞ்ஞானிகளும் இப்னு ஹைதமின் நூலை உபயோகித்தனர்.

எரியும் கண்ணாடி என்னும் அத்தியாயத்தில் சூரிய ஒளியை வெப்பமாகவும் சக்தியாகவும் மாற்றும் விதத்தினை இப்னு ஹைதம் விளக்கியுள்ளார்.

'சூரியனுக்கு நேர் எதிரே ஒரு குழிவான கண்ணாடி வில்லை வைக்கப்பட்டால் சூரியனிலிருந்து வரும் ஒளிக் கதிர்கள் கண்ணாடியினூடே அச்சுக்குச் சமாந்தரமாகச் சென்று வெளிப்படுகையில் அதன் அச்சை மையமாக வைத்து குவியும்' என்று குறிப்பிடுகிறார்.


உட்குழிவான எந்தவொரு கண்ணாடியும் அதன் அச்சுக்குச் சமாந்தரமாக வரும் ஒளிக் கதிர்களை அதில் பட்டு தெறிக்கும் போது அதன் அச்சை நோக்கி குவியச் செய்கின்றது. குழிவான கண்ணாடியை நோக்கி சமாந்தரமாக வரும் ஒளிக் கதிர்கள் அதில் பட்டுத் தெறிக்கும் போது சமாந்தரமாகவே வெளிவருவதில்லை.

-இது இப்னு ஹைதமின் கருதுகோள்.




இந்தக் கருதுகோளின் அடிப்படையிலே தான் இப்னு ஹைதம் சூரிய ஒளியை சக்தியாக மாற்ற முடியும் எனக் கண்டார்.

அவரது வார்த்தைகளில் சொல்வதானால் 'சூரியனில் இருந்து வெளியாகும் கதிர்கள் யாவும் நேர்கோட்டில் வந்து ஏதாவதொரு சமமான செப்பனிடப்பட்ட பொருளின் மீது சமமான கோணங்களில் பட்டுத் தெறிக்கும் போது, உதாரணமாக -தெறிபட்டுத் திரும்பும் கதிர்கள் அப்பொருளின் தொடுகோட்டின் எதிர்த் திசையில்



சமமான இரு கோணங்களை அமைக்கும். ஆகையால் கோள வடிவான தளத்திலிருந்து தெறிபடும் கதிர் அக்கோளத்தின் சுற்றளவுடன் (பரிதியுடன்) இரு சமமான கோணங்களை அமைக்கும். இதிலிருந்து கோளத்தின் விட்டத்துடனும் இரு சமமான கோணங்களை அமைக்கும். இன்னும் செப்பனிடப்பட்ட பொருளிலிருந்து தெறிபட்டு வரும் ஒவ்வொரு கதிரும் ஒரு புள்ளியில் ஒரு குறித்த அளவு வெப்பத்தை உண்டாக்கும். இவ்வாறே எண்ணிலடங்கா கதிர்கள் ஒரு புள்ளியில் சேர்க்கப்படின் அப்புள்ளியில் உருவாகும் வெப்பமும் பன்மடங்காகும். ஆக- கதிர்களின் தொகை கூடும் போது அதற்கமைய உருவாகும் வெப்பத்தின் தாக்கமும் கூடும்.'

*-இப்னு ஹைதம். கிதாப் அல் மனாஸிர். உட்குழிந்த கண்ணாடியின் சாஸனம் என்ற அத்தியாயம். மொழிபெயர்ப்பு. H. J. J. வின்டர் மற்றும் W. அரபாத். ஆசிய சங்க வெளியீடு. மே. வங்காளம். 1950. அத்தியாயம் xvi இல 1.*

$$M^n = E^n$$

ஆக- இப்னு ஹைதமின் கூற்றுப்படி பல கதிர்கள் பல கண்ணாடிகளில் பட்டு தெறிக்கும் போது இங்கே உருவாகும் வெப்பம் அல்லது சக்தி விழுக்காடு மயமாக இருக்கும். M என்பது கண்ணாடியாகவும் E என்பது உருவாகும் சக்தியாகவும் கொள்ளப்படின் இப்னு ஹைதமின் சூரிய சக்தி விதியின் படி $M^n = E^n$

இப்னு ஹைதம் அவர்களின் மேற்படி கருதுகோளின் படி சூரிய வெப்பம் பெறும் அல்லது சக்தி பெறும் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல் நடைமுறைச் சாத்தியமே என்பது தெளிவு. இன்று உலகெங்கிலும் இந்த அடிப்படையிலான பல சூரிய சக்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம்.

ஆனால்...இவை யாவும் இப்னு ஹைதமின் பெயரால் அன்றி இடையில் தோன்றிய விலாசமற்றவர்களின் பெயரால் வழங்கப்படுவதே வேதனை தருகின்றது.

# MUHAMMAD (SAL) NO: 1

"My coice of Muhammad to lead the list of the world's most influential persons may surprise some readers and may be questioned by others, but he was the only man in history who was supremely successful on both the religious and secular levels.

"Of humble origis, Muhammad founded and promulagated one of the world's great religions, and became an immensely effective political leader. Todate, thirteen centuries after his death, his influence is still powerful and pervasive.

"...Unified by Muhammad for the first time in history, and inspired by their fervent belief in the one true God, the small Arab armies now embarked upon one of the most astonishing series of conquests in human history..."

"... in a scant century of fighting, these Bedouin tribesman, inspired by the word of the Prophet, had carved out an empire stretching from the borders of India to the Atlantic ocean - the largest empire that world had yet seen..."

"... The new religion, of course, continued to spread , in the intervening centuries, far beyond the borders of thew original Muslim conquests. Currently, it has tens of millions of adherents in Africa and central Asia, and even more in Pakistan and northern India, and in Indonesia..."

"... It is probable that the relative influence of Muhammad on Islam has been larger than the combined influence of Jesus Christ and St. Paul on Christianity."

"Furthermore, Muhammad (unlike Jesus) was a secular as well as a religious leader. In fact, as the driving force behind the Arab conquests, he may well rank as the most influential political leadewr of all time."

"...It is this unparalleled combination of secular and religious influence which I feel entitles Muhammad to be considered the most influential single figure in human history."

**Excerpts from *'The 100, a ranking of the most influential persons in history'* by Michael H, Hart.**

**தனி மனிதனாக மனித வரலாற்றில் அதிக செல்வாக்குச் செலுத்திய**

## முஹம்மது (ஸல்)

"உலகில் அதிக செல்வாக்குமிக்க மனிதர்களின் பட்டியலில் முதலாமவராக முஹம்மதை நான் தேர்ந்தெடுப்பது பலருக்கு வியப்பூட்டுவதாக இருக்கலாம். .. சமய மற்றும் லௌகீக துறைகளில் அதியுயர்ந்த சாதனைகளை வென்ற ஒரேயொரு மனிதனாக அவர் சரித்திரத்தில் பதியப்பட்டுள்ளார்.

மிகச் சாதாரணமான பின்னணியில் பிறந்து வளர்ந்த முஹம்மத் உலகின் மிகப் பாரிய சமயங்களில் ஒன்றை நிறுவினார். பின்னர் ஆழிய செல்வாக்கு மிக்க அரசியல் தலைவராக மிளிர்ந்தார். அவர் மரணித்து பதின்மூன்று நூற்றாண்டுகள் கழிந்த பின்பும் அன்றும் கூட அவரது செல்வாக்கு பலமாகவும் பரவலாகவும் வியாபித்துக் காணப்படுகிறது.

"....சரித்திரத்தில் முதன்முறையாக முஹம்மதின் தலைமையில் ஒற்றுமைப்படுத்தப்பட்டு உண்மையான ஒரே இறைவன் மீதான உறுதியான நம்பிக்கையால் உந்தப்பட்டு அரபுகளின் சின்னஞ்சிறு சேனை மனித வரலாற்றில் என்றுமில்லாதவாறான வியத்தகு வெற்றிகளை ஈட்டிக் குவித்தது..."

".. இறை தூதரின் வார்த்தைகளால் உயிரூட்டப்பட்ட அவர்கள் ஒரு நூற்றாண்டு கூட ஆக முன்னரேயே உலகம் இது வரை கண்ட மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கினர். அது இந்தியாவின் எல்லைகளிலிருந்து அத்லாந்திக் சமுத்திரம் வரை நீண்டு விசாலித்திருந்தது."

"....இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த பாவுலும் கிறிஸ்தவத்துக்கு ஆற்றிய தொண்டை விட முஹம்மத் இஸ்லாம் மதத்துக்கு ஆற்றிய தொண்டு சார்பளவில் மிக விசாலமானது..."


"...தவிரவும், முஹம்மத் (இயேசுவைப் போலன்றி) சமயத் துறையில் போன்றே உலகாயத துறையிலும் தலைவராகத் திகழ்ந்தார். வாஸ்தவத்தில், அராபிய வெற்றிகளுக்கெல்லாம் உந்து சக்தியாக நின்றவர் என்ற வகையில் சரித்திரத்தின் எல்லாக் காலங்களிலும் அதி செல்வாக்குப் பெற்ற அரசியல் தலைவராக அன்னார் விளங்குகிறார்..."

"...சமய மற்றும் உலகாயத துறைகளில் அவர் செலுத்திய அந்த ஒப்பற்ற செல்வாக்கு காரணமாகவே மனித வரலாற்றில் அதிக கூடிய செல்வாக்குப் பெற்ற தனிமனிதனாக முஹம்மதை நான் காண்கிறேன்."

**சரித்திரத்தில் அதிக செல்வாக்கு செலுத்திய மனிதர்கள் 100 பேர்' எனும் மைக்கேல் ஹெச் ஹார்ட் எழுதிய நூலிலிருந்து.**

**ஸல்லள்ளாஹு அலா முஹம்மத் ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம்**

# சூரிய சக்தி நிரப்பு நிலையம்




1986ம் ஆண்டு உலகின் முதலாவது சூரிய சக்தி எரிபொருள் நிரப்பு நிலையம் ஜேர்மனியில் நிறுவப்பட்டது. பிரபல ஜேர்மனி எலக்ரோனிச் கம்பனியான AEG இதனை நிறுவியது. டூர்-டி- சொல் (Tour de Sol) எனப் பெயரிடப்பட்ட சூரிய சக்திக் கார்ப் பந்தயத்தில் கலந்துகொண்ட கார்களின் பற்றிகளை ரீ-சார்ஜ் பண்ண இந்நிலையம் உபயோகிக்கப்பட்டது.

இந்தக் கார்கள் சூரிய சக்தியினைக் கொண்டு சூரிய சக்தி ஜெனரேட்டர்கள் மூலம் கார் ஓட்டத் தேவையான மின் சக்தியைக் கொடுக்கக் கூடியதாக வடிவமைக்கப் பட்டவை. இக்கார்களுக்கு ஒரே நேரத்தில் எரிபொருள் வழங்கும் வகையில் பிரமாண்டமான சூரிய சக்திச் சேமிப்புச் கலம் அமைக்கப்பட்டது. குறித்த பந்தயத்தின்போது மட்டும் நாளொன்றுக்கு 10 கிலோபைட் சூரிய சக்தி வழங்கப்பட்டது.

இது நிகழ்ந்து 10 வருடங்கள் ஆகி விட்டன. ஆனால் சூரிய சக்திக் கார் உற்பத்தி இன்னும் கண்காட்சிப் பொருள் உற்பத்தியாகவே உள்ளது. வர்த்தக ரீதியிலான தயாரிப்பு வேலைகள் தொடங்கப்பட்டதாக இல்லை. என்றாலும் அனைத்துலகிலும் இலட்சக்கணக்கான குளிரூட்டிகள், குளிர் சாதனப் பொருட்கள். அவன்கள் இன்று சூரிய சக்தியினால் இயக்கப்படுகின்றன.

கம்பனியின் சூரிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சூரியக் கார்கள் எரிபொருள்கள் நிரப்பும் காட்சி.

## அனைத்துலக சூரிய சக்தி மகாநாடு

### மேற்கு நாடுகள் பாராமுகம்

தேவையான பொருளாதார உதவி கிடைக்குமானால் கோடிக் கணக்கான மக்களின் வாழ்வில் ஒளி (சக்தி) பிறக்கும் என்ற முன்னறிவிப்புடன் அனைத்துலக சூரிய சக்தி மகாநாடு ஹராரேயில் முடிவுற்றது.

மூலவளம் இல்லையென்றால் உலக சூரிய சக்தித் திட்டம் வெறும் காகிதக் கட்டாகவே மிஞ்சி விடும். கொள்கைகளும் அர்ப்பணமும் சோதனை செய்யப்படாமலே வீணாகி விடும் என்று மாநாட்டின் தலைமையுரையில் ஸிம்பாப்வே ஜனாதிபதி ரொபட் முகாபே தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மாற்று சக்தியின் அவசியம் உணரப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் இப்படியானதொரு மாநாடு நடைபெற்றமை ஆறுதலான விடயமே. ஆனால் துரதிஷ்டவசமாக வளர்ச்சியடைந்த மேற்குலக நாடுகள் இதில் அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. 1996-2005ம் ஆண்டு வரையிலான காலத்தை மாற்று சக்தியின் தசாப்தமாக மாநாடு பிரகடனம் செய்துள்ளது.

மாற்று சக்தி தேடும் வழிகளில் எத்தனையோ அடிப்படைத் திட்டங்கள் முன்வைக்கப் பட்ட போதிலும் மிக முக்கியமாக உலக நாட்டுத் தலைவர்களிடையே இது பற்றிய ஓர் அரசியல் அழுத்தம் ஏற்படுததப்பட வேண்டியுள்ளது. மாநாட்டில் தொனித்த மிக முக்கிய விடயம் இதுவே.

ஐ.நா. மன்றத்தின் கல்வி, விஞ்ஞான கலாசார அமைப்பினால் -யுனெஸ்கோ- ஏற்பாடு செய்யப்பட்ட இம் மாநாட்டில் ஆக 9 நாடுகளின் தலைவர்களே கலந்து கொண்டனர். மேற்கு நாடுகளில் இருந்து கலந்துகொண்ட பிரதிநிதிகள் அனைத்துலக சூரிய சக்தி நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதில் தாம் எதிர்ப்புகளை எதிர் நோக்குவதாகக் குறிப்பிட்டனர்.

அனைத்துலகிலும் இன்று சூழல் மாசடைதல் என்ற சவால் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. சூழல் மாசடைவதைக் குறைக்க மாற்று சக்தித் திட்டமான சூரிய சக்தித் திட்டம் வெகுவாக உதவலாம். இம்முயற்சியில் வெற்றி கிடைக்க மேற்கு நாடுகளின் உதவி தேவை.

கிடைக்குமா?
காலமே பதில் சொல்லும்.

# சொந்தம்.

சிங்கப்பூர் தேசிய புத்தக மேம்பாட்டு மன்றத்தின் 'சிறந்த நூலுக்கான பரிசு' பெற்ற 'நோன்பு' சிறுகதைத் தொகுதியில் இருந்து.....



நோன்பு திறப்பதற்கு ஆயத்தமாக கஞ்சிப் பாத்திரங்களை நிரப்பிக் கொண்டிருந்தாள் கமருன்னிசா. அந்தக் கஞ்சியின் மணம் அறையில் உட்கார்ந்திருந்த அப்துல் ரசாக்கை சமையல் கட்டுக்கு இழுத்து வந்தது.

அம்மாவின் கையால் நோன்புக் கஞ்சி அருந்தும் வாய்ப்பு சில ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இப்பொழுது தான் அவனுக்குக் கிடைத்திருக்கிறது. படிப்பு, வேலைப்பயிற்சி என்று வெளியூர்களில் நோன்புக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தவன் பெற்றோருடன் பெருநாள் கொண்டாட வந்திருக்கிறான்.

இரண்டு கஞ்சித் தட்டுகள் மட்டும் இருந்ததைப் பார்த்துவிட்டு சற்று வியப்புடன் புருவத்தை உயர்த்தினான் ரசாக். மகனைக் கவனித்த கமருன்னிசா அவனது சந்தேகத்தை உணர்ந்து கொண்டாள்.

"உன் வாப்பா நோன்பு திறக்க வீட்டுக்கு வரலையாம், ரசாக்.. பள்ளிக் கூடத்திலேர்ந்து சொல்லியனுப்பினாங்க!" என்றாள் தாய்.

என்ன வேலை இருந்தாலும் நோன்பு திறக்க வீட்டுக்கு வந்துவிடுவார், ஆசிரியர் அபுல் காசிம். இன்றைக்கு என்ன ஆயிற்று? ரசாக் யோசித்தான்.

கமருன்னிசாவே விவரம் சொன்னாள். "பள்ளிவாசல்லலே நோன்பு திறந்திட்டு, தொழுகைக்குப் பிறகு அங்கே ஒரு பாத்திபாவிலே கலந்துக்கிட்டு வருவாங்களாம். ஒரு பள்ளிப் பிள்ளை சொல்லிட்டுப் போச்சு.."

ரசாக் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. அவனது அமைதியைக் கவனித்தாள் கமருன்னிசா. மகன் எதையோ சிந்திக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

"என்ன யோசிக்கிறே ரசாக். வாப்பாவைப் பத்தி உனக்குத் தெரியாதா? பொதுக் காரியம்னு யார் கூப்பிட்டாலும் போகக் கூடிய சுபாவம். யாராச்சும் கூப்பிட்டிருப்பாங்க அது தான் இங்கே வராமெ பள்ளிக்கூடத்திலேர்ந்து நேரா பள்ளிவாசலுக்குப் போயிருப்பார்" என்று விளக்கம் சொன்னாள் கமருன்னிசா.

"அம்மா, நான் இங்கே வந்து நாலு நாளாச்சு. வாப்பாவை நல்லா கவனிச்சேன். அவங்ககிட்டே ஒரு மாறுதல் தெரியுது. வழக்கமாக சிரிச்சிப் பேசற வாப்பா ரொம்ப அளவாப் பேசறாங்க. கலகலப்புக் குறைஞ்ச மாதிரி அருக்கு. என்ன காரணம்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்.."

மகனின் மன ஓட்டம் கமருக்குப் புரிந்தது. ஆனால் பளிச் என்று பதில் சொல்லத் தோன்றவில்லை.

அவனே பேசினான். "அடுத்த மாதம் வாத்தியார் உத்தியோகத்திலே இருந்து ஓய்வு பெறப்போற வருத்தமா இருக்கனும்னு நினைக்கிறேன். அது தான் வாப்பாவோட வாட்டத்துக்கு காரணமாயிருக்கும்."

பொறுப்புள்ள பிள்ளை, மனதில் பட்டதைச் சொல்கிறான். தந்தையின் உற்சாகம் குறைந்திருப்பது ரசாக்கைப் பாதித்திருந்தது.

காசிம் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராக இருந்துவிட்டார். ஓய்வுபெறப் போகும் வேளையில் அவருக்கு "நல்லாசிரியர் விருது" அண்மையில் கிடைத்தது. அது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவர் நல்லாசிரியர் தான். ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கி இருக்கிறார்.

ரசாக் பல நேரங்களில் ஆச்சரியம் அடைந்திருக்கிறான். மகன் என்று பாராமல் ஒரு நண்பனைப் போல் அவனிடம் பேசுவார்.

## ஜே. எம். சாலி

அம்மாவிடம் அவர் சன்னமான குரலில் பேசியதை ரசாக் பலமுறை காதுகொடுத்துக் கேட்டிருக்கிறான்.

"கமரு.. வாத்தியார் பிள்ளைங்க மக்குகளா இருக்கும்னு வழமையா பல பேர் சொல்வாங்க. நீ வேணும்னா பார். அல்லாவுடைய கிருபையினாலே, ரசாக்கை பெரிய படிப்பாளியா ஆக்கிக் காட்டுறேன். பல பெண்களைப் பெத்த நமக்குக் கிடைச்ச ஒரே பிள்ளை ஆச்சே.. மக்குப் புள்ளையா விட்டுப் புடுவேனா..?"

காசிம் மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமையைச் செய்துவிட்டார். அவருக்கு இவன் செய்ய வேண்டிய உதவி தான் எஞ்சியிருக்கிறது.

"அம்மா.. வேலையிலேர்ந்து ஓய்வுபெறப் போறோம்னு வாப்பா வருத்தப்பட என்ன இருக்கு? என்னைப் பெரிய படிப்பு படிக்க வைச்சிருக்கிறீங்க. நான் யாருக்காக சம்பாதிக்கப் போறேன். பேரைக் காப்பாத்துற மாதிரி நான் நடந்துக்க மாட்டேன்னு வாப்பாவுக்குச் சந்தேகமா?" என்று ரசாக் கேட்டான்.

கமருன்னிசா கணநேரத்தில் நெகிழ்ந்து கலங்கிவிட்டாள். மறுவார்த்தை சொல்ல நாக்கு எழவில்லை. மகனின் அறிவும் மனப்பக்குவமும் அவளை மெய்சிலிர்க்க வைத்தன.

சக்திக்கு மீறி, பெண் குழந்தைகளுக்கு செய்ய வேண்டியதைச் செய்து ஒரு பொட்டுத் தங்கம் இல்லாமல் கழுத்தில் வெறும் கருமணியோடு புன்னகை மாறாமல் இருக்கிறாள் அம்மா.

உதைக்கப்பட்ட கால் பந்து மாதிரி ஊர் ஊராக வேலை மாற்றம் கண்டு விட்டு ஓய்வு பெறப் போகும் தந்தையிடம் உள்ள உடைமை "நல்லாசிரியர் விருது" மட்டுமே. மேலும் அவர்கள் ஒரு செல்வத்தை சம்பாதித்து இருக்கிறார்கள் என்பது மகனுக்குத் தெரிகிறது. அதைப் புரிய வைக்க வேண்டும் என்று ரசாக் நினைக்கிறான்.

ரசாக்கை கணினியில் பட்டதாரி ஆக்கிவிட்டார் காசிம். சில இடங்களில் பயிற்சி பெற்ற அவனுக்கு பெரிய சம்பளத்தில் வேலை வாய்ப்புக்கள் வந்திருக்கின்றன. சிங்கப்பூரில் ஒரு பெரிய நிறுவனத்தில் வேலையில் சேர்த்துவிட ஏற்பாடு செய்திருக்கிறார் வணிகப் பிரமுகர் முஸ்தபா ஹாஜியார். தன் மகளையும் ரசாக்குக்கு மணம் செய்து வைப்பது அவரது திட்டம். பல வாய்ப்புகள் அவனைத் தேடிவரும் போது ஆசிரியர் வேலையிலிருந்து ஓய்வுபெறப்போவதை நினைத்து காசிம் வாட்டம் அடையத் தேவையில்லை தான்.

"வாப்பா உங்ககிட்டே எதனாச்சும் பேசியிருப்பாங்க. சொல்லலாம்னு நெனச்சா மறைக்காமெ சொல்லுங்க அம்மா.." என்று தாயைத் தூண்டினான் ரசாக்.

"எதுவா இருந்தாலும் அவங்ககிட்ட

கேக்கலாம் ரசாக். நீ நினைக்கிற மாதிரி, வேலையிலேருந்து நிற்கிறதை நினைச்சி உன் அப்பா கவலைப்படறதா நான் நினைக்கலே. இனி, எங்கள் தேவை சொற்பம். ஓய்வூதியம் கிடைக்கறப்போ என்ன கவலை?" அம்மா பதற்றம் இல்லாமல் சொன்னாள். இது நியாயமான விளக்கம் தான் என்று அவனுக்குப் பட்டது. இனி, தந்தையிடம் நேரடியாகப் பேச வேண்டியது தான். அதை காசிம் வரவேற்பார். மனம் விட்டுப் பேசுவதை விரும்பக் கூடிய நல்லாசிரியர் அல்லவா?

பள்ளிவாசல் நகரா அடித்ததும் இருவரும் நோன்பு திறந்தார்கள்.

காசிம் அதிக தாமதம் இல்லாமல் வீட்டுக்கு வந்துவிட்டார். வழக்கம் போல் தாழ்வாரக் குறட்டில் பழைய சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார்.

"ரசாக்கு .. நல்லபடியா நோன்பு திறந்தியா? அம்மா காய்ச்சுற நோன்புக் கஞ்சி உனக்கு ரொம்பப் பிடிக்குமே.." என்று அவரே பேச்சைத் தொடங்கினார்.

பேச்சைத் தொடர அவனுக்கு அது நல்ல சைகையாக இருந்தது. "உங்களுக்கு மட்டும் பிடிக்காதா? உங்கள் பங்கை எடுத்து வைச்சிருக்கேன். இந்தாங்க." என்று கஞ்சிக் கிண்ணத்தை கணவரிடம் கொடுத்தாள் கமருன்னிசா.

"நீ கோச்சிக்குவேன்னு தெரிஞ்சி தான் பள்ளிவாசல்லே கொஞ்சமா கஞ்சி சாப்பிட்டு நோன்பு திறந்தேன்" என்றார் காசிம்.

கஞ்சியை வாங்கியவர் அதைப் பருகாமல் அருகில் வைத்தார். அதை ரசாக்கும் கமருன்னிசாவும் எதிர்பார்க்கவில்லை.

"நம்ம பொண்ணுங்க பெருநாளுக்கு வர்றதா கடிதம் எதுவும் வரலியா கமரு?"

"இன்னிக்கு இல்லே. நாளை மறுநாள் வரும். அவங்க வராமெ இருக்க மாட்டாங்க. இப்ப அதுக்கு என்ன அவசரம்.? நீங்க கஞ்சியைக் குடிங்க..அப்பவே ஆறிப்போயிடுச்சி.."

அவர் சில நொடி நேரம் அமைதியாக இருந்தார்.

"சொல்ல மறந்திட்டேன். சிங்கப்பூர் தபால் வந்திருக்கு" என்றாள்.

"என்ன விஷயம்? படிச்சிப் பார்த்தீங்களா?"

"நீங்க வந்ததும் படிக்கலாம்னு வைச்சிட்டோம்" என்றவாறு கடிதத்தை கொடுத்தாள்.

காசிம் பிரித்துப் பார்த்தார். எதுவும் சொல்லாமல் மகனிடம் நீட்டினார். அவன் சம்பந்தப்பட்ட செய்தி.

மறுபடியும் சற்றுநேரம் அமைதி.

""பாத்தியா ஓதுறத்துக்குப் போனீங்களே... யாருக்கு? அதுவும் இந்த நோம்புக் காலத்திலே பள்ளிவாசல்லே வைச்சி.." கமருன்னிசா கேட்டதும் அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"போன மாசம் காலமான உஸ்மானுக்காக. அடக்கமாக பள்ளிவாசல்லேயே ஓதினோம். பல பேருடைய துவா அவருக்குக் கிடைக்கும் இல்லியா? அவர் மகன் கொஞ்ச வயசுப் பிள்ளை. நான் தான் சொன்னேன்.. நாற்பதாம் நாள் பாத்தியான்னு சொல்லி தெருவையோ ஊரையோ கூட்டி விருந்து வைக்காதீங்க. அது வீண் செலவு. பள்ளிவாசல்லே மஃரிப் தொழுகைக்குப் பிறகு வைக்கிறத்திலே நன்மை இருக்குன்னு சொன்னேன். யோசனை சொல்லிட்டு நான் போகாமலிருக்க முடியுமா? இந்த ஊருக்கு மாற்றலாகி வந்ததிலேருந்து அவரோட பழக்கம்.. போய்ச் சேர்ந்து நாற்பது நாள் கழிஞ்சிட்டுது..."

பெருமூச்சு விட்டார் காசிம். காலமான உஸ்மானின் குடும்பத்தைப் பற்றி கமருன்னிசாவுக்கு நன்றாகவே தெரியும். சுற்றமும் கிளையும் அவருக்கு அதிகம். உடன்பிறந்தவர்களுக்கும் குறைவு இல்லை. இருந்தும் சிரம நிலையில் குடும்பம் இயங்கிக்கொண்டிருந்தது.

அடுத்தடுத்துப் பெண்பிள்ளைகள். கடைசியில் ஆசைக்காக ஆண்பிள்ளை. உஸ்மானுக்கு நோய்நொடிகளுக்குப் பஞ்சமில்லை. அதனால் உடலில் உழைக்க வலுவில்லை.

கமருன்னிசா, அந்தக் குடும்பத்தில் நேர்ந்த சோகத்தை எண்ணிச் சங்கடப்படவே செய்தாள்.

"குடும்பத்தை தத்தளிக்க வைச்சிட்டுப் போயிட்டார் உஸ்மான். ரெண்டு பெண்களை அவர் காலத்திலேயே கரையேத்திட்டார். மற்ற குமர்களை எப்படி இந்தக் குடும்பம் கரைசேர்க்கப் போகுதோ தெரியலே.." என்று காசிம் அனுதாபப்பட்டார்.

"சொந்தத்திலே மாப்பிள்ளைப் பையன்கள் இருந்தும்.. உம்.. அதைச் சொல்லி என்ன ஆகப்போவுது.." என்று தொடராமல் நிறுத்தினார்.

"சொந்தமாவது பந்தமாவது.. முறைப் பையன்கள் பல பேர் வசதியான இடத்தைத் தேடிக்கிட்டவங்க போக இன்னும் சில பேர் இருக்காங்க. பெரிய இடத்துப் பெணகள் கிடைச்சா வசதியா வாழலாம் இல்லையா?" என்றார் காசிம்.

"மாமா மகளைக்கட்டிக்கணும்னு ஒரு பையனுக்குக் கூட எண்ணம் இல்லாமல் போச்சே.. அதை நினைச்சாத் தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கு..."

"இதிலே என்ன ஆச்சர்யம் இருக்கு, கமரு.. ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிட்டா மற்ற பெண்களைக் கட்டிக்கொடுத்து மொத்தக் குடும்பத்தையும் கவனிக்க வருமேங்கிற எண்ணம் தான்.. இல்லேன்னா அழகான அந்தப் பெண்களை விட்டுட்டு வெளியே போயிருப்பாங்களா? சொத்து இருந்தால் தான் சொந்தம். பணம் இருந்தால் தான் பந்தம்." என்றார் அவர்.

"அது தான் மெய். அவங்க குடும்பக் கதை தான் உதாரணம். கொஞ்சம் சம்பாத்தியம் உள்ள நாமே பெண்களைக் கட்டிக்கொடுக்க எவ்வளவோ துன்பப்பட்டோம். அந்தக் குடும்பத்தை நினைச்சா" கமருன்னிசாவின் குரலில் துயரம் கப்பியது.

"நாம் கவலைப்பட்டு என்ன ஆகப் போகுது?. படைச்சிப் படியளக்கிற அல்லா தான் அவங்களுக்குப் பொறுப்பு. அவன் என்ன நாடியிருக்கானோ யாருக்குத் தெரியும்?" பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் தோரணையில் காசிம் பேசினார்.

"பேச்சுவாக்கில் மறந்துட்டேன். சிங்கப்பூர் கடிதத்தை படிச்சிட்டியா ரசாக்.. முஸ்தபா ரொம்ப தீவிரமா முயற்சி செய்திருக்கிறார் இல்லியா?" என்று மகனைக் கேட்டார்.

அவன் தலையை அசைத்தான்.

"உன் படிப்புக்குத் தகுந்த வேலை. நினைச்சிப் பார்க்க முடியாத பெரிய சம்பளம். இந்த வாய்ப்பு எல்லார்க்கும் கிடைக்காது."

"எனக்கும் தெரியிற மாதிரி சொல்லுங்களேன்" என்றாள் கமருன்னிசா.

"சிங்கப்பூரிலே ரசாக்குக்கு வேலை கிடைச்சிட்டது கமரு. பயணத் தேதியைத் தெரிவிச்சா கம்பெனி விமான டிக்கெட் அனுப்புமாம்... அந்த வேலை கிடைக்குறதுக்கு முஸ்தபா ரொம்பவும் பிரயாசைப்பட்டிருக்கிறார்."

கமருன்னிசா கணவரையும் மகனையும் மாறிமாறிப் பார்த்தாள்.

"இது மட்டுமில்லே.. நமக்கும் சிங்கப்பூருக்கு போறதுக்கு வாய்ப்புக் கிடைச்சிருக்கு. ரசாக் வேலையிலே சேர்ந்ததும் சீக்கிரத்திலேயே தன் மகளைக் கட்டிவைக்க ஏற்பாடு செய்றதா முஸ்தபா எழுதியிருக்கார். அப்ப நம்ம குடும்பத்திலே எல்லாரும் அங்கே வர டிக்கட் அனுப்புவாராம். ரொம்பவும் மகிழ்ச்சியான சேதி.. இல்லையா?" என்றவாறு ரசாக்கைப் பார்த்தார் காசிம். "காலம் கடத்தாம நாளைக்கே பதில் எழுதிடலாம்னு நினைக்கிறேன்."

"நீங்க நினைக்கற படியே செய்யுங்க வாப்பா"

"பயணத் தேதியை நீ தானே சொல்லனும்?"

"எந்தத் தேதியானாலும் முடிவு செய்ய வேண்டியது நீங்க தான்.."

"மனசிலே இருக்கிறதைச் சொல்லு ரசாக்.."

"உங்கள் மனசை இப்ப தெரிஞ்சுக்கிட்டதாலே தான் சொல்கிறேன்.. எனக்கு ஒரு பரீட்சை வைச்சிருக்கிறீங்க. அதிலே தோல்வியடைய மாட்டேன்."

அவர்களின் பேச்சின் போக்குப் புரியாமல் தாய் குழம்பினாள்.

"வாப்பா, நாலு நாளா நான் உங்களக் கவனிச்சேன். ஓய்வுபெறப் போறதை நினைச்சி நீங்க கவலைப்படறதா தப்புக் கணக்குப் போட்டுட்டேன். உங்க மனக்கணக்குப் புரிஞ்ச பிறகு இந்தப் பயணத்துக்கு நான் சம்மதிச்சா உங்கள் பிள்ளைங்கிற பெருமை எனக்கு இல்லே..."

தம் விருப்பத்தைப் புரிந்துகொண்ட மகனின் மனப்பக்குவத்தை எண்ணி பூரித்துப் போனார் காசிம்.

"சிங்கப்பூருக்கு இப்ப வரக்கூடிய சந்தர்ப்பம் இல்லேன்னு நாளைக்கே எழுதிப் போட்டுடுங்க, வாப்பா. உங்க மன ஓட்டப்படி உஸ்மான் வீட்டிலே எனக்காக நீங்க பெண் பேசலாம். தேதியை நீங்களும் அம்மாவும் முடிவு செய்யுங்க.." என்று இதய பூர்வமாகச் சொன்னான் ரசாக்.

அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லியபடி கஞ்சிக் கிண்ணத்தை கையில் எடுத்துப் பருகினார் காசிம். கமருன்னிசாவின் நெஞ்சம் நெகிழ்ந்தது. கலங்கிய கண்களை சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள் அவள்.

# பரிசு பெற்ற எழுத்தாளர் ஜே. எம். சாலி



இந்தியா இலங்கை சிங்கப்பூர். மலேசியா இன்னும் எங்கெல்லாம் தமிழ் வழங்குகிறதோ அங்கெல்லாம் வாசகர்களால் அறியப்பட்டவர்.

எழுத்தாளர். நூலாசிரியர். பத்திரிகையாளர். விமர்சகர் என ஏறத்தாழ எல்லாப் பாத்திரங்களையும் ஏற்றவர் சாலி.

சிங்கப்பூர் தொலைக் காட்சிக் கழகச் செய்தியாளரான அவருடைய இலக்கிய வயது மட்டும் 42.

சிங்கப்பூர் தேசிய புத்தக மேம்பாட்டு மன்றம் அவருடைய 'நோன்பு' சிறுகதைத் தொகுப்பை சிறந்த நூலாகத் தேர்ந்தெடுத்து பாராட்டும் பரிசும் வழங்கியுள்ளது. இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை சிங்கப்பூரின் நான்கு அதிகார மொழிகளிலும் வெளிவரும் சிறந்த நூலுக்கு விருது அளிக்கப்படுகிறது. இம்முறை தமிழில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே நூல் சாலியின் நோன்பு.

'அம்சம்' அவருக்கு நல் வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறது.

பரிசைப் பற்றிக் கேட்டபோது சாலி சில குறிப்புகளைச் சொன்னார்.

'பரிசும் பாராட்டும் எனக்குப் புதியவை அல்ல. 1955 ஏப்ரலில் ஐந்து ரூபாய்ப் பரிசுடன் கலைமகள் குடும்பத்தைச் சேர்ந்த கண்ணன் பத்திரிகையில் எழுதத் தொடங்கினேன். 1958ல் ஆனந்தவிகடன் கல்லூரி மாணவர் திட்டத்தில் 'நெருப்பு' என்ற சிறுகதை பிரசுரமாகி பரிசுத் தொகையையும் எழுதுகோலையும் பெற்றுத் தந்தது.

'அதே ஆண்டில் முஸ்லிம் முரசு பத்திரிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் பற்றுக்கோடு எனும் படைப்பு முதல் பரிசைப் பெற்றது. 1959ல் கண்ணன் தொடர்கதைப் போட்டியில் பரிசு. அது கலைமகள் வெளியீடாகவும் என்னுடைய முதல் நாவலாகவும் மாணவப் பருவத்திலேயே 1961ல் வந்துவிட்டது.

'அதே ஆண்டில் உமா பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் முதல் பரிசு. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் நாவல் போட்டியிலும் பரிசு. மறு ஆண்டில் ஆனந்தவிகடனில் நான்கு சிறுகதைகள் முத்திரைக் கதைகளாகப் பிரசுரமாகி பரவலான அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தன. அவற்றில் ஒன்று இலங்கைப் பின்னணியில் எழுதப்பட்ட 'அனுலாவின் பாகு'.

'சிங்கப்பூர்வாசியாக 1964ல் தமிழ் முரசுக்கு வருமுன் கிடைத்த அங்கீகாரங்கள் இவை. எழுத்தாளனாகப் பிரபலப்படுத்திய ஆனந்தவிகடனில் பத்தாண்டு காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றியபோது எண்ணிக்கை இல்லாமல் எழுதிச் சேர்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.


'பிறகு தினமணி கதிரில் நட்சத்திரச் சிறுகதைகள். கல்கியில் சிறப்புச் சிறுகதைகள். குமுதத்தில் பல கதைகள். எழுதாத தமிழ் இதழ்கள் இல்லை.

'இரண்டு முறை தமிழக அரசின் நாவல். குழந்தை இலக்கியப் பரிசுகள். 1978ல் அந்தப் பரிசைப் பெற்றது 'கனாக் கண்டேன் தோழி' நாவல். 1994ல் அறிவியல் முன்னோடிகளின் அரிய கண்டுபிடிப்புகளுக்குப் பரிசு. இலக்கிய சிந்தனை முதலானவற்றின் பரிசு. பாராட்டுகளின் பட்டியல் நீளமானது.


'பல்கலைக்கழகங்களின் அங்கீகாரமும் கிடைத்திருக்கிறது. நோன்பு சிறுகதைத் தொகுதியை ஆராய்ந்து திருச்சி பல்கலைக்கழகத்தில் இரு மாணவர்கள் பட்டம் பெறப்போகிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்திலும் ஒரு மாணவி ஆய்வை சமர்ப்பித்திருக்கிறார். பல சிறுகதைகள் பல்கலைக்கழக பாடநூல் திரட்டுகளில் சேர்க்கப் பட்டுள்ளன. 'வெள்ளைக் கோடுகள்' எனும் நாவல் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாடநூலாக வைக்கப்பட்டிருக்கிறது.

'ஆங்கிலம், இந்தி, உர்து, சிங்களம் ஆகியவற்றில் சில சிறுகதைகள் மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பது எதிர்பாராத அங்கீகாரம்.

நம் 'அம்சம்' இதழில், இறையருளால் தொடர்ந்து எழுதுவதாக சாலி சொன்னார். அவருடைய எழுதுகோல் இயங்கிக்கொண்டே இருக்க அம்சம் வாழ்த்துகிறது.



மணல் தரையின் மேல பிரமாண்டமான பாலம்? பாலம் கட்டும் போது நதி ஓடிற்று தான். இப்போது தண்ணீர் மிஸ்ஸிங்.. மனிதனே இந்த அழிவைத் தேடிக்கொண்டான், இயற்கைச் சூழல் பற்றிய கரிசனை இல்லாமல். இது மெக்ஸிகோ நாட்டின் கொலராடோ நதியின் அவல நிலை.



கரை புரண்டோடும் ஆற்று வெள்ளமா? இல்லை. தொழிற்சாலைகளின் நச்சுக் கழிவுகள் வந்தடைந்து நதியின் மேல் படர்ந்து மனிதனுக்கோ வேறு உயிரினங்களுக்கோ உபயோகமில்லாத நிலைக்கு மாறிய ஒரு நதி. ஜேர்மனியின் முல்டே நதியின் தோற்றம்.

B. B. M. C.


BANIYAS BUILDING MATERIALS CO. L.L.C.

P. O. Box : 3475, Abu Dhabi, U.A.E.
Fax : 02-725621, Tlx. : 23176 BBMC EM

Abu Dhabi 744440 (8Lines)
Al Ain 661140 667501
Dubai 626700 (4Lines)
Doha 326000 326999

PLYWOOD, TIMBER, CEILING, PARTITION, DECORATION & BLDG. MATERIALS

# நமது உடலைப் பற்றிய நறுக்குச் செய்திகள்



மனித உடலில்-

206 எலும்புகள்- 7450 தசைகள். 250 மூட்டுக்கள். 45 பிரதான நரம்புகள் உள்ளன.

ஆணின் சராசரி நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 72 பெண்ணுடையது நிமிடத்திற்கு 80. சிறுவர்களுடையது நிமிடத்திற்கு 100க்கும் மேல். இப்போதுதான் பிறந்த குழந்தையின் துடிப்பு நிமிடத்திற்கு ஏறக்குறைய 152.

மூக்கு இருக்கிறதே அது ஒரு நாளைக்கு 500 கன அடிக்கும் அதிகமான காற்றை சுவாசித்து. சுத்திகரித்து. உபயோகிக்கின்றது. 23.000 தரம் சுவாசிக்கின்றது.

2 பைந்து வியர்வையையும் 7.8 இறாத்தல் கழிவையுப் வெளியேற்றுகின்றது. வாய் 48.000 வார்த்தைகளைப் பேசுகின்றது.

- கோபத்தில் முகத்தைச் சுளிக்கையில் 43 தசைகள் இயங்குகின்றன. ஆனால் புன்னகை புரிய ஆக 17 தசைகளே வேலை செய்கின்றன.

வாழ்நாளில் நாம் சராசரியாய் 16.000 கலன் நீரை நாம் குடிக்கின்றோம். 250 மில்லியன் முறை கண் சிமிட்டுகின்றோம்.

3.5 பைந்து உமிழ் நீர் நாளொன்றிற்கு சுரக்கின்றது. வளர்ந்த ஒரு மனிதனுக்கு 2000-3000 கலோரி சக்தி தேவை.

நுரையீரல் 3-5 லீட்டர் காற்றை களஞ்சியப் படுத்தக்கூடியது.

தொடை எலும்பு ஆகப் பெரியது. காது எலும்பு ஆகச் சிறியது.

இதயத்திலிருந்து இரத்தம் ஒரு நிமிடத்துள் ஏனைய அங்கங்களுக்கும் சென்று மீண்டும் இதயத்தை அடைகின்றது.

ஒரு நாளைக்கு தலைமயிர் 0.001714 அங்குலம் வளர்கின்றது. நகம் 0.000046 அங்குலம் வளர்கின்றது. பெருவிரல் நகத்தைவிட மற்ற விரல் நகங்கள் வேகமாய் வளர்கின்றன.

மூளையில் 10-100 மில்லியன் நியூரோன்கள் (மூளைக்கலங்கள்) உள்ளன.

இதயம் ஒரு நாளைக்கு 103.680 முறை அடிக்கின்றது.



# அரபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்



கலாநிதி
எம். ஏ. எம். சுக்ரி
B. A. Hon. (Cey), Ph. D. (Edin.)
முதல்வர்
*நளீமியா இஸ்லாமிய சர்வகலாசாலை,*
*பேருவலை, இலங்கை.*

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னர் அரபுத் தீபகற்பத்தில் வழக்கிலிருந்த சிறந்த வளர்ச்சியைக் கண்டு இலக்கிய வளம்மிக்க ஒரு மொழியாகக் காணப்பட்ட அரபு மொழியானது இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர், குர்ஆனின் மொழியாகப் பரிணமித்து இஸ்லாமிய பண்பாட்டின் வளர்ச்சியோடு இஸ்லாமியக் கலாஞானங்களின் மொழியாக மாறியது.

இந்த வகையில் இஸ்லாத்தின் பரவலோடு அதன் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களிலெல்லாம் பரவிய அரபு மொழியானது அப்பகுதிகளில் ஏற்கனவே வழக்கிலிருந்த மொழிகளில் அதன் செல்வாக்கைப் பதித்தது.

முஸ்லிம்களால் பாரசீகம் கைப்பற்றப் பட்டபோது அங்கு இஸ்லாத்தின் பரவலோடு அரபு மொழியும் பாரசீக மொழியில் அதன் செல்வாக்கை ஏற்படுத்தியது. பாரசீக மொழி அரபு லிபியில் எழுதப்படும் மரபு தோன்றியதோடு, எண்ணற்ற அரபுச் சொற்கள் பாரசீக மொழியோடு கலந்து, அதன் சொல்லகராதியில் பெரும் மாற்றத்தை விளைவித்தது.

இது போன்ற நிலையைத் துருக்கி மொழியைப் பொறுத்தளவிலும் நாம் அவதானிக்க முடிகிறது. 1920களில் நிகழ்ந்த மொழிச் சீர்திருத்தத்திற்கு முன்னர் துருக்கி மொழியானது அரபு லிபியில் எழுதப்பட்டது. மேற்காபிரிக்காவின் ஹவ்ஸா, புலானி மொழிகளிலும், கிழக்காபிரிக்காவின் கிஸ்வாஹில் மொழியிலும் அரபு மொழியானது கணிசமான செல்வாக்கை ஏற்படுத்தியது.

முஸ்லிம்களால் இந்தியாவின் சிந்துப் பிரதேசம் கைப்பற்றப்பட்டபோது தய்பல், மன்சூரா, முல்தான் போன்ற பகுதிகளில் சிந்தி மொழியானது சில பிரதேசங்களில் மலாவி லிபியிலும், வேறு சில பகுதிகளில் அந்தகைரி லிபியிலும் எழுதப்பட்டது.

ஆனால், இப்பிரதேசங்கள் முஸ்லிம்களின் செல்வாக்கிற்கு உட்பட்டதும், இந்த பழைய லிபிகளின் இடத்தை அரபு லிபி பெற்றது. இந்த அராபிய சிந்தி லிபி ஷாஹ் கரீமி (1537-1623) என்னும் சிந்திக் கவிஞரின் கவிதையில் காணப்படுகிறது. சிந்தி மொழியில் காணப்படும் ஐம்பது ஒலிவடிவங்களைப் புலப்படுத்தும் வகையில் முப்பது அரபு வரிவடிவங்கள் பயன்படுத்தப்பட்டன. முஸ்லிம் ஆட்சியின்போது வங்காள மொழியின் முக்கிய ஆக்கங்கள் அரபு லிபியிலேயே எழுதப்பட்டன. இவ்வகையிலே அரபு மொழிக்கும், இஸ்லாம் பரவிய பிரதேசங்களில் நிலவிய மொழிகளுக்குமிடையில் தொடர்பினடியாகத்

தோன்றிய மொழிமாற்றங்கள், அதன் கலாசார விளைவுகள் ஆகியவற்றின் பின்னணியில் அரபுத் தமிழின் தோற்றம் அதன் பண்பாட்டுப் பாரம்பரியம் பற்றி விளங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வணிகத் தொடர்பும் குடியேற்றங்களும்

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னரே அரபுத் தீபகற்பம், இந்தியாவின் மேற்குக் கரைப் பிரதேசம் (மலையாளக் கரை) அரபிகள் 'மஃபர்' என அழைத்த கிழக்குக் கரைப் பிரதேசம், இலங்கைத்தீவு ஆகிய இடங்களுக்கிடையில் வணிகத் தொடர்புகள் காணப்பட்டன. இந்த வணிகத் தொடர்பு காரணமாக இப்பிரதேசங்களில் அரபுக் குடியேற்றங்கள் தோன்றின.


இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர் இந்த வணிகத் தொடர்பானது கலாசார, பண்பாட்டு உறவாக வளர்ச்சி அடைந்தது. இந்தியாவின் மஃபர் பகுதியில் காயல் பட்டணம், கீழக்கரைப் பகுதிகளிலும் அரபுக் குடியேற்றங்கள் காணப்பட்டன.

அரபு முஸ்லிம்கள் இந்த வணிக பண்பாட்டுத் தொடர்பின்போது, இப் பிரதேசங்களில் வழக்கிலிருந்த தமிழ் மொழியை எதிர்கொண்டனர். நீண்டகால இலக்கிய வளர்ச்சியைக் கொண்ட இலக்கியப் பாரம்பரியம் மிக்க தமிழ் மொழிக்கும் அதே போன்ற இலக்கியவளம் மிக்க அரபு மொழிக்குமிடையில் நிகழ்ந்த கலாசாரக் கூட்டிணைப்பின் விளைவே அரபுத் தமிழின் தோற்றமாகும். அரபுத் தமிழ் என்ற பெயரே அது அரபும் தமிழும் இணைந்த ஒரு கூட்டுமொழி என்ற கருத்தைத் தருகின்றது.

> நீண்டகால இலக்கிய வளர்ச்சியைக் கொண்ட இலக்கியப் பாரம்பரியம் மிக்க தமிழ் மொழிக்கும் அதே போன்ற இலக்கியவளம் மிக்க அரபு மொழிக்குமிடையில் நிகழ்ந்த கலாசாரச் கூட்டிணைப்பின் விளைவே அரபுத் தமிழின் தோற்றமாகும்.

அரபுத் தமிழின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த வரலாற்றுக் காரணிகளை நாம் விளங்குதல் அவசியமாகும். இஸ்லாம் தென் இந்தியாவில் தமிழ் பேசும் முஸ்லிம்கள் மத்தியில் பரவியபோது இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தொடர்ந்தும் தமிழ் மொழியையே பேசினர். ஆனால் இஸ்லாத்துக்கும் அரபு மொழிக்குமிடையில் நிலவிய இறுக்கமான தொடர்பு காரணமாக அவர்களது நாளாந்த மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரபுமொழி யறிவு அவசியமாகியதால் நிச்சயம் அவர்கள் அரபு மொழியை வாசிப்பதற்குப் பயின்றிருத்தல் வேண்டும்.

காலப்போக்கில் மதக்கோட்பாடுகள், கிரியைகளோடு தொடர்புடைய சில கருத்துப்



பதங்களைப் பொறுத்தளவில் அவற்றில் அரபுப் பதங்களுக்கு இணையான தமிழ்ப் பதங்களைப் பெறுவதில் சில இடர்பாடுகள் இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். தமிழ் மொழியானது இந்து கலாசாரப் பாரம்பரியத்தோடு இணைந்த ஒரு மொழியாகக் காணப்பட்டதால் இஸ்லாமியக் கோட்பாடுகளோடு இணைந்த கருத்துப் பதங்களைத் தமிழில் புலப்படுத்த முனையும்போது அதற்குப் பொருத்தமான, இஸ்லாமிய சிந்தனை மரபோடு இணைந்த சொற்கள் தமிழில் காணப்படாததை அவர்கள் உணர்ந்தனர்.

சிலபோது அத்தகைய கருத்துக்களைப் புலப்படுத்தத் துணைபுரியும் தமிழ் பதங்கள் அரபியில் அவை உணர்த்தும் மூலக்கருத்தைச் சிதைக்கும் வகையில் அமைந்திருப்பதையும் அவர்கள் அவதானித்தனர்.

> முஸ்லிம்கள் தமிழ் மொழியை அவர்களது கருத்து வெளிப்பாட்டுக்கு ஒரு சாதனமாகப் பயன்படுத்தும் அதே நேரத்தில் அவர்களது கலாசாரப் பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு அரபுத் தமிழ் துணை புரிந்தது.

## அரபுப் பதங்கள்

உதாரணமாக அல்லாஹ், நபி, ரசூல், ஆகிரா, மலாஇகா, ஜின், ஸாத், ஸிபாத், வுஜூத் போன்ற அரபுப் பதங்களுக்கு இணையான சொற்கள் தமிழில் இல்லை. மேலும் இவை போன்ற அரபு வார்த்தைகளில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களை இன்னொரு மொழியில் புலப்படுத்தலும் சாத்தியம் அன்று. இத்தகைய ஒரு வரலாற்றுச் சூழ்நிலையிலேயே முஸ்லிம்கள் தமிழ் மொழியை அதன் இலக்கண அமைப்பை முற்றிலும் பேணி அரபி லிபியில் எழுதும் முறையைத் தோற்றுவித்ததோடு இஸ்லாமிய கோட்பாடுகளுடனும் மதக் கிரியைகளுடனும் தொடர்புடைய அரபுப் பதங்களை தமிழ்மொழியோடு இணைத்துப் பிரயோகிக்க ஆரம்பித்தனர்.

இவ்வாறு சில வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாக அரபு மொழிக்கும் தமிழ் மொழிக்குமிடையில் ஏற்பட்ட இணைப்பினடியாக அரபுத் தமிழ் என்ற மொழி தோன்றி வளர ஆரம்பித்தது. அரபுத் தமிழில் தமிழ் மொழியின் இலக்கண அமைப்பு பேணப்பட்ட அதே நேரத்தில் அது அரபியில் எழுதப்பட்டு அரபுச் சொற்கள் அதில் பெருமளவு பயன்படுத்தப்பட்டன.

தமிழில் காணப்படும் பதினொரு எழுத்துக்களின் ஒலி வடிவத்தைப் புலப்படுத்தும் அதற்கு இணையான உச்சரிப்பையுடைய எழுத்துக்கள் அரபியில் காணப்படவில்லை. இவ்வாறு அரபியில் காணப்படாத சில தமிழ் எழுத்துக்களைக் குறிக்க அந்த ஒலி அமைப்பினையுடைய சில பாரசீக எழுத்துக்களைப் பயன்படுத்தினர்.

உதாரணமாக தமிழில் 'அச்சம்' என்ற சொல்லில் காணப்படும் 'ச்ச' என்ற ஒலி வடிவம், அரபியில் இல்லை. ஆனால் பாரசீக மொழியில் 'ச்ச' என்னும் ஒலி வடிவம் உள்ளது. இந்த ஒலி வடிவத்தைக்

## தமிழகத்தில் குறிப்பாகக் காயல்பட்டணம், கீழக்கரை போன்ற இடங்களிலும் இலங்கையிலும் வாழ்ந்த அறிஞர்கள் பல்வேறு இஸ்லாமியக் கலைகள் சார்ந்த நூல்களை அரபுத் தமிழில் இயற்றினார். இலக்கணம், இலக்கியம், தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகாயித், தஸவ்வுட் போன்ற கலைகளைப் பற்றிய நூல்களைக் கூட செய்யுள் நடையில் எழுதுவது அக்கால மரபாக இருந்தது.

குறிக்கும் எழுத்தினை ஒலியைப் புலப்படுத்தப் பயன்படுத்தினர். 'பணம்' என்னும் தமிழ் சொல்லில் காணப்படும் 'ப' ஒலி வடிவம் அரபியில் இல்லை. இதனைக் குறிக்க பாரசீக மொழியில் உள்ள ஓர் எழுத்தைப் பயன்படுத்தினர்.

வேறு சில தமிழ் எழுத்துக்களின் ஒலியைப் புலப்படுத்த அரபு எழுத்துக்களில் சில குறியீடுகளை இணைத்துப் புதிய எழுத்துக்களை உருவாக்கினர். தமிழில் உள்ள 'ங' வைக் குறிக்க ஒரு எழுத்தையும் 'ழ' வைக் குறிக்க மற்றுமொரு எழுத்தையும் உருவாக்கியதை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

## புதிய மொழி மரபுகள்

இஸ்லாமிய உலகின் ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம்கள் இவ்வாறு சில புதிய மொழி இலக்கிய மரபுகளை உருவாக்கினர். ஜே. ஈ. டிரனெட் 'லெக்சி ஒப் இஸ்லாம்' என்னும் நூலில் பிரஞ்சு இலக்கிய உருவத்தைப் பெற்ற, ஸ்பானிய வார்த்தைகள் கலந்த, ஆனால் அரபு எழுத்தில் எழுதப்பட்ட ஒரு கவிதையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

அரபுத் தமிழைப் போன்றே மலையாளப் பிரதேசத்தில் அரபும் மலையாளமும் இணைந்து அரபு மலையாளம் வளர்ச்சியடைந்தது.

அரபுத் தமிழானது கால ஓட்டத்தில் மிகப் பிரபலமாகப் பயன்படுத்தப்பட்டு தமிழ் பேசும் முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டு மொழியாக வளர்ச்சியடைந்தது. முஸ்லிம்கள் தமிழ் மொழியை அவர்களது கருத்து வெளிப்பாட்டுக்கு ஒரு சாதனமாகப் பயன்படுத்தும் அதே நேரத்தில் அவர்களது கலாசாரப் பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு அரபுத் தமிழ் துணை புரிந்தது.

அரபுத் தமிழ் நூல்களில் இம்மொழி மரபு 'அருவி மொழி' (லிஸானுல் அருவி) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரபுத் தமிழானது முஸ்லிம்களால் ஏன் 'அருவி மொழி' என அழைக்கப்பட்டது என்பது இன்னும் மயக்கமாகவே உள்ளது. தெலுங்கு மொழியானது வழக்கிலிருக்கும் ஆந்திராவில் தமிழ் பேசும் மக்களை அவர்கள் 'அருவர்' என்று அழைத்ததாக கோல்டுவெல் தன் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலில் குறிப்பிடுகிறார். தெலுங்கு மொழி பேசுவோர் தமிழ்நாட்டை அருவர் நாடு என வழங்கினர். மேலும் கலிங்கத்துப் போரில் சோழர் படையைக் கண்ட அந்நாட்டுச் சேனை 'அருவர், அருவர்' (தமிழர், தமிழர்) என அஞ்சி நடுங்கினர் எனக் கலிங்கத்துப் பரணி குறிப்பதாக பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவரது 'தமிழகம் ஊரும் பேரும்' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.


அரபுத் தமிழ் பற்றிய ஆய்வில்ஈடுபட்ட ஓர் ஆய்வாளர் குறிப்பிடும் ஒரு கருத்து இவ்விடயம் தொடர்பாகக் கவனத்தில்கொள்ளத்தக்கதாகும். தமிழ் மொழி பேசுவோரை 'அருவர்' என அழைத்த தெலுங்கு நாட்டார் முஸ்லிம்களையும் 'அருவர்' என அழைத்திருக்கலாம் எனவும், எனவே அவர்கள் பேசும் அரபும், தமிழும் கலந்த மொழியானது அருவி என அழைக்கப்பட்டிருக்கலாம் எனவும் இந்த ஆய்வாளர் கருதுகின்றார். எனினும் 'அரபுத் தமிழ்' ஏன் 'லிஸானுல் அருவி' என அரபுத் தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது இன்னும் ஆழமான ஆய்வை வேண்டிநிற்கும் ஒரு விடயமாகும்.

அரபுத் தமிழ் காலப்போக்கில் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு தமிழகத்திலும் இலங்கையிலும் வாழ்ந்த முஸ்லிம்களின் தாய்மொழியாகவும் கலாசார, பண்பாட்டு வெளிப்பாட்டிற்கான ஊடகமாகவும் மிகச் சிறப்பான வளர்ச்சியைக் கண்டது. அரபுத் தமிழ் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வழக்கிலிருந்ததைப் போர்த்துக்கேயர் தளபதி ஓடோராடோ பார்போசா இலங்கை முஸ்லிம்களிடையே வழக்கிலிருந்த மொழியின் பண்பை விளக்கும் தன்மையிலிருந்து அனுமானிக்க முடிகின்றது.

இம்மொழி மரபு காலக்கிரமத்தில் மிக வளர்ச்சியடைந்த ஒரு மொழிப் பிரிவாக வளர்ச்சியடைந்தது. உரைநடையிலும் கவிதையிலும் பல்வேறு கலைகளைத் தழுவிய எண்ணற்ற ஆக்கங்கள் அரபுத் தமிழில் உருவாகின. தமிழிலக்கிய உருவங்களோடு 'கஸீதா', 'தக்மீஸ்', 'மர்ஸியா', 'மத்ஹ்' போன்ற அரபிலக்கிய உருவங்களையும் முஸ்லிம்கள் அரபுத் தமிழ் கவிதைகளில் பயன்படுத்தினர். அரபு மொழியின் காம்பீரியமும் தமிழின் மென்மையும் இணைந்த சக்தியும் உயிரோட்டமும் மிக்க உரைநடையாக அரபுத் தமிழ் உரைநடை அமைந்தது. அரபிலக்கியப் பாரம்பரியமும் தமிழிலக்கியப் பாரம்பரியமும் இணைந்த ஒரு புதிய இலக்கியப் பாரம்பரியத்தை அரபுத் தமிழ் தோற்றுவித்தது.

## அரபுத் தமிழ் அகராதி

அரபுத் தமிழில் தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகாயித், தஸவ்வுப் போன்ற இஸ்லாமியக் கலைகள் சார்ந்த ஆயிரக்கணக்கான நூல்களும், வானவியல், தத்துவம், வரலாறு, மருத்துவம் போன்ற கலைகளுடன் தொடர்புடைய எண்ணற்ற நூல்கள் எழுதப்பட்டன. அந்நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் விளக்கங்களைக் கொண்ட அரபுத் தமிழ் அகராதிகளும் தொகுக்கப்பட்டன. இதுவரை இரண்டாயிரத்திற்கும் அதிகமான அரபுத் தமிழ் நூல்கள் பற்றிய விவரங்கள் காணப்படுவதாக இது தொடர்பான சில ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. நூல்களை அச்சிடுவதற்கான வசதியற்ற ஆரம்ப காலங்களில் அரபுத் தமிழ் நூல்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே எழுதப்பட்டன. பிற்காலத்தில் அவற்றினை அச்சிட்டு வெளியிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு தோன்றிய அரபுத் தமிழ் நூல்கள் பல அதன் பிரயோகம் வழக்கிழந்து, புறக்கணிக்கப்பட்ட நிலையில் அழிந்து மறைந்துவிட்டன. ஆனால் கணிசமான நூல்கள் மஸ்ஜித்கள், தைக்காக்கள்,




பாலைவனத்தில் கப்பல்களை நிறுத்தி பழுதுபார்க்கிறார்களா என்ன. அல்ல. அல்ல. இது கடல் தான். நீர் வற்றி விட்டதால் பாலையாகிவிட்ட பரிதாபக் கடல். ரஷ்ய நாட்டின் ஏரல் கடலின் மூன்றில் இரண்டு பங்கு கடந்த 30 ஆண்டுகளுக்குள் காணாமல் போய்விட்டது.

1 அம்சம் இன்டர்நெஷனல் 1997

# சிறுநீரக மாற்று:

## வாழ்க்கைத் துணைவருடையதே சிறந்தது



சிறுநீரக் கோளாறினால் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும்போது குறித்த நபரின் வாழ்க்கைத் துணைவருடையதை மாற்றுவது சாலச் சிறந்தது என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. கணவனுடையதை மனைவிக்கு அல்லது மனைவியினுடையதைக் கணவனுக்கு மாற்றும்போது வெற்றிகரமான முடிவுகள் கிடைப்பதாக இதுபற்றி ஆராய்ந்த கலிபோர்னிய பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் போல். ஐ. டெரசாகி தெரிவித்தார். அமெரிக்க ஆஸ்பத்திரிகள் 97ல் இடம்பெற்ற 50.601 சிறுநீரக மாற்றுசத்திர சிகிச்சைகளின் தகவல்களின் அடிப்படையில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

பிரான்ஸ் போன்ற சில நாடுகளில் கணவன் மனைவி மாற்று சிகிச்சை சட்டப்படி தடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி முடிவுகள் இவ்வகை மாற்றுச் சிகிச்சையை ஊக்கப்படுத்தும் என நம்பப்படுகிறது.

*- பிரான்ஸ் மருத்துவக் கழக வெளியீடு.*

மத்ரசாக்கள், சாவியாக்களில் பரந்து காணப்படுகின்றன. தனிப்பட்ட நபர்களும் இவற்றைச் சேகரித்து வைத்துள்ளனர். லண்டனிலுள்ள இந்திய அலுவலக நூல் நிலையத்தில் காணப்படும் பதினையாயிரம் நூல்களில் அறுபது அரபுத் தமிழ் நூல்கள் உள்ளன. இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் உள்ள சுவடிக் கூடத்தில் எண்ணற்ற அரபுத் தமிழ் நூல்கள் உள்ளன.

அரபு மொழியில் காணப்படும் பல்வேறு இஸ்லாமியக் கலைகளைத் தழுவிய நூல்கள் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இமாம் பய்ஹகீ (ரஹ்) எழுதிய 'சுஃபுல் ஈமான்' என்னும் நூல் ஜமாலுத்தீன் ஆலிம் அவர்களால் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அரபியில் உள்ள புகழ்பெற்ற ஹதீஸ் தொகுப்பான 'மிஷ்காதுல் மஸாபிஹ்' என்னும் நூல் ஹாபிஸ் அப்துர் ரஹ்மான் (ஹி.1331) அவர்களால் 'மின்ஹாதில் மஸாபிஹ் பீ தர்ஜமத்தி மிஷ்காதில் மஸாபிஹ்' என்ற பெயரில் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் 'பிதாயதுல் ஹிதாயா', 'மிஃராஜுல் ஆரிபீன்' போன்ற நூல்களும் அபதுல் கரீம் ஜீலி (ரஹ்) அவர்களின் 'இன்ஸானுல் காமில்' உட்பட எண்ணற்ற மூலநூல்கள் அரபியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன. மிக ஆழமான தத்துவார்த்தங்களையும் விளக்கங்களையும் பதப் பிரயோகங்களையும் கொண்ட இத்தகைய நூல்கள் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கக்கூடிய அளவிற்கு இம்மொழி மரபு சொல்லாட்சி மிக்கதாகவும் வளமுடையதாகவும் காணப் பட்டதையே இது குறிக்கிறது.

## செய்யுள் நடை

மொழிபெயர்ப்புகள் மட்டுமன்றி, தமிழகத்தில் குறிப்பாகக் காயல்பட்டணம், கீழக்கரை போன்ற இடங்களிலும் இலங்கையிலும் வாழ்ந்த அறிஞர்கள் பல்வேறு இஸ்லாமியக் கலைகள் சார்ந்த நூல்களை அரபுத் தமிழில் இயற்றினார். இலக்கணம், இலக்கியம், தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகாயித், தஸவ்வுப் போன்ற கலைகளைப் பற்றிய நூல்களைக் கூட செய்யுள் நடையில் எழுதுவது அக்கால மரபாக இருந்தது. அறிவு வளர்ச்சி குன்றிய பாமர மக்களைப் பொறுத்தளவில் அவர்களது உள்ளத்தில் கருத்துக்களைப் பதிய வைப்பதற்கு இலகுவாக ஒரு முறையாக இது விளங்கியதே இதற்கு அடிப்படைக் காரணமாகும்.

சமஸ்கிருதம், பாளி, தமிழ், போன்ற கீழைத்தேய மொழிகளில் இந்த மரபை நாம் காண முடிகின்றது. இம்மரபைத் தழுவி அரபுத் தமிழில் பல நூல்கள் இயற்றப்பட்டன. ஷாம் ஷிஹாபுதீன் அவர்கள் 1119 ஹதீஸ்களை இரண்டடியாய் கொண்ட செய்யுள்களின் அமைப்பில் மொழிபெயர்த்து 'பெரிய ஹதீஸ் மாலை' என்னும் நூலைத் தொகுத்தார். 118 ஹதீஸ்கள் அவரால் 'சின்ன ஹதீஸ் மாலை' என்ற பெயரில் தொகுக்கப்பட்டது. அரபுத் தமிழில் கவிதை வடிவிலும் உரைநடை அமைப்பிலும் தப்ஸீர், ஹதீஸ், ஸீரா, அகாயித், தஸவ்வுப் ஆகிய இஸ்லாமிய கலைகளைத் தழுவிய பல நூல்கள் எழுதப்பட்டன.

அரபுத் தமிழீல் எழுந்த தப்ஸீர்களின் முன்னோடியாக இலங்கையைச் சேர்ந்த ஷெய்கு முஸ்தபா அவர்கள் கருதப்படுகின்றார்கள். பத்ஹுர்ரஹ்மான் பீ தர்ஜமதி தப்ஸீரில் குர்ஆன் என்ற பெயரில் அரபுத் தமிழில் அவர்கள் இயற்றிய தப்ஸீர் நான்கு பாகங்களில் ஹி 1291-(1874)ல் பிரசுரிக்கப்பட்டது.

காயல் பட்டணத்தைச் சேர்ந்த ஹபீப் முஹம்மத் ஆலிம் அவர்கள் 'புதுஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீர் கலாமிர் ரஹ்மானிய்யா' என்ற பெயரில் அரபுத் தமிழில் எழுதிய குர்ஆன் விரிவுரை நூல் ஹி. 1297 கி.பி 1879ல் பம்பாயில் பிரசுரிக்கப்பட்டது. அஷ்ஷெய்கு ஸதகதுல்லாஹ் இமாமுல் அரூஸ் என்று அழைக்கப்படும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் அரபுத் தமிழில் பல்வேறு கலைகளைத் தழுவிய பல நூல்களையும்

---

பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் அரபுத் தமிழானது தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு அரபுத் தமிழில் இக்காலப்பிரிவில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் மிகச் சிறந்த சான்றாக விளங்குகின்றன. 1870ம் ஆண்டு சென்னையிலிருந்து "அஜாயீபுள் அக்பார்" (அற்புதச் செய்திகள்) என்ற பெயரில் அரபுத் தமிழில் வாராந்தப் பத்திரிகையொன்று பிரசுரமாகியது.

---

கஸீதாக்களையும் இயற்றினார். அரபுத் தமிழில் ஆக்கப்பட்ட நூல்கள் பற்றிய விரிவான விளக்கத்தை அரபுத் தமிழின் தன்மைகள், சிறப்பியல்புகள் பற்றி விளக்க முற்படும் இக் கட்டுரையில் ஆராய்தல் சாத்தியமன்று.

பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் அரபுத் தமிழானது தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு அரபுத் தமிழில் இக்காலப்பிரிவில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் மிகச் சிறந்த சான்றாக விளங்குகின்றன. 1870 ம் ஆண்டு சென்னையிலிருந்து 'அஜாயிபுள் அக்பார்' (அற்புதச் செய்திகள்) என்ற பெயரில் அரபுத் தமிழில் வாராந்தப் பத்திரிகையொன்று பிரசுரமாகியது. 'சுவ்புர் ரான் அன் கல்பில் ஜான்' என்னும் பெயரில் ஓர் அரபுத் தமிழ் பத்திரிகை 1889 1890 ஆம் ஆண்டுகளுக்கிடையில் பிரசுரமாகியது. இலங்கையில் அரபு எழுத்தில் பிரசுரிக்கப்பட்ட ஒரே பத்திரிகையாக இது கருதப்படுகிறது. 1869 ஆம் ஆண்டளவில் 'அலாமத் லங்காபுரி' (இலங்கைத் தீவின் செய்திகள்) என்ற பெயரில் அரபு மொழியில் எழுதப்பட்ட ஆனால் மலாய் மொழியிலான ஒரு பத்திரிகை வெளியாகியது. இதில் கையாளப்பட்டுள்ள மொழியை நாம் அரபுத் தமிழ் போன்ற 'அரபு மலாய்' என அழைக்கலாம்.


இமாமுல் அரூஸ் என அழைக்கப்படும் மாப்பிள்ளை ஆலிம் அவர்கள் (செய்யித் முஹம்மத் ஆலிம்) மதீனதுந் நுஹாஸ் என்ற பெயரில் அரபுத் தமிழில் ஒரு நாவலை எழுதியுள்ளார்கள். பாக்கிர் யெஸீத் இப்னு மலிக் அர்-தாயி என்பார் பாரசீக மொழியில் எழுதிய நாவலைத் தழுவி இது எழுதப்பட்டுள்ளது. மாப்பிள்ளை ஆலிமின் இந்நூல் ஹி. 1318 கி.பி 1900 ஆம் ஆண்டளவில் முஹம்மத் கலைமான் என்பவரால் இலங்கையில் பிரசுரிக்கப் பட்டது. அரபுத் தமிழில் எழுதப்பட்ட இந் நாவலை எம்.கே.ஈ மௌலானா என்பார் 1979ம் ஆண்டு தமிழில் வெளியிட்டார்.

அரபுத் தமிழின் பிரயோகமும் செல்வாக்கும் தமிழகத்தையும் இலங்கையையும் தாண்டி தென்கிழக்காசிய தீவுகளிலும் பரவியிருந்ததை வரலாற்றுக் குறிப்புகள் உணர்த்துகின்றன. இந்தோனேசியாவின் தலைநகரான ஜகர்த்தாவில் உள்ள இந்தோனேசியக் கையெழுத்துப் பிரதிகளை உள்ளடக்கிய நூல் நிலையத்தில் 1807ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட முஸ்லிம் மருத்துவம் பற்றிய ஒரு நூல் மலாய், பாரசீகம், அரபு, தமிழ் அரபு ஆகிய நான்கு மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளது. அரபுத் தமிழின் பிரயோகம் மலாய், பாரசீகம் போன்ற ஏனைய மொழிகளோடு இணைந்து பயன்படுத்தப்பட்டதை இது உணர்த்துகின்றது. காயல்பட்டணத்தைச் சேர்ந்த உமர் வொலி (ஹி.1216-1801) அவர்கள் சுமாத்திரா தீவில் பதினான்கு ஆண்டுகள் இஸ்லாமிய பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்தார். இவர்களது பிரசாரப் பணியின் காரணமாக அரபுத் தமிழின் தாக்கம் இப்பகுதிகளில் பரவியிருக்கலாம். இலங்கை முஸ்லிம்களுள் கொழும்பு ஆலிம் என அழைக்கப்பட்ட செய்யித் முஹம்மத் ஆலிம், கஸாவத்தை ஆலிம், எம். சி. சித்தி லெவ்வை ஆகியோர் அரபுத் தமிழில் பல ஆக்கங்களை உருவாக்கினர். கொழும்பு ஆலிம் அவர்கள் இளஞ்சிறார்களுக்கு சன்மார்க்கத்தின் அடிப்படைகளை விளக்கும் பல நூல்களை அரபுத் தமிழில் எழுதினார். இவற்றுள் 'துஹ்பதுல் அத்பால்', 'மின்ஹாதுல் அத்பால்' ஆகிய இரண்டு நூல்களும் குறிப்பிடத்தக்கன. அச்சியந்திரம் பிரபல்யமாகிய பின்னர் அரபுத் தமிழ் அரபு லிபியிலிருந்து தமிழில் எழுதப்படும் மரபு தோன்றியது.

1882 ஆம் ஆண்டளவில் சித்தி லெவ்வையினால் வெளியிடப்பட்ட முஸ்லிம் நேசன் அரபுத் தமிழ் நடையில் ஆனால் தமிழ் எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டது. அக்கால அரபுத் தமிழ் உரை நடையின் பாங்கை நாம் முஸ்லிம் நேசனில் இனங்காண முடிகின்றது. அரபுத் தமிழில் 'தஸவ்வுப்' என்னும் இஸ்லாமிய ஆன்மிகவியல் பற்றி எழுதப்பட்ட நூல்களுள் சித்திலெவ்வையின் 'அஸ்ராருள் ஆலம்' மிக முக்கிய இடம் பெறுகின்றது. ஆழமான தத்துவக் கருத்துக்களை வெளியிடும் அளவிற்கு மிக வளர்ச்சியும் வளமும் ஆழமும் உள்ள மொழி நடையாக அரபுத் தமிழ் விளங்கியதை இது மிகச் சிறப்பாக உணர்த்துகின்றது.

இவ்வகையில் அரபுத் தமிழுக்கும் கிழக்காபிரிக்காவில் வழக்கிலிருக்கும் ஸ்வாஹிலி மொழிக்குமிடையில் காணப்படும் சில ஒருமைப் பாடுகள் கவனிக்கத்தக்கதாகும். தமிழ் பேசும் மக்கள் வாழும் தென்னிந்தியாவில் அரபும் தமிழும் இணைந்து அரபுத் தமிழ் உருவாகியது போன்று ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோரப் பகுதியில் பண்டு மொழி குடும்பத்தைச் சார்ந்த ஒரு கிளை மொழியும் அரபும் இணைந்து 'ஸ்வாஹிலி' என ஒரு மொழி தோற்றமெடுப்பதை நாம் காண முடிகின்றது. அரபுத் தமிழுக்கும் ஸ்வாஹிலிக்கு மிடையில் காணப்படும் ஒருமைப்பாட்டை முதலில் அவதானித்து விளக்கியவர் அறிஞர் மர்ஹூம் ஏ. எம். ஏ. அசீஸ் ஆவர். இது தொடர்பான ஆழமான ஆய்வு மேற்கொள்ளப்படுவதன் அவசியத்தைப் பல கட்டுரைகளில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரபுத் தமிழ் இலக்கியம் தமிழ் பேசும் முஸ்லிம்களின் மிகப் பெறுமதிவாய்ந்த ஒரு கலாசார முதுசமாகும். ஆனால், அரபித் தமிழ் வழக்கொழிந்தவுடன் பல்வேறு இடங்களிலும் சிதறிக்கிடக்கும் அரபுத் தமிழ் நூல்கள் கவனிப்பாரற்று தூர்ந்து அழிந்துபடும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே நூற்றுக்கணக்கான இந் நூல்கள் அழிந்துவிட்டன. எனவே அந்நூல்களை ஒன்று திரட்டிப் பாதுகாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படல் மிக அவசரமான அவசியமான ஒரு பணியாகும். இன்றைய காலகட்டத்தில் இத்தகைய ஒரு முயற்சி மேற்கொள்ளப்படாவிடின் முஸ்லிம்கள் மிக விரைவில் அவர்களது மூதாதையர்களின் மிகக் காத்திரமான கலாசாரப் பண்பாட்டுப் பங்களிப்பினைப் பிரதிபலிக்கும் ஒரு பெரும் செல்வத்தினை இழந்துவிடுவர். நளீமிய்யா இஸ்லாமிய ஆய்வு நிறுவனம் அரபுத் தமிழ் நூல்களை ஒன்று திரட்டிப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்த உள்ளது.



## பால் என்றால் என்ன?

ஒரு விருந்தின்போது ஒரு பெண் ஈன்ஸ்டீனிடம் சார்பு நிலை என்றால் என்ன என்று கேட்டாள்.

ஒரு குருட்டு நண்பருடன் தனக்கு ஏற்பட்ட அனுபவத்துடன் அதற்கு விடை சொன்னார் ஈன்ஸ்டீன்.

நண்பருடன் நடந்து கொண்டிருக்கையில் அவரிடம் ஈன்ஸ்டீன் "ஒரு கப் பால் குடித்தால் நன்றாய் இருக்கும்" என்றார்.

நண்பர் கேட்டார் "பால் என்றால் என்ன?"

"நன்று.... அது ஒரு திரவம் வெள்ளை நிறம்" என்றார் ஈன்ஸ்டீன்.

உரையாடல் தொடர்ந்தது.

"திரவம் தெரியும் ஆனால் வெள்ளை என்றால்....?"

"அது அன்னத்தின் இறகைப் போன்றது"

"இறகைத் தெரியும்.... ஆனால் அன்னம்....?"

"அது ஒரு பறவை.... வளைந்த கழுத்துடையது."

"கழுத்தைத் தெரியும். என்ன அது வளைந்த....?"


அப்போது ஈன்ஸ்டீன் நண்பரின் கையைப் பிடித்து நிமிர்த்தியவாறே "பாருங்கள் – இது நேரானது" என்றார். பின் அதனை முறுக்கி மடித்து "இது வளைந்தது" என்றார்.

நண்பர் திடீரென நோவினால் அதிர்ச்சியடைந்து "ஆம்.... நீங்கள் பால் என்று சொன்னது புரிகிறது" என்று முனகினார்.

கேள்வி கேட்ட பெண்ணை நோக்கி ஈன்ஸ்டீன் புன்னகைக்க அவளின் முகம் பேயறைந்து போனது.

உருவகக் கதை

# இரண்டில் ஒன்று



"ஆகா! எவ்வளவு மீன்கள்? இந்தச் சிறு குளத்தில் இவ்வளவு மீன்களா?" என்று வாயைப் பிளந்தான் ஒரு மீனவன்.

"இன்னும் சில நாட்களில் வறட்சி அதிகரித்து குளத்து நீர் நன்றாக வற்றிவிடும். அப்போது வந்து எல்லா மீன்களையும் இலேசாகப் பிடித்துவிடலாம்" என்றான் மற்றவன்.

உல்லாசமாக ஓடியாடி துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்த மீன்கள் இந்த உரையாடலைக் கேட்டுப் பயந்து நடுங்கின.

மீனவர்களுக்குக் கொண்டாட்டம், மீன்களுக்கோ திண்டாட்டம்.

மீன் பிரமுகர்கள் அவசரக் கூட்டமொன்றைக் கூட்டிப் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

அ. இந்தக் குளத்தை விட்டு இடம் பெயர்ந்து நீர் நிறைந்த கிட்டிய இன்னொரு குளத்தில் அவசரமாகக் குடியேற வேண்டும்.

ஆ. மீன்களுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ள கொக்கு நண்பனின் உதவியை நாடுவது.

இ. நாளொன்றிற்கு நான்கு மீன்கள் விகிதம் குளத்தைவிட்டு வெளியேறுவது,

அதிர்ஷ்டச் சீட்டு மூலம் ஒவ்வொரு தினமும் காலையில் இரு மீன்கள் மாலையில் இரு மீன்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கொக்கிடம் வழங்கப்பட்டன.

கொக்கு தனது வேலையை ஒழுங்........காகச் செய்துவந்தது.

ஒருநாள் வழமைபோல் கொக்கு மரக்கிளையில் நின்றுகொண்டு "இன்று யாருடைய முறை" என்று கேட்டது?

தண்ணீரில் வெளியே தலையைப் போட்டு "எனது முறைதான்" என்று சொன்னது நண்டு.

"சரி புறப்படுவோம்" என்று கூறி நண்டைக் காலில் இடுக்கிக்கொண்டு பறந்தது கொக்கு.

நண்டுக்குப் பெரும் மகிழ்ச்சி. தரையிலேகூட சரியாக நடக்க முடியாத நான் வானிலே பறப்பதா? நம்பமுடியவில்லையே என்று தனக்குள்ளே நினைத்துச் சந்தோஷப்பட்டது.

அடுத்த குளம் சற்று தொலைவிலேயே இருக்கிறது.

"இந்த மலைக் குன்றில் கொஞ்சம் இளைப்பாறிச் செல்வோமே" என்று கூறியவாறு ஒரு பெரிய பாறையில் நண்டைக் கொக்கு இறக்கிவிட்டது.

நண்டு சுற்றுமுற்றும் பார்த்தது. மீன்களின் தலைகள், மீன்முட்கள், வால்கள் பாறையில் இங்குமங்குமாகச் சிதறிக் காணப்பட்டன.

தனக்கு முன்னால் இடம் பெயர்ந்து வந்த மீன்களுக்கு நடந்த கதையை ஒரே விநாடியில் நண்டு புரிந்துகொண்டது. பாதுகாப்பான குளத்தில் கொண்டுபோடுவதாக வாக்களித்து இந்த ராஸ்கல் கொக்கு எல்லா மீன்களையும் தின்று தீர்த்திருக்கிறது.

தனக்கும் இன்னும் சில வினாடிகளில் இதே கதிதான் என்பதை உணர்ந்த நண்டு ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டது.

எனது இனத்திற்கு இழைக்கப்பட்டுவந்த இந்தக் கொடுமைக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும். தொடர்ந்து இந்த அநியாயத்திற்கு இடமளிக்கக் கூடாது. கோழையாகச் செத்து மடிவதைவிட சுதந்திரத்திற்காகப் போராடி வீர மரணம் அடைவது மேலல்லவா?

இந்தப் பெரும் சவாலைச் சமாளிக்க நண்டு தன்னைத் தயார்படுத்திக்கொண்டது.

கொக்கிற்கு ஒரே குஷி. இன்று எனக்கு நண்டு பிரியாணி, என்று எண்ணியவாறு நண்டைக் கொத்தித் தின்பதற்கு அதன் அலகை நீட்டியது.

சந்தர்ப்பத்திற்காகக் காத்துக்கொண்டிருந்த நண்டு ஒரே பாய்ச்சல் பாய்ந்து தனது கொடுக்கினால் கொக்கின் கழுத்தைக் கவ்வியது. எதிர்பாராத இந்த அதிரடித் தாக்குதலுக்கு கொக்கினால் ஈடுகொடுக்க முடியவில்லை. அதற்கு மூச்சுத் திணறியது.

ஆவேசமும் துணிவும் அதற்குச் சக்தியைக் கொடுத்தது. கொக்குடைய கழுத்தை இரண்டாகத் துண்டிக்கும் வரை தனது பிடியைத் தளர்த்தவில்லை நண்டு.

அப்பாவிகள் மத்தியில் இப்படியான சிப்பாய்களும் இருக்கிறார்கள் என்பதைக் காலம் கடந்த பின்னரே கொக்கினம் உணர்ந்துகொண்டது.

## சூரிய சக்தியில் ஓடும் கனவு

அவுஸ்திரேலியாவின் டார்வின் நகரிலிருந்து அடலைட் வரையான மூவாயிரம் கிலோமீற்றர் தூரத்தை நான்கு நாள் ஓட்டப் பந்தயத்தில் ஓடி வெற்றிக் கம்பத்தை அணமித்து விட்ட இந்த "சோலார் கார்" ஹொண்டாவின் தயாரிப்பு. இதற்கு *"ட்ரீம்"* (கனவு) என்று பெயரிட்டுள்ளனர். இது முழுக்க முழுக்க சூரிய ஒளியிலிருந்து பெறும் சக்தியிலிருந்தே இயங்குகிறது. இந்தப் பந்தயம் நடந்தது 1996 அக்டோபரில்.





# அனைத்து இந்திய முஸ்லிம் பெண்கள் கல்வி மாநாடு

## 1996 டிசம்பர் 21, 22, 23 – சென்னை

*"27. 12. 1896 இந்திய முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் ஒரு மைல் கல்லைத் தோற்றுவித்தது. ஆம் அன்றுதான் இந்திய முஸ்லிம் கல்வி மாநாடு என்ற ஓர் அமைப்பை சேர். செய்யித் அஹ்மத் கான் தொடக்கி வைத்தார்.*

*நூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்திய முஸ்லிம்களின் கல்வியில் அதிலும் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் கல்வியில் ஏற்பட்ட மாறுதல்கள். ஏற்படவுள்ள மாற்றங்கள் பற்றிய ஒரு களமாக இந்த அனைத்து இந்திய முஸ்லிம் பெண்கள் கல்வி மாநாடு சென்னையில் நடைபெறுகின்றது.*

*1990ல் கீழக்கரையில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் மாநாட்டை நினைவு கூர்கின்றேன். அதில் கலந்துகொண்ட எனக்கு சீதக்காதி அறக்கட்டளையின் தாபகர் அல்ஹாஜ் பி.எஸ் அப்துல் காதரிடம் இப்படியான தொரு பெண்கள் கல்வி மாநாடு ஆங்கில மொழியில் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை சொல்லக் கிடைத்தது. அதன் மூலம் தேசிய அளவிலான பாதிப்புக்கள் இடம்பெற வாய்ப்புண்டு என்பதை நாம் உணர்ந்துகொள்ளத் தவறவில்லை.*



மாநாட்டு மண்டப வாயில் அலங்காரம்

*1993ல் இப்படியான மாநாட்டை நடத்த அவர் இணங்கிக் கொண்டார். நாம் அதற்கான ஆக்கபூர்வ வேலைகளை நடத்திக்கொண்டிருந்தோம். ஆனால் நாட்டின் இருண்ட சூழல்கள் அதனை நடத்த முடியாமல் செய்தன. அல்ஹம்துலில்லாஹ். இப்போது அது சாத்தியமாகியுள்ளது. இது நிச்சயம் முஸ்லிம் பெண்கள் வாழ்வில் ஒரு விடிவெள்ளியாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை''*

-என்ற பீடிகைக்குரியவர் மாநாட்டின் பிரதான இணைப்பாளரும் சீதக்காதி அறக்கட்டளையின் செயலாளருமான பேராசிரியர் நபீஸா கலீம்.

இந்த மாநாடு சீதக்காதி அறக்கட்டளை யினதும். அனைத்திந்திய இஸ்லாமிய நிறுவனத்தினதும் கூட்டு இணைப்பில் சென்னை வண்டலூர் கிரசன்ட் பள்ளி வளாகத்தில் கடந்த 1996 டிசம்பர் 21.22.23ம் திகதிகளில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது.



மூன்றாம் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்த த.மா.கா. தலைவர் மாண்புமிகு மூப்பனார் எம்.பி. வருகை தந்த போது.


## 21.12.96 முதல்நாள்

முதல் நாள் நிகழ்ச்சிகள் மாநாட்டின் பேராளர்களுக்கு (delegates) மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. விசேடமாக முஸ்லிம் பெண் கல்விமான்கள், சமூகவியலாளர்கள் கலந்து கொண்ட இந்த மூடிய நிகழ்வுகள் அவர்களுக் குள்ளே ஓர் உடன்பாட்டையும், ஒட்டுறவையும் வளர்க்க உதவியது எனலாம். எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் அவர்கள் விரிவாக ஆராய்ந்தனர்.

## 22.12.96 இரண்டாம் நாள்

2வது நாள் நிகழ்ச்சியே சம்பிரதாயபூ ர்வமான ஆரம்ப வைபவமாக அமைந்தது. இந்திய தேசிய மனித உரிமைகள் கமிஷன் உறுப்பினர் நீதிபதி பாத்திமா பீவி தலைமை வகித்தார்.

'இந்தியப் பெண்களின் குறிப்பாக முஸ்லிம் பெண்களின் கல்வி நிலை, தொழில் வாய்ப்புகளின் பின்னடைவின் காரணங்களாக சமூகத்தின் பொருளாதார வீழ்ச்சி, சனப் பெருக்கம், கட்டாய இளவயதுக் கல்யாணம் என்பவற்றை நாம் இனம் காணலாம்.' என்று தமது தலைமையுரையில் நீதிபதி பாத்திமா பீவி தெரிவித்தார்.



பேராசிரியர்
திருமதி நபீஸா கலீம்.

மாநாட்டின் பிரதம அதிதியாக தமிழ்நாடு அரசின் கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் கலந்து சிறப்புரை ஆற்றினார்.:

'பெண்களின் கல்வியின் அவசியம் பற்றி இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் அவர்கள் மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார். மேலும் அல் குர்ஆன் பல இடங்களில் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி உள்ளது.

இஸ்லாமிய சமூகத்தினர் அறியாதவரை அறியாதவர்களாக இருப்பார்கள். ஆனால் தெரிந்து கொண்டார்களேயானால் மற்றவர்களை விட விரைந்து முன்னேறுவார்கள். இது இஸ்லாமியரின் விசேட தன்மையாகும்' என்றும் பேராசிரியர் மாநாட்டின் பலத்த கரகோஷத்திற்கு மத்தியில் கூறினார்.

சிறப்பு அதிதிகளாக தமிழ்நாடு அரசின் சுகாதார, மினசக்தி அமைச்சர் மாண்புமிகு ஆற்காடு வீரசாமி, தொழில், வக்ப் வாரியங்களுக்குட் பொறுப்பான அமைச்சரும் தமிழ்நாடு அரசின் ஒரேயொரு முஸ்லிம் அமைச்சருமான மாண்புமிகு ரகுமான்கான் ஆகியோர் கலந்து உரையாற்றினர்.

பேராசிரியர் திருமதி தௌஹீத் அக்தார், பேராசிரியர் திருமதி ஸீனத் கவ்ஸர் (சர்வதேச இஸ்லாமிய சர்வகலாசாலை, மலேசியா), பேராசிரியர் திருமதி கமருன் நிஸா அன்வர், பேராசிரியர் திருமதி ஐ. நஸ்னீன் (ஸ்ரீ மீனாட்சி பெண்கள் கல்லூரி- மதுரை), திருமதி ராஸியா சுல்தான் எம்.ஏ ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து உரையாற்றியவர்களில் சிலர்.

## 22.12.96 மூன்றாம் நாள்

மூன்றாம் நாள் நிகழ்ச்சிக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு மூப்பனார் எம்.பி தலைமை தாங்கினார்.

திருமதி பத்ர் ஸெய்யத் அட்வகேட் (சிறுபான்மை சமூக கமிஷன் முன்னாள் தலைவர்) போன்ற பலர் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து உரையாற்றினர். சிறப்பு விருந்தினராக ஆந்திர அரசின் கைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு பாபாகான் கலந்து சிறப்புரையாற்றினார்.

மாநாட்டின் இறுதியில் முஸ்லிம் பெண்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு மேம்பாட்டினை வலியுறுத்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. நினைவு மலரும் வெளியிடப்பட்டது.


## மாநாட்டில் கலந்து சிறப்பித்த பிரமுகர்கள்

இந்திய முஸ்லிம் லீக் தமிழ் மாநிலத் தலைவர் ஆ. கா. அ. அப்துஸ் ஸமத், நீதிபதி பஷீர் அஹ்மத், பெண்கள் கல்லூரி தாராளர் பதக் சயீத், இந்திய இஸ்லாமிய ஆராய்ச்சி மைய பொதுச் செயலாளர் சையத் ஹபீப் மகுமூத்-



மாநா டில கலந்து சிறப்பித்த இந்திய முஸ்லிம் கல்விமான்கள்

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பிரதம அதிதி தமிழ் நாடு அரசின் கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன், சுகாதார மின்சக்தி அமைச்சர் ஆற்காடு வீராசாமி, தொழில் மற்றும் வக்பு அமைச்சர் ரகுமான்கான் ஆகியோருடன் தலைமை வகித்த நீதிபதி பாதிமா பீவி மாநாட்டு மேடையில்



தேசிய சிறுபான்மை கமிஷன் தலைவர் டாக்டர் தாஹிர் முஹம்மது, பேராசிரியை கைருன்னிசா அப்துல் காதர், தமிழ் மாநில காங்கிரஸ் பிரமுகர் ஹிதாயதுல்லா, எஸ்.ஐ.டி அறக் கட்டளை தலைவர் உபைதுல்லா, சீதக்காதி அறக்கட்டளைத் தலைவர் கே.டி.எம்.எஸ் தைக்கா வாப்பா, நிறுவனர் பி.எஸ் அப்துல் ரஹ்மான்.

### முதல்வர் டாக்டர் கலைஞர் கலந்துகொள்ளவில்லை.

மாநாட்டின் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. மாநிலத்தின் வெள்ள அழிவுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு சென்னை திரும்பிய முதல்வர் கடும் வேலைப் பளு காரணமாக (அன்று மத்திய அரசின் தூதுக் குழுவை சந்திப்பதாக ஏற்பாடு) மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கலைஞரின் செய்தியை பேராசிரியர் அன்பழகன் மாநாட்டில் வாசித்தார்.

### மாநாட்டுத் தீர்மானங்கள்

♦ கல்வி வேலைவாய்ப்பு, தொழில் முனைவு போன்ற துறைகளில் பெண்களுக்கு குறிப்பாக முஸ்லிம் பெண்களுக்கு சமமான வாய்ப்பையும், உரிய பங்கையும் அளிப்பது சம்பந்தமாக பாராளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும், கமிட்டிகளின் பரிந்துரைகளையும் மத்திய அரசு உடனடியாக அமல் படுத்த வேண்டும்.

♦ அரசிலும், சட்ட பூர்வ அமைப்புகளிலும் முஸ்லிம் பெண்களுக்கு இட ஒதுக்கீட்டின் மூலம் நியமனங்களை செய்ய வேண்டும்.

♦ சமூகங்களுக்குள்ளே பால் ரீதி யான கல்வி விகிதா சாரத்தின் புள்ளி விபரத்தை மத்திய அரசு வெளியிட வேண்டும்.

♦ உர்துப் பல் கலைக் கழகம் அமைகக மத்திய அரசு எடுத்திருக்கும் முடிவை இந்த மாநாடு வரவேற்கின்றது.

♦ அந்தப் பல்கலைக்கழகத்தில் தொலைதூரக் கல்வி நெறிகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

♦ சென்னையில் அலிகார் பல்கலைக் கழகத்திற்கு சமமான முஸ்லிம் பெண்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்று உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

♦ முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகள் தோறும் முஸ்லிம் பெண்கள் கல்லூரிகளை நிறுவ வேண்டும்.

♦ முஸ்லிம் பெண்களுக்கென 'தொழில் முனைவு மேம்பாடு வாரியம்' ஒன்றை அரசு அமைக்க முயற்சிசெய்ய வேண்டும்.

> 'இஸ்லாமிய சமூகத்தினர் அறியாதவரை அறியாதவர்களாக இருப்பார்கள், ஆனால் தெரிந்து கொண்டார்களேயானால் மற்றவர்களை விட விரைந்து முன்னேறுவார்கள். இது இஸ்லாமியரின் விசேட தன்மையாகும்''
>
> பேராசிரியர் அன்பழகன்
> *கல்வி அமைச்சர்*


திருமதி ராஸியா சுல்தான் எம்.ஏ.


பேராசிரியர் திருமதி ... பேகம்


திருமதி நஜ்...

## அனைத்து இந்திய முஸ்லிம் மகளிர் கல்வி மாநாடு

### ஆய்வுக் கட்டுரைகள்: ஒரு தொகுப்பு

- முஸ்லிம் பெண்களின் கல்விப் பின்னடைவு ஏன்? -
 - *கலாநிதி சல்மா ஸலாஹுதீன*. துணை அதிபர் - ஜஸ்டிஸ் பஷீர் அஹ்மட் பெண்கள் கல்லூரி. சென்னை.
- இந்திய முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி.
 - *நுஸ்ஹத் ஸஜ்ஜாத் அலி*. ஆங்கில போதனாசிரியர் - அன்வாருல் உலூம் கல்லூரி. ஹைதராபாத்
- இஸ்லாமியப் படுத்தப்பட்ட கல்வியின் அவசியம்.
 - *திருமதி. கமர் தாஜ்கான்*. அதிபர். அன்ஜுமானே இஸ்லாம் பெண்கள் உயர் கல்லூரி. மும்பாய்.
- முஸ்லிம் பெண்கள் கல்வி - ஏன்? எப்படி?
 - *எஸ்.எம் பாஷா*. இயக்குனர். அனைத்துலக தூது பரப்பு மையம் - சென்னை.
- முஸ்லிம் பெண்களும் உயர் கல்வியும்.
 - *திருமதி ராஷிதா ஏ. காஸி*. அன்ஜுமானே இஸ்லாம் பெண்கள் உயர் கல்லூரி. மும்பாய்.
- முஸ்லிம் பெண்ணும் கல்வியும்
 - *பேராசிரியர் தலாத் அஜிஸ* ஐ.ஏ.எஸ்.ஏ ஜாமியா மில்லத் - புதுடில்லி.
- கல்விக்கான முஸ்லிம் பெண்கள் போராட்டம்
 - *பேராசிரியர் திருமதி ஸகீனா ஹஸன்*. முன்னாள் பேராசிரியை ஏ.எம்.யூ அலிகார்.
- கல்வி
 - *பேராசிரியர் திருமதி ஸீனத் ஷவ்கத் அலி*. புனித ஸேவியர் கல்லூரி - மும்பாய்.
- இந்திய முஸ்லிம் பெண்களின் கல்வி மாற்றமும் தோற்றமும்
 - *கலாநிதி. திருமதி ஆபிதா ஸமியுத்தீன்*. முன்னாள் பேராசிரியை ஏ.எம்.யூ - அலிகார்
- முஸ்லிம் பெண்களின் போஷாக்கு, சுகாதாரக் கல்வியின் அவசியம்.
 - *திருமதி ஸுபைதா அஜீம்*. ஒஸ்மானிய பல்கலைக்கழகக் கல்லூரி - ஹைதராபாத்.
- பார்வைக் கோளாறுடையோருக்கான உயர் கல்வி.
 - *கலாநிதி அத்தியா ஆபிதா*. அலிகார் பல்கலைக்கழகம் - அலிகார்
- வங்காள முஸ்லிம் பெண்கள் கல்வி.
 - *பேராசிரியை திருமதி பில்கிஸ் ராவ்*. கல்கத்தா.
- ராஜஸ்தான் முஸ்லிம் பெண்கள்.
 - *திருமதி மம்தூதா மஜீத*. செயலாளர். முஸ்லிம் பெண்கள் நன்நோக்கு அமைப்பு - புதுடில்லி
- உத்தர பிரதேச முஸ்லிம் பெண்களின் கல்வி.
 - *கலாநிதி ஷைனப் ரஹ்மான்*. அம்.கே.பீ. பீஜீ கல்லூரி - தெக்ராடம்.
- டில்லி முஸ்லிம் பெண்களின் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் மனோவியல் - சமூக காரணிகள்.
 - *கலாநிதி மஜிதா இக்பால். திருமதி மஸூமா அலி*. ஜாமிஆ மில்லியா. புதுடில்லி.
- ஜாபரி கல்லூரியின் பணிகள் பற்றிய பதிவுகள்.
- முஸ்லிம் சமாஜ் பிரபோதன் சன்ஸ்தா - பூ னா.
 - *திருமதி ஏ. முல்லா. திருமதி எம்.பி. மிஸ்ட்ரி. பூ னா.*
- வெகுஜனத் தொடர்பு. அச்சக துறைகளில் முஸ்லிம் பெண்கள் வேலை வாய்ப்பு.
 - *திருமதி ஆயிஷா சிராஜ்* - பெங்களூர்.
- மத்திய அரச சேவையில் முஸ்லிம் பெண்கள் சேர வேண்டும்.
 - *திருமதி செயிதா பாதிமா*.துணை ஆசிரியர். 'சியாசாத்' (தினசரி) ஹைதராபாத்
- கேரள முஸ்லிம் பெண்கள் கல்வி வேலைவாய்ப்பு பிரச்சினைகள்.
 - *திருமதி கமருன்னிசா அன்வர்*. கள்ளிக்கோடு.
- கல்வி, வேலை, வர்த்தக வாய்ப்புகள்.
 - *திருமதி நூர்ஜஹான் பிர்ஸாதா*. ஸஹாரா - மும்பாய்.
- தொழில்சார் திட்டம் முஸ்லிம் பெண்களின் பிரச்சினையைத் தீர்க்குமா?
 - *கலாநிதி. ரமனா எம். பக்ஷா மூஸா*. எஸ.என்டீரீ பல்கலைக்கழகம் - மும்பாய்.
- முஸ்லிம் பெண்களின் தொழில்சார் திட்டம்
 - *திருமதி ரிஹானா நபிஸ் ஸித்திகி*. புதுடில்லி.
- முஸ்லிம் பெண்களின் அந்தஸ்து.
 - *செல்வி ஸாபியா பேகம்* ஜாமிஆ நிஸ்வான் - ஹைதராபாத்.

## மாநாட்டில் அரசியல்

மாநாட்டில் கலந்து கொள்ள முதல்வர் வரவிருந்த நேரத்தில் வண்டலூர் அல்லோல கல்லோலப்பட்டது. ஆயிரக்கணக்கான கறுப்பு சிவப்பு கரை வேட்டியணிந்த தொண்டர்கள் கிரசன்ட் வளாக முன்றலில் கூடியிருந்தனர். முதல்வரை வரவேற்க பிரமுகர்களும், தொண்டர்களும் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். நேரம் செல்லசெல்ல முதல்வர் வருவது சந்தேகத்திற்குரியதாகி விட்டது. உற்சாகம் இழந்த பிரமுகர்களும், தொண்டர்களும் நிருவாகிகளிடமும் முதல்வர் வருவாரா மாட்டாரா எனத் துளைத்துக் கொண்டிருந்தனர். இறுதியில் முதல்வர் வரமாட்டார் என்பது நிச்சயமாகியதும் கூட்டம் கரைந்து பாதை வெறிச்சோடிவிட்டது.

மீண்டும் பேராசிரியரின் வருகை நேரத்தில் சாலை களைகட்டத் தொடங்கியது. முதல்வருக்கான கூட்டத்தைவிடக் குறைவு என்றாலும் கறுப்பு - சிவப்பு வேட்டிகளும், கொடிகளும் நிரம்பிவிட்டன.

மாநாட்டு வாசலில் பேராசிரியருடன் ஏனைய அமைச்சர்களான ஆற்காடு வீரசாமி, ரகுமான்கான் ஆகியோர் வரவேற்கப்பட்டபோது பிரமுகர்கள் தம் முகங்களைக் காட்டிக்கொள்ள முண்டி அடித்துக் கொண்டிருந்தனர்.

அமைச்சர்களின் பின்னால் அணிவகுத்துச் சென்ற ஆதரவாளர் படை அமைச்சர்களின் உரைகளைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அமைச்சர்கள் திரும்பிச் சென்றபோது பின்னாலேயே வந்து கலைந்து சென்றது. அமைச்சர்கள் இருக்கும்வரை நின்ற ஆதரவாளர்கள், யாருமே மீண்டும் மாநாட்டுத் திடலுக்கு வந்துசேரவில்லை.

மீண்டும் அடுத்தநாள் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவரின் வருகை - மூப்பனாரின் ஆதரவாளர்கள் அவர்களின் கட்சிக்கொடிகள் சகிதம் ஆஜர் - வரவேற்பு - அணிவகுப்பு - உரை கேட்பு - பின் தொடர்பு - கலைந்துசென்றது.

தம் பணி 'தலைவனைத் தாஜா செய்வது', பெண்களாவது கல்வியாவது' என கட்சி அரசியல் தமிழகத்தில் கொடிகட்டிப் பறக்கின்றது.


கவர் ஸ்டோரி

## இவனிடமா இத்தனை அற்புதம்?

# முஹம்மது இஸ்லாம் எனும் அற்புத சிறுவன்

**தனது மூன்றரை வயதிலேயே தனது தாயையும் தந்தையையும் இஸ்லாம் மார்க்கத்தில் இணைய வைத்த விந்தை**





மிலான் ஷாரக அவனது 3 வயதிலேயே விசித்திரமான பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தான். அதிகமான விளையாட்டு இல்லை. குழப்படி இல்லை. அதற்காக சுறுசுறுப்புக் குறைந்தவனும் அல்ல.

இந்தச் சின்ன வயதில் அவன் ஒரு திசையை நோக்கி நின்று இரு கைகளையும் ஏந்தியவனாக (துஆ புரிவதுபோல்) அமைதியாய் நின்று கொண்டிருந்தான். 'மிலான் என்ன செய்தாய்' என்று கேட்டேன். 'நான் எனது கடவுளை வணங்கினேன்' என்றான். என்ன கடவுள்... எது கடவுள்? கடவுள்கள் தான் இங்கே இருக்கிறார்களே..... அவர்களை வணங்காமல் திக்கையே பார்த்து எப்படி வணங்குகின்றாய் என்றவளாக நான் புத்தரையும், இயேசுவையும் அவனுக்குக் காட்டினேன்.

'அது எனது கடவுள். அதனையே நான் வணங்கினேன்' என்றான் அவன். நான் சற்றுக் குழம்பித்தான் போனேன். சில நாட்கள் சென்றன. அவனில் ஒரு பிரச்சினையும் இல்லை. அந்தச் சம்பவத்தை அப்படியே மறந்துபோய்விட்டேன்.'

இப்படியான பீடிகையுடன் எமது கதாநாயகனான மிலான் ஷாரக என்ற முஹம்மது இஸ்லாமின் தாய் வினீதா ஹெட்டியாரச்சி கதையை ஆரம்பித்தார்.

வினீதா மத்திய மலைநாட்டுப் பிரதேசத்தின் தியத்தலாவை ஊரைச் சேர்ந்த பௌத்த மதப் பெண். தந்தையான நொயல் ரஞ்சித் பெர்னாண்டோ வியாங்கொடையைச் சேர்ந்த கத்தோலிக்கர்.

ரஞ்சித் பெர்னான்டோ எயர் போஸில் பணியாற்றியபோது வினீதாவைக் கண்டு காதல் கொண்டு.... இருவரும் ஓடிப்போய் திருமணம் செய்தவர்கள். அது ஒரு பெரிய கதை.

இதனால் இருவர் குடும்பமுமே மதம் மாறிக் கல்யாணம் முடித்ததால் இவர்களை ஒதுக்கிவிட இவர்கள் வேற்றில் தனிக் குடித்தனம்.

மதம் மாறி திருமணம் முடித்தது மட்டுமன்றி ரஞ்சித் ஒரு பெரும் குடிகாரனாகவும் இருந்ததால் வினீதாவின் வீட்டில் நிரந்தர எதிர்ப்பு. வினீதாவின் பாடு இருதலைக் கொள்ளி எறும்பு நிலை. குடிகாரக் கணவன். வெறுத்தொதுக்கும் பெற்றோர்.

வேலைக்கு சென்று வீட்டிற்கு வந்தால் நண்பர்களுடன் சேர்ந்து வீட்டிலேயே குடிப்பது ரஞ்சித்தின் வழக்கம். அவர்களுக்கு பரிமாறுவது வினீதாவின் பணி. மறுத்தால் அடி..... உதை.... நரக வாழ்வுதான்.

இது அந்தக் குடும்பத்தின் பின்னணி- ரஞ்சித் வெளிநாடு செல்லத் திட்டமிட்டு விமானப்படை வேலையை ராஜினாமாச் செய்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டான். ஆனால் கையில் இருந்த காசும் மிஞ்சி இருந்த நகைகளும் கரைந்ததுதான் மிச்சம். வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கவேயில்லை. வீட்டில் சாப்பாடே கஷ்டம். முதற்பிள்ளையுடன் சேர்ந்து 3 பேர் சாப்பிட வேண்டும். ரஞ்சித் குடிக்கவும் வேண்டும்.

இந்த நிலையிலேயே இரண்டொரு வருடங்கள் கழிந்தன. வினீதா மீண்டும் கர்ப்பமாகின்றார். கர்ப்பிணித் தாய்க்கு சரியான பராமரிப்போ, போஷாக்கான உணவோ கிடையாது.

17.2.87ல் பிள்ளை கிடைக்கின்றது. மிலான் ஷாரக என்று பெயரிட்டனர். மிலான் பிறந்து 2 மாதத்துள் ரஞ்சித்திற்கு வேலை கிடைக்கின்றது. மத்திய வங்கியில் செகியூ ரிடி ஆபிஸர் வேலை.





## ஒரு நாள் மிலான் கைகளை உயர்த்தி ஏதோ செய்துவிட்டு அப்படியே தரையில் விழுந்து தலையை வைத்து சாஷ்டாங்கம் செய்தான். எனது கணவரினதோ, என்னுடையதோ மார்க்கத்தில் நாங்கள் இவ்வாறு ஒருபோதும் செய்வதில்லை.

மகன் பிறந்த அதிர்ஷ்டம் வேலை கிடைக்கின்றது. பெற்றோர் மகிழ்ந்து போகின்றனர். குடும்பப் பாரம் ஓரளவு குறைகின்றது. வருமானம் அதிகரிக்க ரஞ்சித்தின் குடிப்பழக்கமும் அதிகரிக்கின்றது. மீண்டும் கஷ்டம்.... கஷ்டம்.

இவ்வாறு செல்லும் நாட்களில் நிறைவும் இல்லை. குறைவும் இல்லை. அடுத்தடுத்த துன்பமும் இல்லை. அதற்காக நிம்மதியும் இல்லை என்ற வாழ்வு.

அத்தியாவசியச் செலவுகளை சமாளித்து சந்தர்ப்பச் செலவுகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தத்தளித்து குடும்ப ஓடம் மிதந்து கொண்டிருந்தது.

மிலானுக்கு மூன்று மூன்றரை வயது நடக்கின்ற போதுதான் நாம் மேலே குறிப்பிட்ட சம்பவம் நடந்தது.

இன்னும் சில நாட்கள் சென்றன. ஒரு நாள் மிலான் அதே போல் கைகளை உயர்த்தி ஏதோ செய்துவிட்டு அப்படியே தரையில் விழுந்து தலையை வைத்து சாஷ்டாங்கம் செய்தான். எனது கணவரினதோ, என்னுடையதோ மார்க்கத்தில் நாங்கள் இவ்வாறு ஒருபோதும் செய்வதில்லை. நான் மீண்டும் குழம்பிப் போனேன்.

அவனிடம் கேட்டால் நான் எனது கடவுளை வணங்குகிறேன் என்கின்றான். அவன் புத்தரையோ, யேசுவையோ வணங்குவதில்லை. அவன் தொடர்ந்து அவனது வணக்கத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தான்.

கணவனிடம் கூறினேன். 'அப்படியா பார்ப்போம்' என்றார். அவருக்கு அவரது குடி பற்றிய கவலை. எனக்கு குடும்பம் பற்றிய கவலை.

இன்னும் ஒரு நாள் - நானும் கணவரும் சைக்கிளில் மிலானையும் ஏற்றிக்கொண்டு மார்க்கட் சென்றுகொண்டிருந்தோம். பாதையின் அருகே முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்று இருக்கின்றது. அதைக் கண்ட மிலான் சைக்கிளை நிறுத்துமாறும். அவனை உள்ளே கூட்டிச் செல்லுமாறும் சொல்லி அழுதான். நாம் எத்தனை சமாதானம் கூறியும் அவன் அழுகையை நிறுத்தவில்லை. பலவந்தமாக வீட்டுக்கு அழைத்துவந்தோம்.

இப்போது கணவருக்கும் கவலை வந்துவிட்டது. இது என்ன புதுக் குழப்பம்?

நான் மறுநாள் ஒரு புத்த சாமியாரிடம் சென்று குறிகேட்டேன். கூறியவற்றைக் கேட்ட நான் மலைத்துப்போனேன். 'உன் வீட்டில் (பிங்வந்த) அருள்பெற்ற பிள்ளை ஒன்று உள்ளது. அவனை இன்னும் தூய்மைப்படுத்து' என்று சாமியார் சொன்னார்.

இன்னும் ஒரு சாமியாரிடம் சென்று நூல்போட்டோம். சுரை போட்டோம். அவற்றை அவன் கழற்றி வீசி விட்டான்.

இப்படியாக சில காலம் சென்றது. பிள்ளையை நர்ஸரி ஸ்கூலில் சேர்க்கவேண்டிய காலம் வந்ததும் அவனைக் கிறிஸ்தவ மொன்டசோரியில் சேர்த்தோம்.

அங்கும் அவன் டீச்சரை வணங்குவதோ அல்லது யேசுவை வணங்குவதோ இல்லை. இதுபற்றி ஒரு முறை அந்தச் டீச்சரே என்னிடம் கேட்டார். 'நீங்கள் முஸ்லிமா' என்று நான் இல்லை என்று மழுப்பிவிட்டேன்.

மொன்டசோரி வாழ்க்கை தட்டுத் தடுமாறி முடிந்ததும் அவனை ஸ்கூலில் சேர்க்க வேண்டி ஏற்பட்டது. இதற்காக நீர்கொழும்பு மேரி ஸ்டெல்லா கல்லூரியில் விண்ணப்பித்தோம். இன்டர்வியூ வும் நடந்தது. ஆனால் எனது மகனை அவர்கள் சேர்க்கவில்லை. அட்மிஷன் காலமும் முடிந்துவிட்டது. எங்கு சேர்ப்பது. யாரைப் பிடிப்பது என்று தடுமாறிக் கொண்டிருந்தோம்.

'ஒருநாள் மிலானிடம் சொன்னேன் உனக்கு நல்ல ஸ்கூல் தருமாறு உன் கடவுளிடம் கேளேன்' என்று.

### அமல் இன்டர்நெஷனல் ஸ்கூல் அதிபர்
### எம். வை. எல். அப்துல் கையூம்




ஸ்கூலில் முஹம்மத் இஸ்லாம் நல்ல பையன் என்று பெயர் எடுத்துள்ளான். அவனைப் பற்றி எந்தவிதமான முறைப்பாடும் எனக்கு வந்ததில்லை.

புதிய ஒரு முஸ்லிம் என்று நான் வந்த புதிதில் அவனை அடையாளம் காணவில்லை. எல்லோரையும் போல இயல்பாகவே மார்க்க விடயங்களில் ஈடுபடுவான். பின்னர்தான் எனக்கு அவனது கதை சொல்லப்பட்டது. நான் ஆச்சரியப்பட்டேன்.

தனது தேவைகளை. முறைப்பாடுகளை நேரடியாகவே வந்து என்னிடம் தெரிவிக்கும் அளவிற்கு அவன் தைரியமானவன். அமைதியான சுறுசுறுப்பும் கடின உழைப்பும் அவனிடம் உள்ள சிறப்புகள்.

### அஷ் - ஷெய்க் ஏ.எம். நிலாம்தீன்
### இஸ்லாம் பாடப் பொறுப்பாசிரியர்



இஸ்லாத்தில் ஈடுபாடு மிக்க நல்ல மாணவன். புதிய முஸ்லிம் என்று நம்பவே முடியாது. பாடத்தில் நல்ல புள்ளிகள் எடுப்பான்.

பல சூராக்களை மனனம் செய்துள்ளான். குர்ஆனை நன்கு ஓதுவான். கிராஅத் நன்றாய் ஓதுவான். தொழுகை நேரத்தில் அதான் சொல்வான். அவனிடம் நிறைய விசேடங்கள் உண்டு. எல்லாவற்றிலும் மேலாக அவன் ஒருவித ஆழமான போக்குடையவன்.

வெளியில் அவனும் ஒரு சுட்டிப் பயல். ஆனால் குழப்படி இல்லை.

இஸ்லாமிய தினப் போட்டிகளில் கலந்து பல விடயங்களில் பரிசு பெற்றுள்ளான்.

'அவனோ எனக்கு வேறு நல்ல ஸ்கூல் கிடைக்கும். பயப்பட வேண்டாம்' என்று ஆறுதலாகச் சொன்னான்.

'எனது கணவர் பிள்ளையின் அட்மிஷன் விடயத்தில் அவ்வளவு கவனம் எடுத்ததாக இல்லை. அவர் தனது குடியிலும், கூத்திலுமே கண்ணாயிருந்தார். வாழ்வே வெறுத்துவிட்டது.

'ஒருநாள் நள்ளிரவு எழுந்து முகம் கை கால் கழுவி அழுதழுது எனது மகனின் ஆண்டவனை நானும் தொழுதேன். எப்படித் தொழுவது? அவன் செய்தவாறே கைகளை மேலே உயர்த்துவதும். தரையில் விழுந்து சாஷ்டாங்கம் செய்வதும். கணவர் எழுந்து வந்துவிடுவாரோ என்ற பயம் வேறு. எனது கவலைகளை கண்காணாத அந்தக் கடவுளிடம் சொல்லி அழுதேன். என் மனச்சுமை ஓரளவு குறைந்ததாக நான் உணரத் தொடங்கினேன்.

இந்த நாட்களில் ஒருநாள் நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவு என்னுடையதை மட்டுமல்ல எங்கள் குடும்பத்தினர் அனைவரினதும் வாழ்க்கைப் பாதையையே மாற்றிவிட்டது.

(கனவு பற்றிய செய்தி பெட்டிச் செய்தியில் பார்க்கவும்).

பின்னர் ஒருவாறு நீர்கொழும்பு சென் பீட்டர் கல்லூரியில் அவனுக்கு இடம் கிடைத்தது. அங்கு செல்லவும் அவன் ஆர்வம் காட்டவில்லை. எமது வற்புறுத்தலின் பேரில் சென்று வந்துகொண்டிருந்தான்.

'கல்லூரியில் கொடுக்ககப்பட்ட கிறிஸ்தவ பாடப் புத்தகத்தை அவன் அப்படியே மறைத்துவிட்டான். அவனுக்கு அதில் நாட்டமில்லை.

ஒருநாள் மிக ஆறுதலாக - நிதானமாக கணவர் இருந்தபோது நடப்பவற்றையும். நடந்தவற்றையும் அவரிடம் சொல்லிப் புலம்பினேன்.



சின்ன வயதில் தனக்கு
ஒரு தொப்பி வேண்டும்
என்று கேட்டான். ஒரு
தொப்பி
வாங்கிக்கொடுத்தோம்.
இதுவல்ல வெள்ளைத்
தொப்பி என்றான். வெள்ளை
கொடுத்தால் அதுவுமல்ல
வணங்குவதற்கு வெள்ளைத்
தொப்பி என்றான்..
முஸ்லிம்கள் போடும் தொப்பி
ஒன்றைக் கொடுத்தோம்.
அவன் வணங்கும்போது
அதைத் தலையில்
போட்டுக்கொள்வான்.

அவர் மனதை அது தொட்டிருக்க வேண்டும். அவரும் கண்கலங்கி என்ன செய்வது என்று அங்கலாய்த்தார்.

இரண்டொரு தினங்கள் சென்றன. மிலான் சிறிது அஜீரணத்தினால் அவதிப்பட்டான். இரண்டு நாட்கள் வீட்டில் வைத்து சிகிச்சை செய்து பார்த்தோம். ஆனால் நிலைமை மோசமாகிக்கொண்டே வந்தது. டாக்டர் கொழும்புக்குக் கூட்டிச் செல்லுமாறு ஆலோசனை கூறினார். இதன்படி மிலானைக் கொழும்பில் தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தோம்.

2 வாரம் தீவிர சிகிச்சையின் பின் ஓரளவு தேறிய அவனை ஓய்வுக்காக இன்னும் ஒருவாரம் அங்கேயே வைத்திருந்தோம்.

அதே ஆஸ்பத்திரியில் தங்களின் மகனை வைத்து சிகிச்சை பார்த்த ஒரு முஸ்லிம் குடும்பத்தினர் எனக்கு சிறிது அறிமுகம். நான் வெளியே மகனுடன் உலாவ வந்தபோது அவர்களில் ஒரு பெண் ஒரு டெலிபோன் கால் எடுக்க தனக்கு உதவச் சொன்னார். நான் அவரிடம் விபரம் கேட்டு கால் போட்டு உதவினேன்.

அப்போது மிலான் அந்தப் பெண்மணியின் ஓரமாக நின்றுகொண்டிருந்தான். அப்பெண்ணில் அவன் உரசிக்கொண்டிருந்ததாகவே தெரிந்தது. அந்தப் பெண்மணியின் முகத்தில் அருவருப்புத் தோன்றுவதுபோல் இருந்தது.

என் தாயுள்ளம் துடித்தது. என் மகன் என்ன அசூசியா? நான் அவரை நோக்கி அது ஒன்றும் அசூசிப் பிள்ளை அல்ல. இது தெய்வீகப் பிள்ளை. அதுவும் உங்கள் ஆண்டவனை இந்த வயதிலேயே வணங்கும் அபூர்வப் பிள்ளை' என்று பொரிந்தேன்..

அந்தப் பெண்மணி அதிர்ந்துவிட்டார். தான் அப்படி நடந்துகொள்ளவில்லை என்றும் அப்படி தனது செய்கை இருந்தால் மன்னிக்குமாறும் வேண்டினார். பின்னர் மிலானை தன்னோடு அணைத்து அவனது தலை மயிரை கோதிவிட்டபடியே என்னிடம் அமைதியாக விபரம் கேட்டாள். நான் மனதில் இருந்த அனைத்தையும் அவரிடம் கொட்டித் தீர்த்தேன்.

பின்னர் பரஸ்பர அறிமுகம். விலாசம் பரிமாற்றம் முடிந்து தங்கள் வீட்டுக்கு வருமாறு அவர் எங்களை அழைத்துவிட்டு விடைபெற்றார்.



# முஹம்மத் இஸ்லாமுடன் அளவளாவிய போது

ஆங்கிலத்தில் சரளமாக உரையாடினான்.

ஏன் இஸ்லாம் என்ற பெயரை தெரிவு செய்தாய் என்று கேட்டபோது

'தெரியாது...... பிடித்தது.... வைத்துக்கொண்டேன்' என்றான்.

ஸ்கூல் எப்படி என்றேன். 'நல்லம்' என்றான்.

சுருக்கமான பதில்கள். ஒரு வகையான ஆழமான பார்வை. தலையை ஒரு பக்கமாக சாய்த்துக்கொண்டே பேசுவான் பார்ப்பான்.

அதை இதை எல்லாம் கேட்டபோது முகத்தில் சலனம் எதுவும் இல்லாமல் பெரிய மனிதர் போல் நிதானமாக 'நறுக்' பதில் தந்தான்.

பாடசாலையில் கம்பூட்டர் அறையில் வைத்தே அவனுடன் நாம் பேசினோம்.

அந்த வீடியோ கேம் எப்படிக் கிடைத்தது என்றபோது: 'தேக்கக் லெபுனா...' பரிசாகக் கிடைத்தது. என சிங்களத்தில் பதிலளித்தான்.

'என்னவாகு விருப்பம்' என்ற போது சிரித்தான். அந்தச் சிரிப்பில் நிறைய அர்த்தம் தொனித்தது.

# தாய் கண்ட கனவு

விரிந்த பெரு வீதியில் நடந்துகொண்டிருக்கிறேன். வீதியின் ஒரு பக்கத்தில் பெரிய மைதானம். மறுபக்கத்தில் ஒரு பள்ளிவாசல். மைதானத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் கூட்டம். கறுப்பு நிறத்தில் முழுமையாக தம்மை மூடிய பெண்கள்.

நான் அவர்களைப் பார்த்தபடி மெல்ல அடிவைக்க- ஒரு பெண் என்னை வருமாறு அழைத்தார். நான் இயந்திரம்போல் அவரை நோக்கி நடந்தேன்.

என்னைத் தடவி ' உங்களுக்கு வாழ்வில் கஷ்டமா' என்று அவர் ஆதரவுடன் கேட்க நான் அடக்கமுடியாமல் அழுதுவிட்டேன். அவர் என்னைத் தேற்றினார்.

என்னை நோக்கி அழகான 3 சிறுமிகள் வந்தனர். எனக்கு ஒரு புத்தகம்(குர்ஆன்) தந்தனர். அதனை என் மார்புடன் அணைக்கச் சொன்னார்கள். நான் அணைத்துக்கொண்டேன். உட்காரச் சொன்னார்கள் உட்கார்ந்தேன். சிறுமிகள் இனிய குரலில் குர்ஆனை ஓதினர்.

எங்கள் விஷேடத்திற்கு 25 தேங்காய்கள் தர உங்களால் முடியுமா என்று கேட்டனர். நான் ஆம் என்றேன். கைகள் புத்தகத்தை மார்புடன் அணைத்துக்கொண்டே இருந்தன.

அவர்கள் சந்தோஷப்பட்டனர். எனக்கு விடைகொடுத்தனர். நான் பயணத்தைத் தொடர்ந்தேன்.

வழியில் ஒரு ஆப்பிள் தோட்டம். எனக்குப் பசிபோல் இருந்தது. ஆப்பிளைப் பறிக்க முயற்சிசெய்தேன். காவலர் வந்து தடுத்தார். 'பறிக்காதீர்' என்ற அவர் அங்கே தரையில் விழுந்துகிடந்த ஒரு பழத்தை எனக்குத் தந்தார். நான் அதனை ஆவலுடன் சாப்பிட முற்பட.... அப்படியே கண்விழித்து விட்டேன்.

சில நாட்களில் நாங்களும் பூ ரண குணமானதும் ஊர் திரும்பிவிட்டோம்.

ஒருநாள் அந்தக் குடும்பத்தினர் ஒரு வேனில் திடீரென வந்திறங்கினர். பல பரிசுகள் தந்தனர். இப்படி அவர்களின் தொடர்பு அதிகரித்தது.

எங்களின் குடும்பத்தினர்போல் ஆகிவிட்டனர். அவர்களின் அழைப்பின் பேரில் பின்னர் ஒருநாள் அவர்களின் வீட்டிற்கு சென்றபோதுதான் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் முடிவு ஏற்பட்டது.

அதன்படி அவர்கள் கொழும்பு இஸ்லாமிய கல்வி நிலையத்துடன்(CIS) எங்களைத் தொடர்புபடுத்தினர்.

முதலில் நானும் மகன் மிலானும் தூய இஸ்லாத்தைத் தழுவினோம். அந்த நாள் 20.1.93. பின் 17.02.93 அன்று மிலானின் பிறந்த நாளன்று அவனுக்கு கத்னா செய்யப்பட்டது. அதிலிருந்து ஒரு மாதம் கழிந்து எனது கணவரும் இஸ்லாமில் இணைந்தார்.

அல்ஹம்து லில்லாஹ். எங்கள் வாழ் வில் ஒளி பிறந் தது. இருள் அகன்றது. கணவர் முஹம்மத் நொயல் றிஸ் வான் ஆனார். நான் ஆயிஷா பாத்திமாவாகவும், மகன் முஹம் மத் இஸ்லாம் ஆகவும் உத்தி யோகபூ ர்வமாக மாறிக் கொண் டோம். இப்போது எங்கள் உறவு உலகளாவி விட்டது.

## அவனே சூட்டிக்கொண்ட பெயர்

ஒரு முறை மகனை மிலான் என்று அழைத்தேன். அவன் சற்றே முறைப்புடன் எனது பெயர் 'மிலான்' இல்லை. அது எனக்குப் பிடிக்காது என்றான். அப்போ எப்படி உன்னை அழைப்பது என்றேன். எனது பெயர் 'இஸ்லாம்' என்றான். அவன் பின்னர் அவன் தனக்கு வைத்த அந்தப் பெயரையே முஹம்மத் இஸ்லாம் என்று அவனுக்குச் சூட்டினோம்.







பெற்றோரே பிள்ளைகளுக்கு வழிகாட்டுவர். எங்கள் விடயத்தில் எங்கள் பிள்ளையே எங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றான்..'

## கேட்டது கிடைத்தது

ஒருமுறை மிலான் எங்களிடம் வீடியோ கேம் வேண்டும் என்று கேட்டான். வாங்கித்தர மனது இருந்தது. பணம் இல்லை. பிறகு வாங்கித்தருகிறேன் என்று சமாளித்தோம்.

ஒரு நாள் வந்து அம்மா நான் 4000 ரூபாய் தருவேன் அதில் வீடியோ கேம் வாங்கித் தருவாயா என்றான். 4000 ரூபாய் இருந்தால் வீடியோ கேம் மட்டுமா எல்லாமே வாங்கலாம் என்றேன். 4000 ரூபாய் என்பது அவ்வளவு காசா என்றான்.

ஒரு முறை அந்த நண்பர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தோம். நோன்பு திறக்க. அவர்கள் எத்தனையோ பரிசுகள் தந்தனர். இறுதியில் ஒரு பெரியவர் ஒரு என்விலப்பும் மிலானுக்குத் தந்தார்.

வீட்டிற்கு வந்து பார்சல்களைப் பிரித்துப் பார்க்க... என்ன ஆச்சரியம்..... வீடியோ கேம், முன்னர் அவன் கேட்ட வாட்ச். உடுப்பு எல்லாம் இருந்தது. என்விலப்பில் 4000 ரூபா பணமும் இருந்தது.

## ஸ்கூல் போக மறுத்த இஸ்லாம்

இஸ்லாத்தைத் தழுவியதும் சீஐஎஸ் இல் அவர்கள் நடத்தும் அமல் இன்டர் நெஷனல் ஸ்கூலில் மிலானைச் சேர்த்துக்கொண்டனர். கல்வியுடன், உடுதுணிகளும் தந்தனர். அவன் மகிழ்ந்துபோனான். ஆனால் ஹாஸ்டல் வசதி

### பாத்திமா நியாபா
### இஸ்லாமின் கிளாஸ் டீச்சர்




'முஹம்மத் இஸ்லாம் ஒரு நல்ல மாணவன் என்று சொல்லும் அளவிற்கு உரித்துடை யவன். அவன்தான் வகுப்பில் கெட்டி என்று சொல்ல முடியாவிட் டாலும் அவன் ரொம்ப வும் இன்டலிஜன்ட். கடும் உழைப்பாளி.

'எல்லோர் போலவும் இயல்பாகவே இருப்பான். தொப்பி போடாத இஸ்லாமை நான் கண்டதில்லை.

'பெரிய மனிதர்களின் பிள்ளைகள் அதிகம் பேர் படிக்கிறார்கள் தான். ஏன் எனில் இது ஒரு இன்டர் நெஷனல் ஸ்கூல். ஆனால் அவர்களிடையே இஸ்லாம் சங்கோஜப்பட்டு நிற்பதில்லை.


'அவனது கையெழுத்து மிகவும் நேர்த்தியானது. ஆங்கிலத்தில் அவன் நல்ல முன்னேற்றம். ஏனைய பாடங்களில் வளர்ச்சி காணப்படுகின்றது.

'இயல்பாக அவன் அமைதியானவன். சிரித்துக்கொண்டே இருப்பான்.... விளையாட்டுப் போட்டிகளில் கூட கலந்து பரிசுகள் பெற்றுள்ளான்.'



# நான் போகமுடியாத அயலூர்

## சோலைக் கிளி



அந்த ஊரை
நாலு மூலையிலும் நாலு குயில் தூக்கி
கொண்டுவந்து
என் நெஞ்சுக்குள் வைத்தன
இன்று காலையிலே.

அந்தக் கிராமத்தின் பெரு வாவி
இப்போது எனக்குள்ளே ஓடியது.
அதில் பூத்திருக்கும் தாமரைகள்
வண்டு குந்தப் பூத்தபடி

துப்பாக்கி வேலிகளால்
அடைபட்டுக்கிடந்த அந்த
சர்க்கரை மணக்கும் மணல் கிராமம்
எனக்குள்ளேயே இன்று விடிந்தது.
சந்தைக்குப் போகின்றார் சில மனிதர்கள்!
சில மனிதர்கள்!
வயலில் உழைத்தபடி நிற்கின்றனர்!

நான் முன்பு பார்க்குப்
அந்தப் பாடசாலை வண்ணாத்தி
இப்போது சற்றுப் பருத்தபடி
பறக்கிறது.
நான் அங்கு போய்த்திரிந்த காலத்தில்
புன்னகைத்த விதம் போன்றே
எனக்குள் இருக்கின்ற கிராகத்தில்
என்னைப் பார்த்துப்
புன்னைக்கிறது.



சரி இளம் அதிகாலைக் குயில்களே
மீண்டும் தூக்குங்கள் கிராமத்தை.
கொண்டுபோய், இது
இருந்த இடத்தில் வையுங்கள்.
நாடு நலமுற்று
ஒரே கொடியில் வெள்ளை பச்சை நீலமாய்
சிவப்பும் மஞ்சளுமெனப்
பூக்கள் விரிகின்ற காலம் வரைக்கும
போக முடியாது இந்த ஊருக்கு!

இப்படித்தான் இடைக்கிடை
தூக்கி வந்து எனக்குள்
வையுங்கள், ரசித்துவிட்டு
தருகிறேன் எனது –
பொன்னூரை, அழகுக்
கண்ணூரை, பாடசாலை
வண்ணாத்தி பறக்கின்ற அயலூரை.



**1996 சாகித்திய மண்டல பரிசு பெற்ற 'பாம்பு நரம்பு மனிதன்' தொகுப்பிலிருந்து..**







முஹம்மது இஸ்லாமின் தாய் சீஐஎஸ் நிகழ்ச்சியொன்றில் உரையாற்றுகிறார். மேலே சீஐஎஸ்.




அமல் இன்டர்நெஷனல் ஸ்கூல் 'இஸ்லாமிக் டே' விழா. பின் வரிசையில் இரண்டாவதாக நிற்பது முஹம்மது இஸ்லாம்

அப்போது இல்லை. வீட்டில் இருந்து வான் ஒன்றில் ஸ்கூல் செல்வான்.

ஒருநாள் நான் பாடசாலை செல்ல மாட்டேன் என்று அடம் பிடித்தான். எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. சரி நாளை போ என்று விட்டுவிட்டோம். என்ன ஆச்சரியம் அன்று போக இருந்த வான் விபத்துக்குள்ளாகியது.

இன்னுமொரு நாள் அவன் நேரத்திற்கு எழும்பாமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். எழுப்பினால் கொஞ்சம் பொறுங்கள் என்றான். என் கோபத்தில் அவனை அடித்துவிட்டேன். அவன் பாடசாலை போக முடியாது என்று மறுத்தே விட்டான். என்ன புதுமையோ அன்றும் அந்த வான் விபத்துக்குள்ளானது. இவ்விடயத்தை ட்ரைவரிடம் கூறினோம் அன்றிலிருந்து மிலான் வராமல் நான் போக மாட்டேன் என்று ட்ரைவர் கூறி அவனை அழைத்துப் போவார்.இப்படியான பல அம்சங்கள் இஸ்லாமின் வாழ்வில் இப்போது இஸ்லாம் அமல் இன்டர் நெஷனல் ஸ்கூலில் 6ம் ஆண்டு மாணவன். விடுதியில் தங்கிப் படிக்கின்றான்.

## தந்தையின் அநுபவங்கள்

நொயல் பிரீடன் ரஞ்சித் பெர்னான்டோ என்ற முஹம்மத் நொயல் ரிஸ்வான் மத்திய வங்கியின் செக்குரிட்டி ஆபிஸர்.

எனது சூழல்- நான் வாழ்ந்த சூழல் என்னை குடிப்பழக்கத்திற்குள்ளாக்கியது இயல்பானதே. நான் சற்று அதிகமாகக் குடித்தேன். குடிமகனாய் வாழ்ந்தேன். குடிக்காதே என்று தடுக்கும் அளவிற்குஎன்னில் உரிமை கொண்டோர் யாருப் எனக்கு இல்லை.


என்னுடன் முஸ்லிம் நண்பர்களும் குடித்து மகிழ்ந்தனர். எங்களிடம் சாதி மத பேதம் கிடையாது. குடியே எங்கள் நீதி.

மகனின் விடயங்கள் என்னை ஒரு முறை வெகு சீரியஸாகப் பாதித்தவுடன் மகனையும் தாயையும் அவர்கள் போக்கில் விடத் தீர்மானித்தேன். அதன்படி இஸ்லாமைத் தழுவ அவர்களை நானே அழைத்தும் சென்றேன். அவர்கள் இஸ்லாம் ஆகிய பின் எமது வாழ்வு பல அற்புதங்களால் சீராவதையும். வீடு புனிதமாவதையும் கண்டேன். அதனால் நானும் இஸ்லாத்தில் இணைந்தேன்.

இன்று நான் குடிப்பதில்லை. கூத்து இல்லை. ஒரு நல்ல மனிதனாக இல்லாவிட்டாலும் ஒரு மனிதனாக மனைவிக்குக் கணவனாக. பிள்ளைக்குத் தந்தையாக வாழ்கிறேன். சேமிக்கிறேன்.

1994ம் ஆண்டு அனைத்துலக இஸ்லாமிய பல்பலைக்கழக கிளையான இஸ்லாமிக் அகடமி த:.வா பயிற்சி பெற பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத் சென்றேன். இது சீஐஎஸ் இன் ஏற்பாடு. அங்கே நிறையவே கற்றேன். பல நாட்டு சகோதரர்களுடனும் பழகினேன். என்னை உலகளாவிய இஸ்லாமிய சமூகத்துள் முழுமையாக இணைத்துக்கொள்ள சந்தர்ப்பம் எனக்குப் பெரிதும் உதவியது. 3 மாதங்கள் நான் பெற்ற பயிற்சி இன்றைய த:.வாவிற்கு எனக்கு உதவுகின்றது.





முஹம்மது நொயெல் ரிஸ்வானின் பழைய வாழ்க்கையின் எச்சங்கள் வெற்று சாராய போத்தல்கள் மட்டுமே. அதன் இடத்தை இப்போது இஸ்லாமிய நூல்கள் இடம்பிடித்துள்ளன.

பாகிஸ்தானிற்கு திடீரெனச் செல்ல வேண்டியிருந்ததால் பணம் புரட்டுவது கஷ்டமாய் இருந்தது. எப்படியோ சமாளித்து சிறிய ஒரு தொகையை வீட்டிற்கும் கொடுத்துவிட்டு- அது போதாதுதான்- சென்றுவிட்டேன்.

பயணம் முடிந்து வீடுவந்து சேர்ந்தால் எனக்கே ஆச்சரியம் மத்திய வங்கியில் பணிபுரியும் முஸ்லிம் சகோதரர்கள் நான் சென்று 2 வாரங்களுக்குள் என் வீட்டிற்கு வந்து தேவையான பொருட்களும் வாங்கிக்கொடுத்து 10.000ரூபா பணமும் கொடுத்துச் சென்றுள்ளனர். அல்ஹம்துலில்லாஹ் எனக்கு எல்லா இடமும் சொந்தம் உருவாகி விட்டது.

என்னால் முடிந்த அளவு தஃவா பணியில் ஈடுபடுகிறேன். இப்போது எனக்கு வாழ்வில் ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. எனது சக உத்தியோகத்தர்களுக்கிடையே எனக்கு ஒரு கௌரவம் கிடைத்துள்ளது. அல்லாஹ்வின் உதவியால் இது தொடர வேண்டும்.

எனக்குள் ஓர் ஆசை. நாங்கள் ஹஜ்ஜுக்குச் சென்று அவனைத் தரிசிக்க வேண்டும் இதற்கு அல்லாஹ் நிச்சயம் உதவுவான் என்ற நம்பிக்கை எனக்குண்டு. சீரழிந்து போன என் வாழ்வை சீராக்கிய அவன் எனக்கு மேலும் அருள் பரிவான்.

எனது மகனை அந்த அல்லாஹ் ஒரு பெரிய இடத்தில் வைப்பான்.

# மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு

சாதாரணமாக மத்திய வங்கியின் முன் வாசலடியிலேயே ரிஸ்வானுக்கு டியூ ட்டி. அது நோன்பு காலம். நண்பர் ஒருவர் இப்தாருக்கு ரிஸ்வானை அழைக்க ரிஸ்வானும் ஏற்றுக்கொள்ள டியூ ட்டியை மாற்றிக்கொண்டுள்ளார்.

குறித்த நாள் ரிஸ்வான் மத்திய வங்கியின் ஒரு பிரிவு இயங்கும் அம்ரோ வங்கிக் கட்டடத்தில் பணி செய்துள்ளார். இது மத்திய வங்கிக் கட்டிடத்திற்கு எதிரே உள்ளது.

குண்டு வெடித்தபோது மத்திய வங்கிக் கட்டடம் மட்டுமன்றி சுற்றியிருந்த பல கட்டிடங்கள் பாதிக்கப்பட்டன. ரிஸ்வான்கூட தலையிலும் காலிலும் காயத்துடன் உயிர்தப்பினார். சம்பவம் நடந்து முடிந்த சிறிது நேரத்தில் இரத்தம் ஓட ஓட ரிஸ்வான் மத்திய வங்கிக் கட்டடத்துள் சென்று அங்கே இருந்த தனது பேக்கை எடுத்துச் சென்றுள்ளார். அதனுள்ளே அவரது தஸ்தாவேஜுகளும், பாகிஸ்தான் பயண போட்டோக்களும் இருந்துள்ளன.

இடிந்துஇடிந்து விழும் கட்டடத்துள் சென்று தனது பையை எடுத்து அவர் திரும்பியபோது... அது நடந்தது. திடீரென அந்தப் பகுதி இடிந்துவிழ.... இவர் முன்னால் அடிவைக்க தப்பிக்கொள்கிறார்.

சில நிமிடங்களின் பின் அல்லோலகல்லோலத்துக்கு மத்தியில் வெளிவந்து கஷ்டப்பட்டு பஸ்பிடித்து நள்ளிரவில் ஊர் சேர்ந்துள்ளார்.

வீட்டில்.....

குண்டு வெடிப்புச் செய்தி அறிவிக்கப்பட்டதும் ஆயிஷா பதறிப்போய் ஓலமிட்டுள்ளாள். தனது கணவருக்கு என்ன நடந்ததோ.... என்று ஒப்பாரி வைத்துள்ளார்.

ஆனால் முஹம்மது இஸ்லாமோ எதற்கும் கவலைப்படாமல் அவன் பாட்டில் விளையாடியுள்ளான். 'அம்மா கவலைப்படாதே. அப்பாவுக்கு ஒன்றுமில்லை. இறைவன் அப்பாவைக் காப்பாற்றுவான்' என்று நம்பிக்கை தெரிவித்துள்ளான்.

## சீ.ஐ.எஸ். தாபகர் சட்டத்தரணி ஹாஜி எம். சீ. எம் ஸரூக் கூறுகின்றார்.



பஹ்ரைன் நாட்டிலிருந்து வருகை தந்த விருந்தினர் ஒருவருக்கு முஹம்மது இஸ்லாமை அறிமுகப்படுத்துகிறார் சட்டத்தரணி ஹாஜி ஸரூக்.

இஸ்லாமில் இணையும் குடும்பங்களில் சின்னக் குழந்தையும் தாய் தந்தை வழியில் இணைவது சகஜம். ஆனால் இவனது விடயம் ரொம்ப வித்தியாசமானது. தனது தாய் தந்தையர் கூட இஸ்லாமில் இணைய இவன் காரணமாய் இருந்தான்.

இஸ்லாம் என்ற பெயர் அவன் தனக்குத் தானே சூட்டிக் கொண்ட பெயர். முஹம்மது என்பதை அதனோடு சேர்த்து விட்டோம்.

ஆரம்பத்தில் அவனுக்கு அமல் இன்டர்நெஷனல் ஸ்கூலில் இடம் கொடுப்பது பற்றி நாம் யோசித்தோம். காரணம் முழு ஸ்காலர்ஷிப் (படிப்பு. உணவு. உடை. புத்தகங்கள் யாவும் இலவசம்) கொடுக்கும் அளவிற்கு எங்களின் நிதி நிலை இடம் தரவில்லை.

ஆனால் இவனுக்கு கட்டாயம் ஸ்காலர்ஷிப் கொடுத்தே ஆக வேண்டும் என்ற நிலை இருந்தது. அள்ளாஹ்வில் பாரத்தைப் போட்டு அவனுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கத் தீர்மானித்தோம்.

முஹம்மது இஸ்லாமின் விடயத்தில் எல்லாமே ஆச்சரியம் தான். இப்படி யாருக்காவது நாம் உதவ வேண்டுமென்றால் அதற்காக ஒரு டானர் (தாராளர்) தேடி நாங்கள் எவ்வளவோ அலைவோம். இவன் விடயத்தில் எல்லாமே எளிதாய் முடிந்துவிட்டது. அவனுக்கு ஒரு தேவை ஏற்பட்டால் நாளை அது அள்ளாஹ்வின் கிருபையால் நிறைவேறிவிடுகிறது.

துபாய் நாட்டைச் சேர்ந்த அபுபக்கர் பர்தேஸி என்ற பிரமுகர் எமது நிலையத்துக்கு வந்திருந்த போது அவரிடம் முஹம்மது இஸ்லாம் பற்றி மேலோட்டமாகக் கூறினோம். அவனது ஸ்காலர்ஷிப்புக்குரிய முழுச் செலவையுமே அவர் ஏற்றுக் கொண்டார்.

பொதுவாக ஸ்கூல் மாணவர்களை இபாதத் போன்ற விடயங்களில் ஈடுபட வைக்க அவர்களின் பின்னாலேயே போக வேண்டியிருக்கும். ஆனால் எப்போதும் இஸ்லாமை எதற்கும் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை என்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

இந்த வயதில் அவன் விடாமல் நோன்பு பிடிக்கின்றான். தொழுகை. குர்ஆன் ஓதல் அனைத்திலும் அவன் முன்னணி தான்.'

-என்று கூறிய சீ. ஐ. எஸ். தாபகர் ஹாஜி ஸரூக். 'எதிர் காலத்தில் எது நடக்கும் என்பதை நாம் அறியமாட்டோம். இஸ்லாமின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்ற நம்பிக்கை என்னிடம் நிறையவே உண்டு' என்றும் நம்மிடம் கூறினார்.

அம்சம் இன்டர்நெஷனல் சஞ்சிகைக்கு
எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

**ARMZ**

**EXPORTS & IMPORTS**

PHONE: 324374, 434664
FAX: 434614

4-G/2, Regent Building
Sri Chittampalam A.Gardiner Mawatha,
COLOMBO-2. SRI LANKA.

அழகிய நகைகளின் அதிசய உலகம்



sms

**DEEN JEWELLERS**

SDN. BHD.

**Specialised in Jewelleries, Diamonds and Gemstones**

**52, Jalan Masjid India, 50100 Kuala Lumpur, Malaysia.**
**Tel. : 2930455/ 2930599**

# இலங்கை முஸ்லிம் அகதிகள் பிரச்சினை தீர்வை நோக்கி நகர்கிறதா?



இலங்கை தமிழ்ப் போராளிகளின் "விடுதலைப் போராட்டம்" தடம் புரண்ட போது இலங்கை வடபுல மாவட்டங்களான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் இருந்து முஸ்லிம்கள் சுமார் ஓர் இலட்சம் பேர் பலவந்தமாக விரட்டியடிக்கப்பட்டனர்.

ஒரு வகையான "இன சுத்திகரிப்பு" விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டது. சொத்துக்கள் அனைத்தும் துப்பாக்கி முனைகளில் பறிக்கப்பட்ட நிலையில் வெறுங்கையுடன் அந்த அப்பாவி மக்கள் ஏறக்குறைய 100 கிலோ மீட்டர் தூரம் நடையிலேயே வந்து சேர்ந்தனர்.

ஆறு வருடங்கள் கடந்துவிட்டன. நாடு முழுதும் சிதறி வாழ்கின்றனர் அந்த மக்கள்.

அவர்களின் நிலை பரிதாபகரமானது. அவர்களுக்கு நடந்த இன்னல்கள், அன்னவர் அனுபவித்த கொடுமைகள் சொல்லில் அடங்கா. இன்று வரை அனைத்துலக அகதி அங்கீகாரம் அவர்களுக்குக் கிடைத்தபாடில்லை.

சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அந்த மக்கள் இன்று ஆங்காங்கே குழுக்களாகவும் தனியாகவும் வாழ்வை வினாவுடன் கழிக்கின்றனர்.

அவர்களின் மீள்குடியேற்றம் பற்றி போதிய கவனம் செலுத்தும் சூழல் ஏற்பட்டதாக இல்லை. தொடர்ந்தும் அது சாத்தியப்படாமலேயே தொடர்கின்றது.

கடந்த அரசாங்க காலத்தில் அகதிகளாக்கப்பட்ட அவர்கள் "நிவாரணங்கள்" என்ற பெயரிலான ரேஷன்களுடனேயே அப்போது வாழ்ந்தனர்.

தற்போது புத்தளம் மாவட்டத்தின் சில இடங்களில் அவர்கள் தற்காலிகமாக மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தின் பங்காளியாகவுள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் இலங்கை அரசாங் கத்தின் கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான அல் ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப், அகதிகள் பிரச்சினையில் கணிசமான கரிசனை எடுத்துள்ளார்.

நிரந்தர மீள்குடியேற்றம் நடைபெறுவதாயின் நிரந்தர அரசியல் தீர்வு அவசியம். அது வரை இந்த மக்களுக்கு இடைக்கால நிவாரணமாக அகதிகளின் பங்களிப்புடனான சில மாதிரிக் கிராமங்களை அமைச்சர் அஷ்ரப் அமைத்துக் கொடுத்துள்ளார்.

சில தரப்பினர் "இந்த மீள் குடியேற்றக் கிராமங்கள் முஸ்லிங்களை வடபுலத்தில் நிரந்தரமாகக் குடியேற்றுவதில் பின்னடைவை ஏற்படுத்தும்" என்று கருதுகின்ற போதிலும் அகதிகள் மத்தியில் அமைச்சர் அல்ஹாஜ் அஷ்ரப் அவர்களின் முயற்சிகள் ஆதரவைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நமது நிருபர்)


*Congratulations!*

சென்னையில் 'அம்சம்'
விற்பனையாளர்கள்

**MECO - TRONICS PRIVATE LIMITED.**

'Meco House'
47, Anna Salai,
Madras - 600 002,
India.

Phone : 854 94 32

# அந்த மாமனிதர்



கண்டி கிராண்ட் மோஸ்க் நிர்மாணக் குழுத் தலைவர் அல்ஹாஜ் மம்மு இஸ்மாயில் அவர்கள் பிரதமர் மஹாதிர் முஹம்மதுக்கு நினைவுப் பரிசொன்றை வழங்குகிறார். இது 1982இல் எடுக்கப்பட்ட படம்.

இது மலேசியா மாநகருக்கான முதற்பயணம் அல்ல. முப்பதாவது பயணம் என்று நினைக்கிறேன். மலேசிய மக்களையும் மண்ணையும் எனக்காகப் பார்ப்பதை நிறுத்தி இம்முறை எமது 'அம்சம்' வாசகர்களுக்காகப் பார்த்தேன்.

26.10.96 மாலை இலங்கையிலிருந்து புறப்பட்டு சிங்கப்பூ ர் எயார்லைன்ஸ் மூலம் 27ம் திகதி காலை 6.00 மணிக்கு சிங்கப்பூ ரை வந்தடைந்தேன்.

இரண்டு நாட்கள் சிங்கையில் தரித்து 30ம் திகதி காலை 9.30 மணிக்கு மலேசியா மண்ணை நோக்கி விமானம் புறப்பட்டது.

விமானம் மணிக்கு 750 கி.மீ வேகத்தில் முன்னோக்கிப் பறந்துகொண்டிருந்தது. எனது நினைவலைகள் ஈரேழு ஆண்டுகள் பின்னோக்கிப் பறந்துகொண்டிருந்தன. அந்தப் பசுமையான உருவம் என் நெஞ்சில் நிழலாடியது. 1982ம் ஆண்டு அவர்...... அன்றைய மலேஷியாவின் கல்வி மந்திரி டாக்டர்மஹதிர் ஸ்ரீலங்கா அரசின் அழைப்பின் பேரில் அரசாங்க விருந்தினராக இலங்கைக்கு வருகைதந்தார்.

கண்டி முஸ்லிம் பிரமுகர்கள் லைன் பள்ளிவாயலில் அன்னாருக்கு வரவேற்பொன்றை அளித்தனர். அடியேனும் அதில் கலந்துகொண்டேன்.

என்ன பணிவு... என்ன அடக்கம்! என்றும் பணியுமாம் பெருமை என்பார்களே! அது இதுதானோ இவர்தானோ என்று அப்போது வியந்தேன்.

**ஹாஜி ஹஸன் அஸ்ஹரி**

இப்போது எப்படியிருப்பாரோ? உலக வல்லரசுகளையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஓர் உயர்ந்த துணிச்சல் மிக்க செயல் வீரர் பிரதமர் டாக்டர் மஹதிர் அல்லவா? என்றொரு சந்தேகம் எனக்குப் பிறந்தது.

மலேசியா அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மஸ்ஜிதை தேசியப் பள்ளிவாயலாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அந்தப் பிராந்தியத்தில் வசிக்கும் அரசியல் பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள் தேசியப் பள்ளிவாயலுக்கே பெரும்பாலும் ஜும்ஆத் தொழுகைக்குச் செல்வது வழக்கம்.

பிரசங்கங்கள் மலாய் மொழியிலேயே நிகழ்த்தப்படுகின்றன. கோலாலம்பூ ர் மஸ்ஜித் இந்தியா, பினாங்கு கப்பிதான் மஸ்ஜித், ஈப்போ மஸ்ஜித் போன்ற சில மஸ்ஜித்களில் தமிழிலும் ஒரேயொரு பாக்கிஸ்தான் மஸ்ஜிதில் உர்து மொழியிலும் குத்பா நடைபெறுகின்றது.

1.11.96 அன்று வெள்ளிக் கிழமை கோலாலம்பூ ர் மஸ்ஜித் நகராவுக்கு தொழுகைக்குச் சென்றிருந்தேன். நல்லதை ஏவி அல்லாததை தடுத்து வாழ்வதன் அவசியம் பற்றி இமாம் உரை நிகழ்த்தினார்.

இன்று சர்வதேச சந்தைகளில் மிகமிக மலிவாகவும் இலகுவாகவும் கிடைக்கும் பொருள் தீமைகள் மாத்திரமே. நன்மைகளோ வழிபாட்டுத் தலங்களில் மாத்திரமே கிடைக்கும் பொருளாகிவிட்டது. அதை வாங்குவதற்கும் ஆளில்லை.

இன்றைய காலகட்டத்திற்குத் தலைப்பு மிகப் பொருத்தமே. தீயவை தீயன பயத்தலால் அவற்றைத் தவிர்ந்து வாழ்தலே சிறப்பு.

தொழுகை முடிந்து பார்த்தேன் எனக்கு முன்னால் தொழுதுகொண்டிருந்த ஒரு மனிதனைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் கைலாகு செய்து ஸலாம் சொல்லிக்கொண்டிருந்தது. கொஞ்சம் முன்னே சென்றும் எட்டிப் பார்த்தேன்.

என்ன ஆச்சரியம்? பதினான்கு ஆண்டுகளுக்கு முன் பார்த்த அதே உருவம். எந்த மாற்றமுமின்றி புன்முறுவல் பூ த்த முகத்தோடு எவ்வித அவசரமும் பதட்டமும் இல்லாமல் பதில் ஸலாம் சொல்லிக்கொண்டிருந்தது.

சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே மெய்ப்பாதுகாவலர்கள் புடைசூழ்ந்திருப்பதையே கண்டு பழகிய எனக்கு- எவ்வித மனித பாதுகாவலும் இல்லாமல் அல்லாஹ்வின் காவலில் ஒரு மந்திரி ஆகவும் பெருமைக்குரிய பிரதமர் ஒருவர் இப்படி இருக்கிறாரே....

இன்னும் ஒரு எட்டு முன்னால் வைத்து பிரதமரை நெருங்கினேன். குழுமியிருந்தவர்கள் முண்டியடித்துக் கொள்ளாமல் அமைதியாக ஸலாம் கூறிச் சென்றுகொண்டிருந்தனர்.

பஹ்ரைன் நாட்டைச் சேர்ந்த ஒரு அரபி மாத்திரம் பிரதமரின் கையைப் பிடித்துக்கொண்டு தன்னைப்பற்றி நீண்டதொரு அறிமுகம் செய்து கொண்டிருந்தார். இடம், பொருள், ஏவல் பார்த்து சமயோசிதமாக நடந்துகொள்ள அந்த அரபிக்குத் தெரியவில்லை போலும்.

எனது முறை வந்தது. பிரதமருடன் கைகுலுக்க ஸலாம் உரைத்து யான் ஸ்ரீலங்கா நாட்டைச் சேர்ந்தவன் என்று கூறினேன். அப்போது அவரது முகத்தில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. புருவத்தை மேலே உயர்த்தி புன்சிரிப்பை விசாலப்படுத்தி எனது ஸலாமிற்கு பதிலுரைத்தார்.


சாந்தம் தவழும் அந்த முகத்தில் ஒரு கவர்ச்சி முகப்பொலிவு என்பார்களே அதைப் டாக்டர் மஹாதிரிடம் கண்டேன். எனது சந்தேகத்திற்குத் தெளிவு கிடைத்துவிட்டது.

படாடோபம் இல்லாத பணிவு. அவசரம் இல்லாத நிதானம். பார்வையில் தெளிவு. 76 வயதை எட்டியும் முதுமை தட்டாத முகத்தோற்றம். இவையெல்லாம் அல்லாஹ்வின் அருட்கொடையல்லவா?

அறிவும் செல்வமும் செல்வாக்கும் ஒரு மனிதனிடம் அதிகரிக்கும்போது அவனிடம் பணிவும் பண்பும் அதிகரிக்க வேண்டும். அதுவே அறிவாளியின் இலட்ஷணமாகும்.

# தரகராய் வந்து தொழிலதிபராய் உயர்ந்தவர்

**பெயார்லைன் குரூப் நிறுவனத்தின் தலைவர் ஹாஜி புஹார்தீனுடன் ஒரு நேர்காணல்**



இலங்கையின் மாபெரும் வர்த்தக சாம்ராஜ்யத்தின் ராஜாவாக பல காலம் இருந்த இம் மனிதன் வாழ்வில் பல ஏற்ற இறக்கங்களைக் கண்டவர். தோல்வியையும், வெற்றியையும், சோகத்தையும், இன்பத்தையும் சமமாக மதித்து ஏற்ற, இறக்கங்களுக்கு முகம் கொடுத்து மீண்டும் ஓர் அவதாரம் புரிய வந்திருக்கும் இம்மனிதனின் கதை சுவையானது, சுவாரஸ்யமானது.

படிப்பினை நிறைந்தது

கண்டி மாநகருக்கு அருகே அலவத்து கொடை நகரத்திற்கு அண்மித்த மாவத்த பொல கிராமம் குருநாகல் நகரில் பிரபலமான தேங்காய் வியாபாரி நூர் முஹமத் நபிஸா உம்மா தம்பதிகளின் மூத்த மகன் என்.எம். புஹார்தீன்.

குருநாகலை கிளாசியர் கல்லூரியில் புஹார்தீன் எனும் அந்த கெட்டிக்கார இளைஞன் எஸ்.எஸ்.ஸீ வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறான். தந்தையாரின் கனவு அவனைப் படிப்பித்து ஆளாக்குவது. அவன் படிப்பில் கவனமெடுத்து படித்ததால் பெற்றோருக்கு மிகுந்த திருப்தி.

அந்தோ- அந்த இளைஞனின் வாழ்வில் பேரிடி. வாப்பா நூர் முஹம்மத் பரலைஸ்ட் ஆக.... வியாபாரம் தடம் புரள... குடும்பம் அதோ கதி ஆகின்றது. கல்விக் கனவுகள் கலைந்தன. கட்டிய கோட்டைகள் த்கர்ந்தன.

கட்டிலில் படுக்கும் தந்தை- வயதான தாய். பாசத்திற்காக தேவைக்காக ஏங்கும் சகோதரர்.

அந்த இளைஞன் வீதிக்கு வந்தான். விதி செய்த சதியா? அல்லது இறைவனின் சோதனையா?

கண்டி நகர வீதிகளில் கடைகடையாய் ஏறி இறங்கினான். நோ வேக்கன்ஸி தான் அவனுக்குக் கிடைத்த பதில். சாப்பாடு இல்லை. நடை களைப்பு. எனினும் அவன் மனம் தளரவில்லை.

தன் தோள் மீதான பொறுப்புக்களின் சுமை அவனை அழுத்தினாலும் சோர்வடையாத புஹார்தீன் முயற்சி... முயற்சி செய்துகொண்டே இருந்தான்.

பேன்ஸி ஹவுஸ் கண்டி. எனும் கடை அவனுக்குக் கை கொடுத்தது. சிறிய சம்பளம். கடுமையான உழைப்பு. மாதம் 60 ரூபா சம்பளத்திற்கு அந்த முன்னாள் முதலாளியின் மகன் சேல்ஸ்மேனாக புது வாழ்வைத் தொடங்குகின்றான்.

கடுங் குளிர் கந்தல் அறியாது. யானைப் பசிக்கு ரூபா 60 சோளப் பொரிதான். பொறுத்தான் 6 மாதங்கள். உயர வழியில்லை. என்றாலும் அங்கு வாழலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. வேலையை விட்டு விட்டு தலைநகருக்கு ரெயின் ஏறினான்.

1957 இறுதிகளில் கொழும்பு வீதிகளில் படிகள் ஏறி இறங்கிய அவனுக்கு மெயின் வீதியில் ஒரு பிடவைக் கடையில் வேலை கிடைத்தது. வெள்ளை சேர்ட்டும், வெள்ளை காற்சட்டையும் அணிந்தவனாக அவன் மறுநாள் கடைக்குச் சென்றான். அன்று புது வருடம். 01.01.1958 அவனை மேலும் கீழும் பார்த்த முதலாளி தும்புச் கட்டையைக் கையில் கொடுத்து கடையைக் கூட்டுமாறு கூறினார். துடைப்பானைக் கொடுத்து புழுதி தட்டச் சொன்னார். அவன் இடிந்து போனான். மனந தளரவில்லை எனினும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. பிற்பகல் அந்த முதலாளி அவன் கையில் 10 ரூபாவைத் திணித்து டாட்டா காட்டிவிட்டார். அந்தோ.... அந்த இளைஞன் மீண்டும் வீதிக்கு.....

இந்த புஹார்தீனை 28 வருடங்கள் கழித்து நாம் சந்திக்க நேர்ந்தது. இலங்கையின் மாபெருப்

வர்த்தக சாம்ராஜ்யத்தின் ராஜாவாக பல காலம் இருந்த இம் மனிதன் வாழ்வில் பல ஏற்ற இறக்கங்களைக் கண்டவர். தோல்வியையும், வெற்றியையும், சோகத்தையும், இன்பத்தையும் சமமாக மதித்து ஏற்ற, இறக்கங்களுக்கு முகம் கொடுத்து மீண்டும் ஓர் அவதாரம் புரிய வந்திருக்கும் இம்மனிதனின் கதை சுவையானது; சுவாரஸ்யமானது.

வீதிக்கு வந்த நான் மீண்டும் முயன்றேன், முயன்றேன். மெயின் வீதியின் மெக்கி ஸ்டோர்ஸ் அதிபர் உவைஸ் ஹாஜியாரைச் சந்தித்தேன். அவர் என்னை வேலைக்குச் சேர்த்துக்கொண்டார்.

உவைஸ் ஹாஜியாருக்கு நாட்டின் பல இடங்களிலும் பல விற்பனை நிலையங்கள் இருந்தன. நான் குருநாகலைக்கு அனுப்பப்பட்டேன். நான் படித்த ஊர், எனது தந்தையார் தொழில் செய்த ஊர். அங்கு 1வரு. 6 மாதங்கள் சேல்ஸ்மேனாகத் தொடங்கிய எனது வாழ்வு மனேஜராக உயர்ந்தது. எனது வெளித் தோற்றத்தில் நான் கறுப்பு- ஆனால் எனது இலக்கு..... எனது தேவை..... என்னை சுறுசுறுப்பாக்கியது.

எனக்கு மீண்டும் பதவி உயர்வு கிடைத்து காலிக் கிளைக்கு மாற்றப்பட்டேன். அங்கே 2



வருடங்கள். எல்லாமே நன்று . ஆனால் எனக்கு காலி காலநிலை சரியாகப் பிடித்துக் கொள்ளவில்லை. கொழும்பு வந்து கொள்ளுபிட்டியில் வீட்டில் வைத்து உவைஸ் ஹாஜியாரிடம் கெஞ்சி மன்றாடி இடமாற்றம் ஒன்று கேட்டேன். அவரோ விடாப்பிடியாக மறுத்துவிட்டார். காலிக்கு உன்னை விட்டால் வேறு ஆளில்லை. பிறகு பார்ப்போம். பொறுத்திரு என்ற பதிலே கிடைத்தது. என்னால் பொறுக்க முடியவில்லை. காலியும் வேண்டாம். தொழிலும் வேண்டாம் என்ற முடிவு என்னுள்.

எனினும் குழப்பம் தீர்ந்தபாடில்லை. யோசனையுடனே கொள்ளுப்பிட்டியில் இருந்து பெட்டாவுக்கு (புறக்கோட்டைக்கு) நடந்தே வந்து சேர்ந்தேன்.

சுயமாக ஏதாவது தொழில் செய்தால் என்ன என்று சிந்தித்தேன். எப்படி.. எப்படித் தொடங்குவது. என்னுள் இலட்சியம் மட்டும் இருந்தது. யாரையுமே தெரியாது.

## பெயார்லைன் குரூப் ஒப் கம்பனீஸ்

## வர்த்தக சாம்ராஜ்யம்

### கார்மன்ட் பக்டரிகள்

கட்டுபெத்தை
பொருப்பன
கல்கிஸ்ஸ(தற்போது இல்லை)
அக்குரணை
வரகாமுறை
அலவத்துகொட
மஹியாவ
போரூர்- சென்னை

### விற்பனை நிலையங்கள்

மெயின் வீதி, கொழும்பு
பிரின்ஸ் வீதி, கொழும்பு
கண்டி
காலி வீதி- கொள்ளுப்பிட்டி

### வேறு

றுபையத் ஹோட்டல்

### தொழிலாளர்- உத்தியோகத்தர்

8500

### காரியாலயங்கள்:

கொழும்பு
கண்டி
ஹாங்காங்
சிங்கப்பூர்
சென்னை

### சமூக, கல்வி, மார்க்க பணிகள்


புஹார்தீன் பவுண்டேஷன் ட்ரஸ்ட்.
நூற்றுக் கணக்கான க.பொ.த (சா.த.) க.பொ.த (உ.த.) பல்கலைக்கழக மாணவர்கட்கு வகுப்புக்கள், புலமைப் பரிசில்கள்
ஏழைக் குமர்களுக்குத் திருமணம்
ஏழைச் சிறார்களுக்குக் கத்னா.
மாவத்தப்பொல பள்ளிவாசல் கட்டுமானம்.
1980களில் 65 லட்சம் செலவு.
அக்குரணை முஸ்லிம் அனாதை விடுதி.
இஸ்லாமிய பாலர் பாடசாலைகள்.
1985 முதல் 11 வருடங்கள் 50 லட்சம் ரூபா செலவு. நாடு முழுவதும் பல மஸ்ஜிதுகள். மத்ரஸாக்கள் நிர்மாணமும் பரிபாலனமும்

முயற்சியை கைவிடாத நான் சிந்தி முதலாளி ஒருவரிடம் போய்ப் பேசினேன். அவரது பென்ஸில் பொருட்களை நான் கன்ஸைமன்ட் அடிப்படையில் விற்றுத் தருவேன் என்று அவரைக் கன்வின்ஸ் பண்ணினேன். எனது தோற்றத்தை எடைபோட்ட அவர் முதலில் மறுத்தாலும் எனது பேச்சின் போக்கில் ஓரளவு திருப்தி கண்டவராக சிறிய அளவில் பொருட்கள் தர இணங்கிக்கொண்டார்.

கொழும்பைச் சுற்றி மொரட்டுவ, ஹோமாகம, மஹரகம, வத்தளை, அவிஸ்ஸாவளை என்று பார்சலுடன் கடை கடையாய் அலைந்து பொருட்களை மொத்தமாக விற்றேன். சுமாராக வருவாய் கிடைக்கத் தொடங்கியது.

வாப்பாவின் உடல் நிலை பரவாயில்லை. என்றாலும் அவருக்கு மேலதிக மருத்துவ வசதி தேவைப்பட்டது. அதனால் புறக்கோட்டையில் ஒரு ரூமை 90ரூபா மாத வாடகைக்கு எடுத்து வாப்பாவைக் கூட்டிவந்து என்னுடன் தங்க வைத்தேன்.

எனது முயற்சியில் சிறிது நம்பிக்கை கொண்ட வாப்பா ஊரிற்குச் சென்று மிஞ்சியிருந்த வீட்டுமனை ஒன்றை 500ரூபாவிற்கு விற்று விட்டு அந்தப் பணத்தை என்னிடம் கொடுத்தார். இடையில் எனது



சகோதரியும் ஆசிரியையாகத் தொழில் கிடைத்து பயிற்சிக்குச் சென்றார்.

அளுத்கமை முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிச் கலாசாலையில் எனது சகோதரி பயிற்சிபெற்றுக்கொண்டிருந்த போது அங்கு சென்று அவர் மூலம் மற்ற ஆசிரியைகளுக்கு வியாபாரம் செய்தேன்.

தொழில் முன்னேறியது. பஸ்ஸில் பார்சல் தூக்குவதை விட்டு ஒரு வான் வாங்கி சேல்ஸ் செய்தால்.... இந்த எண்ணம் கையிலிருந்த 2750 ரூபா பணத்தைக் கொடுத்து தவணை முறையில் ஒரு வான் வாங்கும் அளவிற்கு வளர்ந்தது.

புஹார்தீன் ஹாஜியார் இந்தக் கதையை எம்மிடம் கூறுகையில்..... அப்பப்பா..... அவர் முகத்தில் எத்தனை பாவங்கள். அழுது விடுவாரோ ..... என்று எண்ணுகையில்



விக்கிரமாதித்தன் கதையாக வேறு கொப்பிற்கு அந்த மனிதர் தாவி விடுகிறார். நவரசங்களுப் பிரதிபலித்த அந்த முகம் தன் தேவையை, தன் குடும்ப வறுமையை, தன் இலக்கு...... எண்ணி செய்த முயற்சிகளின் அறுவடையாய் ஜொலித்தது. அந்த மனிதருக்குள் இத்தனை கதைகளா?

வான் கிடைத்தது. கையில் காசு புரண்டது. நண்பர்கள் கூடினர். பங்காளிகள் நால்வர் சேர்ந்தனர். வியாபாரம் ஓகோ எனப் போய்க்கொண்டிருந்தது.

அப்போதே நான் எனது பதியப்படாத தொழில் சாம்ராஜ்யத்திற்கு பெயர்லைன் என்று பெயர் வைத்துக் கொண்டேண். மடுமாதா கோயில் உற்சவம். இலட்சக் கணக்கான மக்கள் கூடுமிடம். எக்கச்சக்கமான வியாபாரம் நடக்கும். இப்படி நண்பர்கள் கூற வான் நிறைய சாமான்களை அள்ளிக்கொண்டு ஒரே ஒரு ஆளை உதவிக்கு அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டேன்.

மடுமாதா கோயில். இலட்சக்கணக்கான மக்கள் கூட்டம். எல்லாம் இருந்தது. எங்களுக்கு வியாபாரம் மட்டும் இல்லை.

திடீரென ஒரு ஐடியா எந்தப் பொருளை எடுத்தாலும் 10 ரூபாய் என்று கூவி விற்பது என்று - அமோகமாய் வியாபாரம் ஆனது. பொருட்கள் தீர்ந்து போயின. காசு...காசு...காசு...

விளக்கிக்கொண்டிருந்த புஹார்தீன் ஹாஜியார் கல கலவெனச் சிரித்தார். இன்னும் நான் ஜோகர் தான். ஆனாலும் எனது இலக்கு தப்பியதில்லை. என்னுள் இருந்த வேகம் குறைந்ததில்லை. என்னுள் நான் மிகக் கடினமானவன். வெளியில் ஜோக்கர்....... ஜோக்கர்....' மீண்டும் மனிதர் சிரிக்கின்றார் 'எனக்குத்தான் நான் கடுமையானவன். என்னைத்தான் நான் நிந்திப்பேன். வெளியில் அதே வெகுளிதான். எல்லோரும் எனக்கு சமம் தான். எல்லோரும் நல்லவரே. இதுதான் எனது கொள்கை. தண்டனை எனக்கே'

தலைமன்னாருக்கு ஒரு ஹயர் போவோமா என்று கேட்டான் ஒருவர். ஆம். சும்மா இருக்கும் வான் தானே. காசுக்குக் காசு காட்சிக்குக் காட்சி கசக்கவா செய்யும்.

ஏற்றியவைதான் 'சரக்கு' பட்டை சாராயம். என்றாலும் ஒரு சமாதானம். எப்படியும் சமாளித்துவிடலாம். போய் சேர்ப்பித்துவிட்டால் சுளையாகப் பணம் கிடைக்கும் பார்த்துவிடுவோமே என்ற வேகம். வான் தலை மன்னாரை நோக்கிப் பறக்கிறது. இளமை... வேகம்.

தலைமன்னாரை வான் நெருங்கிவிட்டது. சரக்கு இறக்கி மீண்டும் பணம். பாதையில் ஒரு எக்ஸிடன்ட் முடியுமானவரை சமாளித்துப் பார்த்தோம் முடிந்தபாடில்லை. கிராமத்து ஆட்கள் பொல்லு தடியுடன் எம்மைத் தாக்க வந்துகொண்டிருந்தார்கள். வந்தது ஒரு 500 பேராவது இருக்கும். என்ன செய்தேனோ தெரியாது. வான் மீண்டும் பறந்தது. பொலிஸ் ஸ்டேசனை நோக்கி. காவலுக்கு நின்ற கன்ஸ்டபிள் திகைக்க... வேனிலிருந்து இறங்கிய நான் நேரே ஸ்டேஷனுக்குள் ஓடி அங்கே ஷெல்லைத் திறந்து உள்ளே புகுந்து பெட்லாக்கை நானே பூட்டிக்கொண்டுவிட்டேன். சிறிது நேரம்தான் போலிஸ் ஸ்டேஷன் உள்ளே கலவரம். வெளியே கிராம மக்களின் கூச்சல்.

> தொட்டதெல்லாம் பொன். எங்கு திரும்பினாலும் வெற்றி. இந்த நிலை சிறிது காலம் தொடர்ந்தது.

ஒரு யாழ்ப்பாணத்து இன்ஸ்பெக்டர் கடமையில் இருந்தவர் என்ன நடந்தது என்று கேட்டார். என்னைக் காப்பாற்றுங்கள் முதலில் என்றேன். அவர் கிராமத்தவரிடம் போய் எப்படியோ சமாளித்து அவர்களைத் திருப்பி அனுப்பிவர வெகு நேரமாகிவிட்டது. அதுவரை நான் சிறையில். எனக்கு நானே சிறை. அது பெரிய கதை - அன்றைய நிகழ்வை இன்று நினைத்தாலும் .... மெய் சிலிர்க்கிறது.

என்னுள் இருந்த வேகம். இலட்சிய வெறி என்னை என்ன செய்யவும் தூண்டியது. இத்தனைக்கும் இடையில் எனக்கு வாகனம் ஓட்ட லைசன்சு கிடையாது. ஏற்றி வந்தது சாராயம். இடையில் ஆக்சிடென்ட். ஐயோ எப்படியோ சமாளித்தேன். போலீஸில் இருந்து சமாளித்து வெளியே வந்து அவர்களின் பாதுகாப்புடனேயே அந்தக் கிராமத்தைக் கடந்து.... கொழும்பு வந்து சேர்ந்தேன்.

மீண்டும் தொழில் சில காலம்தான். பங்காளிகள் பரிதவிக்க விட்டார்கள். வாங்கிய சாமான் விற்ற பணமும் இல்லை. சாமானும் இல்லை. பங்காளிகளையும் காணோம். இப்போது கடன் தொல்லை. சிந்தி முதலாளி கழுத்தை நெரிக்கிறார். வான் பறிபோகிறது. பசாரில் மரியாதை இல்லை... என்ன செய்வது.... எப்படி மீள்வது.

ஜெயிலானி ஷார்..... அவரை அப்படித் தான் அனைவரும் அழைப்பர். ஊர் காயல்பட்டணம். பசாரில் செல்வாக்கு மிக்கவர். மார்க்க ஈடுபாடு மிக்க இபாதத்தாளி. அவரிடம் உதவி கேட்டேன்.

அவர் ஒரு பஞ்சாயம் போட்டார். கடனுக்குப் பொருள் தந்தவர்களை அழைத்து சமாதானம் கூறி புஹார்தீன் கடனுக்கு நான் ஜவாப். ஆனால் அவருக்கு நீங்கள் மீண்டும் பொருட்கள் தர வேண்டும். அவற்றை விற்று அவர் தொழில் நடத்த உதவ வேண்டும் என்று அவர் முன்னிற்க... மீண்டும் எனது வாழ்க்கை வண்டி உருளத் தொடங்கியது.

ஜனாப் ஸெயின் ஹாஜியார் சில உதவிகள் புரிந்தார். ஒரு நண்பரின் உதவியுடன் தையல் மெஷின் உள்ள 7 யுவதிகளைப் பிடித்து அவர்களுக்குப் புடவை சப்ளை செய்து 'பிரா' தைக்க வைத்தேன். அவற்றை சேகரித்து மீண்டும் கடைகளுக்குப் போட்டு வியாபாரம் தொடங்கினேன்.

## அரசியலில் புஹார்தீன் ஹாஜியார்

அரசியலில் நேரடியாக ஈடுபாடு காட்டாமல் பல காலம் இருந்து வந்தேன்.

அரசியலில் ஈடுபடுமாறு பலர் வற்புறுத்தினர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம் அஷ்ரப் ஒரு முறை என்னைச் சந்தித்து தனது கட்சி பற்றி விளக்கினார்.

கட்சிக்கு 200,000 ரூபா அன்பளிப்பு வழங்கி ஒதுங்கிக்கொண்டேன்.

மீண்டும் மீண்டும் அவர் என்னைச்

சுமாராக வியாபாரம் நடந்தது. யாழ்ப்பாணம் சென்று பிராக்களை கடைகளுக்குப் போட்டுவிட்டு அங்கிருந்து லேடன் பனியன்களை- அப்போது அது ரொம்ப பேமஸ்- கொண்டுவந்து கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் போட்டு வியாபாரம் செய்தேன்.

ஆதம்ஜீ லுக்மான்ஜீ என்ற கம்பனியார் அலங்கார மின் விளக்குகள் வெசாக் சீசனுக்காக தருவித்தார்கள். ஆனால் எதிர்பார்த்த வியாபாரம் அவர்களுக்கு நடக்கவில்லை. அவற்றை விற்குப் கண்ட்ராக்டை பேசி எடுத்துக்கொண்டேன். கரத்தைகளில் ஏற்றி ஏரியா.. ஏரியாவாக கூவி விற்றேன். நல்ல வியாபாரம். மீண்டும் புஹார்தீன் பஸாரில் இடம் பிடித்துக்கொண்டான்.

## திருமணம்

1963ம் ஆண்டு எனக்குத் திருமணமானது. 1965ல் மகன் பிறந்தான். 1967ல் மகள் பிறந்தாள். சுமாரான வியாபாரம். ஆனால் குறிப்பிட்ட அளவு மூலதனம் சேரவில்லை. ஒரு 25.000 ரூபாய் இருந்தால் சிறிய அளவிலாவது ஒரு கார்மண்ட் ஆரம்பிக்கலாம் என்ற கனவு..... ஓர் இலட்சியமாகிவிட்டது. எதுவும் சரியாக வரவில்லை.

1968ம் ஆண்டு வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. தேசிய பிடவைக் கூட்டுத்தாபனத்தின் ஒரு கோட்டா கிடைத்தது. ஒரு நாளில்.... அந்தப் பிடவை வியாபாரத்தில் இலாபம் 1.39.000ரூபா கிடைத்தது. 25.000 ரூபா இருந்தால் ஒரு தொழில் தொடங்கலாமென்றிருந்த எனக்கு இலட்சத்திற்கும் அதிகமான ரூபாய்...... வாழ்வில் வசந்தம் வீசியது. ஒரு போஜோ 404 கார் வாங்கினேன். இந்தியா சென்றேன். மாலைதீவு சென்றேன். சிங்கப்பூ ர் சென்றேன்.

மீண்டும் சிங்கப்பூ ரில் இருந்து தருவித்த ஜீ 44 சாரி நல்ல பூ ஸ்ட் ஆனது. நல்ல வியாபாரம்...... நாலுபேர் அறிந்த மனிதனாய் அந்த வீதியில் தெரிந்த இந்த புஹார்தீன் மாறிக்கொண்டிருந்தான்....

புஹார்தீன் ஹாஜியார் பேசிக்கொண்டிருக்கையில் டெலிபோன் அடிக்கிறது. அவர் எமக்கு சமாதானப் சொல்லிவிட்டு ரிஸீவரைக் கையில் எடுக்கிறார். ஹலோ ஐயாம் புஹார்தீன் ஹாஜியார்... யார் பேசுவது? ஹலோ..... கவ்த கதாகரன்னே (யார் பேசுவது என்று சிங்களத்தில் கேட்கிறார்.)..... ஒயா கியன்න.....( நீங்கள் சொல்லுங்கள்) டெலிபோனைத் திடீரென வைக்கின்றார்.



எம்மை நோக்கி. என்னிடம் அவர் யார் பேசுவது என்று கேட்கின்றார். என்னை அழைத்து என்னிடம் கேள்வி என்று கூறியவாறு சிரிக்கின்றார். எத்தனைதான் இந்த மனிதர் சுற்றினாலும் தனது இடத்தை விட்டுவிட மாட்டார் என்று எண்ணத் தோன்றியது அச்சம்பவம்.

1978ல் நான் ஹாங்காங் சென்றிருந்தபோது என்வாழ்வில் இன்னுமொரு திருப்புமுனை இடம்பெற்றது.

நான் தங்கியிருந்த ஹோட்டலில் நான் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். பக்கத்து மேசையில் வெள்ளைக்காரர்கள் 3 பேர் சாப்பிட்டனர். அவர்கள் பேசியது எனக்குத் தெளிவாக்க கேட்டது. அடிக்கடி சிலோன்... சிலோன் என்று அவர்கள் பேசினர். கார்மென்ட்ஸ் தொழில் ப ற . ற ி ய ம பேசிக்கொண்டிருந்தனர். சாப்பாட்டை முடித்தபின் அவர்களின் மேசையை நெருங்கினேன்.

எக்ஸ்கியுஸ் மீ ஐயாம் புரம் சிலோன்- சிறிலங்கா..... அண்ட் சோ அன் சோ.... என்று என்னை அறிமுகப் படுத்தினேன். அவர்களை அறிமுகம் செய்து கொள்ளும் எனது ஆவலையும் வெளிப் படுத்தினேன்.

அறிமுகப்படலம் முடிந்தது. எனது முயற்சிகள் பற்றியும் அவர்கள் கேட்டுத் தெரிந்துகொண்டனர். முடிவாக...

ஏ ..... மேன் ... வீ ஆர் லுக்கிங் பார் ஏ மேன் லைக் யூ ...... வுட் யு ஜாயின் வித் அஸ் என்று கேட்டார் மிஸ்டர் ஷாமா. பிரான்ஸ்காஷன் கார்ப்பரேஷன்- யூ எஸ்ஏ லிமிட்டட்டின் சேர்மன்.

பேச்சு முடிவில் என்னில் அவர்கள் நம்பிக்கை கொண்டு யூ எஸ் டாலர் 1.78.000 தந்து ஒரு காமன்ட் பாக்டரியை ஆரம்பிப்பதாக ஒப்புக் கொண்டோம்.

1978ல் இலங்கைக்கு முதன்முதலில் நவீன ஜுகீ தையல் மெஷின்களை தருவித்த முதல் இலங்கையன் என்ற பெருமையை அந்த ஹாங்காங் சந்திப்பு எனக்கு பெற்றுத் தந்தது. 1.2 மில்லியன் யூ .எஸ் டாலர் முதலீட்டில் எனது பெயார்லைன் குரூப் கம்பனீஸ் உதயமான கதை அது.

1987வரை இலங்கையின் கார்மண்ட் உலகில் தனிப் பெரும் ராஜாவாக எனது பெயர்லைன் குரூப் ஒப் கம்பனிஸ் விளங்கியது. ஏறத்தாழ 8000 பேருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த அந்தக் கூட்டு முயற்சியின் அடித்தளம் எனது இலட்சிய வெறிக்குக் கிடைத்த இமாலய வெற்றியாகும்.

பெயார்லைன் குரூப் ஒப் கம்பனீஸ் தொழில் முயற்சிகள் பற்றிய விரிவான விளக்கம் பெட்டிச் செய்தியில் வந்துள்ளது.

எனது வாழ்வில் நடந்த ஏற்றங்களுக்கும் இறக்கங்களுக்கும் பல சூழல் காரணிகள் காரணமாய் அமைந்தன எனலாம். நான் பெரியதொரு இபாதத் ஆளியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால்

சந்தித்து கன்வின்ஸ் பண்ணினார்.

முடிவு 1989 பொதுத் தேர்தலுக்கு 15 மில்லியன் ரூபாய் தேர்தல் செலவு பட்ஜெட்டை தாங்க வேண்டி ஏற்பட்டது. மேலதிகமாக 3.5 மில்லியன் ஹெலிகொப்டர் மற்றும் போக்குவரத்துக்கு வழங்கப்பட்டது.

1989ல் பாராளுமன்ற தேசியப் பட்டியல் எம்பியாக (4 நாட்கள் கழித்து) நியமிக்கப்பட்டேன்.

2 வருடங்களுள் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸில் நான் ஒரு குதிரையாகப் பாவிக்கப்பட்டுள்ளதையும். முடிவுகள் யாவும் தன்னிச்சையானவை என்பதையும் உணர்ந்தேன்.

கருத்து முரண்பாடுகள் தொடர்ந்தன. சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தன.

1994 பொதுத் தேர்தலில் பெரும்பான்மை முடிவின்படி கட்சித் தலைமை இயங்காமல் திடுதிடுப்பென தன்னிச்சையாக பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதால் அதிலிருந்து விலகி ஐ.தே. க. வில் சேர்ந்து தேர்தலில் நின்றேன்.

மாத்தளை மாவட்டம் எனக்குப் புதிது. அது பெரும்பான்மை இன மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது. எனினும் தேசிய பட்டியல் எம்பியாகஇருந்தபோது மாத்தளை மாவட்ட மக்களுடன் ஏற்பட்ட தொடர்பினால் தேர்தலில் ஆக 800 வாக்குகளால் தோற்றுப் போனேன்.

தேர்தலின் போது நான் ஸ்ரீ.ல.மு காங்கிரஸையோ அல்லது அதன் தலைவர் சகோதரர் அஷ்ரபையோ ஏசிப் பேசியது கிடையாது. ஆனால் நான் வளர்த்த கட்சியும், தலைமையும் என்னை அவதூறு செய்வதற்கென்றே ஒரு வேட்பாளரைப் போட்டு அங்கே வேலை செய்தது.

அரசியலில் எனது ஈடுபாடு. கட்சி வேலைகள் போன்றவற்றின் தாற்பரியங்களுக்கு காலமே தகுந்த விடை தரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.





என்னுள் அசைக்க முடியாத இறை விசுவாசம் இருந்தது. எனக்கு வியாபாரம் தவிர்ந்த ஏனைய ஜாலி வேலைகளில் எப்போதுமே ஈடுபாடு இருந்தது கிடையாது. எப்போதாவது தமிழ் சினிமா பார்ப்பதோடு பொழுதுபோக்கு சரி.

என்னால் இயன்ற அளவு சமூக,மார்க்கக் கல்விப் பணிகளில் உதவினேன். நான் ஒரு காலகட்டத்தில் உதவி செய்யாத ஒரு சமூகப் பணியாவது கிடையாது என்ற நிலைமையை அல்லாஹ் எனக்கு ஆக்கித் தந்தான். சமூகப் பணிகளுடன் எனது சமூக விடுதலைக்கான அரசியல் பணிகளிலும் நான் ஈடுபட்டேன்.

அரசியல், சமூகப் பணிகள் பற்றிய விபரம் தனியே பெட்டிச் செய்தியாக வந்துள்ளது. தொட்டதெல்லாம் பொன். எங்கு திரும்பினாலும் வெற்றி. இந்த நிலை சிறிது காலம் தொடர்ந்தது.

இடையில் 1983ல் இனக்கலவரம் வந்தது. உயிர் தப்பி ஓடிய தமிழர்கள் என்னிடம் தமது வீடு வளவுகளை அமானமாகத் தந்துவிட்டுச் சென்றனர். காலம் கனிந்து அவர்கள் திரும்பி வந்தபோது அவற்றை அவர்களிடம் திருப்பி ஒப்படைத்தேன்.

எனது உறவினர்கள், நண்பர்கள், எல்லோரையும் அரவணைத்தேன். அவர்களுக்கு காணி, வீடு, தொழில் அமைத்துக் கொடுத்தேன். எனது தொழிலில் பொறுப்புக்களை ஒப்படைத்தேன். புதிய புதிய தொழில்களில் முதலீடு செய்தேன்.

1986ல் ஜே.வி.பி இனரின் கிளர்ச்சி நடந்தது. உச்சகட்ட கிளர்ச்சிகளின் போதுதான் எனது சாம்ராஜ்யத்ததில் பின்னடைவுகள் தோன்ற ஆரம்பித்தன.


கப்பல் வாங்கினேன். காணாமல் போனது. கல் (மாணிக்கம்) வியாபாரம் கரைந்தே போனது. கிளாஸ் பாக்டரி நொறுங்கிப் போனது. டிராவல் பிஸினஸ் காலை வாரியது..... கார்மணட் பாக்டரிகள் உற்பத்தி இன்றி முடங்கத் தொடங்கின...

வங்கியில் கடன் பெற்றேன். கடனை அடைக்க மீண்டும் கடன் கடனுக்கு வட்டி. வட்டிக்கு வட்டி.

காரணம் என்ன? என்னதான் நடந்தது? குடித்தேனா? வெறித்தேனா? சூதாடினேனா? இல்லை. தான தர்மத்தில் குறைத்தேனா? ஸகாத்தைக் கணித்து வழங்குவதில் தவறினேனா? இல்லை...... பெருமையடித்தேனா? இல்லை..... அப்போ என்ன நடந்தது.

ஆம்..... எல்லோரையும் நல்லவர் என்று நம்பினேன். பொறுப்புக்களை அவர் பாட்டில் விட்டேன். என்னையே நான் தண்டித்து வாழ்ந்ததால் அவர்களைக் கண்காணிக்கவும், கண்டிக்கவும் தெரியாமல் போனேன்.

கோர்ட்டுக்குப் போனது வங்கி. வருமாவரிச்





1978ல் இலங்கைக்கு முதன்முதலில் நவீன ஜுகீ தையல் மெஷின்களை தருவித்த முதல் இலங்கையன் என்ற பெருமையை அந்த ஹாங்காங் சந்திப்பு எனக்கு பெற்றுத் தந்தது. 1.2 மில்லியன் யூ .எஸ் டாலர் முதலீட்டில் எனது பெயர்லைன் குரூப் கம்பனீஸ் உதயமான கதை அது.

1987வரை இலங்கையின் கார்மணட் உலகில் தனிப் பெரும் ராஜாவாக எனது பெயர்லைன் குரூப் ஒப் கம்பனிஸ் விளங்கியது. ஏறத்தாழ 8000 பேருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த அந்தக் கூட்டு முயற்சியின் அடித்தளம் எனது இலட்சிய வெறிக்குக் கிடைத்த இமாலய வெற்றியாகும்.



கணக்கு அரசியலில் கைவிடப்பட்ட நிலை. தேர்தலில் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வி.

முடிவு - இந்த புஹார்தீனின் கதை முடிந்துவிட்டது. இனி எழும்பவே முடியாது. பாக்டரிகளை ஏலமிடும் நிலை.

இந்த நிலையில் நான் நோய்வாய்ப்பட்டேன். படுத்தபடுக்கை. சுயநினைவு இல்லாமல் 48 நாட்கள். சிங்கப்பூ ர் குயின்ஸ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை. சிறிது சுகம் கிடைத்தது. கொஞ்சம் தேறி வந்து பார்த்தேன்.

இதுவரை புஹார்தீனுக்குக் கிடைத்த மதிப்பு எல்லாம் காலி. உறவினர் கேலி பேசும் அளவிற்கு நான் வந்துவிட்டேன். உற்றமும் சுற்றமும் கைவிட்டுவிட்டன. சரியான முகாமைத்துவக் கண்காணிப்பு இல்லாமையே தோல்வியின் முதற்படி. அடுத்தது எல்லோரும் நல்லவரே என்ற தன்மை.

ஒரு 10.000 ரூபாயை எப்படித் திரட்டுவது என்ற அளவிற்கு நான் இறங்கிப் போனேன். எல்லாம் உண்டு. பங்களா. கார். காணி. கட்டிடம். தோட்டம் துரவு - ஒன்றும் இல்லை. என்ற நிலை. வங்குரோத்து (Bankruptcy) பிரகடனம் செய்யச் சொல்லி லாயர் அட்வைஸ் பண்ணுகின்றார். அதனை நினைத்துப் பார்க்கவே என்னால் முடியாது.

என்னுள் போராட்டம். வயது கூடிவிட்டது. எனவே மற்றவரின் விருப்பப்படி ரிடையர் ஆக வேண்டும். பிடிக்காதது ரிட்டயர்மன்ட். வயதானாலும் சிங்கம் சிங்கம்தான்.

இல்லை.... நான் மீண்டும் எழுந்து காட்ட வேண்டும். அல்லாஹ்வே அதற்கு எனக்கு மனோ திடத்தையும். உடற்பலத்தையும் தருவாயாக என்று தஹஜ்ஜதில் அவனிடம் கேட்டேன். இதோ இன்று இங்கு..... அதே பழைய புஹார்தீன்...... தன் புனர் ஜென்மத்தை ஆரம்பித்து விட்டான்.





இது அவர் சொன்னவற்றின் சாரம்சம். ஆம்..... அந்த கிழட்டு சிங்கம் மீண்டும் கர்ச்சிக்கின்றது. அந்தப் புலி பதுங்கியது பயத்தினால் அல்ல. மீளவுப் வேகமாய் பாய. ஆனால் ஒரு வித்தியாசம் புஹார்தீன் ஹாஜியாரிடம் காணப்படுகின்றது. அவரது இலக்கு முன்னைய மாதிரியானதல்ல என்பதே அது. அப்போது அவரின் இலக்கு அவருக்காக இருந்தது. இப்போது அது இந்த சமூகத்திற்காக தொனிக்கின்றது.

அதில் வெற்றி பெற இந்த பீனிக்ஸ் பறவைக்கு வாழ்த்துரைப்போம். பிரார்த்திப்போம்.

# சூரிய சக்தி

சூரியன் வெளியிடும் சக்தியில் ஒளி.வெப்பம். ஏனைய காந்த- எலக்ரோனிக் கதிர்வீசல்கள் என்பன அடங்கும். சூரியனுள் ஏற்படும் அணு மாற்றங்களின் பயனாய் சக்தி வெளிப்படுகின்றது. உலகிலுள்ள மனிதர் யாவரும் ஓர் ஆண்டு காலத்திற்கு உபயோகிக்கும் மொத்தச் சக்தியின் அளவை இந்த சூரியன் ஒவ்வொரு 40 நிமிடத்திற்கும் வெளியேற்றுகின்றதாம். அடேங்கப்பா.!

இந்த அளவில் ஒரு சிறிய பெறுமானத்தையே நாம் நேரடியாகப் பெறுகின்றோம். சூரிய சக்தியை நேரடியாக அதுவும் எளிய முறையில் பயன்படுத்த வழிகள் பிறக்குமானால் இவ்வுலகில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிடும். இதற்கான முயற்சிகளில் விஞ்ஞானிகள் வெகு காலமாகவே பற்பல முயற்சிகளையும் செய்துவருகின்றனர்.

ஐரோப்பிய விஞ்ஞான நூல்களின் அடிப்படையில் சூரிய சக்தியைப் பெறும் வழிமுறைகளை முற்கால மனிதர் கொண்டிருந்தனர் என முன்னுரை கூறப்பட்டுள்ளது. முற்கால கிரேக்கர்கள் சூரிய ஒளிக்கதிரை உபயோகித்து நெருப்பை உண்டாக்கியதாக வரலாறு கூறுகின்றது. இதே காலகட்ட சீனர். அராபியர். இந்தியர் எல்லாம் இதனை அறிந்து வைத்திருந்தனர்.

பின்னர் கி.பி 900ம் ஆண்டுகளில் வாழ்ந்த இப்னு ஹைதம் என்ற விஞ்ஞானி கண்ணாடியை உபயோகித்து சூரிய சக்தியைப் பயன்படுத்தும் பொறிமுறையை உலகிற்கு அறிமுகம் செய்தார். அதன் பின் ஓரளவு வெற்றிபெற்ற முயற்சியாக 1767ல் வாழ்ந்த சுவிஸ் நாட்டு விஞ்ஞானி ஹெறரேஸ் பெனடிக்ட் டீ சோஸர் 'வெப்பப் பெட்டி' எனும் பொறி முறையை அறிமுகப் படுத்தினார்.

1909ல் வில்லியம் ஜே. பெய்லி என்ற அமெரிக்கப் பொறியியலாளர் சூரிய ஒளியைச் சேகரிக்கும் 'சம-தட்டு' முறையை கலிபோர்னியாவில் நிறுவினார்.

1940ல் ஜோர்ஜ் பிரட் என்ற அமெரிக்க கட்டிடக் கலைஞர் நவீனமயப்படுத்தப்பட்ட 'சூரிய வீட்டை' சிக்காகோ நகரில் அமைத்தார்.

1970களில் ஏற்பட்ட பெற்றோலியத் தட்டுப்பாடு சூரிய சக்தியின் முக்கியத்துவத்தை உலகிற்கு உணர்த்தியது இதன் பின்னரே தொழில்சார் முயற்சிகள் இத்துறையில் தொடங்கப்பட்டன.

எனினும் இம்முயற்சி சில வரையறை களுக்குள்ளும் சில எல்லைகளுக்குள்ளுமே இடம் பெறுகின்றது. ஏனைய துறைகளில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களை இத்துறையிலும் உலகம் எதிர்பார்க்கின்றது. ஏனெனில் மாற்று எரிபொருளாக பயன்படக்கூடிய மிகப் பரந்த சக்தி சூரிய சக்தி என்றே அனைவரும் அடையாளம் கண்டுள்ளனர்.

> ஒழுக்கக் கேடுள்ள கணவனாக இருந்தாலும் அவனோடு தான் பெண் தன் வாழ்வைப் பலியிட வேண்டும் என்பதற்காகப் பத்தினிகளின் கதைகள் பரப்பப்பட்டுள்ளன. இதனால் பெண் மனநிலையில் பாதிக்கப்பட்டவளாகவும், அவள் பெற்றோர் அச்சத்துடன் அவள் வாழ்வை எதிர்பார்ப்பவர் களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். இது பெண் சிசுக் கொலையாக மாற்றம்பெற்றுள்ளது.

# பெண்ணும் கல்வியும்

டாக்டர் செள.மதார்மைதீன்
தமிழ்ப் பேராசிரியர், மன்னார்குடி

இஸ்லாம் பெண்களுக்கு உரிமை கொடுக்கவில்லை என்ற பிரச்சாரம் அண்மைக்காலத்தில் முழு வீச்சோடு செய்யப்படுகின்றது. இப்பிரசாரத்தைச் செய்யும் மதிவாதிகள் பொது சிவில் சட்டம் வேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்கின்றார்கள்.

பெண்களின் நன்மைக்காகப் பிறவி எடுத்தவர்களாகத் தம்மைத்தாமே அறிவித்துக் கொண்டுள்ள இவர்கள், பெண் சிசுக் கொலைகளையும், உடன் கட்டை ஏறுதலையும் கண்டுகொள்ளாத விசித்திரக் குருடர்களாக இருக்கின்றனர். இதற்குக் காரணம் இவர்கள் வாக்குப் பெட்டிகள் மீது கண்வைத்து, பதவி நாற்காலிகளில் கால் வைப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளது தான்.

பெண் சிசுக் கொலைகளுக்கான காரணங் களைப் பார்ப்போம்.

1. வரதட்சணைக் கொடுமை.
2. பெண் கல்வானாலும் அதே கணவனோடு தான் அவல வாழ்வு வாழ வேண்டிய வாழ்க்கை அமைப்பு
3. பெண்ணே ஒரு போகப் பொருள் என்ற எண்ணம்
4. பெண் தாழ்ந்தவள் என்ற எண்ணம்.

இக்காரணங்கள் எல்லாவற்றையும் இஸ்லாம் துடைத்து எறிந்துள்ளது பெண்களுக்குப் பாதுகாப்பும் கொடுத்துள்ளது.

## வரதட்சணைக் கொடுமை

வரதட்சணை, அன்பளிப்பு, கைக்கூலி, சீர்வரிசை, எதிர்ஜாமீன், செய்முறை, கல்யாணக்கட்டு என்று பல இடங்களில் பல பெயர்களால் அழைக்கப்படும் பெண்கொடுமைக் குப் பெயரே வரதட்சணை. வரன்- மணமகன், தட்சணை- மரியாதையோடு அளிக்கப்படுவது மணமகனுக்கு மரியாதைக்காகக் கொடுக்கப்படும் பொருள் என்று பெயர் இருந்தாலும், செக்கில் போட்டு எண்ணெய் ஆட்டுவது போலப் பெண்ணின் பெற்றோரைப் பிழிந்து எடுப்பது வரதரட்சணை. இது இரண்டு வகை, அதாவது, ரொக்கம், நகை, பண்டம், பாத்திரம், திருமணச் செலவு, விருந்து போன்றவை திருமணத்திற்கு முன்பு என்ற வகையிலும், பண்டிகைக்காலச் செய்முறைகள் போன்றவை திருமணத்திற்குப் பின் என்ற வகையிலும் அடங்கும். ஆனால், இஸ்லாம் பெண்களுக்கு சொத்துரிமை கொடுத்து, மஹர் என்னும் திருமணப் பரிசத்தை ஏற்படுத்தி, பெண்களை வரதட்சணைக் கொடுமையில் இருந்து காப்பாற்றியுள்ளது. வரதட்சணைக் கொடுமை இல்லையென்றால்

அம்மா அப்பா
அவர் படித்தவரா?
புகை பிடிப்பவரா?
என்பதை விசாரிப்பதோடு
அவர் வீட்டுக்கு ஸ்டவ் வெடிக்குமா?
என்பதையும் விசாரியுங்கள்

என்று பெண்கள் அவல நிலையை இல்லாமல் ஆக்கலாம். இந்த வரதட்சணைக்குப் பயந்து தான் பெண் சிசுக் கொலை நடைபெறுகின்றது.

## கல்லானாலும் கணவன்

ஒழுக்கக் கேடுள்ள கணவனாக இருந்தாலும் அவனோடு தான் பெண் தன் வாழ்வைப் பலியிட வேண்டும் என்பதற்காகப் பத்தினிகளின் கதைகள் பரப்பப்பட்டுள்ளன. இதனால் பெண் மனநிலையில் பாதிக்கப்பட்டவளாகவும், அவள் பெற்றோர் அச்சத்துடன் அவள் வாழ்வை எதிர்பார்ப்பவர் களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். இது பெண் சிசுக் கொலையாக மாற்றம்பெற்றுள்ளது. ஆனால் இஸ்லாம் பெண்ணுக்கும் திருமண விலக்கு செய்துகொள்ள அனுமதி அளித்துள்ளது. மறுமணம் செய்துகொள்ள உரிமையும் கொடுத்துள்ளது. அடுத்த பிறவி என்பதெல்லாம் இல்லை என்பது இஸ்லாமியக் கோட்பாடு. ஆதலால் பெண் தன் வாழ்வைத்தானே தீர்மானிக்கும் உரிமை பெற்றவள் ஆகிறாள். இவ்வாறு பெண் இஸ்லாத்தில் பாதுகாக்கப்படுகின்றாள்.

## போகப் பொருள்

மண், பெண், பொன் ஆகியவை துன்பம் தருபவை. போகப்பொருள் வரிசையைப் பார்த்தால்.... பெண், ஆடை, அணி, உணவு, தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூ அமளி, என்ற எட்டு வகையான போகங்களில் பெண்ணே முதலில் கூறப்பட்டுள்ளது. இதனால் பெண் ஓர் உயிருள்ள பொருளாகக் கூட மதிக்கப்படவில்லை என்பதை உணர்கிறோம். இதனால் பெண் தாழ்ந்தவளாக தாம்பூலம் போல மென்று துப்பவேண்டிய பொருளாகக் கருதப்படுகின்றாள். இத்தகைய தாழ்விலிருந்து அவளைக் காப்பாற்ற, சிசுக்கொலையைப் பெற்றோர் ஆயுதமாக எடுத்துக்கொண்டுள்ளனர். ஆனால் இஸ்லாம் கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் ஆடையைப் போன்றவர்கள் என்று சம உரிமை அளித்துள்ளது.

## பெண் பிறப்பே இழிந்தது

பெண்ணே ஒரு இழிந்த பிறப்பு என்ற கருத்தும் பரப்பப்பட்டுள்ளது. பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள் என்று பல பெயர்களால் அழைக்கப்படுப் புலவர்கள் பெண்ணாகி வந்தது ஒரு மாயப் பிசாசாம் என்று பாடியுள்ளனர். பெண்களிடம் இருந்து ஆண் தப்பிப் பிழைக்க வேண்டும் என்பதை.

புவியில் மட மாதரை விட்டு

உய்யடா உய்யடா உய்!

இப்படிப் பெண்கள் அவமானப்படுத்தப் படுவதில் இருந்து, அவளைக் காப்பாற்றவே சிசுக்கொலை செய்வதாக அதைச் செய்பவர் கூறுகின்றனர். ஆனால் இஸ்லாம் பெண்களைக் கண்ணியப்படுத்தியுள்ளது.

### உடன்கட்டை ஏறுதல்

கணவனோடு மனைவியையும் புதைப்பது என்ற பேச்சுக்கே இஸ்லாத்தில் இடம் இல்லை. இந்திய வரலாற்றில் அக்பர் தொடங்கி, பல முஸ்லிம் மன்னர்கள் உடன்கட்டை ஏறுதலைத் தடுக்க முயற்சிசெய்துள்ளனர். ஆனால் இப்பழக்கம் 1990 களில் கூட நடைமுறையில் உள்ளது என்பதைப் படிக்கும்போது, பெண்களைப் பற்றிய அடிப்படை எண்ணத்தில் இன்னும் மாறுதல் தோன்றவில்லை என்பதை அறிகிறோம்.

### இஸ்லாமும் பெண்களும்

உடலியல் அடிப்படையில் பெண்கள் பல துன்பங்களை நுகர்ந்து வருகின்றனர். மாதவிலக்கு, பேறுகாலம் ஆகியன இரண்டும் பெண்களுக்கு மட்டுமே உரியவை. இவை இரண்டும் தாம் பெண்ணை மெல்லியவர்களாக ஆக்கி வைத்துள்ளன.

மாதவிடாய் ஒரு நோவினை ஆகும். அப்போது பெண்களை விட்டு விலகி இருங்கள் (2: 222) என்று இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. பேறுகாலத்தைப் பற்றிக் கூறும்போது, அவனுடைய தாய் பலஹீனத்தின் மேல் பலஹீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள் என்று திருமறை தாயின் துன்பத்தைக் குறிப்பிட்டுள்ளது. இதிலிருந்து பெண்ணை மனித உயிராகவும் தாயாகவும் மதிக்க வேண்டும் என்ற அடிப்படை நாகரீகத்தைப் போதிப்பது இஸ்லாம் என்பதை அறிகிறோம்.

### கல்வி சேவை

பெண்களுக்குக் கண்ணியமும், பாதுகாப்பும் இஸ்லாம் அளித்திருந்தாலும், அவற்றைப் புரிந்துகொள்ளவும் பாதுகாக்கவும் கல்வி வேண்டும் என்பதையும் அறிகிறோம். இறைவன் முதன்முதலில் இறக்கிவைத்த வாக்கியம் 'ஓதுவீராக நபியே! உம்மைப்படைத்த இறைவன் பெயரால் ஓதுவீராக' என்பதே. இதிலிருந்தே இறைவன் எல்லா மனிதர்களுக்கும் ஓதுதலை - கல்வியை - கற்பித்துள்ளான் என்று உணர்கிறோம். ஆதலால் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து ஆண் பெண் ஆகிய அனைவரும் கல்வியைத் தேட வேண்டும்.

### பெண்கல்வி

பெண், கல்வி பெற்றவளாக இருந்தால் (வேலைக்குப் போவது என்பதைக் கருத்தில் கொள்ளவில்லை) குழந்தைகளை அறிவும் ஆற்றலும் பொலிவும் உள்ளவர்களாக வளர்க்கலாம். வீட்டுச் செலவுகளைத் திட்டமிடலாம். வங்கிகளில் பாதுகாப்பாகப் பணத்தைச் சேமிக்கவும் செலவு செய்யவும் செய்யலாம். இப்படி அன்றாட வாழ்க்கைக்குக் கல்வி எவ்வளவு தேவைப் படுகின்றது.

கல்விதான் தன்னைப் புரிந்துகொள்ள உதவும் ஆசான். நன்றாக சமைப்பதற்குக் கூடக் கல்வி தேவைப்படுகின்றது. கணக்குப் பொறியியல் போன்ற கல்வியைப் பெறும் பெண்கள் தங்கள் குடும்பத்தையே உயர்த்துவதற்குப் பாடுபட முடியும்.

### என்ன செய்ய வேண்டும்

தமிழ் நாட்டில், நம் சமூகத்தில் பெண்கல்வி பற்றிய விழிப்புணர்வு வந்துள்ளது. ஆதலால் பயன் தரத்தக்க உலகக் கல்வியும், மார்க்கக்கல்வியும் ஒருங்கே பெறத்தக்க வகையில் பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஏற்படுத்த வேண்டும். நல்ல ஆசிரியர்களை உருவாக்கினால்தான் எதிர்காலத்தில் நல்ல சமூகத்தைப் பார்க்க முடியும். குடும்பத் தலைவியருக்குக் கூட அவர்கள் விரும்பும் சமையல்கலை, உடல் நலம் பேணல் போன்ற கல்விகளை பகுதி நேரத்தில் நல்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கான எல்லா அடிப்படைத் தேவைகளும் பலமும் நம் சமூகத்தில் உள்ளது. ஆனால் செயல்பாட்டு ஒருங்கிணைப்புத்தான் இல்லை. இத்தகைய ஒருங்கிணைப்பை ஏற்படுத்தினால் பெண் கல்வியில் புரட்சியும், பெண் வாழ்வில் வளர்ச்சியும், இஸ்லாமியப் பெண்களின் முன்னேற்றமும் ஏற்படுவது உறுதி. இது எதிர்காலத்தில் நாம் கற்பனைசெய்ய முடியாத நன்மைகளை இன்ஷா அல்லாஹ் கொண்டுவந்து சேர்க்கும்.

'ஒற்றுமை என்னும் கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள்'

(அனைத்திந்திய முஸ்லிம் பெண்கள் கல்வி மாநாட்டு சிறப்பு மலர் 96)

மடையர்களை ஏன் நீங்கள் திட்டு வதில்லை என்று ஒரு ஞானியிடம் சீடர்கள் கேட்டனர்.

"குருடனை பார்க்கவில்லை என்றும் ஊமையை பேசவில்லையே என்றும் திட்டுவது முறையாகுமா?" என சீடர்களிடமே கேட்டார் ஞானி.

விதி உண்மை எனில் ஆசைப்படுவதில் என்ன அர்த்தம். மரணம் உண்மையெனில் உலக சுகத்தில் மூழ்குவது சுத்த முட்டாள் தனம். ஏமாற்றப்படுவோம் என்று நன்கு தெரிந்திருக்க நம்பிக்கை வைப்பது மடத்தனம் தானே.

*ஹஸனுல் பஸா*

## அர்பகானை அவமதித்ததற்காக சில்லருக்கு 40ஆயிரம் டாலர் தண்டம்

கடந்த பொதுத் தேர்தலின் போது பிரதமர் நஜ்முதீன் அர்பகானை அவமதித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட பிரதிப் பிரதமரும் வெளிநாட்டமைச்சருமான தான்சு சில்லர் 40ஆயிரம் டாலர் நஷ்டஈடு வழங்க வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அர்பகான் ஹிரோயின் கடத்துவதாகவும் பொஸ்னிய முஸ்லிம்களுக்காக சேகரிக்கப்பட்ட பணத்தை கையாடுகிறார் எனவும் சில்லர் குறிப்பிட்டிருந்தார்.

தேர்தலின் பின் இருவரும் கூட்டாட்சி அமைத்தனர். எனினும் நீதிமன்றம் அர்பகானை அவமதித்ததற்காக இத்தண்டத்தை விதித்தது.

## குழந்தை

இழிவுபடுத்தப்படும் குழந்தை முரட்டுத் தனத்தைக் கற்றுக் கொள்கிறது.

விமர்சிக்கப்படும் குழந்தை திட்டுவ தற்குக் கற்றுக்கொள்கிறது.

நம்பிக்கை வைக்கப்படாத குழந்தை ஏமாற்றக் கற்றுக்கொள்கிறது.

தொல்லைகளையே எதிர்கொள்ளும் குழந்தை எதிர்ப்புணர்வைக் கற்றுக் கொள்கிறது.

பாசத்தோடு வளரும் குழந்தை அன்பு செலுத்தக் கற்றுக் கொள்கிறது.

உற்சாகமூட்டப்படும் குழந்தை தன்னம் பிக்கையை பெற்றுக் கொள்கிறது.

உண்மையோடு வாழும் குழந்தை நீதி நியாயத்தைக் கற்கிறது.

புகழப்படும் குழந்தை மெச்சக் கற்றுக்கொள்கிறது.


பகிர்ந்து வாழும் குழந்தை தாராளத் தன்மையை பெறுகிறது.

கல்விச் சூழலில் வாழும் குழந்தை அறிவு ஞானத்தைக் கற்கிறது.

பொறுமையைக் காணும் குழந்தை சகிப்புத்தன்மையை கற்றுக் கொள் கிறது.

மகிழ்ச்சியாக வாழும் குழந்தை நேர்த்தி யையும் அழகையும் கற்கின்றது.

ஜொலிக்கும்
இரத்தினங்களின்
சொர்க்கம்



HAMEEM
ENTERPRISE

*Wholesaler & Supplier Of*
*Wide Range of Gemstones*

33, JALAN PERMAI 2/4,
TAMAN SUBANG PERMAI,
SUBANG JAYA,
47500 PETALING JAYA,
SELANGOR, MALAYSIA.

Tel. : 03-7374921
H/P : 010-2282641
012-2115996
Fax : 603-7374831




## கோலாலம்பூர்
# மஸ்ஜித்

மலேசியாவின் எழில் மிகு தலைநகராக சிறப்புற்று விளங்கும் கோலாலம்பூ ர் மாநகரம். எங்கு நோக்கினும் கண்ணுக்கு எட்டாத அளவிற்கு வானளாவிய கட்டிடங்கள் நிறைந்தும் பசுமை நிறைந்த பூ ஞ்சோலையும் அதற்கு வனப்பாய் அமைந்த நதிகளும் சீராய் அமைந்த சாலைகளும் நகரை அலங்கரித்து நிற்கின்றன. இந்த அழகுக்கு மேலும் எழிலூட்டுவதாக பார்ப்போரைப் பரவசப்படுத்தி மிகப் பணிவோடு எழுந்து நிற்கின்றது தென் இந்திய மஸ்ஜித்.

சுமார் நூறாண்டுகளுக்கு முன்னர் இது ஓட்டுக் கூரை வேயப்பட்ட சிறிய சிமெண்ட் கட்டடத்தில் இருந்து வந்தது. இப் பள்ளியின் அருகே இன்றுள்ள மஸ்ஜித் ஜாமியி மலாய்ப் பள்ளி அப்போது இருக்கவில்லை. இதுவே பிரதேசத்தின் தனிப்பெருப் மஸ்ஜிதாகத் திகழ்ந்தது.

இதன் பண்டைய சிறப்பு என்னவெனில் தொழுகைக்கு வருவபர்கள் ஒழு செய்தது பக்கத்தில் சலசலத்து ஓடும் ஆற்றில்.

நாளடைவில் பெருகி வந்த தொழுகையாளிகளின் வசதிகளைச் கருத்தில் கொண்டு 1939ம் ஆண்டு அப்பள்ளியோடு சேர்த்து நிறுவப்பட்ட பலகைக் கட்டடம் பள்ளியை விஸ்தரித்துச் காட்டியது.

மீண்டும் இடப் பற்றாக்குறை. 1952இல் மீண்டும் விஸ்தரிப்பு.

கோலாலம்பூ ர் நகர் வாழ் அனைத்து முஸ்லிம்களும் ஜும்ஆத் தொழும் இடமாக இப்பள்ளிவாசல் திகழ்ந்தது. இன்று ஜாலன் துன் பேராகில் உள்ள மஸ்ஜித் ஜாமியி என அழைக்கப்படும் பள்ளிவாசல் கட்டப்படும் வரை இந்நிலை தொடர்ந்தது.

தமிழில் குத்பாக்களும் உபன்னியாசங்களும் நிகழ்த்தப்படும் இம் மஸ்ஜித் இன்று கோலாலம்பூ ர் நகர் வாழ் முஸ்லிம்களின். குறிப்பாக

# இந்துக் கோயிலாகும்

ராஜஸ்தான் மாநிலத்தில் சஊதி சூபியின் சிந்தனைக்கு வலுவூ ட்டிய லால்கான் சாஹிப் சூபியின் நினைவிடம் இந்து மத சின்னமாக மாற்றப்பட்டு வருகின்றது.

ஷோர்பூ ர்- இது ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஒரு கிராமம். இங்கு தான் 18ம் நூற்றாண்டில் மகான் லால்கான் சூபி வாழ்ந்து அப்பிரதேச மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தார். எளிய நடைமுறை. சீரிய வாழ்க்கை என்பன இவரது அணிகலன்கள். அவற்றால் கவரப்பட்ட அப்பகுதி மக்கள் தூய இஸ்லாத்தைத் தழுவினார்கள். குறிப்பபாக இஜ்ஜார். மினா. ராஜபுத்திரர் போன்ற பல்வேறு சமூக மக்கள் இதில் அடங்குவர். அவர்கள் பின்னர் *மியோ முஸ்லிம்கள* என அழைக்கப்பட்டனர்.

லால்கான் சூபியின் மரணத்தைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் அவரது அடக்கஸ்தலத்தில் ஒரு தர்காவை அமைத்தனர். முஸ்லிம்கள் முஸ்லிப் அல்லாதோர் அனைவரும் தரிசிக்கும் இடமாக இது அமைந்தது.

1947இல் பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட இனக் கலவரங்களில் ஷோர்பூ ர் கிராமத்தைச் சுற்றியிருந்த முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஏனையோர் விரட்டியடிக்கப்பட்டனர்.

# இந்தியா



தமிழ் பேசும் முஸ்லிம்களின் ஆத்மீக சமயத் தேவைகளுக்கு களம் அமைத்துக் கொண்டிருக்கிறது.

தற்போதைய மூன்று மாடிக் கட்டடம் ஜும்ஆ நாளில் தொழுகையாளிகளின் கூட்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது திண்டாடுகிறது.

பன்னாட்டு மக்களும் இங்கு பெரும் எண்ணிக்கையில் தொழும் காட்சி உள்ளத்தை நெகிழ வைப்பதாகும்.

*தகவல்:*
மௌலவி முஹம்மது ஸாலிஹ் மன்பஈ
இமாம் - மஸ்ஜித் இந்தியா

# முஸ்லிம் தர்ஹா

மிகக் குறைந்த அளவினரே அப்பகுதியில் எஞ்சியிருந்து வாழ்ந்தனர். பின்னர் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளில் பஞ்சாபிகள் வந்து வாழத் தொடங்கினர்.

அப்போது தர்ஹாவுக்கு எந்தவித பிரச்சினையும் ஏற்படட்டதில்லை. கடந்த சில காலங்களாக இந்து இனவாதிகள் அந்த தர்ஹாவை ஒரு இந்துக் கோவிலாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள். தற்போது அப்பகுதியில் 'சிறீ லால் தாஸ் மந்திர்' என்ற வாசகமடங்கிய பல பானர்கள் கட்டப்பட்டுள்ளன. காவிக் கொடிகளும் பிஜேபி கொடிகளும் பறக்கின்றன. இந்து மத சின்னங்கள் அப்பகுதிகளில் இரவோடிரவாக வைக்கப்படுகின்றன.

லால்கான் தர்ஹா' என்ற பெயர் படிப்படியாக 'சிறி லால் தாஸ் மந்திர்' என்று மாறி வருகின்றது. லால்கான் தர்ஹாவின் மசூதியில் தொழுவதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதியில்லை.

முஸ்லிம்கள் நீதிமன்றத்துக்கு சென்றுள்ளனர். அவர்களுக்காக குஜ்ஜார் என்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒரேயொரு வக்கீல் வாதாடுகின்றார். நீதி மன்றத் தீர்ப்பு எப்படியிருந்தாலும் தர்ஹா கோயிலாவதை தடுக்க முடியுமோ தெரியாது.

*(நமது நிருபர்)*




# வட்டக் கண்ணாடி



நான் தங்கி வருவது. பழைய ஒரு நாலு கட்டு வீட்டின் இடிக்கப்படாத வட பகுதியில். நாலு கட்டு வீட்டை எங்களுக்குள் பங்கு போட்ட பின் தம்பிக்குக் கிடைத்த தென்பகுதியை இடித்துவிட்டு அதே இடத்தில் காலத்திற்கேற்ற படி புதியதொரு காங்கிறீட் வீட்டை 'தாருல் ஸமானை' எழுப்பினான் தம்பி.

இரண்டு அறைகள். சிறிய கண்ணாடித் திண்ணை[1]. நடுத்தளம். அடுக்களை இவை என் பங்கிற்குக் கிடைத்தன. உப்பா -பாட்டனார்- உறங்கிக் கொண்டிருந்தது. என் பங்கிற்குக் கிடைத்த கண்ணாடித் திண்ணையில் கிடக்கும் உடம்பறை[2]யில். உப்பாவின் வியர்வை உலர்ந்து ஒட்டிய உடம்பறையில். உப்பாவிற்குப் பிறகு வாப்பா படுத்துறங்கிக் கொண்டிருந்தார். வாப்பாவிற்குப் பிறகு நான் படுத்துறங்கி வந்தேன். இப்போது அதில் படுத்துறங்காததால் எனக்கு இரவு உறக்கம் வருவதே இல்லை. உடம்பறை கிடக்கும் கண்ணாடித் திண்ணைக்குள் இப்போது நான் நுழைவதுமில்லை. நுழைந்தால். கிரிக்கெட் மட்டையை என் நெஞ்சிற்கு நேராக ஓங்கிக் கொண்டு ஒருவன் பாய்கின்றான். புராதனத்தின் குறியீடான உடம்பறை. கண்ணாடித் திண்ணையில் கிடந்து கொண்டிருப்பது வீட்டிற்குள் எரிச்சலை ஊட்டிக் கொண்டிருக்கிறது.

வார்னீஷ் தேய்க்காமல் வெளிறிப் போன பலகைச் சுவரில் உப்பா அன்று அறைந்த இரும்பு ஆணி துரு பிடித்திருந்தது. வெள்ளைத் தாடியுள்ள உப்பா. அன்று அதில் தன் கையால் தொங்கவிட்டிருந்த முகம் பார்க்கும் வட்டக் கண்ணாடி தொங்கிக் கொண்டிருந்தது. கட்டிய தலைப் பாகையின் மேல் நோக்கி நிற்கும் குஞ்சரத்தை உப்பா சரி செய்வது அந்த கண்ணாடியை பார்த்து. அது பெல்ஜியம் கண்ணாடி என்று வாப்பா அடிக்கடி புகழிப்புப் பேசுவதுண்டு. உப்பா பர்மாவை விட்டு வரும் போது கொண்டு வந்த கண்ணாடி.

முற்றத்தில் நிற்கும் மாமரத்தின் மூட்டில் உட்கார்ந்து. வெள்ளிக் கிழமைகளில் ஒசா- நாவிதன் - வெட்டி ஒதுக்கிக் கொடுக்கும் தாடியின் வடிவை அப்பா இரசித்ததும் இதே

தோப்பில் முஹம்மது மீரான்



கண்ணாடியைப் பார்த்து.

காதில் பாம்படம் தொங்கும் வாப்பும்மா - பாட்டி - ஒரு வெற்றிலைக் கோளாம்பி. எப்பவும் வாப்பும்மாவின் வாய் நிரம்ப வெற்றிலை கிடந்து அரைபடும். அவ்வப்போது எழும்பிப் போய் வெற்றிலைச் சிவப்பு உதட்டின் அழகைப் பார்ப்பதும் அதே கண்ணாடியில் தான்.

உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த என்னுடைய தலை மொட்டையாக இருந்தது. சக மாணவர்கள் என்னைக் கேலி செய்வார்கள் 'மொட்ட துலுக்கா' என்று. அப்படிக் கேலி செய்வதோடு நின்று விட்டால் பரவாயில்லை. கைதட்டிச் சிரிக்கவும் செய்வார்கள். இதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஒரு தடவை மலையாளம் முன்ஷி - மலையாளம் ஆசிரியர் - வாழக்குலை' என்ற கவிதையில் பத்து வரிகள் பாராமல் படித்து வரச் சொன்னார். நான் படிக்கவில்லை. ஊரிலுள்ள முத்தாரம்மன் கோவிலில் அன்று கொடை. பிருஷ்டம் பருத்த ஒருத்தியும் ஒரு நோஞ்சானும் தலையில் குடம் வைத்து பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் செண்டை மேளத்துடன் தெருத் தெருவாக ஆடி தூள் கிளப்பிய இரவு அது. ஆண்டிற்கு ஒருமுறை ஊருக்குள் நடக்கும் கொடை. மேளதாளம் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை.

மறுநாள் பள்ளிக் கூடம் சென்றேன். மலையாளம் முன்ஷி, கவிதை வரிகளைப் பாராமல் படிக்கச் சொன்னார்.

படிக்கல்ல சார்.'

வாடா மொட்டையா..' முன்ஷி கோபத்தோடு அவர் பக்கம் அழைத்தார். சென்றேன்.

அன்று காயில் தான் கிழவன் சேமது ஓசாவின் மழுங்கிய கத்தி என் தலையை மழித்து விட்டிருந்தது. எண்ணை தேய்த்துத் தருவது போல் முன்ஷி முதலில் என் மொட்டைத் தலையைத் தடவினார். பிறகு சாக்குத் துண்டால் தலையில் எழுதிவிட்டார்: 'நாளை கவிதை படித்துக்கொண்டு வர வேண்டும்'.

வகுப்பிலுள்ள பெண் பிசுறுகள் கிலுகிலுவென்று கிலுக்காம் பெட்டியைக் கிலுக்கினர். இதைத் தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த நிமிடமே முடிவு செய்தேன் - கிராப்பு வைக்க வேண்டும்.

முடி ஓரளவு வளர்ந்தது. மம்மேலியைத் தேடினேன். புளிய மரத்தின் நிழலில் வைத்து மம்மேலியின் கையில் அரை ரூபாய்க்கு ஒரு துட்டைத் திணித்தேன். அன்று மம்மேலி வெட்டித் தந்த கிராப்புத் தலையை முதன்முதலாகப் பார்த்ததும் அதே வட்டக் கண்ணாடியில் தான்.

வாஸ்லின் தேய்த்து வட்டக் கண்ணாடியின் முன் நின்று முடியை வகுந்து சீவி ஒதுக்கிய காலம் மலையேறிவிட்டது. அப்பொழுது முடி சீவுவதற்கு எனக்கு கண்ணாடி தேவைப்படுவதில்லை. என்றாலும் கண்ணாடித் திண்ணையில் பண்டு உப்பா தொங்கவிட்டிருந்த வட்டக் கண்ணாடி அதே ஆணியில் தொங்கிக் கொண்டிருப்பது நினைவுகளைப் பெருமையுடன் அசைபோட ஒரு நிர்ப்பந்தத் தேவையாகப் பட்டது.

சமீபத்தில் 'மகாநதி ஸ்டைலில்' கிராப்பு வைத்துக் கொண்டு வந்த மகனுக்கு அவனுடைய முழு உருவத்தை வட்டக் கண்ணாடி காட்டாத கோபம். ஒவ்வொரு பொருளையும் தூக்கி வீசியும் கிரிக்கெட் மட்டையைத் ஓங்கி காற்றில் அடித்தும் அவன் கோபத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான்.

'இந்த எளவு கண்ணாடியை ஒடச்சாத்தான் வாப்பா ஒரு நிலைக் கண்ணாடி வாங்கும்'' அவன் உம்மாவிடம் போய் கத்தினான் என் காதில் விழும்படி. ஆனால் கோபம் உம்மாவோடல்ல: என்னோடு தான் என்று எனக்குத் தெரியாமலில்லை.

நான் என் வாப்பாவிடம் கோபமாகப் பேசியதில்லை. வாப்பா என்னைத் தூக்கிப் போட்டு உதைக்கும் போதெல்லாம் நான் கோபமாக அவரைப் பார்த்ததில்லை. பாட புத்தகங்கள் வாங்கிக் கேட்டு அழுதாலும் வாங்கித் தராத வாப்பாவைக் கோபத்தோடு நினைத்துப் பார்த்தது கூட இல்லை. பேண்ட் அணிந்து கொண்டு சட்டை 'இன் (அயன்) செய்து பெல்ட் மாட்டும் போது பெல்ட் பக்கிள் நேர்கோட்டில் வந்திருக்கிறதா என்று பார்க்கவும் அவனுடைய முழு உருவத்தைப் பார்க்கவும் அவனுக்கு ஒரு நிலைக் கண்ணாடி தேவை. அதற்காக என்னை படுத்தாத பாடில்லை. அவனுடைய காலத்திலிருந்து பின்தங்கிய காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் எனக்கு நிலைக் கண்ணாடி அவசியமெனத் தெரியவில்லை.

உப்பா சட்டை அணிவதில்லை. வாப்பாவுக்கு கையுள்ள ஒரு வாயில் பாடி உண்டு. எனக்கானால் ஜிப்பாச் சட்டை. எங்களுக்கு எதற்கு நிலைக் கண்ணாடி....? உப்பாவைப் பார்த்திருக்கிறேன். வாப்பாவைப் பார்த்திருக்கிறேன். என்னை அந்தக் கண்ணாடியில் பார்த்திருக்கிறேன். மகனைப் பார்க்கிறேன். ஆயுளுக்கு நீளமிருக்குமேயானால் மகனுடைய குழந்தைகளையும் பார்ப்பேன். முன்னும் பின்னும் இரண்டு தலைமுறைகளின் முகங்களைக் காட்டும் ஒரு கண்ணாடி எனக்குள் இருப்பதை மகன் அறியவில்லை. என்னை மட்டுமே அவன் பார்க்கின்றான். மகனுக்கு என் முகச் சாயல். என் வாப்பாவின் இரத்தத்திற்குள் நுழைந்தேறி உப்பா என் முகத்தில் குடிபுகுந்திருப்பதை மகன் அறிய வாய்ப்பில்லை.

'மோனே' கிரிக்கெட் மட்டையைத் தூக்கிக் கொண்டு வெளியே கிளம்ப ஆயத்தமான மகனைக் கூப்பிட்டேன்.

என்ன..?' குரலில் அவ்வளவு கடுமை இருக்குமென்று கருதவில்லை.

என் வாப்பாவின் முன் நான் நிற்பது போலல்ல. அவன் என் முன் நின்றுகொண்டிருந்தது. வாப்பாவின் முன் பவ்யமாய் நின்று கொண்டிருந்த என் இளமைப் பருவத்தைப் பற்றிச் சற்றுச் சுருள் நிமிர்த்த நான் எடுத்துக் கொண்ட நிமிடங்கள் அவனுக்கு இழப்பு ஏற்பட்டுப் போன விலைமதிப்பு வாய்ந்த நிமிடங்களாக இருந்தன அப்போது.

எனக்கு கிரிக்கெட் மேச்சு இருக்கு. போவனும் சொல்லுங்கோ'

வாப்பாவோடு இப்படிக் கடிந்து பேசும்படியான சூழலை உருவாக்காத, பின்னடைந்து போன கால கட்டத்தை ஓர் இழப்பு உணர்வோடு நினைத்துப் பார்க்கிறேன். இன்று மகன் என்னைக் கவ்விக் குதறும்படி பேசுகிறான். குற்றம் அவனுடையதா? என்ற கேள்விக்கு பதில் தேடும் முன்னரே அவன் வெடித்துச் சிதறினான்.

கூப்பிட்டது எதுக்குணு சொல்லீளா இல்லியா...?'

குரலில் ஓர் எச்சரிக்கையின் தொனி

துருக்கியில்

## கஸினோக்களுக்குக் கதவடைப்பு

அங்காரா-

'கஸினோக்கள் குடும்ப வாழ்வைச் சீர்குலைக்கின்றன. தாய்மாரினதும், சிறுவர்களினதும் வாழ்வை கெடுக்கின்றன. அவற்றை துருக்கி மூடிவிடப்போகின்றது' என்று துருக்கிய இஸ்லாமியத் தலைமையிலான கூட்டு அரசாங்கத்தின் துணைப்பிரதமரும் வெளிநாட்டு அமைச்சருமான திருமதி. தான்சு ஸில்லர் தெரிவித்தார்.

கூட்டரசாங்கத்தின் பிரதமர் அர்பகானின் இஸ்லாமிய நன்னோக்குக் கட்சி கஸினோக்களை வன்மையாக எதிர்ப்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலைப்பாட்டிற்கு ஆதரவாக மேற்கத்தைய சார்பான துணைப் பிரதமர் நடவடிக்கை எடுப்பதனை துருக்கிய மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

12 வால்யூ ம்களில்

# ரஸூலுல்லாஹ் (ஸல்) கலைக் களஞ்சியம்

உலகிலேயே மிகப்பெரிய கலைக் களஞ்சியமாக ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பற்றிய கலைக்களஞ்சியம் ஒன்று வெளியிடப்படவுள்ளது. மக்காவில் அமைந்திருக்கும் தார்-அல்-வாஸெலா என்ற வெளியீட்டுப் பணியகம் கலைக் களஞ்சிய பணிகளை கடந்த மாதம் தொடங்கியுள்ளது. 'அடுத்த சில மாதங்களுக்குள் இந்தக் கலைக் களஞ்சியத்தின் முக்கிய பகுதிகள் ஆங்கிலத்தில் இன்டர் நெட்டில் வெளியாகும்' என இது பற்றித் தகவல் தெரிந்த தார்- அல்- வாஸெலா பணியக வெளியீட்டு இயக்குநர் அப்துல் ரஹ்மான் அல் மாலோஹ் தெரிவித்தார்.

'7 வருடங்களுக்குள் கலைக் களஞ்சியப் பணி நிறைவுறும் என்றும் இந்தப் பணியில் ஹதீஸ், அரபு மொழி, இஸ்லாமியக் கல்வி, சட்டவியல் துறைகளின் விற்பன்னர்கள் 40 பேர் பணியாற்றுகின்றனர்.' என்றும் அவர் தெரிவித்தார். பணியின் மேற்பார்வையாளராக மக்கா பள்ளியின் இமாம் ஷெய்க் ஸாலே இப்னு அப்துல்லாஹ் இப்னு ஹுமைத் கடமை புரிவார்.

6.000 பக்கங்களையும் 360 அத்தியாயங்களையும் கொண்ட கலைக்களஞ்சியத் தயாரிப்பு 7.5 மில்லியன் சவூ தி ரியால் செலவில் நடக்கின்றது. மக்காவிலுள்ள புனித குர்ஆன் அச்சக காம்பிளக்ஸில் அச்சடிக்கப்படவுள்ள இது மிக விரைவிலேயே சந்தைக்கு வந்து விடுமாம்.

400 தொடக்கம் 500 சவுதி ரியால்கள் விலைக்குள் இதனை விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் உர்து, பிரஞ்சு, துர்கிஷ், பாரசீகம், ஆங்கிலம், ஸ்வாஹிலி, தகாலொக் மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழக்கமிருந்தது.

'டேய், ஒனக்கெ ஒப்பாயெ பாத்திருக்கியாலெ?'

'தொடங்கியாச்சா புராணம்.. உப்பா, வாப்பா, உப்பா கொண்டுவந்த கண்ணாடி..... எப்பவும் இதே பேச்சுத் தான். இந்தக் கண்ணாடியை ஒடசக எறிஞ்சாத்தான் ஒங்கே பழம் புராணப் பேச்சு நிக்கும். தாருல் ஸமானிலெ போய்ப் பாருங்கொ. எத்திரெ எத்திரெ நிலக் கண்ணாடி கெடக்குது. அது ஒங்கே தம்பி ஊடு தானே...?'

'டேய். அது புதிய வீடு. இது பழைய வீடு.'

'அதனாலத் தான் இந்த பாழடைஞ்ச ஊட்ட ஒடச்சுட்டு ஒரு புதிய டெரஸ் ஊடு கட்ட சொல்லிடடெ இருக்கேன். இந்த தாந்த தட்டுலெ ஒரு சீலிங் ஃபேன் போட முடியுமா? சொன்னா, மாமரத்திலெ இருந்து கபகபா காற்று வருதில்லியா என்னு சொல்லுவியோ'.

'இந்த பழைய ஊட்டுக்கெ சொகம் உனக்குத் தெரியுமாலெ....'

'ஆமா பெரிய ஏஸீ ஊடு..'

கிரிக்கெட் மட்டையை வீசி அடித்துக் கொண்டு இறங்கிப் போனான்.

நான் வெளிறிய பலகை சுவரில் தொங்குப் வட்டக் கண்ணாடியை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். காலங்களின் தலைமுறைகளின் முகங்களை எதிரொலிக்கச் செய்துகொண்டிருக்கும் வட்டக் கண்ணாடியில் குள்ளமான, கறுப்பான உப்பாவின் தலைப்பாகையை அதில் கண்டேன். அவருடைய வட்ட முகத்திலுள்ள ஒளி மங்கிய கண்கள் என்னை நோக்கின - 'பேரப்புள்ளே' என்று அழைப்பது போல். வட்டத் தாடியும் நெற்றியில் தொழுகைத் தழும்புமுள்ள வாப்பாவும் உப்பாவின் தோளுக்குப் பின்னால் நின்று கூப்பிட்டார் 'மோனே'. அவர்கள் இருவரும் கண்ணாடிக்குள் ஏதோ வன இருளில் பதுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

சூடு வெயிலை உள்ளிறங்க விடாமல் வீட்டின் பழைய கூரை ஓட்டிற்கு மேல் கொப்புகள் நீட்டி முற்றத்தில் நின்று கொண்டிருக்கும் மாமரம். இதன் குளிர் சுகத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு பின்னிட்டுப் போன பாதைக்கு நேராக முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தேன். அம்மணத்தோடு அதன் மூட்டில் கட்டிக் கல்லு விளையாடியது. மணல் கூட்டி அதில் காலை புதைத்து கோழிக் கூடு கட்டியது. ஏராளம் மாம்பழம் காய்த்து குலைகுலையாகத் தொங்குவதற்காக அவ்வப்போது ஓடிப் போய் அதன் மூட்டில் மூத்திரம் பெய்து தண்ணீர்விட்டது. தேங்காய்ச் சிரட்டையில் மணல் அள்ளி தலைவழியாக விட்டுக் குளித்தது. இப்படிப்பட்ட குழந்தை அறிவை நினைத்த போது ஒரு சிரிப்பொலி என் நெஞ்சுக்குள் ஒலிப்பது போல் இருந்தது. மகன் தலையெடுத்த பின் வீட்டிற்குள் நாளடைவில் பின்னிப் பிணைந்து கொண்டிருக்கும் முரண்பாடுகளில் சிரிப்பின் பாணதீர்த்தம் வரண்டுவிட்டது. எப்போதாவது சில நினைவுகள் நரம்புகளை மீட்டும் போது எழும் சிரிப்பு ஒலி எனக்குள்ளேயே எழுந்து அப்படியே அடங்கிவிடும்.

மாமரத்தையும் வெட்டி எறிய வேண்டுமென்ற குரல் வீட்டிற்குள்ளேயே மோதி திரண்டு வருகிறது. மாமரம் முற்றத்தில் பொழிக்கும் சருகு இலைகள், அசிங்கமாகமத் தெரிந்தது அவர்களுக்கு. அங்கு நிற்கும் காய்ப்புக்கு வரத் துவங்கிய நாலய்ந்து தைப் பருவத் தென்னைகளையும் பிடுங்கி வீசிவிட்டு முற்றத்தை சிமெண்டு போட்டு மினுசப்படுத்த வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யும் வறட்சி உள்ளங்கள் எனக்குச் சுற்றுமுற்றும்.

வீட்டின் கொல்லைப் புறத்தில் உள்ள

## பலஸ்தீனில் பிறந்த பிரஞ்சு ஜனாதிபதி



அரபுகளைக் காண வந்த போது குறுக்கே வந்த இஸ்ரேலிய சிப்பாயைத் தள்ளிவிட்ட சிராக்



அரபுக் குழந்தை சிராக்

ஜாக் சிராக் பிரான்ஸ் நாட்டு அதிபர். அண்மையில் மத்திய கிழக்குக்கு விஜயம் செய்து, இஸ்ரேலில் பலஸ்தீனத்துக்காகப் பேசி செய்தியானார்.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு பூமியில் திரிந்த அவரை இஸ்ரேலிய சிப்பாய்கள் தடுத்தபோது கோபத்தோடு அவர்களைத் தள்ளி கலகம் செய்தார்.

ஜாக் சிராக்கின் துணிச்சலுக்கு பலஸ்தீன மக்கள் எப்படி கைம்மாறு செய்ய முடியும்?

ஒரு பலஸ்தீன முஸ்லிம் தாய் தான் பெற்ற குழந்தைக்கு ஜாக் சிராக் என பெயரிட்டு மகிழ்ந்தாள்.

இதற்கு முன்னர் ராபின் – அரபாத் ஒப்பந்தம் நடந்தபோது, "ராபின்" குழந்தையும் பலஸ்தீனில் பிறந்தது.

பலஸ்தீன் எங்கு செல்கிறதோ?

ஆழ்கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து மாமரத்தை நட்டு வளர்த்த மூலாதார உழைப்பு யாருடையது என்று தெரியவில்லை. பிடுங்கி வீச வேண்டும் என்று மகன் அடம்பிடிக்கும் தைப்பருவத் தென்னைகளை நட்டதும் நீர் ஊற்றிப் பேணியதும் நான். வேனிற்காலங்களில் கிணற்றில் நீர் மட்டம் தாழும் போது அரை மைல் தொலைவிலுள்ள சுடுகாட்டு ஆற்றிலிருந்து காக்கோட்டையில் தண்ணீர் எடுத்து தோளில் சுமந்து வந்து வாடவிடாமல் வளர்த்தேன். அடுத்த தலைமுறை பயன்பெற உழைத்துக் கொட்டிய வியர்வை துச்சப்படுத்தப்படுகின்றது. முகம் அலம்பக் கூட ஒரு குவளை தண்ணீர் கிணற்றிலிருந்து கோராத மகன் கூறுகிறான் -

புடுங்கி எறியுங்கோ

சில செயல்பாடுகளின் பின்னணியில் இருக்கும் இரகசியக் கரங்களைத் தேடும் சிந்தனையில் என் மூளை கலங்கிச் சூடானது. எப்படியோ விரிசல் விழுந்துவிட்டது. அகலம் கூடி வரும் விரிசல். அதன் இரு விளிம்புகளிலும் சுழன்று கொண்டிருக்கும் காலம். என்னை எழுந்து ஓடவிடாமல் தள்ளி விட்டிருக்கின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கின்ற உணர்வு எனக்கு.

உப்பாவின் வட்டக் கண்ணாடியை உடைக்க வேண்டும். தேக்கு மரங்களிலும் ஈட்டி மரங்களிலும் உளிகொண்டு கவிதை எழுதிய நாலுகட்டின் எஞ்சிய பகுதியை இடிக்க வேண்டும். தலைமுறைகளின் பார்வை சாட்சியான மாமரத்தை முறிக்க வேண்டும். என் உணர்ச்சியை மரக்க வைத்து என்னை ஒரு மௌன பிராணியாக்கி விட நடக்கும் திட்டங்களை எண்ணியபடி மர உச்சியை நோக்கி இருந்தேன்.

மகன் வந்தது அவனுடைய கையிலிருந்த கிரிக்கெட் மட்டையால் மாமரத்தில் ஓங்கி அறைந்து ஏற்படுத்திய சத்தம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

நுழைந்ததும் கேட்டான் -

``எனக்கு ஒரு பாட்டா ஷூஸ் வேணும். 899 ரூபா 95 சதம்.''

என் ஈரல் குலை அற்று விழுந்தது.

``900 ருபாய்க்கு ஷூஸா.?''

``ஒங்களுக்கு என்ன தெரியும்? 1999 ரூபா 95க்கும் ஷூஸ் உண்டு. அதையா வாண்டி கேக்கிறேன்.''

என் மார்போடு ஒட்டி வெள்ளைக் குட்டி பூனையொன்று உறங்கிக் கொண்டிருந்தது. மார்பிலுள்ள கறுப்பு உரோமங்களுக்கு மேல் பகுதியிலுள்ள அந்தக் குட்டிப் பூனை உரோமங்களுக்கிடையில் விரல் முனைகள் ஓடின. மூச்சு நின்று விடுமோ என்று தோன்றியது. தொகையைக் கேட்டபோது.

ஏழெட்டு மாதங்களுக்கு முன் நெல்லையப்பர் நெடுஞ்சாலை ஓரத்துச் செருப்புக் கடைகளில் ஏறி இறங்கிய வெப்பப் பகலின் நினைவில் அமிழ்ந்தேன். சித்திரை வெப்பத்தின் திமிர் அடங்கிய அன்று மாலையில் நடைபாதைக் கடையொன்றில் பேரம் பேசியதால் தொண்டைத் தண்ணி வற்றிப் போனது. அந்தக் கடைக்காரனிடமிருந்து ரூபாய் 13.50க்கு வாங்கிய ரப்பர் செருப்பை கால் விரல் இடுக்கு இறுக்கிக் கொண்டது.

``கிரிக்கெட் விளையாட வந்த எனக்கெ பிரண்ட் போட்டிருக்கான்.''

என் செவிகளில் அது குரலாக ஒலிக்கவில்லை. நெஞ்சைத் துளைத்தேறும் முள் முனையாக இருந்தது.

``எப்போ வாண்டித் தருவியோ'' பணிவான கேள்வியாக இல்லை. ஓர் அதட்டலாக இருந்தது.

என் நாவின் ஆணி நரம்பு சுழன்று தொங்கிவிட்டது. ரூபாய் ஒன்று இரண்டல்ல. 900! குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு இரு தூண்களில் கட்டப்பட்ட கம்பி மீது அடி சறுக்காமல் நடக்கும் சர்க்கஸ்காரியை விட நாட்களை நுட்பமாக நகர்த்தும் நான் ஒரு சாகசக்காரன்.

``ஒரு நிலைக் கண்ணாடியும் வாங்கணும்''

தொங்கிக் கொண்டிருந்தது என் நா.

இனி இளைய மகன் என்னவெல்லாம் தேவைகளை அலகில் ஒதுக்கிக் கொண்டிருக்கிறானோ?

ஒடனெ வாங்கித் தாருங்கொ. எப்பவும் தாருல் ஸமானில் போய் கண்ணாடி பாக்க முடியுமா?

வீட்டிற்குள் வெடுக்கென்று பாய்ந்த மகன் உம்மாவிடம் நிலைக் கண்ணாடி வாங்கும் விஷயம் சொல்வதை என் காதுகள் ஈர்த்தன.

உப்பா பர்மாவிலிருந்து ஏராளம் பண்டங்கள் கொண்டுவந்து குவித்தார். அவற்றில் எனக்கு விருப்பப்பட்டது. அந்த வட்டக் கண்ணாடி. ஒரு சிறு கூட்டிற்குள்ளிருந்து உப்பா கண்ணாடியை வெளியே எடுத்து எனக்கு நேராக நீட்டினார்.

``பாரு மக்கா..''

கண்ணாடியைப் பார்த்தேன். அதனுள் ஒரு முகம் தெரிந்தது. அது என்னுடைய முகம் தான் என்று அறிந்ததும் மனசிற்குள் சிரிப்பு படர்ந்தது. என் முகத்திலுள்ள தழும்புகளையும் மச்சங்களையும் அன்று தான் முதன்முதலாகப் பார்த்தேன். பல்லை இழித்துக் காட்டினேன். கண்ணாடிக்குள் நுழைந்திருந்த நானும் பதிலுக்கு பல்லை இழித்துக் காட்டுவதைக் கண்டேன். பல கோட்டிகள் காட்டிப் பார்த்து இரசித்தேன்.

சிந்தனைகள் சிதறித் திரிந்தன. வாப்பாவின் காலத்தைப் பற்றி. என் காலத்தைப் பற்றி. மகன் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தைப் பற்றி.

# இஸ்லாமிய நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் ஓங்க வேண்டும்

இஸ்லாமிய நாடுகளிடையேயான வர்த்தகப் கடந்த இருபது ஆண்டுகளில் 4 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையே விருத்தி யடைந்துள்ளது. இது மிக மோசமான நிலைமை' என்கிறார் இஸ்லாமிக் டிவலப்மண்ட் பாங்க் (IDB) தலைவர் டாக்டர் அஹமத் முஹமத் அலீ.

டாக்காவிலிருந்து ஜித்தா வரை வட ஆபிரிக்க கரையோரமாகக் கப்பல் சேவையொன்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்படுகிறது. கரையோர ஆபிரிக்க நாடுகளிடையிலான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும் திட்டங்கள் தயார். இது தவிர ஓ.ஐ.சீ நாடுகளிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் நிபுணர் பரிமாற்றத்தையும் ஊக்குவிக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஐ.டி.பி யின் ஆசிர்வாதத்துடன்.

பொஸ்னியா. பலஸ்தீன். மத்திய ஆசிய புதிய முஸ்லிம் குடியரசுகள் என்பவற்றில் புதிய முதலீடுகள் செய்து வர்த்தகத்தையும் உற்பத்தியையும் அபிவிருத்தி செய்ய பல உலகளாவிய மாநாடுகள் நடாத்தப்பட்டன. நூற்றுக்கணக்கான தொழில் அதிபர்கள் இந்நாடுகளில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பொஸ்னியாவிற்காக ஐடிபி 250 லட்சம் டாலர் செலவிட்டது. இதில் 60 லட்சம் டாலர் உடனடி நிவாரண வேலைகளுக்கும் 40 லட்சம் டாலர் விவசாயத் தேவைகளுக்குப் ஒதுக்கப்பட்டது என்றார் ஐடிபி தலைவர்.

'பிள்ளைகளுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் குடுங்கொ. இந்த பாண்ட ஊடெ ஒடச்சு தள்ளுங்கோ'' சொன்னது என்னுடைய அவள். என் பிள்ளைகளின் உம்மா. என் மனைவி என்று கூறுவதை விட இது தான் பொருத்தமான வார்த்தை. அவளது துணையும் கிடைக்காது என்றான போது நான் தனிமைப்படுத்தப் பட்ட ஓர் உணர்வு என்னை மழைமேகம் போல் சூழ்ந்தது.

'என்ன வாங்கிக்குடுக்கல்லெ. கண்ணாடிக்குச் கண்ணாடி கெடக்குது. ஷூஸ் வாங்கி குடுத்தது கெடக்குது. வேற என்ன தான் இல்லெ.''

'இது ஒரு கண்ணாடியா? தூக்கி தூரெ எறிஞ்ச போடுவேன். கிரிக்கெட் வெளளயாடும் போது ஷூஸிலெ உள்ள கயிர் அற்றுப் போச்சு. அன்னா கெடக்குது.'' மகன் வீட்டிற்குள்ளிருந்து குதித்து வந்து என் முன்னால் நின்றான்.

இது ஒரு கண்ணாடியா? அவன் என்னைப் பார்த்துக் கேட்டுவிட்டான். அவனுடைய உம்மாவைக் கட்டப் போகும் போது என்னை மாப்பிள்ளை ஜோடித்து என் முகத்தைக் காட்டித் தந்த கண்ணாடி அது. இவனுடைய உம்மா கண்ணில் சுறுமா போட்டது இதே கண்ணாடியைப் பார்த்து. அன்று அவன் ஒரு நுண்ணுவாக மறைந்திருந்த சூட்சும இடத்தை மறந்துவிட்டிருந்தான்.

இப்போது என் தலை நரைத்து விட்டது. கண் தடங்களில் குழிகள் தெரிந்துவிட்டன. கன்னத்துக்கு பளபளப்பு ஊட்டிய கதுப்பு சுருங்கி வற்றிப் போய் கன்னத் தோலில் சுருக்கங்கள் விழுந்துவிட்டன. உப்பா காலத்திலுள்ள வட்டக் கண்ணாடி நரைக்கவில்லை. அதன் முகத்தில் சுருக்கங்கள் இல்லை. முகங்களை எதிரொலிக்கச் செய்யும் அதன் தன்மைக்கு எந்த ஊனமும் தட்டவில்லை. இருந்தும் அதை உடைத்துவிட்டு புதிய நிலைக்கண்ணாடி வாங்க வேண்டுமென்று அடம்பிடிப்பவன் கன்னத்தோலில் சுருக்கங்கள் விழுந்த என்னை என்ன செய்யப் போகிறான்?

சாய்வு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் போது என் காலிலுள்ள ரப்பர் செருப்பின் அறுந்து போன வாரை செருப்பின் அடிப் பகுதியோடு இணைக்க அறைந்த குண்டூசியின் குடை என் பாதத்தில் தட்டியது. எங்கேயோ வீசப்பட்டுக் கிடக்கும் ஷூஸ் கடந்த மாதம் மூன்றாம் தேதி அறுநூற்றி சில்வானம் ரூபாய்க்கு வாங்கியது.

'அவனுக்கு ஒரு புதிய ஷூஸ் வாங்கிச் குடுங்கோ'' அவளும் என் தடத்தை விட்டு விலகிச் செல்கின்ற எரிச்சலில் என் பார்வை அவளைத் தகனம் செய்தது.

'அற்றுப் போன நாடாவெ வாங்கி கட்டினா என்னவாம்? இவன் என்ன பெரிய மந்திரி மெவனா?''

'ஒங்கெ காலம் போலயா அவனுவளுக்கெ காலம்.''

தலையைக் குனிந்தேன். பகலிரவு உழைத்து தளர்ந்து வரும் உடலில் முன்போல் வியர்வை கொட்டுவதில்லை. காலத்திற்கு ஒவ்வாத ஓர் உயிர் பிராணி நான் என்ற உணர்வு எனக்கு. காலத்தின் பின்னால் ஓடி எட்ட இயலாத எலும்பு துருத்திய ஒரு கிழட்டு மாடுபோல் களைத்து உட்கார்ந்தேன். இந்த பின்னடைவு வீட்டிற்குள் சுவர்கள் வளர்ந்தன. அப்போது அங்கு கேட்ட குரலில் தலையை உயர்த்தினேன்.

இளைய மகன்!

'வாப்பா எனக்கு நிலைக் கண்ணாடி வெச்ச ஒரு ஸ்டீல் பீரோ வாங்கி தரணும். அண்ணன் வச்சப் பூ ட்டுதூல நான் வய்க்க மாட்டேன். அவன் முகம் பாக்குத கண்ணாடியிலெ நான்



முகம் பாக்கவே மாட்டேன். எங்களுக்குள்ளே ஒத்துப் போகாது.''

நிலைக் கண்ணாடியுள்ள ஸ்டீல் பீரோவா? நேற்று சலவை செய்து வந்த என்னுடைய ஜிப்பா சட்டையும் கைத்தறி வேட்டியும் வைத்திருக்கும் துருப்பிடித்த டிரங்குப் பெட்டியை அவள் காலால் கட்டிலுக்கடியில் தள்ளும் ஓசை கேட்டது. இளைய மகனைப் பார்த்தேன். உணர்ச்சியற்ற நிலையில்.

ஆளுக்கொரு நிலைக் கண்ணாடி வாங்கிச் குடுங்கொ. கஷ்டத்தோடு கஷ்டம் எனக்கு ஒரு டிரஸ்ஸிங் டேபிள் வாங்கித் தாருங்கொ. தாருல் ஸமானிலெ கொளுந்தன் பெண்டாட்டிக்கு ரண்டு டிரஸ்ஸிங் டேபிள் வாங்கிக் குடுத்திருக்கு. நானும் அவளெப் போல ஒருத்தி தானே.''

முகத்தை அவளுக்கு நேராக எந்திர இயக்கமாக திருப்பினேன். சுட்டெரிக்கும் படி பார்க்கவில்லை. தனிமைப்பட்ட ஒருவனுடைய உதவுவாரற்ற பார்வையாகவிருந்தது. கடந்த மாதம் மின்சாரக் கட்டணம் செலுத்த கடன்பெற்ற பணம் திருப்பிக் கொடுக்க முடியாத செலவு பாரம் தோள் பட்டையை அழுத்திக் கொண்டிருந்தது. பர்ணபாஸின் வீட்டுச் சுவரில் தொங்கவிட்டிருந்த சித்திரத்தில். கட்டிலிருந்து விடுபட்ட மனம் போய் நின்றது. முள்கிரீடம் அணிவித்த சிலுவையில் அறையப்பட்ட 'மனிதனின்' உடலில் அம்புகள் குத்தி ஏறி நிற்குமிடங்களிலிருந்து வடிந்துகொண்டிருந்த இரத்தம் என் காயங்களிலிருந்து வடிவதாகத் தோன்றியது.

ஆறு கண்களும் பின்வாங்கிய தருணத்தில் சிலுவையிலிருந்து கீழே இறக்கப்பட்ட மன ஆறுதல் எனக்கு. முற்றத்தில் இறங்கினேன். மாமரத்தின் உலையும் கிளைகளிலிருந்து உதிர்ந்து கொண்டிருந்த பழுத்த இலைகள் சிதறிக் கிடக்கும் முற்றத்து மணலை பெருவிரல் முனையால் கீச்சிக் கொண்டிருந்தேன். குருத்தோலைகள் குலுங்கும் தைப்பருவத் தென்னைகளின் முகமலர்ச்சி இப்போது என் இதயத்தில் எங்கேயோ கிள்ளி வலி ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. நினைவுகளை உசுப்பிக் கொண்டிருக்கும் மாமரம் உப்பாவின் காலத்திலிருந்தே முற்றத்தில் -தலைமுறை சாட்சியாக நின்றுகொண்டிருக்கிறது. இப்போது வெறுப்புப் பார்வைகள் அதை வலம் வந்து கொலைக் கூப்பாடு எழுப்புகின்றன.

அந்த முற்றத்தில் என்னால்' நின்று கொண்டிருக்க முடியவில்லை. குமிழ்விட்டுயரும் நினைவுகளை கொஞ்ச நேரம் மறந்து விட வெளியே சற்று நடந்து விட்டு மீண்டும் முற்றத்தில் வந்து நின்றேன். மாமரத்தின் உச்சியில் திடீரென துளிர்த்துத் தெரிந்தது தளிர் இலைகள் அல்ல. போக்கு வெயில் என்று புரிய சற்று நேரமெடுத்தது. நெஞ்சிற்கு நேராக பாயும் ஏவுகணைகளை தாங்கிக்கொள்ள வீட்டுக்குச் செல்லும் முன் கவசம் அணிவதற்காக சற்று நேரம் முற்றத்திலேயே நின்றுகொண்டிருந்தேன்.

கண்ணாடித் திண்ணையில் ஏறினேன். வெடிப்புகள் விழுந்த பழங்காலத்து சிமெண்டுத் தரையில் என் எலும்புகள் நொறுங்கிச் சிதறிக் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். உப்பாவின் முகமும் வாப்பாவின் முகமும் சிதைந்து உருமாறிக் கிடக்கின்றன. கண்ணிகள் அறுபட்டுப் போன அந்த சபிக்கப்பட்ட நிமிடம். என் நெட்டி நரம்பை ஒடித்துவிட்டது.


வெளிறிய பலகைச் சுவரைப் பிடித்துப் பார்த்தேன். அதில் துருப்பிடித்திருந்த ஆணியைக் காணவில்லை. அதே ஓட்டையில் அறையப்பட்ட ஒரு புதிய ஆணியில் தொங்கிக்கொண்டிருந்த ஒருவன். கிரிக்கெட் மட்டையை என் நெஞ்சுக்கு நேராக ஓங்கிக் கொண்டு நின்றான்.

புதிய பார்வை

1.வீட்டின்முன்பகுதியிலுள்ள திண்ணை.

2. கட்டிலின் அமைப்புடையது. அதன் அடிப்பகுதி மூடப்பட்டிருக்கும். அதனுள் பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கலாம்.

**மலைநாட்டின் தலைநகரில்**
**மனம் விரும்பும் உணவு வகைகளுக்கு**




**YOOSUFIYA HOTEL**
**யூஸுபியா ஹோட்டல்**

✔ **அறுசுவை உணவுவகைகள்**

புரியாணி, ப்ரைட்ரைஸ்
கொத்துரொட்டி வகைகள்-
இந்திய, இலங்கை
உணவுப் பண்டங்கள்-
சைனீஸ் உணவு வகைகள்-
இன்னும் இன்னும்...
அனைத்திற்கும் நாடுங்கள்.



**அன்பான உபசரிப்பு**
**தரம் மிக்க தயாரிப்பு**
**சுத்தமான வடிவமைப்பு**

விசேட வைபவங்களுக்கான
கேட்டரிங் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

**யூஸுபியா ஹோட்டல்**
**YOOSUFIYA HOTEL**
51, ALIYAGIYA MAWATHA,
*Kandy*


# சினிமா நடிகர் சிலோன் விஜயேந்திரன் இஸ்லாமில் இணைந்தார்.



சென்னை -

பிரபல தமிழ்ச் சினிமா நடிகரும், கவிஞரும் தமிழ்ப் பண்டிதருமான டாக்டர் சிலோன் விஜயேந்திரன் புனித இஸ்லாத்தின்பால் ஈர்க்கப்பட்டு அண்மையில் இஸ்லாம் மார்க்கத்தில் இணைந்துகொண்டார்.

இலங்கையில் பிறந்த விஜயேந்திரன் தனது கலையார்வம் காரணமாய் தமிழகம் சென்று படங்களில் நடிக்கத் தொடங்கினார். 20 வருடங்களாக சினிமாவில் நடித்துவரும் விஜயேந்திரனின் முதல் படம் 'பைலட் பிரேம்நாத்'. இதுவரை 75க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலான படங்களில் நடித்த இவர், 'பைலட் பிரேம்நாத்'தில் தமக்கு வாய்ப்பு வாங்கித்தந்த நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசனை நன்றியுடன் நினைவு கூர்கின்றார்.

1963ல் ஈழநாடு (யாழ்ப்பாணம்) பத்திரிகையில் தனது முதல் கவிதை பிரசுரமானதாகக் குறிப்பிடும் விஜயேந்திரன் அன்று முதல் இன்றுவரை கவிதை, இலக்கியம், நடிப்பு என தனது வாழ்நாளை கழித்து எதிலும் நிறைவு காணா நெஞ்சத்துடன் சிலகாலம் வாழ்ந்ததாகவும் குறிப்பிட்டார்.

ஆன்மீகம் என்ற நோக்கில் இலங்கையில் இந்து சமய வேதங்களையும், தேவார திருவாசகங்களையும் இளமையிலேயே கற்றறிந்த நான் பின்னர் கிறிஸ்தவ வேத நூலான பைபிளையும் கற்றேன். தமிழகத்தில் மேலும் ஆன்மீக நூல்களை தேடிப்படித்த நான் திருக் குர்ஆனால் பெரிதும் கவரப்பட்டேன்.

ஒரே இறைவன், ஒரே இனம் என்ற இஸ்லாத்தின் கொள்கை என்னை வெகுவாகக் கவர்ந்தது. அதன்பின் பல இஸ்லாமிய நூல்களையும் படித்தேன். ஆழ்ந்து சிந்தித்தேன். முழு மனித குலத்திற்கும் எங்கும், எப்போதும் பொருந்தக்கூடிய கருவூலங்களை இஸ்லாம் மார்க்கமே கொண்டிருப்பதை தெள்ளத்தெளிவாக புரிந்துகொண்டதன் பேரில் இஸ்லாத்தில் இணைந்து கொண்டேன். இன்று நான் முஹம்மத் பிலால் என்ற நாமத்துடன் இஸ்லாமிய வானில் சிறகடிக்கும் ஒரு பறவை' என்று தமது வாழ்க்கைப் பாதையில் சில பதிவுகளைக் கூறிய சிலோன் விஜயேந்திரன் என்ற முஹம்மத் பிலால் தற்போது சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்கின்றார்.

அண்மையில் அவர் எழுதிய 'அல்லாஹு அக்பர்' என்ற நூல் சென்னையில் வெளியிடப்பட்டது.

நூல் வெளியீட்டு விழாவில் சென்னை நியூ காலேஜ் அதிபர் மேஜர் ஜெய்லானி, பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ் இளம்பாரி திரு கருணாகரன் (ஆனந்த் தியேட்டர் அதிபர்) த.மா.கா. இணைச் செயலாளர் இதாயதுல்லாஹ், ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். பேராசிரியர் கவிஞர் மேத்தா நூலை வெளியிட்டார்.

அம்சம்
இன்டர்நெஷனல்

**அனைத்துலக செய்திகளையும்**
**தாங்கி வரும் முதலாவது**
**சர்வதேச முஸ்லிம் தமிழ் சஞ்சிகை**

படைப்பாளிகளே –

*அம்சம் இன்டர்நெஷனல்* சஞ்சிகைக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள், செய்திகள் போன்றவற்றை எழுதுங்கள்.

தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் பிரசுரமாகும். பிரசுரமாகாத ஆக்கங்களை திருப்பி அனுப்புவதாயின் போதியளவு முத்திரைகள் ஒட்டப்பட்ட விலாசம் எழுதப்பட்ட உறைகளை அனுப்ப வேண்டும். பிரசுரமாகும் ஆக்கங்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.


விற்னையாளர்கட்கு –

அனைத்து நாடுகளிலும் முற்பணம் செலுத்தக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

**AMSAM INTERNATIONAL PVT. LTD.**
FIRST FLOOR,
159, 2ND CROSS SREET,
COLOMBO 11.
SRI LANKA.
Tel. : 94 1 331326, 94 72 23670
Fax.
94 1 332867, 541414, Attn. AMSAM.
E mail : amudesh @ slt lk.

**அம்சம் விளம்பரங்கள் உங்கள் உற்பத்திகளுக்கும் வியாபாரத்துக்கும் உலகளாவிய மதிப்பைப் பெற்றுத் தரும். எம்முடன் விளம்பரம் செய்யுங்கள்.**

**விபரங்கட்கு பிராந்திய அலுவலகங்களை அல்லது விளம்பர முகாமையாளரை நாடுங்கள்.**


**துங்க உலகில்**
**மங்காத மாணிக்கம்**

# NASRATH JEWELLERY CENTRE

*Menjual Barang-Barang Emas, Berlian & Permata*

92, Jalan Masjid Kapitan Keling,
10200 Pulau Pinang,
MALAYSIA.

Phone: 04-2626021
04-2620768

# கலைமாமணி முரசொலி அடியார் எனும் அப்துல்லாஹ் அடியார்

கவிஞர் - நாடக ஆசிரியர் - நாவலர் - பத்திரிகையாளர் போன்ற பல சிறப்புகளையும் கொண்ட உலகறிந்த சன்மார்க்க அமைப்பாளர் அப்துல்லாஹ் அடியார் இறையடி சேர்ந்தார். இச்செய்தி கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 10ம் திகதி வெளியானது. தமிழ் கூறும் நல்லுலகில் அடியாரைத் தெரியாதோர் யாருமில்லை.

நாத்திகனாக வாழ்வை ஆரம்பித்த அடியாரின் தந்தையார் கூட ஒரு கம்யூனிச போராளியே. பெரியாரின் பாசறையிலும் பின்னர் அறிஞர் அண்ணாவின் கழகத்திலும் புடம்போடப்பட்ட அடியார் எழுத்திலும், பேச்சிலும் தனக்கென ஒரு தனிப் பாணியை அமைத்துக்கொண்டிருந்தார்.

சமூக விடுதலை, சமூக நீதி என்பவற்றை வெறும் சுலோகமாக அன்றி வாழ்க்கையாகக் கொண்டிருந்தவர் அடியார். கோஷமாக,கோலமாக இருந்த சமூக நீதி எனும் குரல் பலரை வாழவைத்துள்ளதே தவிர சமூக விடுதலை பெறும் மார்க்கமாக அமையவில்லை. மந்திரிகளாக, எம்.எல்.ஏக்களாக, வாரியத் தலைவர்களாகப் பலரை மாற்றியது இக்கோஷம். அடிமட்டத்தில் இருந்த பலர் சமூகத்தின் உயர்மட்டத்திற்கு பொருளாதார ரீதியில் செல்ல இக்கோஷம் உதவியது. ஆனால்...... அப்படி உயர்ந்தவர்கள் கூட சமூக விடுதலை கொண்டவர்களாக மாறினார்களா என்றால் ஒரே பதில் 'இல்லை' தான்.

இன்னும் 'சாதி' வேற்றுமைதான் கோலோச்சுகின்றது. உண்மையான சமூக விடுதலை பெற, சமூக நீதியை நிலைநாட்ட சமூக மக்கள் சமத்துவம் பெற என்ன வழி? ஏது மார்க்கம்? என அடியார் சிந்தித்தார்.

முடிவு.....

இஸ்லாம்தான் என சந்தேகத்துக் கிடமின்றி உணர்ந்துகொண்ட அவர் இஸ்லாத்தின் பால் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட - தீண்டத்தகாத - ஒடுக்கப்பட்ட மக்களை அழைத்து அன்னவருக்கு இம்மையிலும் மறுமையிலும் விடுதலை கிடைக்க வழி செய்தார்.

தி.மு.க.வின் அதிகார நாளேடான முரசொலியின் ஆசிரியராக 17 ஆண்டுகள் பணிபுரிந்த அடியார் 120 நாவல்களையும்,13 நாடகங்களையும், ஏனைய 13 புத்தகங்களையும் எழுதி வெளியிட்டார். தி.மு.கழகத்தின் உயர்மட்டத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய அடியார் தி.மு.க வினை அரியணை ஏற்றுவதில் பெரும் பங்காற்றினார். அவரது நாவும், பேனாவும் தி.மு.க.வின் பிரச்சாரப் பீரங்கிகளாக விளங்கின.

1975ல் இந்திரா காந்தி அம்மையாரின் ஆட்சியின் போது 'உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம்' தி.மு.க.வை குறி வைத்தபோது தமிழகச் சிறைகள் தி.மு.க. காரர்களால் நிரம்பி வழிந்தது. அடியாரும் கூட சிறையிடப்பட்டார். சித்திரவதைக்குள்ளானார்.

சிறையின் இருட்டில்தான் அடியாருக்கு ஹிதாயத் எனும் வெளிச்சம் கிடைத்தது. துன்பத்திலும், துயரத்திலும் அவருக்கு அல் குர்ஆனும் இஸ்லாமியப் போதனைகளும் கலங்கரை விளக்காகிறது. இஸ்லாத்தின் சுடர் அவரது ஆன்மாவைத் தொட்டிழுத்தது.

மனைவியை ஆழமாகக் காதலித்து 'மனைவி' என்ற பெயரில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல் வெளியிட்டு அனைத்துலக ரீதியில் பரிசுகள் பெற்ற அடியாருக்கு-

அவரது மனைவியின் வேதமான பைபிள் விடைகூறவில்லை.

'பிறப்பது ஏன்? மரணிப்பது ஏன்? என்ற வினாக்களுக்கு அடியார் பின்பற்றிய நாத்திகக் கொள்கையும் விடை தரவில்லை.

இஸ்லாம் தந்தது. அவருக்கும் அவர் போன்ற கோடிக்கணக்கானோர்க்கும் அது மாமருந்தானது. வழிகாட்டும் ஒளி விளக்கானது.

சிறையில் வைத்தே அடியார் எழுதினார். 'நான் காதலிக்கும் இஸ்லாம்' என்ற தலைப்பில் 17 கட்டுரைகளை எழுதினார். அது வெளியானது.

விடுதலையாகி வெளியே வரும்போது சமூக விடுதலையும் அவருக்குக் கிடைத்திருந்தது. 1977ல் 'நீரோட்டம்' என்ற பத்திரிகையை வெளியிட்டார். சரியான பொருளாதார பலம் இன்மையால் அது சில காலத்தில் நின்று போனது.

ஆனால் 'நான் காதலிக்கும் இஸ்லாம்' என்ற நூல் பேராதரவு பெற்றது. பல பதிப்புகள் வெளியானது. மலையாளம், தெலுங்கு, மராத்தி, ஹிந்தி, உர்து மொழிகளில் எல்லாம் மொழிமாற்றம் பெற்று நாடளாவிய ரீதியில் அடியாரை அறிமுகம் செய்தது. பல்லாயிரம் பேருக்கு இஸ்லாத்தின் சரியான வடிவம் எளிய மொழியில் புரிய வழி கிடைத்தது.

1983ல் உர்து மொழி- நூலை வெளியிட்ட இதராய் மஜ்லிஸே அதப் என்ற வெளியீட்டகம் அடியாரை பாகிஸ்தானுக்கு அழைத்து கௌரவித்தது. அங்கே அடியாரை பாகிஸ்தான் அதிபர் ஸியாவுல் ஹக் கௌரவித்தார்.

ஆனால் இதுவரை அடியார் இஸ்லாத்தை பகிரங்கமாக ஏற்று பிரகடனம் செய்யவில்லை. 'நான் காதலிக்கும் இஸ்லாம்' நூலின் ஹிந்திப் பதிப்பை வாசித்த உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜமீந்தார் ஒருவர் இஸ்லாத்தின் பால் பெரிதும் ஈர்க்கப் பட்டார். அதற்குக் காரணமாயமைந்த நூலாசிரியரைச் சந்திக்க அவர் சென்னை வந்து சேர்ந்தார். அடியாரைச் சந்தித்த அவர் தன்னை அறிமுகம் செய்துவிட்டு அடியாரின் கைகளைப் பற்றியவராக 'உங்கள் நூலை வாசித்தபின் நான் இஸ்லாத்தை ஏற்க உறுதிகொண்டு விட்டேன்' என்றார்.

அடியார் திகைத்தார். விரல்களிடையே புகையும் சிகரட். மேசையில் திறந்தபடியே இருக்கும் விஸ்கி பாட்டில். ஜமீந்தார் கூட இதனைக் கண்டார்.

அன்றிரவு அடியாருக்கு தூக்கமின்றியே கழிந்தது. மறுநாள் அதிகாலையே எழுந்த அடியார் குளித்து முடித்துவிட்டு நேராக அங்கப்பநாயக்கன் தெருவிலுள்ள மாமூர் மஸ்ஜிதிற்குச் சென்றார். அங்கே உண்மையான 'அல்லாஹ்வின் அடிமை' என்ற அப்துல்லாஹ் அடியார் ஆனார். இது நடந்தது 06.06.1987 அன்று.

அப்துல்லாஹ் அடியாரின் எழுத்துக்களைப் போலவே அவரது நாவன்மையும் செழிப்பானது. அப்துல்லாஹ் அடியார் இஸ்லாத்தின் தூதை எத்திவைக்கும் பாங்கு எவரையுமே கவரக் கூடியது. அவரது வாதங்கள் யதார்த்தமானவை. நளினமாகப் பேசுவதில் அடியாருக்கு நிகர் அடியார்தான்.

16.05.35ல் திருப்பூர் நகரில் பிறந்த அடியார் கோயம்புத்தூரில் உயர் கல்வி பெற்று எழுத்தார்வம் காரணமாகவும், சமூக பற்றினாலும் சென்னை வந்து சேர்ந்தார். கவியரசு கண்ணதாசனின் *தென்றல்* இதழ் மூலம் பத்திரிகையாளனாக உருவாகிய அடியார் பின்னர் தி.மு.கவின் கொள்கையினால் கவரப்பட்டு அதில் இணைந்தார். அண்ணாவின் வலது கரமாக விளங்கிய அடியார் *முரசொலி*யின் ஆசிரியராக 17 வருடங்கள் பணியாற்றினார்.

இந்துத்துவ வாதத்தின் அச்சுறுத்தல்களுக்கு எப்போதும் அடியார் அச்சப்பட்டதில்லை. 'எந்தவொரு சக்தியாலுமே இஸ்லாம் தமிழ்நாட்டில் வளர்வதைத் தடுக்க முடியாது. பிஜேபி போன்ற எந்தவொரு அரசியல் அழுத்தத்திற்கும் நாம் அஞ்சமாட்டோம்' என்று அப்துல்லாஹ் அடியார் கூறினார்.

அப்துல்லாஹ் அடியாரின் பிரச்சாரம் பலநூறு பிரமுகர்களையும்,அறிஞர்களையும் படித்தவர்களையும்,

பாமரர்களையும் இஸ்லாத்தின்பால் இணையக் காரணமாயமைந்தது.

கம்யூ னிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் கொடிக்கால் செல்லப்பா ( ஷேக் அப்துல்லா). டாக்டர் அம்பேத்கரின் சீடர் வீரபத்திரனம்(முஹம்மது பிலால்). புத்த பிக்கு சுவாமி ஆனந்தா (முஹிபுல்லாஹ்) ஆகியோர் இஸ்லாத்தில் இணைய அப்துல்லாஹ் அடியாரே காரணம். இவர்கள் தற்போது பல்லாயிரம் பேரை இஸ்லாத்தின்பால் அழைத்துக்கொண்டுள்ளனர். அகில இந்திய குடியரசுக் கட்சியின் செயலாளர் டாக்டர் ஏ. சேப்பன் இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடவும் அப்துல்லாஹ் அடியாரே காரணம்.

பொது வாழ்வில் யாருமே விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களல்ல. அதுபோல் அப்துல்லாஹ் அடியாரும் விமர்சனத்துக்குட்பட்டிருந்தார். அவ் வாழும் காலங்களில் எதிரிகளாலும், அவரது முன்னாள் நண்பர்களாலும் விமர்சிக்கப்பட்டார். இது எதிர்பபர்க்கக்கூடியதொன்றே. ஆனால் சில இஸ்லாமிய இயக்கவாதிகள் அப்துல்லாஹ் அடியாரை விமர்சித்துத் திரிந்ததுதான் வேதனைக்குரிய விடயம்.

தமது '0பிடிப்பில்' அவரை வைத்திருக்க நினைத்த சில இயக்கத்தினர் அவர் மீது அபாண்டங்களைச் சுமத்தினர். ஆனால் அவை வெறும் வார்த்தைகளாகவே சமூகத்தில் கருதப்பட்டன.

அப்துல்லாஹ் அடியார் இவற்றையெல்லாம் பற்றி அலட்டாமல் தமது இறுதி மூச்சு வரை இஸ்லாமிய தஃவாவில் ஈடுபட்டிருந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திப்போமாக!

---

## பாகிஸ்தான் தொடர்ந்தும் அணுத்திட்டங்களைக் கையாளும்

## பிரதமர்

இஸ்லாமாபாத் -

அமைதித் தேவைகளுக்கான பாகிஸ்தானின் அணுத் திட்டங்கள் தொடர்ந்தும் திட்டமிட்டபடி நடக்கும்' என்று பாகிஸ்தானின் காபந்து பிரதமர் அப்துல் அஜீஸ் அப்துல் கான் தெரிவித்தார். பாகிஸ்தான் அணு நிலையத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய அவர் 'அமைதி தேவைகளுக்கான அணு ஆராய்ச்சித் திட்ட விடயங்களில் அரசாங்கத்தின் கொள்கையில் எதுவித மாற்றங்களோ அல்லது பின்னடைவோ இல்லை' என்றும் வலியுறுத்திக் கூறினார்.

காயல்பட்டணத்தில் வரலாறு காணாத மக்கள் வெள்ளம்

# அபூர்வ துஆ பிரார்த்தனையில் 50 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர்.




காயல்பட்டணத்தில் கடந்த 68 வருடங்களாக இடம்பெற்றுவரும் புனித புஹாரி ஷரீபு நிகழ்வுகளின் இறுதி நிகழ்ச்சியாக இம்முறை அபூர்வ துஆ பிரார்த்தனை இடம்பெற்றது. இதில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான ஆண்கள் கலந்து கொண்டு அமைதி. சுபீட்சம், மத நல்லிணக்கத்திற்கான பிரார்த்தனை புரிந்தனர்.

இந்த துஆ நிகழ்ச்சிகளை மஜ்லிஸுல் புஹாரி ஷரீபு நிர்வாகத் துணைத் தலைவர் மௌலானா எஸ்.கே.எம். நூகுத்தம்பி ஆலிம் ஜீலானி ஆரம்பித்து வைத்தார். என்.டி. ஷெய்கு முகம்மது. எச்.ஏ. அகமது அப்துல் காதிர் ஆலிம், நூருல் ஹக் நுஸ்கி ஆகியோர் அபூர்வ துஆவின் மகிமைகள் பற்றி உரையாற்றினார்கள்.

மக்கா ஷரீபின் முப்தி ஸெய்யிது அஹ்மதுப்னு ஜெய்னி இமாம் தஹ்லானி (ரஹ்) அவர்களினால் தொகுக்கப்பட்ட துஆ காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது. ஹமீதியா அரபுக் கல்லூரி பேராசிரியர் எம்.எஸ் காஜா முஹியித்தீன் ஆலிம் கத்முல் புஹாரி ஷரீபு எனும் பிரார்த்தனையை தமிழில் ஓதினார்.

வெகு சிறப்பாக நடைபெற்ற புஹாரி ஷரீபு. துஆ நிகழ்ச்சிகள் அனைத்தையும் நிருவாகத் தலைவர் நஸ்வி எம்.கே. செய்யிது அஹ்மது ஆலிம், துணைத்தலைவர் எஸ்.கே.எம். நூஹுத்தம்பி ஆலிம். செயலாளர்களான சா. செய்யது இபுறாகிம். எஸ்.ஏ.ஸீ செய்யிது முஹம்மது மற்றும் நிருவாகிகளும், கமிட்டித் தலைவர்களான கே.எம். செய்யித் அஹ்மது. செய்யித் அஹ்மத் நுஸ்கி. முஹம்மது அப்துல் காதிர் ஆகியோரும் செய்திருந்தனர்.



காயல்பட்டணம் முழுவதும் மின் அலங்கார வளைவுகளும், தோரணங்களும் செய்யப் பட்டிருந்தன.

## காயல் பட்டணம் மஜ்லிஸுல் புகாரி ஷரீபு 69வது வருட ஷரீபும் கந்தூரியும்



கடந்த 68 வருடங்களாகக் காயல்பட்டணம் குருவித்துறை மாநபி மாமன்றம் என அழைக்கப்படும் பள்ளிவாசலில் பெரும் புகழோடு ஓதப்பட்டுவரும் புஹாரி ஷரீபு நிகழ்ச்சிகள் 13.11.96 புதன் அன்று ஆரம்பம் செய்யப்பட்டு கடந்த 11.12.96 அன்றுடன் நிறைவு செய்யப்பட்டது.

தினமும் அதிகாலை 5.30 மணி முதல் 9.00 மணிவரை பிரபல உலமாக்கள் புஹாரி ஷரீபை ஓதி விளக்கம் செய்து வந்தனர்.

11.12.96 அன்று மௌலானா மௌலவி அல்ஹாபிழ் மர்ஹூம் நஸ்வி முஹம்மது இஸ்மாயிலுல் முப்தி அவர்களால் தொகுக்கப்பட்ட புகாரி இமாம் (ரஹ்) அவர்களின் பேரிலான மௌலீது ஓதப்பட்டது.

12.12.96 காலை 10.30 மணிக்கு மௌலானா மக்கா ஷரீபு முப்தி செய்யிது அஹ்மதுப்னு ஜெய்னி இமாம் தஹ்லானி (ரஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட அபூ ர்வ துஆ மொழிபெயர்ப்புடன் நடாத்தப்பட்டது.

## இஸ்ரேலுக்கு "இல்லை" என்கிறார் எமன் அதிபர் அப்துல்லா ஸாலேஹ்

எமன் இஸ்ரேலின் இருப்பை எதிர்க்கின்றது' என எமன் அதிபர் அலி அப்துல்லாஹ் ஸாலேஹ் தெரிவித்தார். மேலும் ஸியோனிஸ அரசின் சதித் திட்டங்களை முறியடிக்க அரபு நாடுகளும், பலஸ்தீனப் போராளிக் குழுக்களும் ஒன்றிணைய வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

'பொதுவாகவே நாம் இஸ்ரேலின் இருப்பை எதிர்க்கின்றோம். அத்துடன் பலஸ்தீனப் போராளிகள் அனைவரும் ஒன்றிணைந்து இஸ்ரேலின் தகிடுதத்தங்களை முறியடிக்க திட்டமிட்டு இயங்க வேண்டும்' என்றும் அவர் பலஸ்தீன செய்தித்தாபனத்திற்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

'கைப்பற்றப்பட்ட அனைத்து பலஸ்தீன பிரதேசங்களையும், தென் லெபனான் பகுதிகளையும், மற்றும் கோலான் குன்றையும் இஸ்ரேல் திருப்பித்தர வேண்டும் அதுவரை இஸ்ரேலை அங்கீகரிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை' என்றும் எமன் பிரதமர் குறிப்பிட்டார்.

'சிரியாவிலும், லெபனானிலும், பலஸ்தீனிலும் வாழும் சகோதரர்களுடன் ஏனைய அரபு நாடுகள் கைகோர்த்து தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இஸ்ரவேலை எதிர்க்குமாறு நான் அனைவரையும் அழைக்கின்றேன். கடந்த காலங்களில் மறைந்த தொழிற்கட்சித் தலைவர் ஷிமன் பெரஸ் அரபு நாடுகளை மிகத் தந்திரமாக ஏமாற்றி இஸ்ரேலுடன் உறவை வளர்க்க அவற்றுக்குள் போட்டியை ஏற்படுத்தியிருந்தார்.

இஸ்ரேல் சமாதானத்திற்குத் திரும்பிவிட்டது என்று சில நாடுகள் நம்பின. ஆனால் பெரஷினதும், ஸியோனிஸ்ட்டுகளினதும் திட்டம் சமாதானமல்ல. எவ்வழியிலாவது நைல் முதல் யூ ப்பிரடீஸ் வரையிலான அகன்ற இஸ்ரேலே ஆகும்' எனவும் அப்துல்லாஹ் ஸாலேஹ் தெரிவித்தார்.

## இனவாத அரசியல்?



கடந்த உள்ளூராட்சி, பஞ்சாயத்துத் தேர்தல்களில் பல இடங்களில் ஏற்பட்ட மும்முனைப் போட்டி கட்சி வாரியாக இல்லாமல் இனவாத ரீதியாக மாறியதாலும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைந்துள்ளது. தேர்தல் முடிவுகள் இதனையே தெளிவுபடுத்துகின்றன.

உதாரணமாக நாகர் கோவிலில் ஒரு வார்ட்டின் தேர்தலை எடுத்துக்கொள்வோம். திமுக– த.மா.க சார்பில் ஒரு முஸ்லிம் பெண். பா.ஜ.க சார்பில் ஒரு இந்திப் பெண். ஜனதா தளத்தின் சார்பில் ஒரு கிறிஸ்தவர்.

முஸ்லிம்களின் கணிசமான வாக்குகளும், பிற்படுத்தப்பட்டோரின் வாக்குகளும் தி.மு.க. விற்கும் ஜனதா தளத்திற்கும் பிரிந்து போனாலும் கூட ஏனைய இந்துக்களின் வாக்குகளால் இதில் ஒரு கட்சி வெற்றிபெற்றிருக்க வேண்டும். அதிலும் தி.மு.க. நிச்சயம் வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால் தேர்தல் பிரச்சாரம் இனவாத ரீதியில் இருந்ததால் பா.ஜ. கட்சி வெற்றி பெற்றது. தி.மு.க. வேட்பாளரான முஸ்லிம் பெண்மணி கவலைக்கிடமான முறையில் தோற்றுப்போனார்.

'ஒவ்வொரு இந்திய மகனும்– மகளும் தாய்நாட்டிற்காக உயிரைக் கூட விடணும் என்றார் காந்தி. தொழுநோயாளர்களுக்காகவும், அனாதைகளுக்காகவும் அன்னை தெரேசா தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துள்ளார். இஸ்லாமும், இறைதூதரும் மக்கள் சேவையை உயர்த்திக் கூறுகின்றனர். இவற்றால் உந்தப்பட்டே சமூக சேவையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும், மக்கள் சேவைக்காகவும் களத்தில் இறங்கினேன்' என்றார் தி.மு.க சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த திருமதி. சபூ றா இப்ராஹிம்.

பீ. காம் பட்டதாரியான சபூ றா இப்ராஹிம் ஒரு தனியார் வங்கிக் கிளையின் மானேஜராகப் பணிபுரிகிறார். இரு குழந்தைகளின் தாயாரான இவர் கலைஞர் தலைமையிலான தி.மு.க அரசின் கடந்த நாலு மாத கால ஊழலற்ற ஆட்சி தம்மை வெகுவாகக் கவர்ந்ததாலேயே தாம் தி.மு.க சார்பில் போட்டியிட்டதாகக் கூறுகின்றார்.

இனவாதப் பிரச்சாரத்துடன் ஜனதா தளத்தின் சின்னத்திற்கும், தி.மு.க. வின் சின்னத்திற்குமிடையில் இருந்த உருவ ஒற்றுமையினால் பாமர வாக்காளர்கள் குழம்பிப் போனதையும் தமது தோல்விக்குக் காரணம்' எனக் கூறும் இவர் தோல்வியினால் சளைத்துப்போனதாகத் தெரியவில்லை.

'என்னால் இயன்ற உதவியை மக்களுக்கு எமது கட்சி மூலம் செய்வேன்' என்றும் கூறுகின்றார்.

# முஸ்லிம்கள் ஒதுக்கப்பட்டுள்ளனரா?

## தமிழ்நாடு, ஊராட்சி. பஞ்சாயத்துத் தேர்தல்கள் ஒரு மதிப்பீடு

சுதந்திரத்திற்கு முன்பும். சுதந்திரப் போராட்ட காலங்களிலும். இன்றைய காலகட்டத்திலும் இந்தியா மீதான முஸ்லிம்களின் கடப்பாடு எவ்விதத்திலும் இரண்டாந்தரமானதன்று. இந்திய சுதந்திரத்தின் ஒவ்வொரு இடத்திலும் தமது தடத்தை அவர்கள் பதித்தே வந்துள்ளனர்.

இந்நிலைக்கு தமிழ் நாட்டிலும் விதிவிலக்குக் கிடையாது.

ஆனால்..... இன்றும் முஸ்லிம்கள் இரண்டாம் தரத்தினராக ஏன் அதனை விடவும் குறைவானவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். தமிழகத்தில் மருத்துவ. பொறியியல். விஞ்ஞான துறைகளில் மாணவர் அனுமதியில் முஸ்லிம்கள் பின்தள்ளப்பட்டுள்ளனர். அரச தொழில் வாய்ப்பில் சனத்தொகை சதவிகிதம் பேணப்படவில்லை.

அரசியலிலும் அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே உள்ளனர். உரிய அளவு பிரதிநிதித்துவம் கிடைப்பதில்லை.

இப்போது - இருந்த அற்ப சொற்ப இடங்களும் பறிபோய்விட்ட நிலையில் அவர்கள் கைசேதப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ஊராட்சி. பஞ்சாயத்துத் தேர்தல்களில் முஸ்லிம்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளமை தெட்டத் தெளிவு.

ஏற்கனவே முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இருந்து பிரதிநிதித்துவம் தந்திரமான முறையில் பறிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் வார்டுகள் பலவற்றைப் பெண்களுக்கு என்றும் தாழ்த்தப்படடவர்களுக்கு என்றும் ஒதுக்கியதன் மூலம் முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறைந்துள்ளது.

### ஜெயலலிதாவின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகள்

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முஸ்லிம் விரோத நடவடிக்கைகளின் தொடராகவே இந்த முஸ்லிம் பிரதிநிதித்துவக் குறைப்பு நடைபெற்றது.

அ.இ.அ.தி.மு.க விற்கு முஸ்லிம்களின் வாக்கு வங்கி சாதகமாக இராது என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. முஸ்லிம்கள் பெரும்பான்மையினர் தி.மு.க அபிமானிகளாகும். இதனால் அவர்களை இப்படியான குறுக்கு வழியில் ஜெயலலிதா பழிவாங்கினார்.

முஸ்லிம் வார்டுகள். பஞ்சாய. ஊராட்சித் தலைமைப் பதவிகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக செல்வியின் அரசாங்கம் அறிவித்த காலத்தில் கலைஞர் கருணாநிதி அதனை வன்மையாக எதிர்த்து அறிக்கைகள் விட்டிருந்தார்.

செல்வியின் ஆட்சிக்காலத்தில் தேர்தல்கள் அறிவிப்பதும் ஒத்திவைப்பதுமாகக் கழிந்தது.

பொதுத் தேர்தல் வந்தது. தி.மு.க - த.மா.க கூட்டணி அமோக வெற்றியீட்டியது. இக் கூட்டணிக்கு முஸ்லிம்களின் பெரும்பான்மையான வாக்குகள் கிடைத்தன.

### கலைஞர் முஸ்லிம்களைக் கைவிட்டுவிட்டாரா?

ஊராட்சித் தேர்தல்களை பதவிக்கு வந்ததும் நடத்தியே தீருவேன் என்ற கலைஞரின் வாக்குறுதி நிறைவேறும் நிலை ஏற்பட்டது. அப்போதுகூட முஸ்லிம் தலைவர்களும். பத்திரிகைகளும் இந்த அநியாயம் பற்றி ஆங்காங்கே தம் எதிர்ப்புக்களைக் காட்டினர். என்றாலும் கலைஞர் தேர்தல்களை நடாத்துவதிலேயே குறியாய் இருந்தார். பிரதிநிதித்துவ ஒதுக்கீடுகளை சீர்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை.

அதனால் முன்னைய செல்வியின் ஆட்சிக்காலத்தின் தீர்மானங்களின் படியே தேர்தல் நடைபெற்றது. இது முஸ்லிம்களை ஏமாற்றிவிட்ட ஒரு நிகழ்வாகும்.

கலைஞரிடம் அதிகம் எதிர்பார்த்த முஸ்லிம்கள் கலைஞரின் கண்டுகொள்ளாமையையிட்டு விசனப்படுகின்றனர். உண்மையில் மாற்றங்கள் செய்ய அவகாசம் இல்லாமல் கலைஞர் செய்தாரா? அல்லது அவரும்கூட முஸ்லிம் விரோத போக்கிலேயே உள்ளாரா என்ற சந்தேகம் முஸ்லிம் சமூகத்தில் தோன்றிவிட்டது போல் தெரிகின்றது. முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும் குறைத்தாயிற்று. பழி பாவமும் ஜெயலலிதாவுக்குரியது' என்ற பாங்கில் கலைஞர் செயல்பட்டாரா என்பதற்கு கலைஞரின் எதிர்கால நடவடிக்கைளே சான்று பகர முடியும்.

முஸ்லிம்கள் நெரிசலாக வாழும் நெல்லை மாநகராட்சி மேயராக ஒரு முஸ்லிம் வர வாய்ப்பு இருந்தது. ஆனால் செல்வியாரின் குரோதத்தினால் அது தாழ்த்தப்பட்டவர்களுக்கென தாரைவார்க்கப்பட்டது. தமது பிரதிநிதித்துவப் பறிப்பை முஸ்லிம்கள் எதிர்த்து எழுந்தால் அது தாழ்த்தப்பட்ட வகுப்பினரை எதிர்ப்பதாக அமைந்துவிடுமே. அதனால் முஸ்லிம்கள் தாழ்த்தியே வாசிக்க வேண்டும்.

சரி. மேயர் பதவி தான் போய்விட்டது. தி.மு.க கூட்டணியில் துணை மேயர் பதவியாவது கிடைக்கும் என முஸ்லிம்கள் இலவு காத்து நின்றனர் ஆனால் பிரதேச மண்ணின் மைந்தன் - குறு நில வேந்தன் ஆலடி அருணாவின் கடைப்பார்வை முஸ்லிம்களில் விழவில்லை.

அவர் தனது கையாள் ஒருவரை துணை மேயர் வேட்பாளராக நியமித்து எம்மை இருதலைக் கொள்ளி எறும்பாக்கிவிட்டார்.' என இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த முஸ்லிம் கல்விமான் ஒருவர் கூறினார்.

இதன் மூலம் தி.மு.க., தமாக கூட்டணி முஸ்லிம் சமுதாயத்தின் உணர்வுகளை - உரிமைகளை ஒரு போதுமே புறக்கணிக்காது என்ற காங்கிரீட் நம்பிக்கை அடித்தளத்தில் ஒரு விரிசல் தோன்றியுள்ளது. ஆங்காங்கே திரட்டிய கருத்துக் கணிப்புகள் இதனையே தெளிவுபடுத்துகின்றன.

பெண்கள். தாழ்த்தப்பட்டோருக்கான பிரதிநிதித்துவத்திற்கு முஸ்லிம்கள் எதிரானவர்கள் அல்ல. அதே நேரம் பெண்கள் ஒதுக்கீடு என்ற போர்வையில் ஒரு சிறுபான்மைச் சமூகமான எங்களின் பிரதிநிதித்துவத்திற்கு இழைக்கப்படும் அநீதியை நாம் எதிர்க்கத் தயங்க மாட்டோம் என்று அனைவரையும் நாம் உணரச் செய்ய வேண்டும்' என்று வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம். ஹாறூன் கூறினார்.

தி.மு.க. அரசின் எதிர்கால நடவடிக்கைகள் முஸ்லிம்களுக்குச் சாதகமாக அமையாவிடின் ஜெயலலிதாவிற்கு முஸ்லிம்கள் அளித்த பதிலே கலைஞருக்கும் கிடைக்கும்' என்று திருநெல்வேலி ஜங்ஷனில் இளம் வர்த்தகர் ஒருவர் அம்சத்திடம் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதியின் பக்கமே பந்து இப்போது.

(நமது நிருபர்)

# அறிவியலும் அறவியலும்

உலகமானது விரைவாக மாற்றம் பெற்றுக்கொண்டு வருகிறது. இன்று காணப்படும் மாற்றவீதமானது எதிர் வரும் பத்து அல்லது இருபது ஆண்டுகளில் நிச்சயமாக அதிகரித்துச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. மாற்றம் என்பது ஓய்வற்றதொரு செயற்பாடாகும். இவ்வாறான விரைவான மாற்றத்திற்கு தனியாளானும் சரி மக்கள் குழுக்களாயினும் சரி ஆக்கம் தரும் வகையில் இணக்கமுறும் வகையில் தம்மை மாற்றியமைத்துக்கொண்டிட வேண்டும் என்பது எங்கணும் துலாம்பரமாக வலியுறுத்தப்பட்டு வருவதை அறிகின்றோம்.

மனித நாகரிகத்துக்கும் மானுட வளர்ச்சிக்கும் நிலைக்களனாக அமைந்துள்ள மாற்றம் என்னும் இம்முக்கியாம்சப் உலக வாழ்வின் எல்லாப்படிகளிலும் எல்லா நிலைகளிலும் எல்லாத் துறைகளிலும் ஊடுருவி நிற்பதை எவரும் மறுக்க முடியாது. இம்மாற்றமானது அறிவுத் துறையிலும் அளவிட முடியாத செல்வாக்கைச் செலுத்தியுள்ளதோடு மட்டுமன்றி தன்னுடைய நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி வருவதையும் காண்கிறோம்.

அறிவுத் துறையானது, இன்று புதுமையும் புத்துணர்வும் புத்தாக்கமும் பெற்று வருகின்றதென்றால் அது மிகையாகாது. புதிய அறிவுக்களஞ்சியம் உலகம் முழுவதும் பரந்து காணப்படுகின்றது. மூன்று அல்லது நான்கு வருடத்துக்கொரு முறை உலகம் பெறுகின்ற புதிய அறிவு, இரண்டு மடங்காக அதிகரிக்கின்றது. இவ்வாறான அதிவிரைவான அறிவு அதிகரிப்புக்குக் காரணம் என்ன? அறிவியலின் வளர்ச்சியே, அதனுடைய அற்புதமான ஈடுபாடே இத்தகைய வேகமான வளர்ச்சிக்கு மூலகாரணமாகும் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

அறிவியலின் அடிப்படையில் அமைந்துவிட்ட விஞ்ஞானம், தொழில்நுட்பம், தொழினுணுக்கம் என்பன மிகவும் வேகமாக வளர்ச்சி பெற்றதன் காரணமாக மனிதனுடைய அறிவும் அதற்கேற்பவே மிகவும் வேகமாக வியத்தகு முறையில் வளர்ச்சிபெற்றுவிட்டது என்பதே பொதுவான முடிபாகும். இத்தகைய புது முனைப்புக்கு ஈடுகொடுத்துச் செல்லும் வேகமான வளர்ச்சிக்குப் பக்கத் துணையாக அச்சுத் துறை என்று கூறப்படும் பிரசுரத் துறையும் (Publication Explosion) தன்னுடைய இன்றியமையாத பங்களிப்பினை முழு உலகத்திலும் ஈந்து வருகின்றது. எனவே நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப, தொழினுணுக்க முறைகளைப் பயன்படுத்தி எல்லாத் துறைகளிலும் அதியுயர் முன்னேற்றத்தை மனித இனம் எட்டிப் பிடித்துவிட்டது என்றே சொல்ல முடியும்.

மனித இனத்தினுடைய இம்முன்னேற்றம் அனைத்தும், தானாகவோ இன்றேல் தற்செயலாகவோ ஏற்பட்டவையல்ல. பல்லாயிரக் கணக்கான வருடங்களாக மனிதன் தன்னுடைய அறிவு, செயற்றிறன் என்பவற்றைப் பிரயோகித்து இயற்கையின் போக்கினை விளங்கி அதனை தனக்குச் சாதகமாகப் பன்படுத்தி தன்னுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளுதற்கு அயராது உழைத்து வந்துள்ளான். தொடர்ச்சியான இம்முயற்சியின் விளைவாக ஏற்பட்டு வந்த படிப்படியான அறிவு வளர்ச்சியின் உச்ச கட்டமே இன்றைய விஞ்ஞான, தொழில் நுட்ப நாகரிகமாகும் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

மனித முன்னேற்றத்தின் உச்ச கட்டம் என்று கூறப்படும் இக்காலை, மனித சமுதாயம் உண்மையான முன்னேற்றத்தைக் கண்டுவிட்டதா? அறிவின் துணைகொண்டு ஆற்றல் பெற்ற இந்த மனித இனம் நிம்மதியாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறதா? பிரச்சினைகளையும் சிக்கல்களையும் விடுவிக்க ஏற்படுத்திக்கொண்ட விஞ்ஞானம், மனித மனங்களிடையே, சமுதாயங்களிடையே, நாடுகளிடையே ஏற்பட்டு வந்த, ஏறபட்டு வருகின்ற தொல்லைகளையும் சீரழிவுகளையும் இல்லாமற் செய்துவிட்டதா? இன்று நாம் பெறுகின்ற நீரும் காற்றும் கூட இல்லாமற் போகலாம் என்று அஞ்சப்படுகின்ற புதிய இரண்டாயிரமாம் ஆண்டிலே நாம் எதிர்கொள்ளப் போகும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையிலே நமது அறிவியலானது நம்மை வளர்த்துவிட்டதா? இவ்வாறானதும் இவற்றோடு ஒட்டியதுமான வினாக்கள் ஏராளமாகவும் தாராளமாகவும் எம்மிடையே எழுவது எவ்வகையிலேனும் தவிர்க்க முடியாததாகும். உலக அறிஞர்களும் கல்விமேதைகளும் சதாவும் இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக் கின்றனர்.

உலகிலே நூற்று முப்பது கோடிக்கு மேலான மக்கள் மோசமான வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றனர். ஐம்பது கோடி மக்களுக்குப் போதிய உணவூட்டமில்லை. பலகோடி மக்களுக்கு தூய குடி நீர் இல்லை. இவர்களுக்கு உணவு வழங்க போதிய வருமானமுமில்லை. உலகிலே ஐந்தில் ஒருவர் வறுமையின் உச்ச கட்டத்தில் இருந்து வருகின்றனர். வளர்முக நாடுகளில் மட்டுமன்றி வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இத்தகைய அடிப்படைக் குறைபாடு இருந்து வருவதை அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் மனுக்குலம் பிழைக்குமா என்பது கேள்விக்குறியாக இருந்து வருகின்றது. அந்த அளவுக்கு உலகம் முழுவதும் பரவி வரும் பட்டினி, உணவு நெருக்கடி, எரிபொருள் நெருக்கடி, சூழல் நெருக்கடி, மிகுந்த கடன் நெருக்கடி என்பன உலகப் பொதுப் பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளன. மக்கள் சனப்பெருக்கமும் இனப்பிரச்சினைகளை மேலும் மேலும் ஊக்கப்படுத்தியே வந்துள்ளமை மறுக்க முடியாத உண்மையாகும்.

அறிவியல் மேம்பாட்டினால் அணுவைப் பிழந்து அதனைப் பயன்

அல் ஹாஜ்
எம். வை. எம். முஸ்லிம் JP
B. A. (SL) Dip in Ed (Merit)
Dip in Mgt (New Delhi), SLEAS
ஓய்வு பெற்ற மத்திய மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர்

படுத்திய மனிதன் அணுவைக் கொண்டே உலகினை அழித்திட முனைவதைப் பார்க்கின்றோம். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் படைச் கலப் போட்டி, நாடுகளுக்கிடையே வளர்ந்து வரும் வல்லரசு நோக்கு, சிறிய நாடுகளை ஆட்டிப்படைத்து அடிமைப் படுத்தும் எண்ணங்கள் இன்னோரன்ன கருமங்களும் கோட்பாடுகளும் எமக்கு அறிவியலின் அழிவுப்பாதையையே எடுத்துக் காட்டுகின்றன.

இரண்டாவது உலகப்போரானது மனித குலத்துக்கேற்படுத்திய மாபெரும் அழிவுகளை நாம் இன்னும் மறந்துவிட வில்லை. கடந்த ஐம்பது ஆண்டுகளில் மற்றுமொரு உலகப் போர் நிகழவில்லை என்பது உண்மையாயினும் அதே போல உலகிலே அமைதியும் நிலவவில்லை என்பதும் உண்மையாகும். இரண்டாவது உலக மகா யுத்தம் முதற்கொண்டு ஒவ்வொரு போர் நிறுத்தமும் ஒவ்வொரு உடன்படிக்கையும் ஒவ்வொரு ஒப்பந்த மும் அணு ஆயுத யுகத்தின் இராணுவத் தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சிக்கும் ஆயுதப் போட்டிக்கும் புதிய புதிய ஊக்கத்தையும் உத்வேகத் தையுமே அளித்துவந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இரண்டாம் உலகப்போரின் பின்னர் சாதாரண போர்க்கருவிகளுடன் கூடிய போர்கள் நூற்றி ஐம்பதுக்கு மேல் நடந்துள்ளதாகவும் இப்போர்களில் மடிந்தோரின் எண்ணிக்கை சுமார் இரண்டு கோடி என்றும் கணக்கிடப் பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் இருபது லட்சம் குழந்தைகள் அழிக்கப் பட்டிருக்கின்றார்கள். ஆயுத மோதல்கள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென்று யுனிசேப் அறிக்கை கூறுகின்றது. இன்று வரை போர்ச் சூழலும் போர் மேகமும் உலகமெலாம் கருக்கட்டி நிற்பதை யார் தான் மறுக்க முடியும்.

1983ம் வருடம் உலக மொத்த படைத்துறைச் செலவு ஒரு மணித் தியாலத்துக்கு பதினைந்து இலட்சம் டாலருக்கு அதிகம். இத்தொகை 1960ப் ஆண்டுச் செலவினைப் போல் இரண்டு மடங்கானது என்றும் 1949ம் வருடச் செலவைப் போல் நான்கு மடங்கானது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. வளர்ச்சி யடைந்த நாடுகள் வளர்முக நாடுகளுக் கும் வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் வழங்கும் பொருளாதார உதவியின் இருபது மடங்கு படைத்துறைக்காக செலவு செய்யப்படுகின்றது. போரில் ஈடுபடும் ஒவ்வொரு படைவீரருக்கும் சராசரி உலகப் படைத் துறைச் செலவு இருபதினாயிரம் டாலர்களாகும். இதே வேளை பள்ளிசெல்லும் ஒவ்வொரு குழந்தைக்கும் சராசரி கல்விச் செலவு முன்னூற்றெண்பது டாலர் மட்டுமே என்னும் போது எவர் தான் ஆச்சரியப் படார். ஒவ்வோராண்டும் ஏற்படும் படைச் செலவில் ஐந்திலொரு பங்கச் செலவு செய்தால் இரண்டாயிரம் ஆண்டாகும் போதே உலகில் பட்டினியை ஒழித்து விடலாம் என நம்பப்படுகின்றது. எனவே அறிவானது படைக்கலப் போட்டியை எதிர்ப்பதோடு மட்டும் அமையாது அதற்குச் செலவாகும் பொருளை வறுமை நிலையில் உள்ளோர்க்குப் பயன்படுத்தும் தன்மையும் வர வேண்டும். இதன் மூலம் உலக நாடுகளிலுள்ள உறு பசியும் ஓவாப் பிணியும் நீங்கும் என்பதில் சந்தேகமில்லை.

“மண்டினி ஞாலத்து வாழ்வோர்க கெல்லாம்




உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே."

என்பது சங்கத் தமிழர் மங்காத கூற்றன்றோ?

1980ம் ஆண்டு உலகில் உள்ள அறிவியல் ஆய்வகங்களில் பணிபுரியும் முப்பது இலட்சம் அறிவியலாளர் பொறியியலாளர்களுள் ஏறக்குறைய ஐந்து லட்சம் பேர் புதிய போர்க் கருவிகளைச் செய்வதில் ஈடுபட டிருந்தனர். 1981ம் ஆண்டு விண்வெளித் தொழில் நுட்பத்தில் முன்னணியில் இருந்தோர்பிற நாடுகளின் நிலப் பரப்பில் ஒவ்வொரு சதுர மீட்டரையும் அளவிடும் திறமையைப் பெற்றிருந்தனர். இதே வேளை மறைந்து வரும் வெப்பமண்டல மழைக்காடுகள் அல்லது பரவி வரும் உலகின் பாலைநிலங்கள் ஆகியவற்றின் சிக்கலான சூழல்பற்றி அளந்தறிய உலகிலுள்ள அறிவியல் வல்லுநர்களும் பொறியியல் வல்லுநர்களும் முற்றிலும் முற்படவில்லை. அந்த நிலைமையானது நமது அறிவியலின் வளர்ச்சி, அதன் வேகம் எவ்வாறு சென்றுள்ளது என்பதைப் படம்பிடித்துக் காட்டுகின் றது என்பது முற்றிலும் பொருந்தும்.

இன்று உலகமெங்கனும் அமைதி யைப் பற்றிய பேச்சாகவே இருந்து வருவதை அறிகின்றோம். அமைதி பற்றிப் பேசாத, சிந்திக்காத நாடே இல்லையெனும் அளவுக்கு அமைதி என்னும் எண்ணக் கரு வியாபித்து நிற்பதை நோக்குகிறோம். பல நாடுகளில் அமைதி வேண்டிப் பிரார்த்தனைகளும் நடைபெறுகின்றன. மதத் தலைவர்களும் இவ்வமைதிக் காக என்ன செய்யலாம் என்பது பற்றி மண்டையைக் குழப்பிக் கொள்கின்றனர். வளர்ச்சியடையாத நாடுகளில் மட்டு மன்றி வளர்ச்சியடைந்து விட்ட நாடுகளி லும் அமைதிக்கான குரல்கள் எழுப்பப் படுகின்றன. உலக அமைதிக்காகப் பாடுபடும் மன்றங்களும் இயக்கங்களும் இத்துறையில் பல்வேறுபட்ட நடவடிக் கைகளையும் செயற்றிட்டங்களையும் செயற்படுத்துவதையும் காண்கிறோம். உலகம் முழுவதும் அமைதி ஏற்பட் டதோ இல்லையோ இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அமைதிக்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டே வருகின்றன. ஆனால் அமைதி யைத் தான் காணோம். அந்த அமைதிப்

## ஒவ்வோராண்டும் ஏற்படும் படைச் செலவில் ஐந்திலொரு பங்கை செலவு செய்தால் இரண்டாயிரம் ஆண்டாகும் போதே உலகில் பட்டினியை ஒழித்து விடலாம் என நம்பப்படுகின்றது.

புறாவானது மனித குலத்தை விட்டும் வெகு தூரம் பறந்து சென்று வீட்டதைப் பார்க்கிறோம். இது நமது அறிவியல் முன்னேற்றத்தின் நிரூபணம் ஆகும்.

ஒரு நாட்டிலே அமைதி நிலவ வேண்டுமாயின் அந்த நாட்டு மக்கள் சுதந்திரமாகவும் சுபீட்ஷமாகவும் வாழ வழிசெய்யப்பட வேண்டும். மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்க ப்படல் வேண்டும். நீதியானது மறுக்கப் படும் நாட்டிலே சுதந்திரமும் சுபீட்சமும் இருக்க மாட்டாது. மனித உரிமை களுக்கு மதிப்பும் இருக்க மாட்டாது. நீதி மறுக்கப்படும் நாட்டிலே அமைதிக் கும் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படுகின் றது. நாட்டில் அமைதியில் லை. ஏனெனில் அங்கு ந் த ய ல் லை என ப தே கருத் தாகும். நாட்டின் மக்கள் எல்லோருக்கும் ந த வழங்கப்பெற்றா லொழிய அங்கு அமைத் யையும் பாதுகாப்பையும் கொண்டு வரல் சாத்திய மாகாது.

ந த நிலைநாட்டப்படும் போது மட்டுமே மனித சுதந்திரம், மனித உரிமைகள் என்பனமதிப்புப்பெறுகின் றன. ஒருவரை ஒருவர் புரிந்துணர் வோடும் பரிந்துணர்வோடும் நோக்கும் நிலைப்பாடு இயற்கையாகவே ஏற்படும். சௌஜன்யமும் பரஸ்பர நம்பிக்கையும் தாராளமாகும். இதனால் அமைதி உண்டாகின்றது. நீதித் துறையானது சிறப்பாக இயங்கி வருகின்றது, நீதி ஒழுங்காக நிலைநாட்டப்படுகிறது என்பதை ஒவ்வொரு மனிதனும் இன்றேல் மனிதக் குழுக்களும் திருப்தியுடன் ஏற்றுக்கொள்வதும் அமைதியை ஏற்படுத்தும் பணியில் பெரும்பங்காற்றும் என்பதும் உண்மை யாகும்.

அமைதி நிலவ வேண்டுமானால் உலகம் முழுவதும் ஏற்புடைய பண்புநெறிகள் தேவை. அதே நேரத்தில் வேறுபாடுடைய பிறபண்பு நெறிகளையும் ஏற்றுக்கொள்ளவும் அவற்றை அங்கீகரிக்கவும் கூடிய தன்மையும் அவசியமாகும். இதனால் சமுதாயங்களிடையே சமநிலைத் தன்மை ஏற்படுகின்றது. ஒரு சிலரை இன்றேல் சில நாடுகளை வெறுத்து அந்த நாட்டு மக்களை ஏற்க மறுக்கும் ஒரே சார்புள்ள பண்பு நெறிகள் நிலவுமானால் சமநிலை குறைவதோடு மட்டுமன்றி போர்ச் சூழலும் உறுதியாக ஏற்படும் என்பதில் ஐயமில்லை. இந்நிலைப்பாட்டினைப் பல நாடுகளில் நாம் கண்ணாரக் காண முடியும். ■




அஸீஸா பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட அஸீஸா இஸ்லாமிய பாலர் பாடசாலை அண்மையில் கண்டி, கட்டுகஸ்தோட்டையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது ஆரம்ப நாளன்று எடுக்கப்பட்ட படம்.



அஸீஸா பாலர் பாடசாலை

# பாகிஸ்தானின் பரிதாப அரசியல்

இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலும் சுதந்திரப் போராட்ட காலத்திலும் முஸ்லிம்களுக்கென உபகண்டத்தில் ஒரு தனி நாடு தேவை என்ற கோஷம் வலுப்பட்டிருந்தது.

இதன் படி இந்திய சுதந்திரத்துக்கு முதல் நாளே - அதாவது 1947 ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி பாகிஸ்தான் உதயமானது.

இந்திய சுதந்திர அறிவிப்பு 15. 8. 1947இல் நள்ளிரவு வெளியானது. இந்தியா சுதந்திரம் அடைந்தும் அடையாத நாடாக இருப்பதாகவே புத்திஜீவிகளும் இனப்பாகுபாட்டை எதிர்ப்பவர்களும் கருதுகின்றனர். இது பற்றிய ஒரு பிரபல கவிதை இவ்வாறு கூறுகிறது.

*நள்ளிரவில் சுதந்திரம் வாங்கினோம்*

*இன்னும் விடியவில்லை.:.*

ஆனால் நடப்பதைப் பார்த்தால் பாகிஸ்தானுக்குத் தான் விடியல் வந்ததாகத் தெரியவில்லை. அரசாங்கங்களின் ஆயுள் கெட்டியாக இருக்கவில்லை.

0 1954இல் பாகிஸ்தான் அதிபர் குலாம் முஹம்மது. காஜா நஜ்முதீனின் அரசாங்கத்தைக் கலைத்தார்.

0 1958இல் இஸ்கந்தர் மீர்ஸா. முஹம்மது அலி டோகராவின் அரசாங்கத்தைக் கலைத்தார்.

0 1969 இல் இராணுவ ஆட்சியாளர் ஐயுப்கான் தேசிய எதிர்ப்புகளால் பதவி விலக யஹ்யாகான் பதவிக்கு வந்தார்.

0 1971இல் யஹ்யாகான் பதவி விலக தேர்தலில் ஸுல்பிகார் அலி புட்டோ ஆட்சிக்கு வந்தார். பங்களாதேசம் பிரிவினை கண்டது.

0 1977இல் திடீர்ப் புரட்சியில் ஆட்சியமைத்த இராணுவத் தளபதி ஸியாவுல் ஹக் பூ ட்டோவை தூக்கு மேடைக்கே அனுப்பினார்.

01988இல் ஜுனேஜாவின் அரசாங்கத்தை இராணுவ ஜெனரல் அய்யூ ப்கான் கலைத்தார்.

0 1989இல் பேனசீர் பூ ட்டோ ஆட்சிக்கு வந்தார்.

0 1990இல் குலாம் இஸ்ஹாக் கான் பேனசீர் புட்டோவின் அரசாங்கத்தைக் கலைத்தார்

0 1993இல் நவாஸ் ஷரீபின் அரசாங்கத்தை அதிபர் குலாம் இஸ்ஹாக் கான் கலைத்ததார்.

0 1996இல் மீண்டும் பதவியிலிருந்த பேனசீர் புட்டோவின் அரசாங்கத்தை அதிபர் பாருக் லெகாரி கலைத்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் கலைத்தவர்கள் எல்லோரும் கலைக்கப்பட்டவர்களின் நண்பர்களே. உதாரணமாக ஸுல்பிகார் அலி புட்டோவின் கடைக்கண் பார்வையில் தான் ஸியாவுல் ஹக் கீழேயிருந்து ஜம்ப் செய்தார். பேனசீர் பூ ட்டோவின் கையாளாகவே பாருக் லெகாரி இருந்தார்.

பாகிஸ்தானிலிருந்து பிரிந்து சென்ற வங்காளதேசத்தின் கதை இதனை விடப் பரிதாபமானது.



# அமெரிக்காவில் பிரளயம்: ஒரு மில்லியன் மக்கள் பேரணி

16. 10. 1995 அன்று அமெரிக்காவையே உலுக்கிய சம்பவம் அமெரிக்கக் கறுப்பின முஸ்லிம் தலைவர் லூயி பரகானின் தலைமையில் இடம்பெற்ற வீ ஒரு மில்லியன் மக்கள் பேரணி.

இதனை ஞாபகப்படுத்துமுகமாக 16. 10. 96ல் இடம்பெற்ற வைபவத்தில் மீண்டும் அவர் தலைமையில் 25.000க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுகூடினர். 4 மணித்தியாலங்கள் நடந்த இந்த வைபவத்தின் பேரணியில் 20,000 மக்கள் கலந்துகொண்டதாக அமெரிக்க காவல்துறை அறிக்கை ஏற்றுக்கொள்கின்றது.

95ஆம் ஆண்டின் ஒரு மில்லியன் மக்கள் பேரணியில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆண்கள் கலந்து கொண்டதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

ஒரு மில்லியன் மக்கள் பேரணி அமெரிக்காவின் கறுப்பின மக்கள் வாழ்வில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது. கறுப்பின மக்கள் தமது பொறுப்புக்களை உணரவும், உரிமைகளைத் தட்டிக் கேட்கவும் சக்தி பெற்றனர். பெண்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் அமெரிக்காவில் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

ஞாபகார்த்த வைபவத்தின் போது மன்ஹட்டன் மத்திய பகுதிகள் ஸ்தம்பித்துவிட்டன. வாகனப் போக்குவரத்து முற்றாகத் தடையானது. பஸ்களில் வந்து இறங்கிய பேரணிக்காரர்களால் பாதைகள் நிரம்பி வழிந்தன. 'ஹல்லேலூஜா' என்ற சுலோகம் வானைப் பிளந்தது.

நாம் ஏன் பரிகாரம் கோருகிறோம்? எதற்காக நாம் பரிகாரம் தேட வேண்டும்' என்று வினவிய மக்கள் தலைவர் பராகான் தமது 3 மணிநேர உரையின்போது 'உலகில் போரை விடவும் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையின் அடித்தளமான ஐ.நா. மன்றத்தின் முன் நாம் ஏன் இன்று ஒன்று கூடினோம்.?

நாம் இங்கு கூடியது வன்முறைக்கு பரிகாரம் தேட. கொலைகளுக்கும். யுத்தத்திற்கும் பரிகாரம் காண. உலகின் ஆட்சியாளர்கள் அனைவரையும் போரிற்கும். வன்முறைக்கும் பரிகாரம் காணுமாறும் நாம் இன்று கோரிக்கை விடுக்கின்றோம்.' எனத் தெரிவித்தார்.

வைபவம் ஐ.நா மன்றத்தின் வெளியே நிகழ்ந்தது. 'யுத்த அரங்கிற்கு முடிவு காணல்' என்பதை நோக்கி ஐ.நா மன்றம் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கவே வைபவம் ஐ.நா மன்றத்தின் முன் நிகழ்ந்ததாக பராக்கானின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.



அமெரிக்க கறுப்பின முஸ்லிம் தலைவர் லூயி பரகான்


ஆனால் இதனை நிறைவேற்ற இந்த ஐ.நா மன்றத்திற்கு முடியுமா?' என்று பராக்கான் வினவினார். எல்லா நடப்புகளின் பின்னாலும் உள்ள 'அமெரிக்காவின் மர்மக்கரமான' அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை வெகுவாகச் சாடிய பராக்கான் ஐ.நா மன்றம் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை அமல்படுத்தும் ஒரு கருவியாக இருக்கச் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

லிபியா. ஈராக் மீது விதித்துள்ள தடைகளை ஐ.நா மன்றம் உடனடியாகவே விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

சூழ்ந்திருந்த அமெரிக்கப் பத்திரிகையாளரிடம் 'ஐ.நா மன்றத்தில் உள்ளோர் அதில் இருப்பதையிட்டு வெட்கப்பட வேண்டும். லிபியா மீதான குற்றச்சாட்டுத்தான் என்ன?' என்றும் வினவினார்.



# உலகின் மிக உயர்ந்த மனிதன்




## காலுக்கு ஏன் ஐயா சப்பாத்து



நாமெல்லாம் காலால் நடப்போர். இவர் கையால் நடந்து சாதனை படைத்தவர். இதனால் தான் தலைப்பு இப்படியானது. நடக்கும் கைக்கல்லவோ சப்பாத்து தேவை?

நோர்வூ ட் என்ற அமெரிக்க மஸசூஸெட் மாநில நகரில் பிறந்தவர் மார்க் கென்னி. முன்னாள் மல்யுத்த வீரரான இவர் ஒரு மாற்றத்திற்காக கைகளால் நடக்க ஆரம்பித்தார். பல மாதம் பயிற்சி. 1994 பெப்ரவரி 19ம் திகதி 50 மீட்டர் (164 அடி) தூரத்தை 16. 93 செக்கன்களில் கைகளாலேயே நடந்து முடித்த வீரர்.

தற்போது அமெரிக்க செனட்டர் ஒருவரின் உதவியாளராக பணிபுரிகிறார்.

ரொபேர்ட் வேடோவ் சூட் தைக்க அளவுகொடுக்கும் போது எடுத்த படம். 1940இல் அளந்து பார்த்த போது 2.72 மீட்டராக (8அடி 11.15 அங்குலம்) இருந்தார். அம்மாடியோவ்.. அப்படியே ரோல் ஆக சீலை எடுத்துத் தான் சூட் தைக்க வேண்டி இருக்குமாக்கும். ரொபேர்ட் பேர்ஷிங்க் வேடோவ் 1918 பெப்ரவரி 22ம் திகதி அமெரிக்காவில் பிறந்தவர். இதுவரை வாழ்ந்தவர்களில் 'உயர்ந்தவராக' இன்று வரை கணிக்கப்படும் 'உயர்ந்த' மனிதர்.

### வாழும் 'உயர்ந்த' மனிதர்.

ஹாஜி முஹம்மது அலாம் ஸன்னா. அவர் 1956இல் பாகிஸ்தானில் பிறந்தார். உயரம் 2.32 மீட்டர். (7அடி 7' அங்குலம்) சாண்டி அலன். பிறப்பு 1955. அமெரிக்கப் பெண். 10 வயதில் 1.91 மீட்டராகவும் (6அடி 3அங்.) 16 வயதில் 2.16 மீட்டராகவும் (7அடி 1அங்) கிடுகிடுவென வளர்ந்த இவரின் தற்போதைய உயரம் 2.32 மீட்டர் (7அடி 7' அங்குலம்). இன்னும் 'உயர்வாரா?'



1976 இல் அறிமுகமான வானில் ஊர்ந்து செல்லும் போட்டியில் இதுவரை 4 தடவைகள் (1981. 1985. 1989. 1991) பிரிட்டிஷ் குழுவினர் வெற்றி பெற்றுள்ளனர்.
பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்பது மாறி பறவையே ஆனான் மனிதன்.

## பறந்து செல்லும் மனிதப் பறவை

### மிகப்பெரிய கைத்தொழில் அனர்த்தம்

3.12.1984. இந்த நாளை உலக மக்களும் இந்திய மக்களும் மறந்திருக்க மாட்டார்கள். போபால் நகரின் யூ னியன் கார்பைட் தொழிற்சாலையின் பூ ச்சுக் கொல்லி மருந்துத் தாங்கிக் கசிவு...

விளைவு- 3350 பேர் சாவு. 20,000க்கும் மேற்பட்டோர் கண்ணிழந்து...

இன்று வரை விமோசனமில்லை. தருவதாகச் சொன்ன நிவாரணமும் இல்லை. 'கேஸ்' கட்டுகள் ஆமை வேகத்தில் நகர்கின்றன. மக்களின் துயர வாழ்க்கை ஜெட் வேகத்தில் பறக்கிறது.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களில் 75 விழுக்காட்டினர் முஸ்லிம்களும் மீதிப்பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.





## உலகம் சுற்றிய வீரர்

எமிலோ ஸ்கொட்டோ 17. 1. 85இல் புவனர்ஸ் அயர்ஸில் இருந்து தனது ஹொண்டா கோல்ட் விங் மோட்டார் சைக்கிளில் பயணமானார். 1995.04.22ம் திகதி திரும்பி வந்தார். பத்து வருடங்களும் 3 மாதங்களும். 735,000 கிலோ மீட்டர்கள் பிரயாணம். 42,000 லீட்டர் பெற்றோலும் 700 லீட்டர் ஆயிலும் உபயோகம். 86 டயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

தனது பயணத்துக்கு அவர் வைத்துக் கொண்ட பெயர் 'கறுப்பு இளவரசர்'. முன்பின் உலகம் சுற்றும் அனுபவம் கிடையாது. கையில் இருந்த 300 பவுணுடன் 3.728 நாட்கள் பயணித்த அம் மனிதன் 214 நாடுகளைக் கடந்து 5 மொழிகளைக் கற்று இறுதியில் இஸ்லாமில் இணைந்தார். கொண்டார். இந்தியாவில் தன் அன்புக்குரியவளின் அன்புக் கணவனாகினார்.

# நான் எனும் பன்மையும்



நானும் நீனும் சேர்ந்தால் தான் நாம். நான் எனும் ஒருமையும் நீ எனும் ஒருமையும் சேர்ந்ததும் நாம் எனும் பன்மை உருவாகும். இது விதி. கொள்கை அல்ல. விதி, சட்டம். இது மாறாது; மாறக்கூடாது.


அகந்தையை அழிப்பாய். 'நான்' எனும் அகந்தையை அழிப்பாய். 'நான்' அழிந்தால் நீயும், நானும் வாழலாம். அதாவது நாம் வாழலாம். 'நான்' வாழ நினைத்தால் நானும். இல்லை, நீயும் இல்லை. நாம் எனும் பன்மையும் இல்லை. ஒற்றுமை எனும் பண்பும் இல்லை.

நானும், நீயும் போரில் எதிர் எதிரே சந்தித்தால்....? இது வேறு விடயம். இங்கு நான் என்பதோ நீ என்பதோ முக்கியமல்ல. சரி பிழை முக்கியம் என்பதே முக்கியம். 'நான்' சரி என்றால் நீ அழிய வேண்டும். நீ சரி என்றால் நான் அழிய வேண்டும். அழிக்கப்பட வேண்டும். அப்போது நாம் வாழ்வோம். நானும், நீயும் சரி என்றால் நானும் நீயும் வாழ வேண்டும். அப்போது நாம் வாழ்வோம். நானும், நீயுமே பிழை என்றால் நாம் அழிய வேண்டும். அப்போது நாம் வாழ்வோம்.

இதில் இன்னுமொரு சிக்கல். நானும் சரியில்லை. நீயும் சரியில்லை. இருவருமே அழிந்து போகிறோம். அப்போதும்கூட நாம் வாழ்வோம்.

யார் இந்த நாம். அதுதான் நானும். நீயும். நாமே அழிந்தால் எப்படியப்பா நாம் வாழ்வது. அதுவா? நானும், நீயும் இல்லாத நாம்.... நாம் வாழும் சமூகம் அந்த சமூகம் எனும் நாம் வாழ..... வளர அங்கே நானும் நீயுமாகிய நாம் வாழ்வோம்.

யுத்த களம் ஆக்ரோஷமான யுத்தம். ஹஸ்ரத் அலி (றழி) யின் ஸூல்பிகார் (வாள்) வீசும் பக்கம் எல்லாம் வாள்களும், தலைகளும் உருளுகின்றன. அதோ எதிரி ஒருவனின் வாள் வீசப்பட அவன் நிலை தடுமாறி கீழே வீழ்ந்து விடுகின்றான். ஹஸ்ரத் அலி (றழி) அவர்களின் கால் அந்த எதிரியின் மார்பை மிதிக்க கையிலிருந்த ஸூல்பிகார் அவனது கழுத்தை நோக்கி இறங்க.... ஒரு கணம்தான்..... அவன் ஹஸ்ரத் அலி (றழி)யின் முகத்தில் உமிழ்ந்து விடுகின்றான். ஒரு கணம் தான் .... அலி (றழி)யின் கால் மார்பிலிருந்து விடுபட கை வாளைக் கழுத்திலிருந்து எடுக்க.... ஒரு கணம்தான்.



அந்த மனிதனுக்கோ பெரிய ஆச்சரியம். இப்படியும் ஓர் அற்புதமா. அந்தக் கணம்.... அவனது தலை மண்ணில் உருள இருந்த அந்தக் கணம்..... ?

'ஏன் என்னை வெட்டாது விட்டீர்' அவன் கேட்டான். ஆச்சரியத்துடன்.

'உன்னை வெட்ட நினைத்தது அல்லாஹ்வுக்காய். நீ முகத்தில் உமிழ்ந்தவுடன்..... அந்தக் கணம்.... எனக்காக வெட்ட வேண்டி ஏற்பட்டு விடுமே என்று வெட்டாமல் விட்டேன்' அலி (றழி)யின் அமைதியான பதில் இது.

இது அவனுக்குப் பெரிய ஆச்சரியம். இத்தனை வேகமும். வீராவேசமும் காட்டிய இந்த மனிதன்.... அந்தக் கணம்.... சாந்தமானது எப்படி? அவனுள் சூறாவளி. அவனுள் பூ கம்பம். பிரளயம்..... இன்னும் இன்னும்.....


அலி(றழி)யின் கரங்களைப் பற்றியவனாய் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்...... என்று அங்கு ஓர் எதிரி அழிந்து போகின்றான். ஒரு நண்பர் சேர்ந்து கொள்கின்றார்.

அலி(றழி) 'நான்' என்பதைக் கொன்றார். நீ வாழ்ந்தாய். நாம் வாழ்ந்தோம். வாழ்கின்றோம். எதிரியை உயிரைக் கொன்றும் அழிக்கலாம் அவன் மனதை வென்றும் அழிக்கலாம்.

நான்' கூடினால் நானே அனைத்துமாய் பரிணமித்து நானே பன்மையாகி விடுவேன். நான் அழிந்து நாம் எனும் பன்மை ஒன்றுபட்டால் அதுவே ஒருமையாகிவிடும்.

நாம் எனும் ஒருமைக்கு அழிவுதான் ஏது?

- அபூ நஜாத்



# நாம் எனும் ஒருமையும்...



# தமிழ் உணவகம் - துபாய்
# TAMIL RESTAURANT -DUBAI

(குவைத் மஸ்ஜித் சமீபம்)



பிரியாணி, பராட்டா, நாண், சப்பாத்தி,
தோசை, இட்லி, பூரி முதலான இந்தியா,
பாகிஸ்தான் உணவு வகைகள்
சுத்தமாக, சுவையாக, சுடச்சுட கிடைக்கும்
ஒரே இடம்

## தமிழ் உணவகம்
## TAMIL RESTAURANT
**P. O. BOX : 9045,**
**DEIRA, DUBAI.**

துபாயில் அம்சம் இன்டர்நெஷனல் விற்பனையாளர்கள்

சிங்கப்பூரில் தரமான இரத்தினங்களுக்கு தலைசிறந்த இடம்

# கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாகுமா?

**நம்பிக்கை,**
**நாணயம்,**
**உத்தரவாதம்**
**என்பவற்றின்**
**மறுபெயர்**


# GOLDEN CITY GEMS
FOREIGN MONEY CHANGER
DEALERS IN DIAMONDS PRECIOUS &
SEMI-PRECIOUS STONES & JEWELLERS

# கோல்டன் சிட்டி ஜெம்ஸ்

Tel: : 3380125-7
: 3372501(Gems)
: 2982448 (Res)

02-24, PENINSULA SHOPPING CENTER
3, COLEMAN, SINGAPORE-0617
R.C.P.O. BOX 836 (S'PORE 9117)
CABLE: **CITYGEMS** FAX: 3361396

*Dengan Ingatan Tulus Ikhlas!*





மலேசியாவில்
தரமான வைரங்கள்,
மாணிக்கங்கள்நியாய
விலையில் வேண்டுமா?
உடனே எம்மோடு
தொடர்புகொள்ளுங்கள்.



# SUNFAST TRADERS

**DIAMONDS & PRECIOUS STONES**

# JAMEEL JEWELS (M) SDN. BHD.

***MANUFACTURERS OF FINE JEWELLERY***

**DR. JAMEEL AHAMED B. SC., PH. D. (HON.)**

**1-D, BUCKINGHAM STREET, 10200 PENANG, MALAYSIA.**
**TEL. 604 - 2613327, 2631818, 2629900. FAX: 604-2625051**
**E mail - drjamil @ pc. jaring my**